
வில்லனின்
காதலி
மேக்னா சுரேஷ்
சிறகுகள்
பதிப்பகம்

வில் - 1

அது இது எது என்று நீ எத்தனை பிரித்து வைத்தாலும்

அடிப்படையில் நான் மனிதன்.

பள்ளி வகுப்பறையில், கடைசி இருக்கையில் அமர்ந்திருந்த வள்ளியம்மை ஜன்னலுக்கு வெளியே தெரிந்த வானத்தை இலக்கின்றி வெறித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அருகில் அமர்ந்திருந்த அவளது தோழிகள் அவளை கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

புவனா, ரித்திகாவின் உள்ளங்கையை பிடித்துக் கீறினாள். 'பேசு' என ஜாடை காட்டியபடி.

ரித்திகாவோ 'நான் மாட்டேன்பா' என்பதைப் போல, முகத்தை சுளிக்க, புவனா திரும்பி ஜுலைகாவைப் பார்த்தாள்.

இவள் தன்னைப் பார்ப்பாள் என அறிந்தவள் போல ஜுலைகா தன் முகத்தை கன காரியமாய் வேறு திசையில் திருப்பி வைத்துக் கொண்டிருந்தாள்.

இவர்கள் யாரையும் நம்பி இனி ஒரு பலனும் இல்லை என்பதை உணர்ந்துக் கொண்ட புவனா, தன் வாயே தனக்கு உதவி என்பதைப் போல வள்ளியை நோக்கி தொண்டையை கனைத்துக் கொண்டு திரும்பி அமர்ந்தாள்.

அவள் கனைத்த சத்தத்தில் திரும்பிய வள்ளி, 'என்ன...?' என்பதைப் போல புவனாவை பார்க்க அவளுக்கு பேச வந்த வார்த்தைகள் தொண்டையிலேயே சிக்கின.

தன்னை சுற்றி அமர்ந்து இருந்தவர்களை பார்வையால் அளந்தவள், "ஏதாச்சும் அட்வைஸ் பண்றேன்னு லூசு தனமா பேசி என் உயிரை வாங்காம... போய் படிக்குற வழியைப் பாருங்க. இன்னும் ஒரு வாரத்துல பப்ளிக் எக்ஸ்சாம் வருது. நான் தான் இதுக்கு மேல எதுவும் படிக்கப் போறதில்லைன்னு முடிவாயிடுச்சி..... வெட்டியா வேடிக்கைப் பாத்துட்டு உக்காந்து இருக்கேன். உங்களுக்கு என்ன... போய்ப் படிங்க போங்க...."

அவள் அப்படி சொல்லியும் புவனா, "இல்ல மச்சி....அது வந்து.." புவனா சொல்ல வருவதை முழுமையாய் கேட்கும் பொறுமை கூட வள்ளிக்கு இல்லை.

"மூட்டு போறியா...." என முறைக்க அடுத்த நொடி மற்ற மூவரும் அவரவர் இருக்கைக்கு திரும்பினர். வருத்தம் சுமந்த முகத்துடன் செல்லும் தன் தோழிகளைக் கண்டு உள்ளுக்குள் உருகினாலும் அதை வெளியே காட்டாது வள்ளி மீண்டும் ஜன்னலை வெறிக்க தொடங்கினாள்.

திருச்சியின் புகழ் பெற்ற கான்வென்ட் பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு மாணவி ஒருத்தி மனதிற்குள் தன்னை வருத்தெடுப்பதை அறியாத வில்லாளன், மதுரையில் தன் பெரிய மீன் பண்ணையில் வழக்கமான தன் பணியில் இருந்தான்.

ஏதோ ஆய்வகம் போல தோற்றம் அளித்த பெரிய அறையில் உட்குழிந்த கண்ணாடி பேழைகளில், ஊடு திரவத்தை நிரப்பியவன்,



DO NOT COPY

“சுப்பு…” எனக் குரல் கொடுக்க, அவனின் அந்த உதவியாளன் வளர்ச்சியை எட்டி இருந்த ஆண் சங்கரா மீனை அவன் கைகளில் கொண்டு வந்துக் கொடுத்தான்.

அதை கவனமாய் கையுறை அணிந்த கரம் கொண்டு வாங்கியவன், அதன் அடிவயித்றுப் பகுதியில் லேசாக அழுத்தம் கொடுக்க மீனின் விந்தணுக்கள் அந்த பேழையில் சேகரிக்கப்பட்டன.

அடுத்து வளர்ந்த பெண் மீனின் கருமுட்டைகளுக்கு அதே போல, அந்த கண்ணாடிப் பேழையில் வெளியேற்றப்பட,

கவனமாய் அந்தப் பேழையை கலந்தவன், “சுப்பு நாத்தாங்கால் தொட்டி தயாரா இருக்கு இல்ல… போனவிட்டம் மாதிரி…. தண்ணியில பூச்சி இருந்துச்சி மீனை தின்னுசின்னு பதில் சொல்லிட்டு இருந்தீங்க…”

வில்லாளன் வார்த்தைகளில் விரவி இருந்த கோபத்தை உணர்ந்த சுப்பு, “அது போனவிட்டம் புதுப் பையன் சரியா கவனிக்காம குஞ்சிகளை விட்டான் சார். இந்தவிட்டம் நான் கவனமா பாத்துக்கிடுதேன்….” என சொல்ல,

அந்த பதிலில் திருப்தி அடைந்ததைப் போல, “ஹும்..” என்றவன், “எல்லா மீனுக்கும் ஊசிப் போட்டு இருக்கு….. சரியா மூணு மணிநேரத்துக்கு ஒருக்க மீனுக கிட்ட இருந்து முட்ட எடுக்கணும்….”

சொல்லிக் கொண்டே வில்லாளன் தன் கை உறைகளை நீக்க, அதே நேரம் அந்த அறைக்குள் வாசு நுழைந்தான்.



DO NOT COPY

“சாரி மாப்பிள்ளை...கொஞ்சம் லேட் ஆயிடுச்சி...” என்று மன்னிப்பை வேண்ட, அவனைப் பார்த்து புன்னகைத்தவன், லேசாய் கண்சிமிட்டி,

“பாஸ்...ரம்யமா பொழுதை கழிச்சிட்டு வந்து இருப்பீங்க ..” வில்லன் ரம்யதிற்கு கொடுத்த அழுத்தத்தில் வாசுவின் முகம் மெலிதாய் சிவந்தது.

“அப்படியெல்லாம் ஒன்னும் இல்லடா நீ வேற..” வாசு தலைக் குனிந்துக் கொண்டு பதில் சொன்ன விதத்திலேயே, அது அப்படித் தான் என்ற உண்மை வில்லனுக்கு புரிபட,

“டேய்...ஓகே ஓகே....நான் எதுவும் கேக்கல... நீ ரொம்ப வெட்கப்படாத என்னால பாக்க முடில... இன்னைக்கு இங்க எக் பெர்டிலைசேசன் எல்லாம் நீ பாத்துக்கோ.... நான் போய் ஆர்டர் எல்லாம் செக் பண்ணிட்டு பேக்கிங் டிபார்ட்மெண்ட் பாத்துக்கிறேன்..” என்றுவிட்டு அங்கிருந்து வெளியே நடந்தான்.

கிட்டத் தட்ட மூன்று ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்த மீன் பண்ணை. அவன் தந்தை ஆரம்பித்தது. வில்லனுக்கு சிறுவயதில் இருந்தே மீன்கள் வளர்ப்பில் ஆர்வம் அதிகம். பத்து வயதில் இருந்தே தந்தையின் பின் சுற்றி தொழில் கற்று வளர்ந்தவன்.

பனிரெண்டாம் வகுப்பிற்கு மேல், மீன் வளத்துறையில் மேற்படிப்பை முடித்து, தந்தையுடன் இணைந்து தொழில் நடத்தி வருகிறான். இடையில் வந்த அரசு வேலை வாய்ப்பை வேண்டாமென்று புறம் தள்ளிய இளைனன்.

பெரிய பெரிய சிமெண்ட் குட்டைகளில் சிறியவகை நாட்டு மீன்கள் நீந்திக் கொண்டிருக்க, அதை தாண்டி செயற்கையாய் அமைக்கப்பட்டிருந்த



DO NOT COPY

பண்ணைக் குட்டைகளில், கூட்டு மீன் வளர்ப்பு முறை செயலாக்கத்தில் இருந்தது.

மீன் குட்டைகளில் மீனுக்கு முறையாக தீவனம் வைக்கப்பட்டிருக்கிறதா.... என்று பார்வையிட்டுக் கொண்டே நடந்தவன், அதை தாண்டி சிறிதாய் இருந்த நாற்றாங்கால் தொட்டிகளில் இருந்த மீன் குஞ்சுகளின் வளர்ச்சியை ஒரு பார்வை பார்த்துவிட்டு மேலே நடந்தான்.

உணவிற்கு பயன்படும், லோகு, கெழுத்தி, கெண்டை, விரால், சங்கரா மீன் வகைகளைத் தாண்டியதும், பெரிய கூடாரம் இருக்க அதனுள் கண்ணாடி தொட்டிகளில் வித விதமான வண்ணத்தில் வளர்ப்பு மீன்கள் நீந்திக் கொண்டிருந்தன.

ஒரு பக்கம் பெரிய பெரிய கண்ணாடிகளை அறுத்து, சிறிய கண்ணாடி தொட்டி அமைக்கும் பணியில் சிலர் ஈடுபட்டிருக்க, இன்னும் சிலரோ வெளியூரில் இருந்து வந்து இறங்கி இருந்த செயற்கை கடல் அலங்கார பொருட்களை பிரித்து அடுக்கி கொண்டிருந்தனர்.

அங்கே வேலை செய்துக் கொண்டிருந்தவர்களுக்கு சில கட்டளைகளை பிறப்பித்து முடித்தவன், மேற்பார்வை பணி முடித்து தன் அலுவல் அறைக்குள் நுழைந்தான்.

அன்று உள்ளூர் உணவு விடுதிகளுக்கும், மீன் சந்தைக்கும் அனுப்ப வேண்டிய மீன் வகையாறாக்களை ஆராய்ந்து முடித்தவன், அலைபேசியில் தகவல்கள் சரி பார்க்கப்பட்டதை உறுதிபடுத்த, மீன் விற்பனைப் பிரிவில் இருந்தவர்கள் தங்கள் பணியை தொடங்கினர்.

அதிகாலை முதல் தொடங்கிய பணி. நேரம் அப்போது நண்பகலை தொட்டு இருந்தது. அந்த நேரம் நண்பனின் காதலி ரம்யாவின் பெயரைச் சொன்னதும் அவன் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியை எண்ணி அவன் மனம் ஏக்கம் கொண்டது... அவன் வீட்டினர் அவன் திருமணத்தை முடிவு செய்திருந்த விதத்தில்.

தன்னுடைய சுழல் நாற்காலில் அவன் இலகுவாய் சாய்ந்து அமர, அந்த நேரம் அவன் செல்லிடை பேசி அழைத்தது.

“அம்மா... அம்மா எனக் யாரு அம்மா..” அலைபேசியின் கீதத்தில் அழைப்பது தாய் என்று அறிந்தவனின் இதழில் மலர்ச்சி புன்னகை ஒன்று வந்து அமர,

அலைபேசியை உயிர்ப்பித்தவன், “என்ன சுந்தரி... இன்னைக்கு எத்தனை கிலோ விரால் வேணும்..” என்று பேச்சை துவங்க,

“ஆமா... நீ கொண்டாரா அத்தனை விராலும் என் வயித்துக்குள்ள தான போய் நீந்துது. எப்பவும் திங்கிறதைப் பத்தியே யோசனை... ராசா....உங்க மலர் அத்தை வீட்ல இருந்து போன் வந்துகிட்டே இருக்கு... நாங்க என்ன பதிலை சொல்ல..”

ஏனோ மலர் என்ற பெயரே அவன் கோபத்தை விசிறி விட போதுமானதாய் இருக்க, “அதான் எல்லாரும் ஏற்கனவே முடிவு பண்ணிடீங்க இல்ல... அப்புறம் என்கிட்ட என்ன கேள்வி வேண்டி இருக்கு. உங்க மூத்த பொண்ணை வர சொல்லி நடக்க வேண்டியத பாருங்க..” எனக் கோபமாய் இரைந்துவிட்டு அலைபேசியை துண்டித்தான்.

DO NOT COPY

இந்த திருமண பேச்சு வார்த்தையை எப்படி தவிர்ப்பது என அவன் சிந்தனையில் மூழ்க, திருச்சியில் பள்ளி மரத்தடியில் கூடி இருந்த நால்வர் குழுவும் அதே தீவிர சிந்தனையில் இருந்தது.

வில் - 2

பாம்பும் கூட பசிக்கையில் மட்டும் தன் இனம் புசிக்கும்.

மனிதன் மதம் பிடிக்கையில் எல்லாம் தன் இனம் புசிக்கிறான்.

விடிந்தால் திருமணம். எப்படி எப்படியோ தடுக்க முயன்று கடைசி வரை தடுக்க முடியாமல் போன திருமணம்.

வள்ளிக்கு நேற்றோடு பதினெட்டு வயது பூர்த்தியாகி இருந்தது. அவளின் வயது முழுமை அடைவதற்கே இந்த மூன்று மாத இடைவெளியை அவள் குடும்பம் அவளுக்கு வழங்கி இருந்தது.

வள்ளிக்கு தினம் அழுது அழுது அவள் கண்ணீர் சுரப்பிகள் அதன் பணியை முற்றிலும் நிறுத்தி இருந்தன. அவளின் அக்கா வித்யா ஆறு மாதங்களுக்கு முன்னால் வீட்டை விட்டு வெளியேறி பதிவு திருமணம் செய்துக் கொண்டாள்.

வள்ளியின் தந்தை மகாலிங்கம் தமிழ் நாட்டின் குறிப்பிட்ட ஜாதியின் மாவட்ட தலைவர். அதோடு அவர்கள் ஜாதி சார்ந்த கட்சியின் பொருளாளர்.



DO NOT COPY

அவரால் சொந்த மகள் தன்னை மதியாது.... தீண்ட தகாதவர்கள் என்று சமூகத்தால் ஒரு காலத்தில் முற்றிலும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த கீழ் குடியில் பிறந்த ஒருவனை திருமணம் செய்துக் கொண்டதை ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

நிச்சயம் தந்தை தன் காதலை ஏற்கப் போவதில்லை என்பதை உணர்ந்திருந்த வித்யா வீட்டில் ஒருவரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் பதிவு திருமணம் செய்துக் கொண்டதோடு தன் கணவனின் பாதுகாப்பு கருதி காவல் துறையிலும் முன் எச்சரிக்கை புகார் கொடுத்து இருந்தாள்.

தன் உயிருக்கோ, தன் கணவனின் உயிருக்கோ பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு முழுக் காரணம் தன் தந்தை தான் என்று. அவரால் அந்த அவமானத்தை தாங்கவே முடியவில்லை. இனி தனக்கு ஒரே மகள் தான் என்று அன்றே அவளை தலை முழுகியவர்..... சிறிய மகள் வள்ளியிடமிருந்தும் ஒதுங்க தொடங்கினார்.

போதா குறைக்கு அவரின் அங்காளி பங்காளிகள் வேறு, “மச்சான் பெரியவளே உங்க காதை அறுத்து முச்சந்தியில் நிப்பாட்டி புட்டா.... அவனுங்க ஒவ்வொரு மீட்டிங்லையும் கலந்து பேசுற மாதிரி நம்ம வீட்டு பொண்ணுங்களை மயக்கி.... அவிங்க வம்சம் வளக்குறாய்ங்க.....இப்போ நம்ம சங்கத்துல உங்க மானம் தலை குப்புற கிடக்கு. நம்ம சொந்த பந்தத்துக்குள்ள சின்னக் கழுதைக்கு ஒரு மாப்பிள்ளை பேசி மொதோ அதைப் பத்தி விடுற வழியைப் பாருங்க... நாளைப் பின்ன அதுவும் உங்க மூக்கை அறுத்து முச்சந்தியில நிறுத்திடக் கூடாது பாருங்க...”

மாறி மாறி சொந்தங்களின் வற்புறுத்தல்கள்....மற்ற ஜாதிக் கட்சிகளின் கிண்டல் வார்த்தைகள்... எப்பொழுதும் சிங்கம் போல உலவிக் கொண்டிருந்தவரை மொத்தமாய் முடக்கிப் போட்டன.



DO NOT COPY

சிறிய மகளுக்கு தீவிரமாய் மாப்பிள்ளை வேட்டையை தொடங்கினார். வள்ளியம்மைக்கு தனக்கு இப்பொழுது திருமணம் வேண்டாம் என்று அப்பாவை நெருங்கி சொல்லக் கூட பயமாய் இருந்தது.

வில்லாளன் வீட்டில் அப்பொழுது தான் அவனுக்கு வரன் தேட தொடங்கி இருந்தனர். அவனின் அக்கா பூங்கோதையை மகாலிங்கத்தின் அண்ணன் மகனுக்கு தான் திருமணம் செய்து கொடுத்து இருந்தனர்.

பூங்கோதையின் புகுந்த வீட்டிற்கும் அவர்கள் சொந்த பந்தத்தில் ஏற்ற பெண் இருந்தால் தகவல் தெரிவிக்க சொல்லி வில்லாளனின் ஜாதகம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது.

மகாலிங்கம் மாப்பிள்ளை தேடுவதை அறிந்த அவர் அண்ணன் அண்ணாதுரை, வள்ளியம்மையை வில்லாளனுக்கு பேசலாம் எனக் கூற, முதலில் பெரியவர்கள் ஜாதகம் பார்த்து பத்தில் ஒன்பது பொருத்தம் கூடி வர, அதன் பிறகு வில்லாளன் வீட்டில் தகவல் சொல்லினர்.

மாகலிங்கத்தின் செல்வாக்கை நன்கு அறிந்திருந்த வில்லாளனின் குடும்பத்தினருக்கு இந்த சம்மந்தம் கை கூடி வந்ததில் அளப்பரிய மகிழ்ச்சி. அதுவும் புடவையில் இருந்த வள்ளியம்மையின் புகைப்படத்தைப் பார்த்து வில்லாளன் சம்மதம் தெரிவித்தும் மிகவும் மகிழ்ந்து போய் திருமண பேச்சு வார்த்தைகளில் ஈடுபட துவங்கினர்.

அப்பொழுது பெண்ணைப் பற்றி அறிந்துக் கொள்ள, அவள் படிப்பு பற்றி வில்லாளன் விசாரிக்க, பனிரெண்டாம் வகுப்பு படித்திருகிறாள் என்று அவர்கள் சொல்ல அவன் மனதிற்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது.


DO NOT COPY

மனதின் ஏமாற்றத்தை அவன் வார்த்தைகளிலும் வெளிப்படுத்தினான். “மா.... மகாலிங்கம் மாமா வீடு ரொம்ப வசதி தானே.... பொண்ணை ஒரு டிகிரி கூட படிக்க வைக்கலையா..?” எனக் கேட்க,

அப்பொழுது அங்க இருந்த அவன் அக்கா பூங்கோதை வெடித்து சிரித்தாள். “டேய்.... பொண்ணு மொதோ ப்ளஸ் டூ முடிச்சா தானே காலேஜ் அனுப்ப முடியும். அவ இந்த வருஷம் தான் பரிச்சையே எழுதப் போறா..” என இயல்பாக சொல்ல,

வில்லாளன் வெகுண்டெழுந்தான். பள்ளி மாணவி ஒருத்தியை தன் இல்வாழ்க்கை துணையாய் தன் பெற்றோர்கள் தேர்ந்தெடுப்பர்கள் என அவன் கிஞ்சித்தும் எண்ணவில்லை. அவர்கள் செய்திருந்த செயல் அவன் கோபத்தை கிளப்பிவிட,

“என்னது ப்ளஸ் டூ படிக்கிற பொண்ணு கூட எனக்கு கல்யாணமா. உங்களுக்கு எல்லாம் மூளை மழுங்கிப் போச்சா. அம்மா இந்தப் பொண்ணு எனக்கு வேண்டாம். வேற பொண்ணைப் பாருங்க” என இரைந்துவிட்டு வேகமாய் அங்கிருந்து கிளம்பி சென்றுவிட்டான்.

ஆனால் அவன் எண்ணியதைப் போல அந்த சம்மந்தத்தை அவன் குடும்பம் கைவிட தயாராய் இல்லை. முதலில் வாக்கு கொடுத்துவிட்டோம் என்றார்கள். பிறகு பூங்கோதையின் வாழ்வில் பிரச்சனை வரும் என்றார்கள்.

இறுதியாய் அவர்கள் ஒரு காலத்தில் மிகவும் கஷ்ட ஜீவனத்தில் இருக்கும் பொழுது, மீன் பண்ணை அமைக்க உதவியதே அவர்கள் குடும்பம் தான் என்றார்கள்.


DO NOT COPY

ஆள் மாற்றி ஆள் அவனை தொடர்ந்து வற்புறுத்த, வில்லாளனுக்கு அவர்கள் சொற்பொழிவை கேட்டு கேட்டு வாழ்வே வெறுத்துப் போனது. அதோடு இதுவரை மகனின் முடிவில் அதிகம் தலையிடாத அவன் தந்தை கூட அவனை திருமணத்திற்கு மறைமுகமாய் வற்புறுத்த,

இறுதியாய், "சரி... உங்க எல்லார் வார்த்தைக்கும் மதிப்பு கொடுத்து அந்தப் பொண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன். ஆனா பொண்ணுக்கு சட்டப்படி பதினெட்டு வயசு கம்ப்ளீட் ஆகி இருக்கணும். ஏற்கனவே அவங்க குடும்பத்துல ஏகப்பட்ட பிரச்சனை. நாளைக்கு மைனர் பொண்ணு கழுத்துல தாலி கட்டிட்டேன்னு என்னை பிடிச்சி உள்ள போட்ருவாய்ங்க..." என அரை குறை மனதோடு தன் சம்மதத்தை தெரிவிக்க, அதை அவன் குடும்பமும் ஏற்றுக் கொண்டது.

அதன் படி வள்ளியம்மையின் பள்ளி முடிந்து, மூன்று மாதங்கள் கழித்து அவள் திருமணம் உறுதி செய்யப்பட்டது. வில்லாளன் அந்த இடைப்பட்ட மூன்று மாதங்களில் எவ்வளவோ தகிடு தத்தம் செய்து பார்த்தான்... திருமணத்தை நிறுத்த... ஒன்றும் நடக்கவில்லை.

முதலில் திருச்சியில் இருந்த ஸ்டார் ஹோட்டலில் ரூம் எடுத்துத் தங்கியவன், அங்கு குடித்துவிட்டு கலாட்டாவில் ஈடுபட, பிரச்சனை காவல்துறை வரை சென்று, இறுதியில் மகாலிங்கம் வந்து அவனை மீட்கும் படி ஆகிற்று.

அப்பொழுதும் அவனிடம், "மாப்பிள்ளை.... இனி தண்ணி அடிக்கிற ப்ளானோட வந்தீங்கன்னா எனக்கு ஒரு போன் போடுங்க. நமக்கு பண்ணை வீடு இருக்கு... நீச்சல் குளத்தோட..... அங்க நீங்க நிம்மதியா என்ஜாய் பண்ணலாம்.." என அறிவுரை வழங்க,

“போட்ட அம்புட்டு பிளானும் புஷ்வானமா போச்சேடா…” என மதிற்குள் புலம்பியவன், அவரை பார்த்து மண்டையாட்டிவிட்டு வீடு வந்து சேர்ந்தான்.

“பொண்ணோட வருங்கால புருஷன் குடிகாரனா இருந்தாலும் சரி…. அந்தாளோட ஜாதிக்காரனா இருக்கணும்னு நினைக்கிறாரே…” என்று யோசித்துக் கொண்டிருந்தவன், மண்டையில் அடுத்த யோசனைக்கான பல்பு எரிந்தது.

அடுத்த வாரம், இவருக்கு எதிர்க் கட்சி கூட்டம் ஒன்றில் கலந்துக் கொண்டவன், மகாலிங்கம் சார்ந்தக் கட்சியை மிகவும் வன்மையாய் கண்டித்துப் பேசினான். எப்படியும் இந்த செய்தி மகாலிங்கம் காதுக்கு போனால் கோபப்படுவார் என்ற எண்ணத்தில்.

ஆனால் அடுத்த நாளே அவனை தேடி வந்தவர், அவனை அணைத்துக் கொண்டு, “சபாஷ்… மாப்பிள்ளை..சபாஷ்…. இவிங்களை எல்லாம் இப்படித் தான் உறவாடிக் கெடுக்கணும். நான் கூட உங்களை சின்னப் பையன்னு நினச்சிட்டு இருந்தேன். இந்த மகாலிங்கத்துக்கு இனி அரசியல் வாரிசே நீங்க தான். உங்க குரல்ல என்ன கம்பீரம்… என்ன உச்சரிப்பு…. நான் அடுத்த மேடையில பேச நீங்க தான் இனி வசனம் எழுதி தரணும்… அப்படியே அந்த நாதாரிப் பயலுக மேலையும் ஒரு கண்ணு வச்சிக்கோங்க….” என்றவர், அவன் சாமர்த்தியத்தைப் பாராட்டி இரண்டு பவுனில் மோதிரம் ஒன்றை பரிசளித்துவிட்டு செல்ல அவன் வீட்டினருக்கு ஒரே கொண்டாட்டம்.

அதன் பிறகு வில்லாளன் நடப்பது நடக்கட்டும் என்று நொந்து போய் தன் வேலையை பார்க்க தொடங்கி இருந்தான்.

வள்ளியம்மை அவள் தோழிகளின் உதவியோடு நடக்க இருப்பது மைனர் திருமணம் என்று காவல் துறைக்கு மறைமுக தகவல் தெரிவிக்க எண்ணி இருந்தாள். ஆனால் வில்லாளன் பதினெட்டு வயது நிரம்பினால் மட்டுமே திருமணம் செய்துக் கொள்வேன் என்றுக் கூறி விட, அவள் தோழிகளுக்கு யோசிக்க மாற்று வழி இல்லாமல் போனது.

அதோடு தினம் தந்தையிடம், வலி மிகு வார்த்தைகளால் திட்டு வாங்கும் அன்னையை காண்கையில் வீட்டை விட்டு எங்காவது ஓடிப் போய் விடுவோம் என்ற எண்ணமும் நொறுங்கிப் போனது.

வித்யா வீட்டை விட்டு போகும் வரை அவர்கள் குடும்பம் அன்பின் இழையால் நெறுக்கி வேயப்பட்ட பட்டாகவே இருந்தது. எப்பொழுதும் கனிவுடன் இரு மகள்களையும், 'செல்லம்மா' என அழைக்கும் தந்தை.

ஆனால் பெற்ற பிள்ளைகளை விட பேர் சொல்லும் ஜாதி அவருக்கு இன்றியமையாதது என்பதை அவள் தன் அக்கா வீட்டை விட்டு வெளியேறிய பின்பே தெரிந்துக் கொண்டாள்.

வில்லாளன் மணமகன் அறையில் உறக்கம் வராமல் புரள, வள்ளியும் சிவந்த விழிகளோடு நிலைக் கண்ணாடியில் தன் பிம்பத்தை பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

நிச்சயதார்த்தம் நடந்த பொழுது வில்லன், வள்ளியை அருகில் காண நேர்ந்தது. என்ன தான் உடலால் அவள் பெரிய பெண்ணைப் போல தோற்றம் அளித்தாலும், முகத்தில் குழந்தை தனம் அப்பட்டமாய் பிரதிபலிப்பதை கண்டவன் மனதிற்குள் சோர்ந்துப் போனான்.



DO NOT COPY

அதோடு அவள் கண்களில் இருந்த கலக்கம், அவள் கைவிரல் பற்றி, "பயப்படாத பாப்பா..." என்று அவளுக்கு ஆறுதல் அளிக்க தூண்டியது. ஆம் அவனை அறியாமலேயே அவளை பாப்பா என மனதிற்குள் அழைத்து இருந்தான்.

என்னவோ குற்ற உணர்ச்சி மனதை அலைகழிக்க அவன் இரவு உறங்கா இரவாகவே முடிந்தது. வள்ளியின் விடியலும் உறங்கா விழிகளுடன் தொடங்க, மணமக்கள் இருவரும் சிவந்த விழிகளோடு வந்து மேடையில் அமர்ந்தனர்.

திருமண ஏற்பாடுகள் தொடங்க, அவர்களை தவிர மொத்த சொந்தமும் உற்சாகமாய் திருமணத்தில் பங்கேற்று இருந்தனர். கெட்டி மேளம் முழங்க, வில்லன் வள்ளியின் கழுத்தில் சொந்தங்கள் ஆசிர்வதித்துக் கொடுத்த தாலியை கட்டினான்.

வள்ளி எத்துனை முயன்றும் அவள் கண்களில் இருந்து வழிந்த நீரை அவளால் தடுக்கவே முடியவில்லை. அவள் அழுவதைக் கண்டு, அவள் தாய் அவளை அரட்ட, அருகில் அமர்ந்திருந்த அவனோ,

அவள் விழிநீரை தன் கரம் கொண்டு துடைத்துவிட்டு, "ஷ் பாப்பா அழாதே.....எல்லாரும் நம்மளை தான் பாக்குறாங்க.." என கனிவாய் இயம்ப, வள்ளி தன் விழி நீர் வடிந்து மை கசிந்த கண்களோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவன் முகத்தில் இருந்த காருண்யத்தில் அவள் மனது சற்றே அமைதி கொண்டது. ஆனாலும் பொங்கி வரும் அழுகையை அவளால் நிறுத்தவே முடியவில்லை. ஒரு வழியாய் சம்பர்தாயங்கள் முடிந்து மணமக்கள்



DO NOT COPY

இருவரும் உறவினர்களிடம் பரிசுகளைப் பெற்றுக் கொண்டு, புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்க,

வித்யா முழுக்க நனைத்த உடையுடனும், சிவந்த விழிகளுடனும் காளிகா தேவியின் மறு உருவம் போல தன் கைகளில் அவள் தாலியை ஏந்திய படி வந்து நின்றாள்.

மண்டப வாயிலில் அவள் தலை தென்பட்டவுடன் மொத்த உறவினர் கவனமும் அவளில் குவிய, சிலர், "நீ எதுக்குடி இங்க வந்த..." என அவளை தடுக்க ஓடி வந்தனர்...

அவர்களை அவள் உறுத்துப் பார்த்ததில் வாய் பேசமால் அவர்கள் தள்ளி நிற்க, பந்தியை கவனித்துக் கொண்டிருந்த மகாலிங்கம் அவள் வரவை கேள்விப்பட்டு ஓடி வந்தார்.

அவரை கண்டதும் அவள் கண்களில் வெறி பல  மடங்காய் ஏறியது. ஓடி வந்த வேகத்தில் மகாலிங்கம் மகளை அடிக்க வர, என்ன நடந்தது என உணரும் முன் வித்யா அவரை எட்டி உதைத்து இருந்தாள்.

மகள் உதைத்த வேகத்தில் அவர் இரண்டடி பின் சென்று விழ, மற்ற உறவினர்கள் அவளை தாக்க வர, கையில் இருந்த தீப்பெட்டியை காட்டியவள்,

"ஒழுங்கு மரியாதையா பின்னாடி தள்ளி நில்லுங்கடா பொட்ட பசங்களா... ஒரு அடி... ஒரே அடி  எவனாச்சும் முன்னாடி எடுத்து வச்சீங்க... என் உடம்பு

முழுக்க பெட்ரோல் ஊதிக்கிட்டு வந்து இருக்கேன். என் மேல கொளுத்திக்கிட்டு உங்க மேல பாஞ்சிருவேன்..''

அப்பொழுது தான் அவள் மீது வீசிய பெட்ரோல் மணத்தை உணர்ந்தவர்கள் அடித்து பிடித்துக் கொண்டு பின்னால் நகர்ந்தார்கள்.

அவர்கள் அப்படி அவசரமாய் பின் நகர்ந்ததைக் கண்டு ஆங்காரமாய் சிரித்தவள், "டேய் மகாலிங்கம்... பாருடா பாரு.... இது தான் உன் ஜாதிக்காரைங்க வீரம்..... இவ்ளோ தான் இவிங்க ஆம்பளைத் தனம்.'' என்றவள் மீண்டும் வீண்டும் வெறி பிடித்தார் போல பொங்கி சிரிக்க,

மேடையில் இருந்த வள்ளி வேகமாய் இறங்கி அக்காவை நோக்கி ஓடினாள். அதுவரை அங்கு நடந்துக் கொண்டிருந்த சம்பவத்தை அதிர்ச்சியுடன் நோக்கிக் கொண்டிருந்த வில்லனும் வள்ளியை பின் தொடர்ந்து ஓடினான்.

வள்ளி அக்கா என்ற கூவலோடு வித்யாவை நெருங்க, வித்யாவோ தங்கையை கண்டதும் முகத்தில் தோன்றிய கனிவை மறைத்து, "அங்கேயே நில்லு வள்ளி..'' எனக் கடினக் குரலில் மிரட்டினாள்.

வள்ளி அக்காவை பார்த்து கண்ணீர் வடிக்க, மூர்க்கத்துடன் எழுந்து நின்ற மகாலிங்கம், "இங்க எதுக்குடி வந்த ***********************'' என பெற்ற மகளை ஊரார் முன்னிலையில் தகாத வார்த்தைகளால் திட்ட,

அவரை உறுத்து விழித்தவள், " ஜாதி வெறி பிடிச்ச உனக்கு பொறந்ததால நான் அப்படி இருந்து இருக்கலாம். ஆனா மனுசனை மதிக்கிற ஒருத்தனை

கல்யாணம் பண்ணி... அவன் கூட குடும்பமும் நடத்தி... இப்போ அவன் வாரிசை வயித்துல சுமக்குறதால நான் பத்தினி தாண்டா..” என்றவள்.

அப்படியே மடங்கி அமர்ந்து, “உனக்கு நாங்க என்னய்யா பாவம் பண்ணோம். உன்னோட சங்காத்தமே வேண்டாம்னு தானே ஊரைவிட்டு ஓடிப் போய் ஒதுங்கி வாழ்ந்தோம். ஆனா..... கொஞ்சம் கூட ஈவு இரக்கமே இல்லாம... உன் ரெண்டாவது மக கல்யாணம் முடிவு செஞ்ச அதே நாள்ல என் தாலியை அறுக்க திட்டம் போட்டு அதை நடத்தியும் காடிட்ட இல்ல....

ஐயோ... நான் பாவி... நான் பாவி...உன்ன மாதிரி மிருகத்துக்கு பிறந்துட்டு அந்த மாதிரி மனுசனை காதலிச்சி கல்யாணம் பண்ணிக்க ஆசைபட்டேனே நான் பாவி....! நேத்து நைட்டு வேலைல இருந்து வீட்டுக்கு வந்த மனுசனை லாரி வச்சி அடிச்சி கொன்னுட்டு... வெறும் ஆக்சிடென்ட்னு போலீசை நீங்க நம்ப வைக்கலாம்... ஆனா என்ன நம்பவைக்க முடியாது.

என்னோட விக்ரம் சாவை ஆக்சிடென்ட்டா காட்டி தப்பிக்க முடிஞ்ச உங்களால என் சாவை அப்படி ஜோடிக்க முடியாது. என்னோட விக்ரம் சாவுக்கு எனக்கு நீதி வேணும். நீங்க எல்லாரும் என் சாவுக்கு பதில் சொல்லியே ஆகணும்.

எல்லாரும் நல்லா கேட்டுக் கோங்க.... நீங்க இன்னைக்கு பொத்தி பொத்தி காப்பாத்தி வெறியேத்தி வைக்குற ஜாதி ஒரு நாள் எரிஞ்சி சாம்பலா மண்ணோட மண்ணா போகத் தான் போகுது.

அப்போ நீங்க எல்லாம் மனுஷங்கிற அடிப்படை அடையாளத்தையே தொலைச்சிட்டு அனாதைகளா நிக்கத் தான் போறீங்க.



DO NOT COPY

கண்டிப்பா அப்படி ஒரு நாள் வரும். வந்தே தீரும். என்னதான் கண்ணீர்ல கழுவினாலும் உங்க பாவம் குறையவே குறையப் போறதில்லை..” என்றவள் வேகமாய் எழுந்து நின்றாள்.

மூர்க்கமாய் கையில் இருந்த தாலியை தந்தையின் முகத்தை நோக்கி வீசி எறிந்தவள், “இந்தா இதை நீயே வச்சிக்கோ... இதை என் கழுத்துல இருந்து கழட்ட தானே உனக்கு ஆசை... நானே கொடுக்குறேன் வச்சிக்கோ...

உன்னோட அடுத்த ஆசையும் எனக்கு தெரியும். அவனோட வாழ்ந்த என்னை கண்டம் துண்டமா வெட்டிப் போட்டு உன் ஜாதிப் பெருமையை நிலைநாட்டிக்க தோணும். அதையும் நானே உனக்கு பிச்சைப் போடுறேன்.... அவன் இல்லாத இந்த உலகத்துல நானும் அவன் குழந்தையும் இனி இருக்க மாட்டோம்..” என்றவள் கண்ணீர் வழிந்த முகத்துடன் இயலாமையோடு தன் அடிவயிற்றை தடவிக் கொடுத்தாள்.

அதுவரை ஓரமாய் நின்று அழுதுக் கொண்டிருந்த மலர், “ஐயோ வித்தி..” என்று மகளின் அருகே வர முயல, வேகமாய் பின்னே நகர்ந்தவள், கையில் இருந்த தீக்குச்சியை உரச... அவள் உடல் முழுவதையும் நொடியில் அக்னி ஆட்க்கொண்டது.

ஒரு நிமிடம் அனைவரும் உறைந்துப் போக... வில்லன் வேகமாய் செயல்பட்டு தன் வேட்டியை உருவி வித்யாவை நெருங்கப் போனான். அந்தோ பரிதாபம் வித்யா தீயில் உடல் வெந்த போதும் பின் நோக்கி நகர்ந்து படிகளில் விழுந்து அப்படியே உருண்டு எரிபந்தாய் வீதியில் வீழ்ந்தாள்.

அங்க பார்வையாளர்களாய் இருந்த அனைவரும் நொடியில் நடந்த கோர சம்பவத்தின் கால சாட்சியமாய் இருக்க, வள்ளி மட்டும் அக்காவின் உடல்


DO NOT COPY

தீயை உள்ளத்தில் சுமக்கப் போகும் அக்கினி குஞ்சாய் பிறர் அறியாமல் மாறிக் கொண்டிருந்தாள்.

என்று அணையும் இந்த ஜா 'தீ' ய தீ.....

என்று மலரும் எங்கள் மனித நீதி.

வில் - 3

ஆதி மனிதனாகவே வாழ்ந்திருக்கலாம்.

ஆணவ ஜாதிகள் இல்லாமல்.

மூன்று நாளில் ஒருத்தி இன்னொருத்தி ஆக முடியுமா. வள்ளி முற்றிலும் வேறொருத்தியாய் மாறியிருந்தாள். அக்காவின் உடலை சுட்ட அக்னியை தன் மனதில் வாங்கியிருந்தாள்.

வித்யா தன் உடலை என்ன தான் பெட்ரோல் கொண்டு நனைத்து விட்டு வந்திருந்த போதும், அவள் சற்று நேரம் பேச எடுத்துக் கொண்ட அவகாசத்தில் அவள் உடலில் இருந்த பெட்ரோல் சற்றே ஆவியாகி இருந்தது.

ஆகையால் அவள் இன்னுயிர் உடனே உடலை விட்டுப் பிரியவில்லை. மூன்று நாட்கள் அரசின் தீவிர தீப் புண் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு முற்றிலும் நீர்ச் சத்துத வடிந்து உடலின் ரத்தத்தில் தொற்று நோய்க் கிருமிகள் கலந்து அதன் பிறகே அவள் இறப்பை சந்திக்க நேர்ந்தது.


DO NOT COPY

அக்கா அனுபவித்த வேதனையை கண்ணில் கண்ட வள்ளிக்கு அவள் இறப்பு துரிதமாய் நடந்தால் போதும் என்று அவள் மனமே ஏங்க தொடங்கிவிட்டது.

அக்காவின் பட்டு மேனி முழுக்க தீயில் கருகி இருக்க.... அவள் உடலில் குளுகோஸ் ஏற்ற ஏதோ கொடி கம்பியை வெளியே உருவி எடுப்பதைப் போல ஏற்கனவே வெந்து இருந்த சதையை கிழித்து நரம்பை வெளியே எடுத்து அதன் மூலம் குளுகோஸ் ஏற்றி இருந்தார்கள்.

அக்கா இருபத்தி நாலு மணி நேரமும் நீர் நீர் என்று அரற்ற மருத்துவர்கள் ஒரு சொட்டு நீரைக் கூட வாய் வழியே கொடுக்கக் கூடாது என்று சொல்லி இருந்தார்கள்.

வித்யாவின் தற்கொலை முயற்சியை தொடர்ந்து.... விக்ரமின் விபத்து மறு விசாரணைக்கு சி.பி.ஐ தரப்பிற்கு மாற்றப்பட்டது. மேலும் வித்யா கொடுத்த மரண வாக்குமூலத்தால்.... அன்றே மகாலிங்கம் கைது செய்யப்பட்டார்.

மேலும் விக்ரம் விபத்து...விபத்தல்ல திட்டமிட்ட கொலை என்று காவல் துறை கண்டறிய மகாலிங்கத்தின் பங்காளிகள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

மலர் வீட்டிற்குள் முடக்கி வளர்க்கப்பட்ட அப்பாவிப் பிறவி. அவருக்கு கணவன் சிறை செல்ல... பெற்ற மகள் மரணப் படுக்கையில் கிடக்க, அடுத்து என்ன செய்வது என்றே புரியாத நிலை தான்.

வில்லாளனின் குடும்பமும் வள்ளி ஏதாவது பேசி நம் குடும்பத்தையும் சிறைக்கு அனுப்பிவிடுவாள் என்ற பயத்தில் முழுவதும் ஒதுங்கிக் கொண்டனர்.

ஆம் அக்காவை மருத்துவமனை கொண்டு செல்ல வந்த 108 வாகனத்தில் ஏறி அமர்ந்தது முதல் அவள் வேறொரு பெண்ணாக தான் மாறிப் போனாள்.

காவல் துறை விசாரிக்க வந்த பொழுது தைரியமாய் தந்தைக்கு எதிராகவே சாட்சி சொன்னாள். தன் தோழிகளின் குடும்பத்தில் நிதி உதவி வாங்கி தனக்கு மாற்று உடைகளுக்கும், இன்ன பிற அத்யாவசிய தேவைகளையும் பார்த்துக் கொண்டாள்.

மலர் எத்துனை முறை அழைத்தும் மருத்துவமனை விட்டு அவர்கள் வீடு செல்ல முற்றிலும் மறுத்துவிட்டாள். அதோடு அக்காவை சந்திக்க வந்த அத்தனை ஊடகத்தையும் ஒற்றைப் பெண்ணாய் எதிர்க் கொண்டு அவர்களின் அத்துணை கேள்விகளுக்கும் பதில் அளித்தாள்.

அவர்கள் வீட்டினர் எத்தனை தடுத்த போதும் வில்லன் மருத்துவமனையில் முடிந்த அவள் கண்ணில் படும் தொலைவில் அவளோடு இருந்தான். ஆனால் வள்ளி அவனை எல்லாம் கண்டுகொள்ளும் நிலையில் இல்லை.

மூன்றாம் நாள் வித்யா இறக்க.... விக்ரமின் குடும்பத்தை வரவழைத்து அவர்கள் முறைப்படி வள்ளி அக்காவின் ஈம காரியத்தை முன் நின்று நடத்தி வைத்தாள்.

தன் கணவனை இழந்து ஒற்றைப் பெண் மணியாய் தன் ஒரே மகனை சமூகத்தின் நல்ல நிலைக்கு உயர்த்தி இருந்த விக்ரமின் அன்னை சசி, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழ, அவரை அணைத்துக் கொண்டவள்,

“நான் இருக்கேன் மா… எப்பவும் உங்களுக்கு..” என்று ஆறுதல் வார்த்தைகளை உதிர்த்தாள். வித்யாவின் ஈம சடங்கு முடிய, வள்ளி எப்படியும் வீடு திரும்பிவிடுவாள் என அவள் மொத்தக் குடும்பமும் எதிர்பார்க்க, அவளோ தன் மூட்டை முடிச்சிகளோடு விக்ரம் வீடு இருந்த குடிசைப் பகுதியில் குடியேறிவிட்டாள்.

வில்லன் வீட்டில் பேச்சு வார்த்தை நடத்தி திருமணத்தை முறிக்கலாம் என்று அவர்கள் சிந்தனையில் மூழ்கி இருக்க, வில்லனோ அவளோடு பேசி நடை முறை வாழ்வை அவளுக்கு புரிய வைக்க முயன்றுக் கொண்டிருந்தான்.

ஒரு கட்டத்திற்கு மேல் அவனை திருச்சியில் விட்டு வைத்தால் சரி வராது என்று அவன் குடும்பம் அவனை வலுக்கட்டாயமாய் மதுரை அழைத்து சென்றது.

இடையில் மலரின் உறவினர்கள் அவரை பார்த்துக் கொள்ள வந்துவிட்டாலும் தினமும் வள்ளியை அவர்கள் வீட்டிற்கு வர சொல்லி சமாதானம் பேசிக் கொண்டிருந்தனர்.

மகாலிங்கம் உறவினர்களோ… வள்ளியையும் கொன்று விடலாம் எனப் பேச, அழுது அழுது மூலையில் கிடந்த மலர் பொங்கித் தள்ளி விட்டார்.

“நீங்க எல்லாம் யாருடா… எங்க இருந்து வரீங்க… நான் கஷ்டப்பட்டு பத்து மாசம் சுமந்து பெத்த பிள்ளைங்களை வாழை மரம் கணக்கா வெட்டி வீசிட்டு போறீங்க…. அவளுங்க உங்க வீட்டு வாசல்ல சோத்து குண்டானை தூக்கிட்டு வந்து நின்னாளுகளாடா…. மொதோ பொண்ணை உங்க வறட்டு கௌரவத்துக்கு பலி கொடுத்துட்டேன்…


DO NOT COPY

என் ரெண்டாவது மக மேல உங்க நிழல் பட்டாக் கூட போலீஸ்க்கு கூட போ மாட்டேன்... நானே அம்புட்டு பயலுகளையும் வெட்டி வீசிருவேன்.

அவ தான் உங்க நாத்தம் புடிச்ச ஜாதி வேண்டாம்னு ஒதுங்கிப் போறா இல்ல. விட்டுத் தொலைங்களேன்டா அவளை. இனி யாராச்சும் ஜாதி சங்கம்ன்னு என் வீட்டு வாசப் படியை மிதிச்சீங்க... டேய் கோபாலு எல்லா நாயையும் வெளிய தள்ளி கதவை சாத்துடா..'' என தன் தமையனுக்கு ஆணையிட,

சற்றே நகரத்தில் அதீத ஜாதிய வெறி திணிக்கப்படாமல் வளர்ந்த அவருக்கு அக்காவின் அந்த நேரக் கோபம் சரியென்றே பட, மகாலிங்கத்தின் உறவினர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்.

மூன்று மாதங்கள் உருண்டோட தன் தந்தைக்கு பத்து ஆண்டுகால கடுங்காவல் தண்டனையை வாங்கிக் கொடுத்த பின், வள்ளி தன் படிப்பைத் தொடர சென்னை கிளப்பினாள். அவளோடு சசியையும் அழைத்துக் கொண்டாள்.

தாய் ஒரு முறை வள்ளி இருந்த குடிசை வீட்டிற்கு வந்தே மகளை கண்ணீர் மல்க மகளை வீட்டிற்கு அழைத்துப் பார்த்தார். ஆனால் வள்ளி பிடிவாதமாய் வீட்டிற்கு வர மறுத்ததோடு அதன் காரணமாய்,

"மா.. தப்பு நடக்கும் போது தட்டிக் கேக்குறது மட்டும் இல்ல.. அந்த தப்பை மௌனமா வேடிக்கைப் பாக்குறது கூட பெரிய தப்பு தான்மா... அப்பா அடிக்கடி அக்காவையும் மாமாவையும் கொலைப் பண்ணுவேன்னு பகிரங்கமா நம்ம வீட்டு ஹால்ல உக்காந்து பேசினப்பவே.. நீயோ நானோ அவருக்கு எதிரா நின்னு இருந்தா... இன்னைக்கு வித்திகா உயிரோட இருந்து இருப்பா..


DO NOT COPY

சொல்லப் போனா ரெண்டு பேருமே வாயை மூடிகிட்டு இருந்து பெரிய பாவத்தை பண்ணிட்டோம். என்னை விட்ரு....இனி என்னால நம்ம வீட்டுக்கு வந்து அந்த பாவப்பட்ட இடத்துல வாழ முடியும்னு தோணல.

நான் வாழப் போற இந்த வாழ்கையை மனுசியா வாழப் பிரிப்படுறேன்மா.... நான் எங்க இருந்தாலும் உன் மக மனுசியா இருப்பா... என்னைப் பத்தி கவலைப்படாம நீ உன்னைப் பாத்துக்கோ..'' என்று திடமாக பதில் சொல்லி அனுப்பினாள்.

கடைசியாய் அவள் தன் மேல் படிப்பைத் தொடர, சென்னைக் கிளம்ப இருப்பதை கேள்விப்பட்டு, வில்லன் அவளைக் காண வந்தான். அந்த நேரம் இரவு ஏழு மணி. வள்ளி சசியோடு பேருந்து நிலையத்தில் நின்றுக் கொண்டிருந்தாள்.

"வள்ளி..'' என்ற அழைப்போடு தன் முன் வந்து நின்றவனை சற்று நேரம் அவளுக்கு அடையாளம் தெரியவில்லை என்பது தான் உண்மையாக இருக்கும். இரண்டு நிமிடம் முழுதாய் அவன் பிம்பத்தை உள்வாங்கியவள்,

"ஓ... உங்க பேர்... சாரி எனக்கு இருந்த டென்சன்ல உங்களை சுத்தமா மறந்தே போயிட்டேன்..'' என்று இயல்பாய் புன்னகைக்க, தன் திருமணத்தில், பயந்த விழிகளுக்கும் குழந்தை முகமுமாய் தன்னை நோக்கிய பெண்ணை தேடி உள்ளுக்குள் ஏமாந்து போனான் வில்லன்.

"நான்..... வில்லாளன்.... அத்தை சொன்னாங்க... நீ சென்னை போறன்னு...'' அவன் தொண்டைக் குழியில் வார்த்தைகள் சிக்கிக் கொள்ள,


DO NOT COPY

அவன் பேச்சு முழுவதையும் ஒரு கம்பீரத்தோடு உள் வாங்கியவள், தன் கையில் இருந்த பயணப் பொதியைப் பிரித்து, அதில் இருந்து ஒரு கோப்பை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

"முன்னாடியே கொடுத்து இருக்கணும். சாரி...வெரி சாரி... அக்கா மாமா கேஸ் விசயமா அலைஞ்சதுல மொத்தமா உங்களை மறந்துட்டேன். இதுல ஸ்டாம்ப் பேப்பர்ல சைன் பண்ணி இருக்கேன். லீகல்லா மியூசுவல்னாலும் டைவர்ஸ் கிடைக்க ஒன் இயர் ஆகும்.நீங்க லீகலா என்ன பண்ணனுமோ அதைப் பண்ணிடுங்க. கேஸ் கோர்ட்டுக்கு வரப்ப சொல்லுங்க.. நான் வந்து சைன் பண்ணிக் கொடுக்குறேன்..." என்றவள்,

தன் தலையைத் தானே தட்டிக் கொண்டு, "அச்சோ.... இதை மறந்துட்டேன் பாருங்க.... ஒத்தபடையா இருக்கணும்னு உங்க அக்கா இருபத்தியொரு பவுன்ல செஞ்சதுன்னு நினைக்கிறேன். இன்னைக்கு ரேட்க்கு ஆறு லட்சம் போகும்ல.." என்ற படி தன் கைப்பையிலிருந்த அவன் அணிவித்த தாலிக் கொடியை எடுத்து அவன் நீட்டிப் பிடித்து இருந்த கோப்பின் மீது வைத்தாள்.

"அம்மா சொல்லிட்டு இருந்தாங்க.... உங்க வீட்ல டைவர்ஸ் பத்தி பேச ஆளுங்க வருவாங்கன்னு... நான் இதெல்லாம் முன்னாடியே ரெடி பண்ணி வச்சி இருந்தேன். பட் யாரும் வரல. நல்ல வேளை கடைசியா நீங்களாச்சும் வந்தீங்க. இல்லைனா இதுக்கு வேற மறுபடி திருச்சிக்கும் சென்னைக்கும் நான் அல்லாடி இருக்கணும்.."

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே, எங்கோ பேருந்தின் ஒலிப் பெருக்கி ஒலிக்க, "வாங்கம்மா போலம்..பஸ் வந்துடுச்சி..." என்று தன் அருகில் இருந்த சசியின் கரங்களைப் பற்றிக் கொண்டு வள்ளி முன்னால் நடந்தாள்.

பார்வை இல்லாத அவரோ, யாரோ இத்துணை நேரம் வள்ளியிடம் பேசிக் கொண்டு இருந்தார்கள் என்ற எண்ணத்தில், "நாங்க வறோம் தம்பி.." என்று அவன் இருந்த திசை நோக்கி விடை பெற, வில்லன் அவனையும் அறியாது கைககளைக் கூப்பினான்.

வள்ளி அவனிடம் விடை பெறக் கூட விரும்பவில்லை. அவள் தன் போக்கில் சைசியை மெதுவாய் நடக்க வைத்த படி, பேருந்தை நோக்கி நடந்துக் கொண்டிருந்தாள்.

தான் தாலிக் கட்டிய போது இருந்த குழந்தையை மிகக் கொடுமையான முறையில் இந்த சமூகம் ஒரு போராளியாய் மாற்றி இருந்தததை அவனால் உணர முடிந்தது.

என்னதான் வள்ளி வெளியே புன்னகை முகமாய் இருந்தாலும் அவள் கண்களில் ஒரு அக்னி ஜொலித்த படியே இருந்தது. சமூகத்தின் அத்தனை குப்பைகளையும் எரிக்காமல் நான் ஓயமாட்டேன் என்பதைப் போல அது.... சாம்பலில் உறங்கும் கங்காய் அவளுள் உறங்கிக் கொண்டிருந்தது.

வில்லன் தூரம் போகும் அவளையும், கையில் கணக்கும் பொருளையும் மாறி மாறிப் பார்த்தான். இனி அவனுக்கும் அவளுக்குமான பந்தம் என்னாகும்..?

சாஸ்திரம் சேர்த்து வைத்ததை.....

சட்டப்படி பிரித்து செல்கிறாய்...மனதிற்குள்

சம்மனமிட்ட காதலை என் செய்குவாய் பெண்ணே நீ..?


DO NOT COPY

வில் - 4

பறையும் பரதமும் கலை.... அதிலும்

பார்ப்பது ஜாதி... யார்ப் பிழை...?

ஐந்து வருடங்களுக்கு பிறகு.....

" டன்.... டன் டன்.... டண்டண்டன்.....

டன் டன் டன் டண்டண்டன்......

டன் டக்கர டக்கர...டக்கர...டக்கர...

டன் டக்கர டக்கர டக்கர.....டக்கர..."

வள்ளியின் கைகளில் இருந்த பறை உச்சஸ்தாயிலில் ஒலித்துக் கொண்டிருக்க, காலில் இருந்த சலங்கைகளும் ஒரே தாள லயத்தில் இயங்க, வள்ளி அற்புதமாய் தப்படித்துக் கொண்டிருந்தாள்.

அவளுடன் மேலும் ஐந்து பெண்கள். அணிக்கு மூவராய் நின்று தாள லயம் தப்பாத தப்பாட்டம் ஆடிக் கொண்டிருந்தனர்.

சுற்றி இருந்தவர்கள் அத்தனை பேர் நாடி நரம்பையும் முறுக்கேற்றும் விசை கொண்ட இசை, சில பல சிறுவர்களை வீதியில் ஆட வைத்துக் கொண்டிருந்தது.

சிலர் கைகளிலும், கால்களிலும் தாளம் போட்டு துள்ளாட்டம் போட துடித்த தங்கள் உடலை அடக்கிக் கொண்டிருந்தனர்.

இசை சற்றே ஓய்ந்த நேரத்தில், சசியின் கம்பீரக் குரலில் பாடல் ஒலிக்க தொடங்கியது.

"ஆடுறான்.... ஆடுறான் ஆட்டத்துல அட

அடங்காத போதையில் வீட்டுக்குள்ள...அத

அரட்டி கேக்க இங்க நாதியில்ல...ஆத்தி

அரசே விக்குது சாராயம் வீதியில.....

அல்லும் பகலும்....உழைச்ச பணம்

அட அள்ளி முழுங்குது சாராயம்....

அடிச்சி அடிச்சி சரக்கை அடிச்சி

அம்புட்டு பயலுக்கு ஈரலும் போச்சு.

(ஆடுறான் ஆடுறான்..)

பாடலின் வரிகளின் பாவத்தை முகத்தில் சுமந்த படி அவர்கள் வெகு வேகமாய் ஆடிக் கொண்டிருக்க, காவல் துறை தன் ஏவல் பணியை நிறைவேற்ற அங்கு வந்து சேர்ந்தது.

சசிக்கு பார்வை இல்லாததால் அவர் தொடர்ந்து பாடிக் கொண்டிருக்க, வள்ளியுடன் சேர்ந்து நடனமாடிக் கொண்டிருந்த மற்ற ஐந்து பெண்களும் தற்காலிகமாய் தங்கள் நடனத்தை நிறுத்தினர்.



DO NOT COPY

வள்ளி தொடர்ந்து ஆடிக் கொண்டிருக்க, வந்திருந்த காவல் துறை அதிகாரி ஒருவர், “ஹலோ... இப்படி நடு ரோட்ல டாஸ்மாக் வாசல்ல டான்ஸ் ஆட உங்களுக்கு யார் பெர்மிசன் கொடுத்தது. இது கவர்மென்ட்க்கு அகைன்ஸ்ட்டான ஆக்டிவிட்டி..... உங்களை எல்லாம் அரஸ் பண்ணி ஜெயில்ல போடலாம் தெரியுமா....?” எனக் கேட்க,

வள்ளி கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், “ஒரு பாட்டில் சரக்குக்கு மேல பத்து ரூபா விலை வச்சி காலங்காத்தால ஆறு மணியில இருந்து அந்த கடைக்காரன் வித்துட்டு இருக்கான்... அது உங்களுக்கு கண்ணு தெரியல... குடிச்சா உன் உடம்பும் வீடும் நாசமா போகும்டான்னு விழிப்புணர்வு கொடுக்க டான்ஸ் ஆடுற நாங்க அரசுக்கு எதிரானவங்களா.... சார் மொதல்ல அங்க கேள்வி கேட்டுட்டு அப்புறம் இங்க வாங்க...”

வள்ளி என்ன தான் மூச்சைப் பிடித்துக் கொண்டு பேசினாலும், அடித்துப் பழகிய கரங்கள் லாவகாய் தப்பை இசைக்க, வெகு நாட்களாய் ஆடிப் பழகி இருந்த கால்கள், தாளம் தப்பாது ஆடிக் கொண்டிருந்தன. அவள் தைரியத்தை கண்ட பெண்கள் தாங்களும் தங்கள் நடனத்தை தொடர்ந்தனர்.

“திவாகர்.... இவங்களை எல்லாம் கண்ட்ரோல்ல எடுங்க. நாம பேசி கேக்குற ஆளுங்களா தெரியல..” அவர் முறைப்புடன் தெரிவிக்க, இரு பெண் காவலர்கள் வந்து அவர்கள் குழுவை அங்கிருந்த காவல் துறை வாகனத்தில் ஏற்றினர்.

அவர்கள் சசியை தொட நெருங்கியதும், “மா... போதும் போலிஸ் வந்தாச்சு...” என வள்ளி குரல் கொடுக்க அதன் பிறகே சசி தான் பாடுவதை நிறுத்தினார். அவர் காவல் துறை வாகனத்தில் ஏற உதவிய வள்ளி அதன் பிறகே தான் ஏறி அமர்ந்தாள்.



DO NOT COPY

அவர்கள்  காவல் நிலையத்தை அடைந்து சரியாய் இருபது நிமிடங்களில் எல்லாம், கனல் பத்திரிக்கையின் ஆசிரியர் ஜோதிமணி அங்கு அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தார்.

அவரைக் கண்டதும் மூத்த அதிகாரி மரியாதை நிமித்தமாய் எழுந்து நின்று கை குலுக்க, அதை ஏற்றுக் கொண்டவர்,  "சார் வள்ளின்னு..." அவர் விசாரிக்க தொடங்கியதுமே,

"ஆமா சார் காலையில டாஸ்மாக் வாசல்ல ஆறு பொண்ணுங்க டான்ஸ் ஆடிட்டு இருந்தாங்க.... அதுக்குள்ள அந்த நியூஸ் மீடியாவுக்கு வந்துடுச்சா... நாங்க என்ன சார் பண்றது. கவர்மென்ட் என்ன சொல்லுதோ அதை தானே சார் நாங்க செய்ய முடியும். அந்தப் பொண்ணுங்ககிட்ட பேட்டி ஏதாச்சும் எடுக்கணுமா சார்...." அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க, இடைமறித்த ஜோதி,

"சார்... அப்படிலாம் ஒன்னும் இல்ல. அந்த வள்ளி வேற யாரும் இல்ல. எங்க கனல் பத்திரிகையில வேலை செய்யிற பத்திரிக்கை நிருபர். அவங்க புனைப் பெயர் விக்யா. கேள்விப்பட்டு இருப்பீங்கன்னு நம்புறேன், கனல் பத்திரிகை தமிழ்ல உருவாகும் போது.... உருவாக்க குழுவுல இருந்த அஞ்சி பேர்ல இருந்த ஒரே பொண்ணு..." அவர் அவளைப் பத்திப் பெருமையாய் பேசிக் கொண்டிருக்க, பெண் காவலர் ஒருவர் அவர்கள் குழு முழுவதையும் சிறையில் இருந்து வெளியே அழைத்து வந்து அமர வைத்து இருந்தார்.

"சார்... என்ன சார் சொல்றீங்க... இளைய தலைமுறையில் அரசியல் தாக்கம்...தொடர் எழுதின விக்யா இவங்க தானா...? நான் அவங்க பெரிய ரசிகன் சார்.." என்று  அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

“அங்கிள் பேசிட்டீங்களா.... நாங்க போலாமா..?” எனக் கேட்டபடி வள்ளி வந்து நின்றாள். ஜோதி அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்க, சற்று முன் அவளை காவலில் எடுத்து வந்திருந்த அதிகாரி அவளை மரியாதையாய் பார்த்துக் கொண்டிருந்தார்.

‘The Fire’ என்ற தேசிய செய்தி நாளிதழ் தமிழகத்தில் தன் கிளை தொடங்க முனைந்த போது, அதன் உருவாக்கத்தில் இருந்த பெண் வள்ளி. வள்ளியின் மீது ஜோதிக்கு அளப்பரிய அன்பும் மரியாதையும் உண்டு.

ஆனால் அவளின் சில முரட்டு பிடிவாதங்கள் பல சமயம் அவருக்கு எரிச்சலை தோற்றுவித்துவிடும். இந்த ஒரு மாதத்தில் மட்டும் அவளை காவல் நிலையத்தில் வந்து மீட்பது இது ஏழாவது முறை.

ஜோதியும் எத்தனையோ தடவை அவளுக்கு புரிய வைக்க முயன்று இருக்கிறார். தெருவில் இறங்கி ஆடுவதை விட, நீ ஒரு உண்மைத் தொடர் எழுதி மதுவிற்கு எதிரான உன் எதிர்ப்பை பதிவு செய் என.

ஆனால் குடிக்க வருபவனில் மூன்றில் ஒருவன் படிக்காத பாமரன். அவனுக்கு அவன் மொழியில் தான் அதனுடைய தீங்கை... அவன் மது அருந்தும் இடம் சென்றே உரக்க சொல்வேன் என்ற அவளின் அந்தப் பாணியை அவரால் என்ன முயன்றும் நிறுத்த முடியவில்லை.

வள்ளி எப்பொழுது கைதானாலும் ஜோதிக்கு உடனடி தகவல் கிடைக்க காரணம், அவர்கள் பத்திரிகையில் புகைப்படக் கலைனனாய் பணி புரியும் ஜேம்ஸ் தான்.

வள்ளி எங்கெல்லாம் தப்பாட்டம் ஆட சென்றாலும் அவள் பின்னோடே சென்று அவளைத் தன் புகைப்படக் கருவியில் சிறை எடுப்பதில் விருப்பம் கொண்டவன். அதோடு அவள் சிறை பிடிக்கப்பட்ட அடித்த நொடி அதை தங்கள் பொறுப்பாசிரியருக்கு பொறுப்பாய் வத்தி வைப்பதிலும் வல்லவன்.

வள்ளி பொதுவாய் இந்த கைது படலத்தை எல்லாம் கண்டு அஞ்சுவதில்லை. மிஞ்சிப் போனால் ஒரு நாள் காவலில் வைப்பார்கள். அடுத்த நாள் அவளுக்கு தெரிந்த வக்கீல் வந்து இனி இது போல் நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன் என சான்றளித்தால் விட்டு விடுவார்கள்.

வள்ளி கடந்துப் போன இரண்டாண்டுகளில் எத்தனையோ கைது படலத்தை பார்த்துவிட்டவள் தான். ஆனால் அவள் அலுவலகத்திற்கு சொல்லாமல் கொள்ளாமல் இருநாள் விடுப்பு எடுத்தால் தேங்கும் அவள் பணிகளை எண்ணியே ஜோதி அவள் கைது விஷயம் கேள்விப்பட்ட அடுத்த நொடி அவளை மீட்டுச் செல்ல அங்கு வந்து உதிப்பார்.

என்ன சொன்னாலும் அவள் கேட்கப் போவதில்லை என்று உணர்ந்தவர், “சீக்கிரம் ஆபிஸ் வந்து சேரு வள்ளி..” என அவளுக்கு ஆணை பிறப்பித்து விட்டு அங்கிருந்து கிளம்பி சென்றார்.

அந்த மூத்த காவல் அதிகாரியோ இவளிடம் மிகவும் பணிவாய் பேசி அவளை வழி அனுப்பி வைத்தார். வள்ளி காவல் நிலையத்திற்கு எதிரே இருந்த பேருந்து நிலையத்தை அடைந்து, தங்கள் ஹவுசிங் போர்ட் காலனியை வந்து அடைவதற்குள் நேரம் காலை பத்தை நெருங்கி இருந்தது.



DO NOT COPY

பள்ளி விடுமுறை ஆகையால் தெருவில் நின்று பம்பரம் விட்டுக் கொண்டிருந்த சிறுவர்கள் இவளைக் கண்டு உற்சாகமாய், "வள்ளிக்கா" எனக் கூவ, அவர்களைப் போல தானும் ஆர்பரித்து அவர்களை நோக்கி கை அசைத்தவள், அப்புறம் பாக்கலாம் என சைகையில் தெரிவித்து விட்டு, டி பிளாக்கின் நான்காம் தளத்தில் இருந்த தங்கள் வீட்டை நோக்கி சசியோடு பொறுமையாய் மாடிப்படி ஏறினாள்.

மஞ்சள் நிற புடவையின் கீழ், பேன்ட் அணிந்து, தப்பாட எதுவாய் இருந்த உடைகளை தன் அறைக்குள் புகுந்த அடுத்த நொடி மாற்றி இருந்தாள்.

சாயம் போன ஊதா நிற ஜீன்சும், வெளிர் நிற காட்டன் முழுக்கை சட்டையும் அணிந்து வெளியே வந்தவள், கூந்தலை கோதக் கூட நேரமின்றி அப்படியே போனிடைல் ஆக்கி இருந்தாள்.

சசி வரவேற்ப்பறையில் இருந்த படுக்கையில் அமர்ந்திருக்க, "அம்மா….மாலா அக்காகிட்ட இட்லி கொடுத்துவிட சொல்றேன். நீங்க சாப்பிட்டு கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க. மதியம் சாதம் மட்டும் வச்சா போதும். நான் வரும் போது மாலா அக்கா கடையில கொழம்பு கூட்டு எல்லாம் வாங்கிட்டு வந்துடுறேன். நான் கேன்டீன்ல சாப்டுக்கிறேன்… பத்திரமா இருங்க…" என்ற படி தோள் பையையும், வண்டி சாவியையும், கண் கண்ணாடியையும் எடுத்துக் கொண்டவள், வேகமாய் படிகளில் இறங்க,

'பத்திரமா பாத்து போயிட்டு வா வள்ளி…" என்ற சசியின் குரல் படிகளில் தேய்ந்து மறைந்தது.

கீழே புங்க மரத்தின் நிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்த தன் வண்டியை நெருங்கியவள், அதோடு இணைக்கப்பட்டிருந்த தலைக் கவசத்தை நீக்கி,

கண்களில் கண்ணாடியை அணிந்த பின் தலைக் கவசத்தை தலையில் பொருத்தினாள்.

தோளின் இருபுறமும் பையை மாட்டியவள், கையுறைகளை அணிந்த பின் அரியணை ஏறும் மகாராணியின் தோரணையோடு, அதன் மீது அமர்ந்தவள், வண்டியின் என்ஜினை உசுப்ப, அது நொடிக்கு நான் நூறு கிலோமீட்டர் தாவ தயார் என்ற ரீதியில் உறுமியது.

அவள் கியரை முறுக்கிய அடுத்த நொடி, வாயுவின் வேகத்தோடு சென்னையின் தெருக்களில் பயணிக்க தொடங்கினாள் வள்ளி. அவள் பயணித்த வாகனம் அப்படி. ராயல் என்பீல்ட் தன்டர் பேர்ட். இன்றைய இளைனர்களின் கனவு வாகனம். அவளுக்கு என்னவோ வேகமாய் சாலைகளில் பயணிப்பது பிடிக்கும்.

முகத்தில் வந்து அறையும் காற்றின் வருடலில் தன்னையே மறந்து பயணிக்க பிடிக்கும். எப்போதாவது அரிதாய் ஓய்வெடுக்கும் நாட்களில் காதில் இளையராஜா இசை வழிய தன் வண்டியை எடுத்துக் கொண்டு நீண்ட பயணம் சென்று திரும்ப பிடிக்கும்.

மூன்று வருடாய் சம்பாதித்துக் கொண்டிருகிறாள். ஆனாலும் அவள் தனக்கென வாங்கிக் கொண்ட ஒரே சொத்து இந்த வண்டி தான். அதுவுமே மாத தவணை கட்டிக் கொண்டிருகிறாள்.

அலுவலகம் வந்து விட, வண்டியை அதற்குரிய இடத்தில் நிறுத்தி பூட்டியவள், தலைக் கவசத்தை அதன் மீது வைத்து விட்டு, கையுறையையும், கண்ணாடியையும் கழட்டிய படியே, மின் தூக்கிக்கு காத்திருக்காமல் படிகளில் ஏறக் குறைய ஓடினாள்.

மூன்றாம் தளத்தை அடைந்ததும், முகத்தில் தானாக ஒரு இறுக்கம் வந்து ஒட்டிக் கொள்ள. அந்தக் கண்ணாடிக் கதவின் அறையைத் திறந்தவள், நிமிர்வாக உள்ளே நுழைய அங்கிருந்த சல சலப்பு சத்தம் நொடியில் அடங்கியது.

அனைவரும் அவளுக்கு பணிவாய் காலை வணக்கம் தெரிவிக்க, ஒரு தலை அசைப்போடு அதை ஏற்றுக் கொண்டவள், தன்னுடைய தனிப்பட்ட அறைக்குள் நுழைந்ததும், தன்னுடைய பணியில் மூழ்கிப் போனாள்.

அதே நேரம் தன் வீட்டின் பால்கனியில் அமர்ந்து செய்தித் தாளை வாசித்துக் கொண்டிருந்த வில்லன்... மூன்றாம் பக்கத்தில் 'நூதன முறையில் மதுவிற்கு எதிராய் போராடும் இளம் பெண்' என்ற தலைப்பில் வெளிவந்து இருந்த செய்தியையும் அதில் புகைப்படமாய் தப்போடு ஆடிக் கொண்டிருந்த வள்ளியையும் கண்டவனின் உள்ளத்தில் எண்ணற்ற கேள்விகள்.

சற்று நேரம் புகைபடத்தில் இருந்து அவனால் கண்களை திருப்பவே முடியவில்லை. அதே நேரம் அவனின் அம்மா, "வில்லா இந்த பொண்ணு போட்டோ பாருடா...இன்னும் எத்தனை நாளைக்கு தனியா இருப்ப.." என்று அவன் முன் வந்து நிற்க,

"மா... நான் நைட்டு சென்னை கிளம்புறேன். எப்போ திரும்பி வருவேன்னு சொல்ல முடியாது. அப்பாவை கொஞ்சம் மீன் பண்ணையை பாத்துக்க சொல்லுங்க......" என்றபடி அங்கிருந்து வெளியேற,

"நான் என்ன சொல்றேன்...இவன் என்ன செஞ்சிட்டு போறான்.." என்று அவன் தாய் சுந்தரி மனதிற்குள் நொந்து போனார். பாவம் அவர்

அறியவில்லை மகன் மீண்டும் ஒரு பெண் பார்க்கும் படலத்திற்கு தான் தயாராகி செல்கிறான் என்பதை.

வில் - 5

காக்கையும் குயிலையும் பிறகு சேர்க்கலாம்..

முதலில் மனிதத்தில் மானுடனை கோர்க்கலாம்.

வள்ளி விளையாட்டு செய்திகள் பக்கத்தின் கடைசி நேர கட்டமைப்பில் இருந்தாள். அவள் செய்திகளை முடித்ததும், அதை பொறுப்பாசிரியரின் பார்வைக்கு அனுப்பி வைக்க, அவள் எதிர்பார்த்தவாறே அடுத்த இரண்டாம் நிமிடம் ஜோதி அவளை அவர் அறைக்கு வர சொல்லி அழைத்து இருந்தார்.

வள்ளிக்கு அவர் அழைப்பதின் நோக்கம் தெரியும் ஆகையால் உதட்டில் ஒரு முறுவலை தேக்கியபடியே அவர் அறை நோக்கி நடந்தாள்.

உதட்டில் மட்டும் முறுவல் மலந்திருக்க, உள்ளமோ உலைக்கலமாய் கொதித்துக் கொண்டிருந்தது. அவள் அறைக்குள் அனுமதி பெற்று நுழைந்ததும்...அவள் சற்று முன் அனுப்பிய செய்தியை தன் மடிக்கணியில் திறந்து வைத்திருந்தவர் அதை அவளை நோக்கி திருப்பி காட்டினார்.

'என்ன இது என்பதைப் போல'. வள்ளி கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் அந்த திரையை பார்த்தாள். நேற்று நடந்திருந்த தேசிய அளவிலான கூடைப் பந்துப் போட்டியில், தமிழக அணி முதல் சுற்றிலேயே படு பயங்கர தோல்வியை தழுவி வெளியேறியிருந்தது.



DO NOT COPY

அதற்குண்டான காரணத்தை, 'தடுக்கிவிட்ட தமிழர்கள்' என்ற தலைப்பில் கட்டுரையாக்கி இருந்தாள். குழுவில் இருந்த சிறந்த வீரர்கள் தேசிய அணிக்கு தேர்வாகும் நிலையில்.... இவர் அமைச்சரின் மச்சான்.... இவர் பெரிய தொழில்அதிபரின் தமையன்... என முன் பின் எந்த மாநில போட்டியிலும் விளையாடாதவர்களை குழுவில் இணைத்து இருந்தார்கள்.

அதில் கட்டுக்கோப்புடன் இருந்த குழுவின் பயிற்சி சீர்குலைய தேசிய அரங்கில் தமிழகம் தலை குனிந்து வெளியேறும் படி நேர்ந்து இருந்தது. அந்த தோல்விக்கான காரணத்தை....தகுதிகள் இருந்தும் குழுவில் இருந்து வெளியேற்றப்பட்ட வீரர்கள் மற்றும் கூடைப்பந்து விளையாட்டின் நேர்மையான சில பயிற்சியாளர்களின் ஆவேச பேட்டியோடு வெளிச்சம் போட்டு இருந்தாள்.

வள்ளி மௌனமாய் நிற்கவும், "ஏம்மா எந்த செக்சன் கொடுத்தாலும் ஏதாச்சும் ஒரு வில்லங்கத்த விலை கொடுத்து வாங்கிட்டு வரன்னு தான் உனக்கு ஸ்போர்ட்ஸ் செக்சன் கொடுத்தேன்.

இங்கையாச்சும்.....'சானியாமிர்சா மீண்டும் ஆனார் சாம்பியன்'..... 'டி 20 உலக கோப்பையை இந்தியா கைப்பற்றுமா..?' இப்படி ஏதாச்சும் கமர்சியலா எழுதுவன்னு பாத்தா.... இங்கயும் வந்து ஊழல் லஞ்சம் லாவண்யம்னு உன்னோட பாணியிலேயே போறயேமா..?

போனவாட்டி ஆளும் கட்சி எம்.எல்.ஏகிட்ட ஏழரையை இழுத்துட்டு வந்த.... அவன் பாட்டுக்கு வந்து ஆபிஸ் கிளாஸ் டோர் எல்லாம் உடச்சிட்டு போயிட்டான். இந்த வாட்டி அமைச்சர்...ஹும் என்ன ஆகப் போகுதோ...? ஏம்மா இந்த நியூசை அப்படியே தான் போடணுமா...? இல்ல ஏதாச்சும் கொஞ்சம் எடிட் பண்ணி...." அவர் அப்படி கேட்கும் போது கணினியை அவர் புறம் திருப்பி வைத்தவள்,

“சிங்கிள் வோர்ட் கூட மாறக் கூடாது சார்...” என உறுதியான குரலில் இயம்ப, அவர் தன் கண் கண்ணாடியை கழற்றி துடைக்க தொடங்கினார்.

“சார் நீங்க சொன்னீங்களே கிளாஸ் டோர் உடச்சாங்கன்னு அதுக்கு அப்புறம் நம்ம சர்குலேசன் ரேட் 15 பெர்சென்ட் ரைஸாகி இருக்கு. அதோட எவ்ளோ பிரச்சனை வந்தாலும் நாம உண்மைய மட்டும் தான் சொல்வோம்னு மக்கள் மேல நமக்கு நம்பிக்கை அதிகமாகி இருக்கு. நம்ம தாரக மந்திரம் நியாபகம் இருக்கு இல்ல சார்...”

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே அவரின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. “ஏன் இல்லாம....? ‘உரக்க சொல்வோம் உண்மையை மட்டும்..’ அதெல்லாம் ரொம்ப நல்லாவே நியாபகம் இருக்கு. ஆனா நீ ரொம்ப உண்மை பேசுறமா...சரி நீ கொடுத்ததை அப்படியே பிரிண்டிங் செக்சன் பாஸ் பண்ணிடுறேன். ஆனா இந்த முறை கிளாஸ் டோர் உடஞ்சா பேசாம வுடன் டோர் ஆர்டர் பண்ணிட வேண்டியது தான்.” என அவர் சிரியாமல் சொல்ல, வள்ளியின் முகத்தில் பெரிய புன்னகை மலர்ந்தது.

“டைமிங் காமெடி பின்றீங்க சார்..” என உரைத்தவள், “ஓகே சார்.... நாளைக்கு நியூஸ்க்கு இன்னைக்கு கொஞ்சம் அவுட் பிரேம் ரெடி பண்ணனும். நான் வறேன்.” என்று விடை பெற்று வெளியேற, அதே நேரம் அறைக்குள் நுழைய முயன்ற ஜேம்ஷின் மீது மோதி நின்றாள்.

“ஐயோ... சாரிங்க... சாரிங்க...” என்று அவன் பதட்டம் கொள்ள, அவனை முறைத்துப் பார்த்தவள், ‘ஜேம்ஸ் ரிலாக்ஸ் எதுக்கு இப்போ ஓவர் ரியாக்ட் பண்ணிட்டு இருக்கீங்க.... ஜஸ்ட் நாம தெரியாம மோதிக்கிட்டோம். பாக்கப் போனா போர்ஸ்சா டோர் ஓபன் பண்ணி வந்த நான் தான் உங்ககிட்ட சாரி கேக்கணும்..” என சொல்ல,



DO NOT COPY

ஜேம்ஸ் அவளுக்கு என்ன பதில் சொல்வது எனப் புரியாமல் நின்றான். அவன் சங்கடமாய் நிற்பதைக் கண்டவள், தலையை குலுக்கி விட்டு, “உள்ள போங்க..” என்று விட்டு தன் இருக்கையை நோக்கி நடந்தாள்.

கடந்த ஒரு வருடமாய் ஜேம்ஸ் தன் பின்னால் சுற்றிக் கொண்டு இருக்கிறான் என்பதை வள்ளி அறிவாள். அவளைப் பொறுத்தவரை ‘காதல்... கல்யாணம்... குழந்தை குடும்பம்...’ இது அத்தனையும் சுயநல மனிதனின் கோட்பாடுகளாய் தோன்றின.

என்ன தான் ஜேம்ஸ் அவளை சுற்றி சுற்றி வந்தாலும், அவள் நிமிர்ந்து பார்த்தாலே, ஏதோ அவன் முகத்தில் ஓங்கி அறைந்ததைப் போல பதட்டப்படுவான். சில நேரங்களில் பணியின் அழுத்தத்தில் இருக்கும் பொழுது, தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தாள்.... கேண்டின் பையன் அவள் கேபின் தேடி வந்து காபி கொடுத்துவிட்டு செல்வான்.

அவளுக்கு தெரியும் மணிக்கு ஒரு முறை ஏதேனும் சாக்கிட்டு தன் கேபினைக் கடந்து போகும் ஜேம்ஸ் தான் இந்த காபியின் காரணகர்த்தா என்று. ஆனால் அவனை தேடி சென்று நேரடியாய் நன்றி சொல்ல முடியாது.

அவனை தேடி சென்றாலே...வராத அழைப்புக்கு செல்லிடைபேசியை காதில் வைப்பவன், ‘இதோ டூ மினிட்ஸ் சார்... வந்துட்டே இருக்கேன்..” என்று அங்கிருந்து நழுவி ஓடி விடுவான்.

அல்லது ஏதோ போர்களத்துக்கு செல்லும் வீரனின் முக பாவத்துடன், “சொல்லுங்க மேம்... எதாச்சும் நியூஸ் கவர் பண்ண வரணுமா..? பட் உங்க டிவிசன் கேமரா மேன் செல்வம் ஆச்சே...” என்று பணி பற்றி பேசி அவளை வந்த வழியே திரும்பி நடக்க வைத்து விடுவான்.

சில சமயங்களில் அதையும் மீறி, " நீங்க தான் காபிக்கு ஆர்டர் கொடுத்தீங்களா ஜேம்ஸ்..?" என்று கேட்டு இருக்கிறாள்.

அதற்கு, "நோ மேம்.... கேன்டீன் பாய்.... வசந்தி மேம்க்கு காபி கொண்டு வந்தான். பட் அவங்க இப்ப தான் ஏதோ மீட்டிங்னு எடிட்டர் ரூமுக்கு போனாங்க. நம்ம ஆபிஸ்ல அடிக்கடி காபி குடிக்கிற ஒரே ஆள் நீங்க தான்.... சோ அதான் உங்களுக்கு வேணுமான்னு கேட்டு கொடுக்க சொன்னேன்." என்று நீளமாய் ஒரு பதிலை சொல்லி அவள் வாயையும் அடைத்து விடுவான்.

நாளைய பணிக்குண்டான திட்டமிடலை முடித்தவள்.... வேறு ஒரு நாளிதலுக்கு பெண்ணியம் பற்றி எழுதும் தொடர் ஒன்றிற்க்கான சிந்தனையில் இருக்கும் பொழுது, சினிமா பிரிவில் பணியாற்றும் லேகா, வந்து அவள் தவத்தை கலைத்தாள்.

"ஹாய்... வள்ளி... சின்ன ஹெல்ப் யா..... இந்த பென்ட்ரைவ்ல இருக்க போட்டோஸ் எல்லாம் காபி பண்ணி என் மெயில் ஐ.டிக்கு அனுப்புமா.... என் சிஸ்டம் வேற கால நேரம் தெரியாம ஹேங் ஆகும். பொறுப்ஸ் வேற பெரிய பருப்ஸ் மாதிரி கத்திட்டு இருக்கு... இன்னும் உன் பேஜ் ரெடி ஆகலையான்னு.." என்று பொறும,

முகத்தில் எந்த பாவமும் காட்டாமல் அந்த பென்ட்ரைவை பெற்றுக் கொண்டவள், "ஏன் உங்க கேமரா மேன் சிஸ்டம் என்ன ஆச்சு." என எதிர்க் கேள்வி கேட்க,

"அந்தக் கருவாயன் அவன் சிஸ்டத்தை ஏதோ பாஸ் வோர்ட் போட்டு லாக் பண்ணி இருக்கான்யா....

ஏதோ முக்கியமான இஸ்யூ கவர் பண்ண நம்ம ஹோரல் கேமரா டீமோட வெளிய போய் இருக்கான். சிஸ்டம் தானே லாக் பண்ண முடியும். அவன் பென்ட்ரைவ் அனாதையா சிஸ்டம்ல தொங்கிட்டு இருந்தது. நான் சுட்டுட்டு வந்துட்டேன்…"

லேகா ராக பாவத்தோடு பேசும் போது கேட்க இனிமையாய் இருக்கும். அதோடு பத்திரிகையின் சினிமா பிரிவில் பணியாற்றுபவள் என்பதால் இயல்பாகவே அவளுக்கு அங்கு ரசிகர்கள் ஏராளம்.

ஆனால் வள்ளி அனைவரிடமும் ஒரே முகத்துடன் பழகும் தன்மை கொண்டவள். நெருங்கிய நட்பு என்று அவளுக்கு அந்த அலுவலகத்தில் அவன் பணியை தவிர வேற யாரும் இலர்.

லேகா சுட்டுக் கொண்டு வந்திருந்த பென்ட்ரைவ் ஜேம்ஸ் உடையது. பென்ட்ரைவின் ஜென்ரல் போல்டரில் லேகா கேட்ட புகைப்படங்கள் இருக்க, அதை லேகாவின் மின் அஞ்சலுக்கு அனுப்பி வைக்க,

கொடுத்த பென் ட்ரைவை திருப்ப பெரும் எண்ணம் சற்றும் இல்லாமல், "தேங்க்ஸ்….. வள்ளி…. நான் பூரணிக்கு போன் பண்ணி ஆர்டிகிள் கம்ப்ளீட் பண்ணி அனுப்ப சொல்றேன்.." என்றவள் அங்கிருந்து விரைய, வள்ளி தன் வழக்கமான தலை குலுக்கலோடு அவளை அனுப்பி விட்டு அந்த பென் ட்ரைவை தன்னுடைய கணினியில் இருந்து நீக்க இருந்தாள்.

அந்த நேரம், வி.ஜே என்ற போல்டர் அவள் கவனத்தை கவர்ந்தது. அதை திறக்க முயற்சிக்க… அதுவோ கடவு சொல்லைக் கேட்டது. ஏதேதோ முயன்று பார்த்தவள் ஒரு அனுமானத்தில் தன் பெயரை ஜேம்ஷின் பெயரோடு சேர்த்து அடிக்க, என்ன அதிசயம் அலிபாபா குகையைப் போல அந்த கோப்பு திறந்தது.


DO NOT COPY

அதன் உள்ளே.... நூற்றுக் கணக்கான பாவங்களில், சிந்தைகளில், புன்னகைகளில், கோபங்களில்... வள்ளி வள்ளி வள்ளி மட்டுமே. அவனுடைய புகைப்படக் கலைத் திறமையை பயன்படுத்தி வள்ளியை வித விதமாய் புகைப்படம் எடுத்து வைத்திருந்தான்.

அந்த புகைப்படங்கள் அத்தனையும் ஒன்று அவர்கள் அலுவலக கூட்டங்களில் எடுக்கப்பட்டிருந்தது. அல்லது வள்ளி அநீதிக்கு எதிராய் குரல் கொடுக்கும் கூட்டங்களில் எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவளை மட்டும் தனித்து காட்டும் படி புகைப்படக் கோணத்தை அமைத்து இருந்தான்.

அதோடு அவள் இதுவரை எழுதி இருந்த அத்துணை செய்திகளையும் மிகக் கவனமாய் சேகரித்து வைத்திருந்தான். என்னவோ அந்த புகைப்படத்தையும், செய்திகளையும் பார்க்க பார்க்க அவளுக்குள் அந்தக் கணமே அவனுடன் பேச வேண்டும் போல தோன்ற, தன் கணினியை அணைத்தவள், அவனை தேடிக் கொண்டு புறப்பட்டாள்.

வெளியே சென்ற வேலை முடிந்து மின் தூக்கிக்காய் அலுவலகத்தின் நுழைவாயிலில் நின்றுக் கொண்டிருந்தவனைக் கண்டவள், “ஹாய் ஜேம்ஸ்... உங்ககிட்ட கொஞ்சம் பேசணுமே..” என்று அவன் முன் சென்று நிற்க அவனோ அவளை திகைத்துப் பார்த்தான்.

என்ன சொல்லி தப்பிக்கலாம் என்பதை போல அவன் யோசிக்க, அவனின் என்ன ஓட்டம் அறிந்தவள், “டேய்.... என்ன சொல்லி எஸ் ஆகலாம்னு தான யோசிக்கிற.... அதெல்லாம் ஒரு ஆணியும் புடுங்க முடியாது. ஒழுங்கா கிளம்பு..” என்று முன்னே நடக்க, ஜேம்ஸ் பலியாடு போல அவளைத் தொடர்ந்து சென்றான்.

அவர்கள் அலுவலகத்தின் வண்டிகள் நிறுத்தும் இடத்தை அடைய, ஜேம்ஸ் தன்னுடைய ஸ்கூட்டி பெப்பை நோக்கி நடக்க, அவனை ஏதோ வேற்று கிரக ஜந்துவைப் போல பார்த்தவள்,

“இதா உன் வண்டி....” என்று அதிர்ச்சியை கண்களில் காட்டி விட்டு, “ஓகே.... நாம ஒரே வண்டியில போலாம். நீயே என் வண்டியை ஓட்டு.” என வண்டியின் சாவியை அவன் கையில் கொடுக்க, “ஐயோ எனக்கு ஆர்.யி எல்லாம் ஓட்ட கொஞ்சம் கஷ்டம்..” என தயங்கி நிற்க,

வழக்கம் போல தன் தலையை குலுக்கியவள்.... “உன்னால எனக்கு தான் ரொம்ப கஷ்டம்... நீயெல்லாம் ஒரு கேமரா மேன். சரி சரி நானே ஓட்றேன்.... பின்னாடி உக்காரு..” சொன்னவள் தன் வண்டியை உசுப்ப,

ஜேம்ஸ் அவளின் பின்னால் தயங்கி நின்றான். அவனைப் பார்த்து முறைத்தவள், “வண்டி வண்டியா என்னை போட்டோ எடுத்து வச்சி இருக்க.... என் வண்டி பின்னாடி உக்கார மாட்டியா..?” என உஷ்ணமாய் கேட்க, அடுத்த நொடி மறுப்பேதும் சொல்லாமல் அவள் பின்னால் முடிந்த அளவு இடைவெளி விட்டு அமர்ந்தான்.

அவன் மேல் இருந்த கோபத்தை அவள் வண்டியின் மீது காட்ட, வண்டி மணிக்கு என்பதுகிலோ மீட்டார் வேகத்தில் பறந்தது. அவள் தோள்களை முடிந்த அளவு அழுந்தப் பிடித்துக் கொண்டவனோ, “ஏங்க கொஞ்சம் மெதுவா போங்க.... எனக்கு பயமா இருக்கு..” என்று அவள் காதுகளில் உரைக்க,

அது அவளுக்கு இன்னும் ஆனந்தத்தைக் கொடுத்தது. கொஞ்சம் கூட வேகத்தைக் குறைக்காமல் அதே வேகத்தில் வண்டியை ஒட்டியவள், வண்டியை ஒரு நடுத்தர உணவகத்தின் முன்பு நிறுத்தினாள்.



DO NOT COPY

அவள் வண்டியை நிறுத்திய பின்பும் ஜேம்ஸ் இறங்காமல் பயத்தில் பல்லியைப் போல அவள் முதுகோடு ஒட்டிக் கொண்டிருந்தான். அவள் மெதுவாய் அவன் கைகளில் தட்ட, தன் உணர்வு பெற்றவன், மெதுவாய் இறங்கி நின்றான்.

“வாங்க போய் சாப்டுகிட்டே பேசலாம்..” என்றவள் தன் தலைக் கவசத்தை நீக்கி வண்டியோடு பிணைத்து விட்டு உள்ளே நடந்தாள். ஜேம்ஸ் வள்ளி வழமையாய் செய்வதைப் போல தன் தலையை குலுக்கிக் கொண்டவன் அவள் பின்னோடு நடந்தான்.

இருவரும் சென்று எதிர் எதிராய் அமர்ந்ததும், வள்ளி இருவருக்கும் சேர்ந்து உணவு வகைகளை சொல்லி முடித்தும் கூட ஜேம்ஸ் அருகில் இருந்த கண்ணாடி நீர்க் குவளையில் தன் மொத்தக் கவனத்தையும் குவித்திருக்க,

“ஜேம்ஸ் போதும். அது ஆர்டினரி பைபர் கிளாஸ் தான். ஏதோ இண்டியான ஜோன்ஸ் கிறிஸ்டல் மண்டையோட்டை பாக்குற மாதிரி அதை ஆராய்ச்சி பண்ணி பாத்துட்டு இருக்கீங்க..” என்று அவன் கவனம் கலைக்க, ஜேம்ஸ் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

“என்ன ஜேம்ஸ்... என்ன லவ் பண்றீங்களா..?” அவளின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் அவன் பார்வையை அங்கும் இங்கும் அலை பாய விட,

அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்தவள், “என் கண்ணை பாருங்க ஜேம்ஸ்... உங்களுக்கு என்னை பிடிச்சி இருக்கா..?”


DO NOT COPY

அவள் மறுபடி திடமாக கேட்கவும், “அது வந்து.... வந்து....” ஜேம்ஸ் திணறிக் கொண்டிருக்கும் போதே, “வந்து... போயி.... சொல்றதுக்கு வேற ஒன்னும் இல்லையா...?”

வள்ளி அப்படிக் கேட்டதும், அவளை நிமிர்ந்து பார்த்தவன், “அது வள்ளி... உங்களை எனக்கு ரொம்ப பிடிக்கும். உங்க தைரியம். துணிச்சல். எதையும் தெளிவா பேசுறது. இப்படி எல்லாமே பிடிக்கும். நீங்க ஒரு பர்பெக்ட் ஜர்னலிஸ்ட். நான் உங்களை லவ் பண்றேனா தெரியாது. பட் உங்க பெரிய பேன். அதான் உங்க போட்டோ ஆர்டிகிள் எல்லாமே கலெக்ட் பண்ணி வச்சி இருந்தேன்..”

அந்த நான்கு வாக்கியங்களை பேசி முடிப்பதற்குள் ஜேம்சிற்கு நாற்பது தடவை திக்கியது. அதோடு உடல் முழுவதும் வியர்வையில் குளித்திருக்க, அவனின் அந்த செயல் அவளுக்கு ஏனோ ஏற்புடையதாய் இல்லை.

“ஜேம்ஸ்.... எப்பவும் யார்கிட்ட பேசினாலும் இப்படித் தான் திக்குமா.... நீங்க எடிட்டர்கிட்ட போல்ட்டா பேசுறதை எல்லாம் நான் பாத்து இருக்கேனே... ஆர் யூ ஆல்ரைட்...” அவள் சற்றே பதட்டத்துடன் கேட்க,

சற்றே தயங்கி தயங்கி ஜேம்ஸ், “இல்ல ஸ்கூல் டேஸ்ல இருந்தே பொண்ணுங்ககிட்ட பேச அளவுக்கு அதிகமா பயப்படுவேன். இப்படி தான் வேர்த்து கொட்டும். நீங்க ஒன்னும் டென்சன் ஆகாதீங்க. நானே கொஞ்ச நேரத்துல சரி ஆயிடுவேன்..”

ஏனோ அவனின் அந்த நிலையை கண்டவளுக்கு, தான் ஒரு பெண் என்ற எண்ணம் போய் சக மனிதன் தன்னைக் கண்டு அஞ்சும் எண்ணமே மனதில் பதிய,



DO NOT COPY

“ஐயோ ஜேம்ஸ்... நான் என்ன பூதமா..பிசாசா... நல்லாப் பாருங்க.... நானும் உங்களை மாதிரி மனுசப் பிறவி தான்..” என்று சொல்லிக் கொண்டே எழுந்து அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்... “இப்ப பயம் போச்சா...?” என்றுக் கேட்டபடி.

ஜேம்ஸ் அதிர்ச்சியில் விரிந்த விழிகளோடு அவளைப் பார்த்துக் கொண்டிருக்க, யாரோ ஒருவன் அவர்கள் அருகில் வந்து அமர்ந்தான்.

வந்தவன் வள்ளியின் புறம் திரும்பி அமர்ந்து, “எனக்கும் அப்படித் தான் மேடம்... உங்ககிட்ட ஏதேதோ பேசணும்னு நினைக்கிறேன். ஆனா எல்லாமே தொண்டைக் குழியிலேயே நிக்குது. ப்ளீஸ் எனக்கு இப்படி ஏதாச்சும் ஹெல்ப் பண்ணீங்கன்னா உங்ககிட்ட பேச வசதியா இருக்கும்..” என்று அழுத்தமாய் பேச,

“யாருடா இவன்..?” எனபதைப் போல வள்ளி அவனைப் பார்க்க, ஜேம்ஸ் நொடியில் கோபம் கொண்டு இருக்கையில் இருந்து எழுந்தான்.

“ஹெலோ... யாருங்க நீங்க....? நாங்க யாருன்னு தெரியுமா...? என்ன வம்பு பண்ண வந்து இருக்கீங்களா..?” விட்டால் வந்த புதியவனை அடித்துவிடுபவன் போல பாய,

அந்தப் புதியவனோ ஜேம்சை கொஞ்சமும் மதிக்காமல், வள்ளியை பார்த்தபடி, “நான் வில்லாளன்.... இதோ உங்க எதிர்ல உக்காந்து இருக்காங்களே அந்த வள்ளி மேடத்தோட புருஷன்.... உங்களை விட அவங்க கையைப் பிடிக்க எல்லாத் தகுதியும் எனக்கு இன்னும் இருக்குன்னு நம்புறேன். ஏன்னா எங்க கல்யாணம் இன்னும் காலாவதி ஆகலை.... என்ன மேடம் நான் சொல்றது சரியா..?”



DO NOT COPY

வில்லன் ஒற்றை புருவம் உயர்த்தி கேட்ட தொனியில் வள்ளி அவனை ஆழ்ந்துப் பார்க்க, ஜேம்ஸ் அதிர்ச்சியாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் யார்ப் பார்வையையும் மதிக்காமல் வில்லன் அவளைக் காதல் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

வில் - 6

குழி தோண்டி புதைக்க வேண்டிய பட்டியலில்....

விதைகளை அடுத்து ஜாதியை முன் வைக்கலாம்.

வில்லன் வள்ளியை பார்த்திருக்க, வள்ளி வில்லனை பார்த்திருக்க. ஜேம்ஸ் இருவரையும் அதிர்ச்சியாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரு நொடிகளில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டவன், எழுந்து நின்றபடி, “நான் கிளம்புறேன் மேம். நீங்க சார்கிட்ட பேசிட்டு வாங்க..” என்று கிளம்ப முனைய வள்ளி வில்லாளன் மீதிருந்த தன் ஆழ்ந்த பார்வையை வள்ளி ஜேம்சை நோக்கி திருப்பினாள்.

“எங்க போறீங்க...? உக்காருங்க. நான் இன்னைக்கு உங்ககிட்ட பேசியே ஆகணும்..” என்றவள், அவன் தயங்கி தயங்கி அமர்ந்த பிறகே தன் பார்வையை மீண்டும் வில்லாளன் மீது திருப்பினாள்.

“உங்க பேர் என்ன சொன்னீங்க....? சாரி கேட்ச்சியா இல்ல.... அதான் மறுபடி கேக்குறேன்...” என முன் விளக்கத்தோடு, புன்னகை முகமாய் கேட்க,



DO NOT COPY

அவளை விட அதிகமாய் புன்னகைத்தவனோ, “வில்லாளன்... நீங்க வேணா சுருக்கமா வில்லன் அப்படின்னு நியாபகம் வச்சிக்கலாம். ஏன்னா உங்க லைப்ல நான் இனி வில்லன் வேலை செய்ய வேண்டி வந்தாலும் வரலாம்..” என்று சொல்ல, இம்முறை வள்ளி பொங்கி பொங்கி சிரித்தாள்.

சிரித்துக் கொண்டே, அதிகம் தொடர்ந்து சிரித்தால், கண்களில் திரண்ட நீரை துடைத்துக் கொண்டவள், அந்த உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த அனைவரும் தங்களை பார்ப்பதை உணர்ந்து,

“சாரி... வெரி சாரி.... என்னால டக்குன்னு சிரிப்பை அடக்க முடியல.... ஷப்பா... இப்படி சிரிச்சி ரொம்ப நாள் இருக்கும்... அண்ட் தேங்க்ஸ் மிஸ்டர் வில்லன்... உங்க டைமிங் காமெடிக்கு....” என்றவள் ஜேம்சை பார்த்து,

“ஒரு டென் மினிட்ஸ் இவரை பேசி அனுப்பிடுறேன்... உங்க டைம் நிறைய எடுத்துக்குறேன். சாரி..” என்று அவனிடமும் மன்னிப்பை வேண்டி விட்டு முழுதாய் வில்லன் பக்கம் திரும்பி அமர்ந்தாள்.

இத்தனை நேரம் சிரிப்பில் மலர்ந்திருந்த அதரங்கள் இறுக்கத்தில் நேர் கோடாய் மாற, கண்களில் அசாத்திய கூர்மை. உடல் மொழியில் எதிரியிடம் பேசும் பாவனையை முழுதாய் கொண்டு வந்தவள்,

“மிஸ்டர் வில்லன்... உங்க சொந்தக்காரங்க கேட்ட டைவர்சை ஊரை விட்டுக் கிளம்பும் போதே உங்ககிட்ட கொடுதுட்டதா எனக்கு நியாபகம். நீங்க ஒன் இயர் கழிச்சி கோர்ட் அப்ரூவலுக்கு கூப்பிடுவீங்கன்னு எதிர்பார்த்தேன்.

ஆனா நீங்க கூப்பிடலை. சரி நான் போட்டுக் கொடுத்த கையெழுத்தை வச்சே இன்னொரு மேரேஜ் பண்ணிக்கிட்டு ஹாப்பிய இருப்பீங்கன்னு அதைப் பத்தி அதுக்கு அப்புறம் நான் யோசிக்கல.

ஆனா நீங்க கூப்பிட மறந்து இருந்தாலும் நான் கூப்பிட்டு இருக்கணும் போல. இப்ப பாருங்க திடீர்ன்னு எனக்கு உரிமை இருக்கு... அப்படி இப்படின்னு சீரியஸா வந்து காமெடி பண்ணிட்டு இருக்கீங்க.

என் மேல நீங்க எடுத்துக்கப் போற உரிமைய  சின்ன மஞ்சள் கயிறோ... இல்ல நம்ம ரிலேசன்ஷிப்போ தீர்மானிக்க முடியாது. அதை நான் மட்டும் தான் தீர்மானிக்கணும். உங்க கூட பொண்டாட்டியா சேந்து குடும்பம் நடத்தி இருந்தாலுமே நான் என்னைக்கும் ஒரு பொருள் இல்ல என்ன நீங்க உரிமை கொண்டாட. மனுஷி. புரிஞ்சதா வில்லன்.

என்னவோ சொல்லணும்னு ரொம்ப நாள ட்ரை பண்றதா சொன்னீங்க இல்ல. பட் எனக்கு உங்ககிட்ட ஒன்னும் கேக்க வேண்டாம். ஆனா எனக்கு சீக்கிரம் டிவோர்ஸ் லீகலா வேணும். இனி நீங்க கோர்ட்டுக்கு கூப்பிடலைனாலும் நான் உங்களை கூப்பிடுவேன். சோ பீ ரெடி வில்லன். இனி நீங்க கிளம்பலாம். நான் என் பாய் பிரண்ட்கிட்ட கொஞ்சம் பர்சனலா பேசணும். சோ..."

முகத்தில் இருந்த இறுக்கத்தை தளர்த்தி அங்கே,  அவள் ஒரு நக்கல் சிரிப்பை கொண்டு வர, வில்லன் உடனே எழுந்துக் கொண்டான். ஆனால் அவள் எதிர்பார்த்த கோபம், ஆத்திரம் எதுவும் அவன் முகத்தில் துளியும் இல்லை.

மாறாக ஒன்றும் அறியாத குழந்தையை தாய் வாஞ்சையுடன் பார்ப்பதைப் போல அவளைப் பார்த்தவன்,



DO NOT COPY

“ஓகே கேரி ஆன் மிசஸ் வள்ளி வில்லாளன். நான் கிளம்புறேன். ஆனா நீயே ஒரு நாள் என்கிட்ட பேசுங்க வில்லன் பேசுங்க வில்லன்னு என் பின்னாடியே சுத்தப் போற. என்னை லவ் பண்ணப் போற. எனக்காக உன்னோட எல்லா ரூலையும் ப்ரேக் பண்ணப் போற. அந்த நாள் ரொம்ப தூரத்துல எல்லாம் இல்ல. இன்னும் ரெண்டே வாரத்துல ஆரம்பிக்கப் போகுது.

அப்புறம் டைவர்ஸ் கேட்டீங்க இல்ல மேடம். அதெல்லாம் மியூசுவல் டைவர்ஸ் கேசே கோர்ட்ல ஒன் இயர் இழுப்பான். நீ அடிச்சே கேட்டாலும் என் பொண்டாட்டிக்கிட்ட இருந்து என்னை பிரிச்சிடாதீங்க ஜட்ஜ் அம்மான்னு நான் கண்ல கிளிசரின் போட்டுட்டு வந்து கோர்ட்ல கதறி கதறி அழுவேன்.

இப்பலாம் பசங்க அழுதாலும் பாவம் பாக்குறாங்கமா. சோ நீ கேட்ட டைவர்சும் ஈசியா உனக்கு கிடைக்காது. ரொம்ப பேசுறேனோ... இனிமே ஒன்லி ஆக்சன்... அப்புறம் மாமா கிளம்புறேன் தில்லு... என்ன அப்படி ஆன்னு பாக்குற... உன்னோட பேர் சுருக்கம் நல்லா இருக்கா.... எனக்கு ரொம்ப பிடிச்சி இருக்கு... இனி உன்னை அப்படித் தான் கூப்பிட போறேன்..” என்றவன், எழுந்து நின்று ஜேம்ஸின் அருகில் சென்று கைக் குலுக்கினான்.

ஜேம்ஸ் இவனை வியப்பாய் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, “ஆயிரம் சொல்லுங்க பாஸ்... எம் பொண்டாட்டி எந்த ஆங்கிள்ல பார்த்தாலும் அழகா தான் இருக்கா. இப்படி ஒரு கேர்ள் பிரண்ட் கிடைக்க நீங்க கொடுத்து வச்சி இருக்கணும். என்ஜாய்..” என்று கண்சிமிட்டியவன், அங்கிருந்து திரும்பி நடக்கத் தொடங்கினான்.

அப்படி உணவகத்தின் பாதி தூரம் வரை நடந்தவன், மீண்டும் திரும்பி வள்ளியின் அருகில் வந்தான். வள்ளி அவன் பேசிய பேச்சில் விழி விரித்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அருகில் வந்தவன், "உன்னோட ஏதோ ஒரு கேள்விக்கான பதிலை மிஸ் பண்ண பீலிங். ஹா... உரிமைன்னு சொன்னதுக்கு ஏதேதோ புரட்சி வசனம்லாம் பேசினல. தில்லு.... என் உயிர் என்னோட உரிமைனா... நீயும் என்னோட உரிமை... குட்டி பாப்பாக்கு புரியல.. விளக்கமா சொல்றேன் பொறு தில்லு.

அதாவது... நீ தான் நான்... நான் தான்.... நீ....ஐயோ அப்படிலாம் பாக்காத தில்லு... மாமன் போகன்லாம் இல்ல கூடு விட்டு கூடு பாய.... ஆனா உசிரை தாண்டி இன்னொன்னு நமக்கு இருக்கு... மனசு... அது மாறனும்... மாறினா நீ... தான்... நான்... நான் தான் நீ.... அதுக்கு பேர் காதல்... அது எனக்கு உன் மேல இருக்கு. உனக்கு எப்போ என் மேல வருதோ... அப்போ நீ என் உசிரு உரிமை எல்லாம்.... புரிஞ்சதா...

ஒரு பொண்ணு தனக்கு கொடுக்குற உரிமையை வச்சி அவளை அடிமையாக்காம ராணியாக்குறான் பாரு அவன் ஆம்பளை... நான் ஆம்பளை.... உன்னை கண்டிப்பா ராணியா தான் வச்சி இருப்பேன் தில்லு...."

இறுதி வரிகளை குரலில் ஒருவித உறுதியோடு சொல்லிமுடித்தவன், அவள் கன்னத்தில் லேசாய் தட்டி விட்டு அங்கிருந்து உடனே வேகமாய் வெளியேறி இருந்தான்.

ஜேம்ஸ்.... "என்னடா நடக்குது இங்க.." என்று திகைத்துப் போய் விழித்துக் கொண்டிருக்க, வள்ளியோ, "இப்ப இவன் என்ன தான் சொல்ல வரான்.." என்று குழப்பத்தில் திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.



DO NOT COPY

அவள் சிந்தனையில் மூழ்கி இருக்க, ஜேம்ஸ், “ஆபீஸ்க்கு டைம் ஆச்சு. கிளம்பலாமா..மேம்?” என மென்மையாய் அவளிடம் கேட்க, “ஹும்.. போலாம்..” என்றபடி வள்ளி எழுந்துக் கொண்டாள்.

பயணம் முழுக்க மௌனம் மட்டுமே. வள்ளி வில்லனை எப்படி சமாளிப்பது என சிந்தையில் மூழ்கி இருக்க, ஜேம்ஸோ, “மேடத்துக்கு மேரேஜான விசயத்தை ஏன் யார்கிட்டையும் சொல்லாம மறைக்குறாங்க......?” என அவள் வாழ்வின் முடிச்சுகளைப் பற்றி சிந்தித்த வண்ணம் வந்தான்.

ஜேம்ஸ் அலுவகம் வந்தவுடன், மின் தூக்கியின் வாயிலை நோக்கி ஓட, வள்ளியோ பொறுமையாய் தன் வாகனத்தை நிறுத்திவிட்டு படிகளில் நடந்துக் கொண்டிருந்தாள்.

என்னவோ.... வெகு நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்த மூளை, “இதற்கு மேல் தாங்க முடியாது... முதலில் போய் உன் சிறுநீரை வெளியேற்று..” என அவளுக்கு கட்டளையிட, வள்ளி தன் அலுவலக தளத்தை அடைந்ததும் முதலில் கழிவறையை தேடி ஓடினாள்.

கழிவறையை வழக்கமாய் சுத்தம் செய்யும் பெண்மணி சுத்தம் செய்துக் கொண்டிருக்க, “என்ன அலமேலு... எப்படி இருக்க... உன் பையனுக்கு காலர்ஷிப் அப்ளே பண்ணிக் கொடுத்தேனே கிடச்சதா..” எனக் கேட்டுக் கொண்டே.... ஒரு கழிவறையை திறக்க போனாள்.

அலமேலுவும், “கிடச்சதுமா... ஏதோ உங்க புண்ணியத்துல பையன் இப்போ காலேஜ் ரெண்டாம் வருஷம் போகப் போறான்..”

DO NOT COPY

அலமேலு அப்படி சொல்லியதும், “அலமேலு... என் புண்ணியத்தால இல்ல.... இதுக்கு முன்னாடி ஆட்சி செஞ்ச சில நல்லவங்க கொண்டு வந்த திட்டத்தோட பலன் தான் இன்னைக்கு உன் பையன் படிப்பு.... உன் கஷ்டத்தை எல்லாம் எடுத்துச் சொல்லி நல்லா படிக்க சொல்லு..”

என சொல்லிக் கொண்டே, கழிவறையை பயன்படுத்தி முடித்தவள்... கதவை திறந்துக் கொண்டு வெளியேறும் போது தான் அதை கவனித்தாள்.

யாரோ சிலர் சுகாதார அணையாடைகளை (தூய தமிழில்... அணையாடை... நமக்கு புரிய நாப்கின்) பயன்படுத்தி விட்டு அதை உரிய முறையில் அப்புறப்படுத்தாமல் அப்படியே ஜன்னல் மதில்களில் வைத்து இருந்தனர்.

வள்ளி கோபமாய் வெளியேறும் போதே அலமேலு, மற்றொரு கழிவறையில் இருந்த இதே போல் பயன்படுத்தப்பட்டு ஜன்னல்களில் சொருகப்பட்டிருந்த அணையாடைகளை வெறும் கைகளில் எடுத்து குப்பைத் தொட்டியில் சேகரித்துக் கொண்டிருந்தார்.

“அலமேலு....” என வள்ளி அலறிய அலறலில், அலமேலு, “என்னமா...” என பயந்த விழிகளோடு திரும்பினார்.

வள்ளி கண்களில் உக்கிரத்தோடு, “இது எத்தனை நாளா நடக்குது..” என கேட்க,

அலமேலு பயந்த முகத்துடன், “எதை அம்மா கேக்குறீங்க..? நான் தப்பு எதுவும் செய்யலீங்களே..?” என்று உயிரைக் கண்களில் தேக்கி வினவ,



DO NOT COPY

தப்பு எதுவும் செய்யாமல் பயந்த வாழ்வை வாழும் அவளை எண்ணி வள்ளிக்கு கழிவிரக்கம் பொங்கியது. “த்ச்சு..” என்று சலித்தவள், தன் வழமையான தலை குலுக்கலுக்கு பிறகு,

“நீ ஏன் கையில நாப்கினை எடுத்துட்டு இருக்க. இது எத்தனை நாளா நடக்குது..” என்று பொறுமையை இழுத்து பிடித்தபடி கேட்க,

“அது வந்துமா...” என அலமேலு இழுக்க தொடங்கினாள். பின்னே கழிவறையை காலை, மாலை மட்டும் சுத்தம் செய்ய இங்கே அவளுக்கு கொடுக்கும் ஊதியம், அவளைப் பொறுத்தவரை மிக அதிகம். ஏதாவது பிரச்சனையாகி இங்கிருந்து வெளியேற நேர்ந்தால், தன் ஒரே மகனை அவள் எப்படி படிக்க வைப்பாள். ஐந்து வருடங்களுக்கு முன்பே கணவனை வேறு விபத்தில் பறி கொடுத்து இருந்தாள்.

அலமேலுவின் தயக்கம் வள்ளியின் கோபத்தை விசிறி விட, “அலமேலு.. பதில் சொல்லப் போறியா இல்லையா..?” என கர்ஜித்தாள்.

அவளின் கோபம் கண்டு மிரண்ட அலமேலு, “நான் வேலைக்கு வந்த மூணு மாசமாவே இப்படித் தான்மா... இந்த பாத்ரூமுன்னு இல்லீங்கம்மா.... கீழ இருக்க ரெண்டு புளோர் பாத்ரூம்லையும் இப்படி தானுங்கம்மா இருக்கும். நான் தான் தினம் சுத்தப்படுத்தி கழுவி விட்டுப் போவேனுங்க..”

வள்ளிக்கு அப்பொழுது தான் நிலவரம் புரிந்தது. அவர்களின் இந்த அலுவலக கட்டிடம் புதிது. மேலும் பழைய அலுவலகத்தில் ஒரே ஒரே பெண்கள் கழிவறை மட்டுமே இருக்கும். அனைவரும் கீழ் தளத்தில் இருக்கும் அந்த கழிவறையை மட்டுமே பயன்படுத்த நேரும்.



DO NOT COPY

அதோடு அங்கே எப்பொழுதும் அணையாடைகளும், உபயோகப்படுத்திய அணையாடைகளை சுகாதாரமாய் அப்புறப்படுத்த தேவையான வசதிகளும் இருந்தன.

ஆனால் இங்கே அவை எல்லாம் இல்லாதிருப்பதை வள்ளி கவனத்தில் கொண்டாள். அப்படி வசதிகள் இல்லையெனில் இல்லை என்பதை அலுவலக மேல் அதிகாரிக்கு தெரியப்படுத்தி அந்த வசதிகளைப் பெறமால், கொஞ்சமும் சிந்திக்காமல் இப்படி பொறுப்பற்ற முறையில் அலட்சியாமாய் தங்கள் உடலின் கழிவுப் பொருள் சேகரிப்பானை அவர்கள் வீசி சென்றிருந்த விதம் அவளை வருத்தம் கொள்ள வைத்தது.

அலமேலுவை இரக்கத்துடன் பார்த்தவள், “இதை எல்லாம் நீங்க.... உங்களுக்கு சம்பளம் தர அதிகாரிகிட்ட சொல்லி இருக்கலாம் இல்ல..” எனக் கேட்க,

“ஐயோ குடி கெட்டது போங்க. வேலை செய்ய சுணங்குறேன்னு அவரு என்ன வேலைய விட்டு தூக்கிட்டா..” என அலமேலு அப்பாவியாய் வினவவும் உண்மையில் வள்ளிக்கு அவளின் அன்றாட வாழ்விற்கான போராட்டத்தை எண்ணி நெஞ்சம் வேதனையில் ஆழ்ந்தது.

அவளைப் பார்த்து நம்பிக்கையாய் புன்னகைத்தவள், “முதல்ல கையை கழுவிட்டு நம்ம எடிட்டர் ரூமுக்கு வாங்க. நான் முன்னாடி போறேன்..” என்றவள் அங்கிருந்து விரைவாய் வெளியேற, அலமேலு பயந்த படியே கை கழுவ சென்றாள்.

வேலைக்கு சேர்ந்த முதல் நாள் அலமேலு அவரைப் பார்த்தது. அப்பொழுதே அவள் பயம் கொள்ளும் படி தான் மனிதர் பேசினார். உள்ளுக்குள் நடுங்கிய


DO NOT COPY

படியே அலமேலு இரண்டாம் தளத்தில் இருந்த அவர் அறை நோக்கி நடந்தாள்.

அலமேலு அனுமதி பெற்று உள்ளே நுழையும் போதே, அங்கு பணி புரியும் அத்தனை பெண்களும் அங்க குழுமி இருந்தனர். அந்த அறையில் இருந்த நாற்காலிகள் போதாமல் சிலர் நின்றுக் கொண்டிருந்தனர்.

அலமேலு தயங்கி தயங்கி உள்ளே வர, வள்ளி, “அலமேலு முன்னாடி வா..” என அவளை திடமாய் அழைத்தாள். அலமேலு பயத்தோடு யார் கண்களையும் நேரே சந்திக்காமல், குனிந்த தலை நிமிராமல் வள்ளியின் அருகில் சென்று நின்றாள்.

இதற்கு மேல் என்னால் பொறுமையாய் இருக்க முடியாது என்பதைப் போல, ஜோதி மணி, “இப்ப எதுக்கு என் ரூமுக்கு எல்லா பீமேல் ஸ்டாப்ஸ்சையும் வர சொன்ன... இனிமேயாவது சொல்லுமா..? யூ ஆர் கில்லிங் அவர் ப்ரீசியஸ் வொர்க் டைம். உனக்கு புரியுதா இல்லையா..?” என கோபப்பட...

வள்ளியோ கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், “சார் முதல்ல நம்ம பீமேல் ஸ்டாப் எல்லாரையும் அலமேலுக்கிட்ட சாரி கேக்க சொல்லுங்க..” என நிதானமாய் சொல்ல,

பல பெண்கள்... “வாட்... வொய்... நாங்க என்ன தப்பு செஞ்சோம்... ஷி ஈஸ் ரிடிகுலஸ்...” என்று ஆள் ஆளுக்கு முணுமுணுக்க, அந்த இடமே ஒரே நிமிடத்தில் சந்தக்கடையாய் மாறிப் போனது.



DO NOT COPY

ஜோதியின் கொஞ்ச நஞ்ச பொறுமையும் காற்றில் கரைய, "ஆர் யூ மேட் வள்ளி. நம்ம ஸ்டாப்சை எதுக்கு பாத்ரூம் கழுவுற ஆயாகிட்ட மனிப்பு கேக்க சொல்லிட்டு இருக்க...?" எனக் கோபமாய் வினவ...

வள்ளி அவரை விட ஆத்திரம் தேங்கிய குரலில் "ஏன்னா இவங்க யூஸ் பண்ண நாப்கின்ஸ்லாம் இந்த பாத்ரூம் கழுவுற ஆயம்மா தான் வெறும் கையில தினம் தூக்கிப் போட்டு நம்ம இடத்தை சுத்தப்படுத்திட்டு இருக்காங்க. அதான்..."

வள்ளி அப்படி சொல்லியதும், அங்க குண்டூசி விழுந்தாலும் கேட்கும் அளவிற்கு நிசப்பதம் நிலவியது. சில பெண்கள் தங்கள் தலையை குனிந்துக் கொள்ள, ஜோதியோ கன்றிவிட்ட முகத்துடன், "வாட்..?" என அதிர்ச்சியாய் கேட்டுக் கொண்டிருந்தார்.

"எஸ் சார்... நம்ம ஓல்ட் பில்டிங்ல  பீமேல் ரெஸ்ட் ரூம்ல காயின் போட்ட நாப்கின் வர மெசினும்.. அதே சமயம் யூஸ் பண்ண நாப்கின்ஸ் பர்ன் பண்ற மிசினும் இருந்தது. ஆனா நியூ ஆபிஸ்ல ப்ளோ ருக்கு ப்ளோர் பீமேல் ரெஸ்ட் ரூம் இருக்குறதால... அந்த மெசினை எங்கயும் செட் பண்ணாம விட்டாங்க..

இங்க ஜென்ஸ் கோ வொர்கரா இருக்குறதால அவங்க முன்னாடி யூசுடு நாப்கின்ஸ் டிஸ்போஸ் பண்ண பேப்பர்லாம் கைல எடுத்துட்டு போக வெட்கப்பட்டுக்கிட்டு இவங்க பாட்டுக்கு ஜன்னல் திட்டுல எல்லாம் நாபிகின்ஸ்சை அப்படியே வீசிட்டு வந்து இருக்காங்க.



DO NOT COPY

பாத்ரூமை கிளீன் பண்ணலும் இவங்களும் மனுசங்க தானே சார். அவங்க அவங்க ஓன் பாடி வேஸ்டே நம்மால டாலரேட் பண்ண முடியிறது இல்ல... அப்படி இருக்கும் போது... அடுத்தவங்க... ச்சே..என்னால சொல்லவே முடியல.

இத்தனை நாளா இந்த விஷயம் என் கண்ணுல படல. அதோட அப்படி தப்பே பண்ணாதவங்க இந்த கேங்ல இருந்தாலும்...

இப்படி யாரோ பண்ற தப்பை கண்டுக்காம போன எல்லாரும் குற்றவாளிங்க தன். சோ எல்லாரும் அலமேலுக்கிட்ட மன்னிப்பு கேட்டு தான் ஆகணும்.

நாம எல்லாரும் படிச்சவங்க தானே சார். அதுலயும் பிரஸ் பீப்பில்ஸ். மக்களுக்கு நல்ல விசயத்தை சொல்லித் தர வேண்டிய நாமளே இப்படி இருந்தா... .. எனக்கு ரொம்ப வேதனையாவும், அசிங்கமாவும் இருக்கு சார்...இந்தப் பொண்ணு அந்தக் குப்பையை எல்லாம் வெறும் கையில சுத்தம் பண்றா... அதால தனக்கு வியாதி வரும் அப்படிங்கிற அடிப்படை அறிவு கூட அவளுக்கு கிடையாது.

அவளுக்கு வேண்டியது எல்லாம் காலேஜ் படிக்கிற தன்னோட பையன் மூணு வேலையும் நல்லா சாப்பிடனும். கிழியாத ட்ரெஸ் போட்டுட்டு போகணும். அவ்ளோ தான்...இந்த வேலையை செஞ்சி முடிச்ச கையோட தான் சார் அவ சாப்பிடவும் உக்காருறா... ”

வள்ளி பேசிய பேச்சில் அலமேலுவின் கண்களில் நீர் வடிய ஜோதி மணி வேகமாய் எழுந்து நின்றார். “நாம தினம் மதர் தெரசாவையும்.. காந்தியையும் எங்க எங்கையோ தேடிட்டு இருக்கோம். ஆனா நீங்க எல்லாம் எங்க பக்கத்துல தாமா இருக்கீங்க. இவங்க எல்லார் சார்பா நான் உன்கிட்ட மனிப்பு கேட்டுகிறேன்மா....” என கை கூப்பி மானிப்பை வேண்ட..... மற்ற பெண்கள் அனைவரும் எழுந்து நின்று,

“சாரி அலமேலு..” என்று ஒரே குரலில் தங்கள் மன்னிப்பை பதிவு செய்தனர். அதோடு இன்னும் சில பெண்கள் நெருங்கி நின்று அவள் தோளில் கை வைத்து அவளுக்கு ஆறுதல் சொல்ல முனையவும்,

“பிரண்ட்ஸ்... மன்னிப்பு படலம் எல்லாம் போதும்... வேகமா நம்ம ஆபிஸ் பாய போய் கிளவ் வாங்கிட்டு வர சொல்லுங்க... நம்ம பாத்ரூம்ல நாம போட்ட குப்பைய நாம எல்லாரும் சேந்து அஞ்சே நிமிஷத்துல கிளீன் பண்றோம்..” என உற்சாகமாய் பேச,

சில பெண்கள் முகம் சுழித்து பின் வாங்கினாலும் சில பெண்கள், “எஸ்..” என்ற ஆரவாரத்தோடு முன் வந்தனர்.

அலமேலுவோ, “ஐயோ... நீங்க போய் அதெல்லாம் எடுத்துக்கிட்டு... அதெல்லாம் நான் பாத்துக்கிறேன்மா...” என்று சொல்ல, வள்ளியோ,

“மூச்..... உன் சுய மரியாதை உனக்கும் ரொம்ப முக்கியம் வள்ளி.... டாய்லெட் பிரஷ் வச்சி.... ஸ்டிக் வச்சி இப்படி கைப்படமா கிளீன் பண்ணத்தான் உன்ன வேலைக்கு எடுத்து இருக்காங்க... புரிஞ்சதா... இப்படி அடிமை வேலை பாக்க இல்ல.. இனி ஒரு டைம் இப்படி நடந்தா நீயே போல்ட்டா வந்து கம்ப்ளைன்ட் கொடுக்கணும். நானா கண்டுபிடிச்சேன்... உன்ன தான் வேலையை விட்டு தூக்க சொல்வேன்..” என உண்மையாக மிரட்ட, அலமேலு அதற்கு மேல் வாதம் செய்யாமல் பின் வாங்கினாள்.

உதவி பையன் வாங்கி வந்து கொடுத்த கையுறைகளை எடுத்துக் கொண்டு பெண்கள் அணி வெளியே புறப்பட, சில மூத்த பெண்கள் ஏதேதோ தங்களுக்குள் முணகியபடி அங்கிருந்து வெளியேறினர்.

ஜோதி வழக்கம் போல, வள்ளியை பாரதியின் அக்னி குஞ்சோ இவள் என வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க,

தங்கள் ஊரின் பெண்கள் மேல் நிலைப் பள்ளியின் கழிவறையில், வில்லனின், 'இணைந்த கரம்' குழுவினர் அணையாடைகளை எரிக்கும் எந்திரத்தைப் பொருத்திக் கொண்டிருந்தனர்.

வில் - 7

தீயென்ற இருள் அது

தீதென்ற பிணி அது - சா 'தீ'.

வள்ளி தன் உடைகளை அடுக்கிக் கொண்டிருந்தாள். உடைகள் என்றால் பெரிதாய் ஒன்றும் இல்லை. இரண்டு மூன்று ஜோடி சாயம் போன ஜீன்ஸ்களும், வெண்ணிற முழுக்கை சட்டைகளுமே அவளின் தினசரி தேவையை பூர்த்தி செய்யும் உடைகள்.

அவளின் எதிரே சசி அமர்ந்திருக்க, "மா... தினமும் மறக்காம போன் பண்ணுங்க. நான் சரசு அக்காகிட்ட பேசிட்டேன். தினமும் சாப்பாடு அவங்க வீட்ல இருந்து உங்களுக்கு வந்துடும். அப்புறம் உங்களை கச்சேரிக்கு.... குழுவுக்கு எல்லாம் பாட கூட்டிட்டு போக தமிழு வருவா. எங்க போனாலும் ஜாக்கிரதையா இருங்க. முக்கியமா மூணாம் தேதி நீங்க செக் அப் போகணும். ஆட்டோக்கார மூர்த்தி அண்ணாகிட்ட சொல்லி இருக்கேன். உங்களை ஹாஸ்பிடல் கூட்டிட்டு போக அவர் வருவார்."

வள்ளி தொடர்ச்சியாய் பேசிக் கொண்டிருக்க, அவளை இடைமறித்த சசி, "நீ தான் வயசு புள்ள. போற இடத்துல பாத்து பத்திரமா இருக் கண்ணு. ஹூம்... உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி கெட்டி மேள சத்தத்தை காதுல கேட்டுட்டா.... எனக்கு நிம்மதியா இருக்கும். இப்படி வாரக் கணக்குல உன்ன முன்ன பின்ன தெரியாத ஊருக்கு தனியா அனுப்புறதை நினச்சாலே பயமா இருக்கு. ஏனா காலம் கலிகாலமா கிடக்கு பாரு."

சசியின் புலம்பல்களுக்கு பதிலாக வள்ளி வெடித்து சிரித்தாள். "ஐயோ அம்மா..... நான் என்ன ஒன்னும் தெரியாத சின்ன பாப்பாவா..... நான் என்ன விண்வெளி ஆராய்ச்சிப் பண்ண நாசாவுக்கா போகப் போறேன். நம்ம தமிழ்நாட்டுக்குள்ள இருக்க மதுரைக்கு தானே போகப் போறேன். அதோட நான் மட்டும் தனியா போகல. கூட ஒரு கேமரா மேனும் வரார். அதனால நீங்க பயப்படமா இருங்க..." என்றவள் வேறு சில அத்யாவசிய தேவைகளையும் அந்த தோள் பைக்குள் திணித்து முடித்ததும், சசியின் அருகில் சென்று சில நிமிடங்கள் அவரை கட்டி அணைத்துக் கொண்டாள்.

பெறாத தாயும், விதியால் வந்த சேயும் சற்று நேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்தனர். தன் தோள்பட்டை ஈரமாவதை உணர்ந்து வள்ளி நிமிர, சசி அழுதுக் கொண்டிருந்தார்.

"மா..." என வள்ளி அவரின் தோள்களில் கைவைக்க, "ராணி மாதிரி வாழ வேண்டியப் பொண்ணு. எனக்காக இப்படி கஷ்டப்படுறியேமா...." என வருத்தப்பட,

"அம்மா.... நீங்க என்னை கஷ்டப்படுத்தல... நான் தான் உங்களை கஷ்டப்படுத்தி இருக்கேன். சென்னைக்கு வந்த புதுசுல... நைட் எல்லாம் கச்சேரில பாடி எனக்கு சோறு போட்டதும் இல்லாம... என்னை படிக்க வச்சதும் நீங்க தான்.



DO NOT COPY

உங்க கூட இருக்கும் போது தான் உலகத்தை நான் முழுசா தெரிஞ்சிகிட்டேன். உங்க மகள்னு சொல்லிக்க எப்பவும் பெருமையா இருக்குமா.

நீங்க சொல்ற வீட்ல நான் இருந்து இருந்தா... ராணியா இல்ல மா.... யாரோ ஒரு பேர் தெரியாதவனுக்கு பொண்டாட்டியா அவனுக்கு பிள்ளை குட்டிங்க பெத்துக் கொடுத்துட்டு.... அவங்க வீட்ல பண்ட பாத்திரம் தேச்சிட்டு... வெளி உலகம் தெரியாத அடிமையா வாழ்ந்துட்டு செத்து இருப்பேன். அதனால கண்டதை யோசிச்சிட்டு குழம்பாம இருங்க. நான் சீக்கிரம் வேலையை முடிச்சிட்டு வந்துடுறேன்." என்றவள் அவர் கன்னத்தில் முத்தமிட,

சசியும் பதிலுக்கு மகளின் கன்னத்தில் முத்தம் கொடுத்துவிட்டு, முந்தானையில் முடிந்து வைத்திருந்த கருப்ப சாமியின் திருநீரை அவளின் நெற்றியில் பூசிவிட்டு மகளை வழி அனுப்பி வைத்தார்.

வள்ளிக்கு இதில் எல்லாம் துளியும் நம்பிக்கை இல்லை என்றாலும், தாயின் மகிழ்ச்சிக்காக அவரது சில செயல்களை மௌனமாய் ஏற்றுக் கொள்வாள்.

வீட்டை விட்டு வெளியேறியவள், அவர்கள் வீட்டின் வாயிலில் கடை வைத்திருந்த சரசு அக்காவிடம் விடை பெற்றுக் கொண்டு, அம்மாவை பார்த்துக் கொள்ளும்படி நூறாவது முறையாய் நினைவூட்டிவிட்டு, தன்னுடைய என்பீல்ட் வண்டியை நோக்கி நடந்தாள்.

அவளது மனதிற்குள் ஆயிரம் யோசனைகள் ஓடிக் கொண்டிருந்தது. இதற்கு முன் இப்படி நிறைய களப் பணியாற்றி செய்திகள் சேகரித்து இருந்தாலும், தற்போதைய அவள் பயணம் சற்றே வித்யாசமானது.


DO NOT COPY

எப்பொழுதும் ஒரு பிரச்சனை ஏன்..? எப்படி..? எதற்க்காக நடந்தது என்ற உண்மையை கண்டறிந்து எழுத தமிழகத்தின் பல்வேறு கிராமங்களில் வாரக் கணக்கில் தங்கி இருக்கிறாள்.

ஆனால் முதல் முறையாக ஒரு சுயேச்சை கிராமத்தின் வளர்ச்சியை நேரில் பார்த்து கட்டுரை தொடர் எழுத பயணிக்கப் போகிறாள். ஜோதி அவளுக்கு கொடுத்திருந்த அக்கிராமத்தின் தகவல்களை படித்தவளுக்கு உண்மையில் மிகப் பெரிய ஆச்சர்யமாய் இருந்தது.

அவளை ஆச்சர்யத்தில் ஆழ்த்திய இருந்த முதல் விசயமே அந்தக் கிராமத்தில் தனியார் பள்ளிகளோ மருத்துவமனையோ இல்லை. இத்தனைக்கும் பதினாறாயிரம் மக்களை ஜனத் தொகையாய் கொண்ட கிராமத்தில் அத்தனை வளர்ச்சிப் பணிகளையும் மக்களே முன் நின்று நடத்தி சென்றுக் கொண்டிருந்தனர்.

கடைசியாய் நடந்து முடிந்த தேசிய அளவிலான நுழைவு தேர்வுகளிலும், சிவில் சர்வீஸ் தேர்வுகளிலும் அந்தக் கிராம மாணவர்களின் பங்கு தமிழக அளவில் கணிசமாக இருந்தது.

ஏதோ ஒரு இளைனர் அமைப்பு அந்தக் கிராமத்தில் அத்தகைய மாற்றத்தை கொண்டு வந்திருப்பதாய் ஜோதி அவளுக்கு இயம்பி இருக்க, இதோ அந்த சாதனை மனிதர்களை தேடி, வள்ளியின் பயணம் தொடங்கிவிட்டது.

மத்திய பேருந்து நிலையம் வர, தன்னுடைய இருசக்கர வாகனத்தை அங்கிருந்த இருசக்கர நிலையத்தில் நிறுத்தியவள், தன்னுடன் பயணிக்கப் போகும் ஜேம்சிற்கு அலைபேசி மூலம் அழைப்பு விடுத்தாள்.


DO NOT COPY

அழைப்பை ஏற்ற ஜேம்ஸ், " ஹெலோ மேம் ஒரு பைவ் மினிட்ஸ் வைட் பண்ணுங்க. நான் ஆட்டோல வந்துகிட்டே இருக்கேன்..." என விடை அளிக்க, அழைப்பை துண்டித்தவள், வெளி வாயிலில் சென்று அவனுக்காய் காத்திருக்க தொடங்கினாள்.

பதினைந்து நாட்கள் தங்குவதற்கு ஜேம்ஸ் மூன்று கனமான பைகளோடு வந்து சேர, அவன் மகிழுந்திற்கு பணம் கொடுத்து அனுப்பியதும், அவனுடைய பயண பொதிகளில் ஒன்றை தூக்கிக் கொண்டவள்,

"இவ்ளோ வெயிட்டா இருக்கே ஜேம்ஸ்..... ஆபிஸ்ல இருந்த எல்லாக் கேமராவையும் ஆர்வக் கோளாறுல அள்ளிட்டு வந்துடீங்களா..?" என விளையாட்டாய் வினவ,

அவளை சற்றே வெட்கத்துடன் பார்த்தவன், "நோ மேம்.... நீங்க வச்சி இருக்க பேக் புல்லா புட் ஆயிடம்ஸ் இருக்கு. எனக்கு நான் வெஜ் இல்லாம சாப்பாடு உள்ள இறங்காது. அதான் அம்மா இறா தொக்கு... மீன் குழம்பு.... பொறிச்ச கருவாடு... உப்புக் கண்டம் இப்படி கெட்டுப் போகாத நான் வெஜ் அயிடம்ஸ் எல்லாம் பேக் பண்ணிக் கொடுத்து இருக்காங்க.

உங்களுக்கு என்ன மேம் தண்ணி கிடைச்சாலே போதும்னு அதை குடிச்சிட்டு கூட வேலை செய்வீங்க.நான்லாம் அப்படி இல்லப்பா. எனக்கு வாழ்கையில மொதோ முக்கியமான விஷயம் சாப்பாடு தான். அதுக்கு அப்புறம் தான் எல்லாம்.." என்றவன் பேசிக் கொண்டே முன்னே நடந்தான்.

அவன் அதை சொல்லிய விதத்தில் ரசித்து சிரித்தவள், "அது முன்னாடி தள்ளிட்டு நிக்குற உங்க தொப்பையை பாத்தாலே தெரியுது." என கிண்டலாய் சொல்ல,



DO NOT COPY

“போங்க மேம் அதெல்லாம் பேச்சுலர்ஸ் பாய்ஸ் பீர் தொப்பை. கண்ணு போடாதீங்க.” என மேலும் வெட்கப்பட, அவன் வெட்கத்தை வேடிக்கைப் பார்த்தவள் அடக்கமாட்டமல் பொங்கி சிரிக்க, அவள் முத்தன்ன வெண்ணகையை ஆவலாய் ரசித்தபடி நடந்தான் ஜேம்ஸ்.

இருவரும் மதுரை செல்லும் பேருந்து நிறுத்தத்தை கண்டறிந்து, அங்கிருந்த ஒரு பேருந்தில் ஏறி இடம் பிடித்து அமர்ந்ததும், “ஷப்பா முடியல...” என்ற பெருமூச்சை ஒரு சேர வெளியேற்றினர். ஆம் அடித்து கொளுத்திய வெய்யில் இருவரையும் பத்தே நிமிடத்தில் வியர்வையில் குளிக்க வைத்திருந்தது.

பேருந்து கிளம்பியதும் ஜன்னல் பரிசளித்த தென்றல், அவர்களுக்கு மிகப் பெரும் ஆசுவாசத்தை அளிக்க, ஜன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்த வள்ளி வெளியே வேடிக்கை பார்த்தபடி அந்த பயணத்தை அனுபவிக்க தொடங்கி இருந்தாள்.

அவளின் இலகுவான மன நிலையை உணர்ந்த ஜேம்ஸ் இத்தனை நாட்களாய் தன் மனதில் உறுத்திக் கொண்டிருந்த அந்தக் கேள்வியை வள்ளியை நோக்கி வீசினான்.

“மேம்....உங்ககிட்ட ஒன்னு கேக்கலாமா..?” ஜேம்ஸ் அப்படிக் கேட்டதும் வள்ளி முகத்தைக் கூட திருப்பாமல்,

“கேளுங்க ஜேம்ஸ்..” என்று ஜன்னலில் வேடிக்கைப் பார்த்தபடி பதில் அளிக்க,



DO NOT COPY

“அன்னைக்கு நாம புட் மால் போயிருந்தப்ப ஒருத்தர் உங்களை அவரோட வைப்னு சொன்னாரே... நிஜமாவே அவர் உங்க ஹஸ்பன்டா மேம். அதோட நீங்களும் ஏதோ டிவோர்ஸ் கொடுக்கணும்னு சொல்லிட்டு இருந்தீங்க.

உங்களுக்கு எப்ப கல்யாணம் ஆச்சு. நீங்க ரெண்டு பெரும் எவ்ளோ நாள் சேந்து இருந்தீங்க. ஏன் ரெண்டு பேரும் பிரிஞ்சி இருக்கீங்க...? அன்னைக்கு சடனா வந்து ஒருத்தர் உங்க ஹஸ்பன்ட் அப்படின்னு சொன்னதும் எனக்கு பயங்கர ஷாக்கா இருந்துச்சி மேம்.”

ஜேம்ஸ் பேசிக் கொண்டிருக்கும் போதே உக்கிரமாய் திரும்பிய வள்ளி, “என்ன உனக்கு என்னோட வர்ஜினிட்டி ஸ்டேடஸ் தெரியணுமா..? எத்தனை நாள் சேந்து இருந்தீங்கன்னு கேக்குற...? ஏன் கல்யாணமா பொண்ணு பின்னாடி வெட்டியா சுத்திட்டோமேன்னு வருத்தமா இருக்கா..?

உனக்கு என் மேல கொஞ்சமாச்சும் மரியாதை, நம்பிக்கை இதெல்லாம் இருந்து இருந்தா.... நீ கேட்ட கேள்விக்கு எல்லாம் நானா பதில் சொல்வேன்னு நம்பி காத்து இருந்து இருப்ப... அதெப்படி இந்த மாதிரி விசயத்துல ஜீன்ல கால காலமா புதைச்சி வச்ச மாதிரி எல்லா ஆம்பளைங்களும் ஒரே மாதிரியே இருக்கீங்க.

உன்னோட பயந்த சுபாவமும், தொழில் பக்தியும், திறமையும் எனக்கு ரொம்ப பிடிக்கும். அதனால தான் உன்கிட்ட நானா வந்து பேசினேன். அதனால உன்கிட்ட என்னபத்தி எல்லாம் சொல்வேன்னு அர்த்தம் இல்ல.

நான் யாரா இருந்தாலும், உனக்கான என் அன்பு நிலையானதா இருந்தா மட்டும் தான்... அது நட்பா இருந்தாலும் சரி... காதலா இருந்தாலும் சரி

நிலைச்சி நிக்கும். எப்பவும் நான் யார்னு ஆரய்ச்சி பார்வை பாத்துட்டு இருந்தேன்னா..... நாம ஜஸ்ட் ரயில் சிநேகிதர்களா கூட இருக்க முடியாது.''

கோபமாய் சொல்லி முடித்தவள், மீண்டும் ஜன்னலின் புறம் தன் பார்வையை திருப்பிக் கொள்ள, ஜேம்சிற்கு தான் எல்லை மீறி கேள்விக் கணையை தொடுத்தது அப்பொழுது தான் புரிந்தது.

ஆனாலும் அவன் கேள்வியின் மறை பொருளில் இருந்த அர்த்தத்தை வள்ளி தவறாக புரிந்துக் கொண்டதில் அவன் மனம் வேதனையுற, "சாரி மேம்... நான் அந்த அர்த்தத்துல.." அவன் அப்படி தொடங்கும் போதே வள்ளி அவனை திரும்பிப் பார்த்து முறைக்க, அவன் வாய் தானாக பூட்டிக் கொண்டது.

மேலும் இரு நொடிகள் அவனை உறுத்துப் பார்த்தவள், "இனி இந்த ட்ராவல் முழுக்க என்கிட்ட பேச முயற்சி பண்ணாதீங்க ஜேம்ஸ்.." என்றவள் இருக்கையில் தலை சாய்த்து கண்களை மூடிக் கொண்டாள்.

இலகு மன நிலையில் தொடங்கிய பயணம், இறுகு மனநிலைக்கு தள்ளப்பட்டதில் ஜேம்ஸ் தன்னைத் தானே நொந்துக் கொண்டு தானும் உறங்குபவன் போல கண்களை மூடிக் கொண்டான்.

அயனங்களை மூடிய அணங்கவள் சிந்தை முழுக்க கேள்விகள்...

வில்லாளன் பற்றிய சிறிய நினைவூட்டல் கூட ஏன் தன்னை இத்துணை நிலை இழக்க செய்கிறது என.

அவள் கேள்விக்கு விடையாய்.... கண்களில் காதல் சுமந்த வில்லன்.... "நீ நிச்சயம் என்னை தேடி வருவ தில்லு.." என்று நினைவின் அடுக்கு நுழைந்து திமிராய் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

வீட்டில் அம்மா சமைத்திருந்த மீன் குழம்பை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தவன், புரை ஏற்றிக் கொண்டு இரும, அவன் தலையில் தட்டிய அவன் தாய் "எந்தப் பொல்லாதவங்க சோறு திங்குற நேரத்துல எம் பிள்ளைய நினைக்குதாங்களோ...?" என புலம்ப,

தண்ணீர் குடித்து தன்னை நிலைப்படுத்திக் கொண்டவன், உதட்டில் புன்னகை ஒன்று வந்து அமர்ந்தது.

"எல்லாம் உம் பிள்ளைய நினைக்க வேண்டியவங்க தான் நினைப்பாங்களா இருக்கும்மா..... நீ வறுத்த மீனைக் கொண்டா.." எனக் கேட்க,

மகனின் முகத்தில் இருக்கும் புன்னகைக்கு அர்த்தம் விளங்கா விட்டாலும்,

"என்னவோ எல்லாம் நல்லபடியா நடந்தா சரிதேன்..." என்றபடி சமையலறைக்கு விரைந்தார் மகனுக்கு சூடான பொறித்த மீன் துண்டங்களை கொண்டு வர.

உன் கோபக் கனலும்,

என் புன்னகை குளிரும்

நேர்க் கோட்டில் சந்திக்கையில்...



DO NOT COPY

நான் எரிவேனோ..? நீ குளிர்வாயோ..?

வில் - 8

மனிதன் மதத்தை தோற்றுவித்த நாள் முதல்

கடவுள் மௌனியாகிப் போயிருக்கலாம்.

மதுரையின் அரசனூர் கிரமாத்தில் நுழைந்த நொடி முதல் வள்ளி தன் பணியைத் தொடங்கிவிட்டாள். அவர்களை வரவேற்று அழைத்துச் செல்ல, அந்த இளைனர் குழு விருப்பப்பட்ட போதும், வள்ளி தங்கள் பயணத்தை தாங்களே பார்த்துக் கொள்வதாய் சொல்லி அவர்களை தவிர்த்து இருந்தாள்.

மதுரை பேருந்து நிலையத்தில் இருந்து, ஒரு சிற்றுந்து பிடித்து அவர்கள் அரசனூர் மண்ணில் கால் வைத்த பொழுது, சூரியன் கிழக்கில் உதித்திருந்தது.

இருபுறமும் பசுமை கண்ணனுக்கு விருந்தாக, நடுவில் நீண்டிருந்த தார்சாலை அவர்கள் அலுங்காமல் குலுங்காமல் பயணிக்க உதவியது.

ஊரின் எல்லையில் பேருந்து நின்றதும், இவர்கள் சுமையை தூக்கிக் கொண்டு நடந்து வருவதைக் கண்ட ஊர் மக்கள் சிலர், “யார் வீட்டுக்கு விருந்தாடி வந்து இருக்கீகப்பா .... பொட்டியை நாங்க கொண்டு வந்து தரோம் தாங்க..?” என்று அன்புடன் கேட்டனர்.



DO NOT COPY

இன்னும் சிலரோ தங்கள் வாகனத்தை நிறுத்தி, "ஊருக்கு புதுசா இருக்கீகளே...? யார் வீட்டுக்கு போகணும். சொலுங்க கொண்டு போய் இறக்கி விட்டுட்டுப் போறோம்...." என்று தாங்களாகவே உதவ முன் வந்தனர்.

ஜேம்ஸ் மூச்சு வாங்கிக் கொண்டு பயணப் பொதிகளை சுமக்க முடியாமல் சுமந்து செல்வதை உணர்ந்தவள், "ஐயா எங்க பேக் எல்லாம் மட்டும் ஊர் பஞ்சாயத்து தலைவர் வீட்ல கொண்டுப் போய் வச்சிடுறீங்களா..? நாங்க மெதுவா நடந்து வந்துகிறோம்."

அவள் அப்படி சொன்னதும், "ஓ.. தாராளமா கொண்டு வச்சிடுறேன் தாயி. ஆனா பெரியவர் வீட்டுக்கு நீங்க மூணு கல் தொலைவு நடக்கணும்களே....?" அவர் கேள்வியாய் நிறுத்தவும்,

"அது ஒன்னும் பிரச்சனை இல்லை. நாங்க மெதுவா ஊரை சுத்திப் பாத்தபடி நடந்துருவோம்." அவள் அப்படி பதில் சொல்லியதும், ஜேம்ஸ் தன் பையில் இருந்த ஒரு புகைப்படக் கருவியை மட்டும் எடுத்துக் கொண்டு தன் மீத பைகளை எல்லாம் அவர் வசம் ஒப்புவித்தான்.

வள்ளியும் தன் சிறிய பயணப் பொதியை அவரிடம் கொடுத்துவிட்டு, முதல் முறை சிறக்கடிக்க முயலும் சிட்டுக் குருவியின் உற்சாகத்தோடு சற்றே பனி சூழ்ந்திருந்த அக்கிராமத்தின் அதிகாலைத் தெருக்களில் நடக்க தொடங்கினாள்.

வழக்கமாய் நடப்பதற்கு சற்றே முகம் சுளிக்கும் ஜேம்ஸ் கூட அங்கிருந்த சூழலில் தன்னை மறந்து வள்ளியின் உற்சாக நடைக்கு ஈடு கொடுத்தபடி நடந்துக் கொண்டிருந்தான்.

DO NOT COPY

கொஞ்ச தூரம் நடந்ததும் வழியில் தென்பட்ட ஒரு தேநீர் கடையில் சிறுவர்கள் சிலர் முதியவர்களுக்கு உரத்த குரலில் செய்தித்தாள் வாசித்து காண்பித்துக் கொண்டிருக்க, அவர்கள் மிகக் கவனமாய் அந்த செய்தியை உள்வாங்கிக் கொண்டிருந்தது அவர்கள் முகத்தில் வெளிப்பட்ட பாவத்தில் தெரிந்தது.

அவர்களை பார்த்துக் கொண்டே தேநீர் கடையை நெருங்கியவள், "ரெண்டு டீ ஒன்னு ஸ்ட்ராங்கா.." என சொல்ல, அந்த தேநீர் கடைக்காரரோ,

"ஏந்தாயி தூரம் தொலைவு பயணம் செஞ்சி வந்த களைப்பு முகத்துல தெரியுது. தெம்பா ஒரு சத்துமா கஞ்சி போட்டு தாரேன் குடிக்கிறீகளா..?"

அவர் அப்படிக் கேட்டதும், முகத்தில் புன்னகை மலர, "டீக் கடையில சத்துமாக் கஞ்சியா..?" என்று அவள் ஆச்சர்யத்தை முகத்தில் தேக்கி வினவவும்,

"பின்ன எங்க கடையில பதினஞ்சி வயசுக்கு குறைவான குழந்தைகளுக்கு நாங்க டீயை விக்கக் கூடாது தாயி. சின்னவர் உத்தரவு. பால் சேக்குற டி, காபி எல்லாம் உடம்புக்கு நல்லது இல்லையாமே.. ஹும் நமக்கு என்ன தெரியுது. முப்பது வருசமா இந்த தொழில்ல தான் இருக்கேன். இப்போ நாலு வருசமாத்தேன் இந்த சத்துமாக் கஞ்சி விக்குறேன். முன்ன விட தொழில் நல்லா தான் தாயி போகுது."

அவர் பதிலில் வள்ளியின் முகத்தில் மேலும் புன்னகை விரிய, "ஓகே... உங்க சத்துமாக் கஞ்சியையே கொடுங்க தாத்தா... எப்படி இருக்குன்னு பாப்போம்.." என்று சொல்லிவிட,

இரண்டு பெரிய கண்ணாடி தம்ளர்களில், ஆரியக் கூலோடு, வெல்லம், இஞ்சி, ஏலக்காய் மற்றும் தேங்காய்ப் பூக் கலந்து அவர் கொடுத்த பானம் அதிகாலைப் பசிக்கு அமிர்தமாய் இருந்தது.

ஜேம்ஸ் சற்றும் தயங்காமல், “ஐயா இன்னொரு டம்ளர் கொடுங்க..” என கேட்டு வாங்கி தன் உணவுத் தேவையை பூர்த்தி செய்துக் கொள்ள, வள்ளி அவர்கள் அருந்திய பானத்திற்கு பணம் கொடுத்து முடித்ததும், ஊர் தலைவர் வீட்டிற்கு வழியைக் கேட்டுக் கொண்டு இருவரும் நடக்க தொடங்கினர்.

செல்லும் வழியில் அவர்கள் ஒரு மேன் நிலைப் பள்ளியை கடக்க வேண்டி வர, அங்கே மாணவ மாணவிகள், கராத்தேவோடு, சிலம்பம் சுற்றவும் பழகிக் கொண்டு இருந்தனர். ஜேம்ஸ் அந்தக் காட்சிகளை நிழற்படமாக்க, வள்ளி அங்கிருந்த சூழலை ரசித்தபடி மேலும் நடக்க தொடங்கினாள்.

அதோடு அங்கிருந்த தெருக்களின் பெயர்களை அழித்து ஏதோ அடையாள எண்களை பதித்து இருந்தனர். வள்ளி அழிக்கப்பட்ட எழுத்துகளை முயன்று படிக்க, அது ஜாதிகளை குறிக்கும் சொல் என உணர்ந்த நொடி அவள் முகம் பெருமிதத்தில் மலர்ந்து.

“அமேசிங் வொர்க்..” என அவள் வாய் விட்டு சொல்ல, அவள் எதை சொல்கிறாள் எனப் புரியாவிட்டாலும், ஜேம்ஸ் அந்தத் தெருக்களையும் தன் புகைப்படக் கருவியில் பதித்துக் கொண்டான்.

மேலும் சில தொலைவு அவர்கள், நடக்க அங்க அவர்கள் கண்ட காட்சியில் இருவரும் அப்படியே ஆச்சர்யத்தில் உறைந்து நின்றனர்.

பரந்து விரிந்த ஏரி ஒன்று, அவர்கள் காட்சிக்கு விருந்தாகியது. அது சாதாரண ஏரியாக இல்லாமல், முற்றிலும் கம்பிவலைகள் கொண்டு தடுக்கப்பட்டு, மரக் காவலர்கள் புடை சூழ கம்பீரமாய் காட்சி அளித்தது.

எங்கள் வயது நான்காண்டுகள் தான் இருக்கும் என அங்கிருந்த மரங்கள் கட்டியம் கூற, ஏரியின் நுழை வாயிலில்,

“மாரி என்றால் மழை....

மழையின் வீடு இந்த ஏரி..

தயவு செய்து அசுத்தம் செய்யாதீர்கள்..”

என்ற பலகையோடு....

நடைபயிற்சி நேரம் என்று காலை இரண்டு மணி நேரமும், மாலை இரண்டு மணி நேரமும் குறித்திருந்தனர். மற்ற நேரங்களில் ஏரியின் நீர்ப் பரப்பை கம்பி வேலிக்கு அப்பால் இருந்து மட்டுமே தரிசிக்க முடியும் என்பதை வள்ளி உணர்ந்துக் கொண்டாள்.

ஏரியின் உள்ளேயும் வெளியேயும், கல் மேடைகள் அமைக்கப்பட்டு இருக்க, வீசி சென்ற காற்று ஏரி நீரில் தோற்றுவித்த அலைகளை அந்தக் கல் மேடையில் அமர்ந்து ரசிக்க தொடங்க, ஜேம்ஸ் இம்முறை லயித்திருந்த வள்ளியோடு ஏரியை புகைப்படமெடுக்கத் தொடங்கினான்.

அங்கு சற்று நேரம் கழித்த பின் மீண்டும் அவர்கள் நடக்க தொடங்கும் போது காற்றில் சுழன்ற பெரிய பெரிய காற்றாலைகள் அவர்களை வரவேற்றது.



DO NOT COPY

சுய மின் உற்பத்தி திட்டம் என்பதை உணர்ந்தவள், உதட்டில் மலர்ந்த முறுவல் மறையாமல் அனைத்தையும் வேடிக்கைப் பார்த்தபடி நடந்தாள்.

மூன்று மைல் தூரம் நடந்த களைப்பு சற்றும் தெரியாமல், அவர்கள் ஊர்த் தலைவர் வீட்டை அடையும் பொழுது, வீட்டின் முற்றத்தில், நெல், மிளகாய் வகைகள் காய்ந்துக் கொண்டிருக்க, மர நாற்காலியில் அமர்ந்திருந்த முதியவர் ஒருவர் அங்கு சுற்றி திரிந்துக் கொண்டிருந்த புறாக்களுக்கு தானியத்தை வீசிக் கொண்டிருந்தார்.

இவர்களின் வரவை உணர்ந்தவர், நிமிர்ந்துப் பார்க்க, வள்ளியும், ஜேம்சும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

மலர்ந்த முகத்துடன் அவர், "அடடே... வாங்க வாங்க.... பயலுக போன வாரமே சொல்லிட்டு கிடந்தாய்ங்க.... எங்க ஊரைப் பத்தி எழுதப் போறீகளாம்ல... ரொம்ப சந்தோசம்... நான் ஒரு கூறு கெட்டக் கிழவன், வந்தவீங்கள நிக்க வச்சி பேசிக்கிட்டு... திண்ணையில உக்காருங்கப்பா...... தனம் தனக்கொடி.." அவர் உள்நோக்கி குரல் கொடுக்க,

முகத்தில் காருண்யம் தாங்கிய முதிய பெண்மணி ஒருவர் வெளியே வந்தார். இவர்கள் அவரிடமும் அறிமுகம் செய்துக் கொள்ள,

"சீனு உங்க பையை எல்லாம் விடிகாத்தாலையே கொண்டு வந்து கொடுத்திட்டு போனான். நீங்க ஏன் இம்புட்டு தாமதமா வந்து இருக்கீக. சரி சரி ஜோலி எல்லாம் அப்புறம் பேசிக்கலாம். சூடா இட்லியும், ஆட்டுக் கால் குழம்பும் தயாரா இருக்கு.

வாங்க குளிச்சிட்டு சாப்பிட்டு பைய உக்காந்து ஐயாவோட பேசுவீகளாம். அவுக பேச ஆரம்பிச்சா பொழுதையே மறந்துடுவாக....” என்றபடி அவர்களை வீட்டிற்குள் வரவேற்க, ஆட்டுக் கால் குழம்பு என்ற ஒற்றை வார்த்தையில் ஜேம்ஸ் சொடுக்கிவிட்டவன் போல கூடம் நோக்கி நடந்தான்.

வள்ளி சற்றே தயங்கி நிற்க, “உள்ள வா தாயி..” என்று தனம் அவள் கைப்பிடித்து உள்ளே அழைத்து சென்றார்.

இருவருக்கும் தனித் தனியாய் அறைகள் ஒதுக்கப்பட்டு இருக்க, வீட்டின் கொல்லைப் புறத்தில் இருந்த பொதுவான குளியல் அறையில் ஒருவர் பின் ஒருவராய் குளித்துவிட்டு தயாராகி வந்ததும், தலை வாழை இலையில் தனம் உணவை பறிமாறினார்.

ஜேம்ஸ் வந்ததே உண்பதற்காக என்பதைப் போல கொஞ்சமும் லச்சையின்றி வெளுத்து வாங்க, வள்ளிக்குத் தான் சங்கடமாய் போயிற்று. அவளின் கூச்சத்தை உணர்ந்தார்ப் போன்று தனம் அவளுக்கு பார்த்துப் பார்த்து பரிமாறினார்.

சாப்பிட்ட வேகத்தில் ஜேம்சிற்கு புரை ஏறிக் கொள்ள, அவன் தலையில் வாஞ்சையாய் தட்டியவர், “பாத்து சாப்பிடுங்க தம்பி... பைய...” என்று கனிவுடன் கூற, இம்முறை வள்ளி அவனை வெளிப்படையாய் முறைத்தாள்.

“நீ என்ன வேண்டுமானாலும் முறைத்துக் கொள்..” என்பதைப் போல அவளை ஒரு பார்வை பார்த்தவன், இலையில் மீதம் இருந்த இட்லியை ஒரே கவளத்தில் வாயிற்கு அனுப்பிவிட்டு, உணவு அடைத்த வாயோடு,



DO NOT COPY

“இ...ட்லி...” எனக் கேட்க, தனம் அவன் இலையை உணவால் நிரப்பத் தொடங்கினார். ஒருவழியாய் இருவரும் உண்டு முடிக்க, கை கழுவி விட்டு வெளியே வந்த ஜேம்ஸ், பெரிய ஏப்பம் ஒன்றை வெளியேற்றி விட்டு,

“மேம்.... சூப்பர் சாப்பாடு... பேசாம.. கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடுத்துட்டு.... அப்புறமா நம்ம வேலையை தொடங்குவோமா..” எனக் கேட்க,

அவனைக் கொலை வெறியோடு பார்த்தவள், “ஜேம்ஸ் எப்படியும் மத்தியானம் பொறிச்ச கோழி வறுத்த மீன் எல்லாம் போடுவாங்க... அதையும் சாப்பிட்டுட்டு.... மொத்தமா சாயங்காலமா நம்ம வேலையை தொடங்கலாமா..?” எனக் கேட்க,

அவள் குரலில் தேங்கி இருந்த எரிச்சலை உணராதவன், “ஐயோ... சூப்பர் ஐடியா மேடம்.... கலக்குறீங்க போங்க...” என சொல்லிக் கொண்டே, தன் அறை நோக்கி திரும்ப,

“ஜேம்ஸ்... போங்க போய் நல்லா தூங்குங்க. அப்படியே உங்க மூட்டை முடிச்சையும் கட்டிடுங்க.. நான் இப்பவே எடிட்டர் சாருக்கு போன் பண்ணி எனக்கு வேற நல்ல கேமரா மேனா பாத்து அனுப்பி வையுங்கன்னு கேக்குறேன்.” என சொல்லி தன் அலைபேசியை கையில் எடுக்க,

“மேம்...” என்று குரலில் சோக கீதம் வாசித்தவன், மேற்கொண்டு அவளிடம் எதுவும் பேசாமல், தன்னுடைய அறைக்கு சென்று தன் புகைப்படக் கருவியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.



DO NOT COPY

'அது' என்று அவனை ஒரு பார்வை பார்த்தவள், மீண்டும் வெளி வாசலுக்கு வர, இம்முறை அம்முதியவரை அங்க காணவில்லை.

வெளியே முற்றத்தில் இருந்த நெல்லை மண் பானைகளில் அள்ளிக் கொண்டிருந்த தனம், "அவரு மச்சுல இருப்பாரு போய்ப் பாருங்க.." என சொல்ல, ஜேம்ஸ் அவர் பேசிய வட்டார வழக்கு புரியாமல்,

"என்ன மேம் நம்மளை மச்சுக்கு போக சொல்றாங்க...மச்சுனா இந்த ஊர் சினிமா தியேட்டரா இருக்குமோ....? மேம் மேம்... நான் இன்னும் பாகுபலி 2 பாக்கலை மேம். வாங்க மேம் சீக்கிரம் போலாம்.." என அவளிடம் பேச்சை வளர்க்க,

முயன்று கோபத்தை அடக்கியவள், "ஜேம்ஸ் மச்சுன்னா மாடின்னு அர்த்தம். தயவு செஞ்சி நாம இங்க இருந்து போற வரைக்கும் இவங்க பேசுற ஸ்லங்க்கு எல்லாம் மீனிங் சொல்லிட்டு இருக்காதீங்க.... என்னால முடியல.... இருபத்தி மூணு வயசுல பி.பி வந்துடும் போல... வாங்க.." என்றவள் கூடத்தின் வெளியே நீண்டிருந்த மாடிப் படிகள் நோக்கி நடக்க,

இனி ஒரு முறை வாயைத் திறந்தால் வள்ளி வெடித்து விடக் கூடிய அபாயம் இருந்ததை உணர்ந்தவன், ஒன்றும் பேசாமல் அவளைப் பின் தொடர்ந்தான்.

இவர்கள் சென்று அடைந்த மாடியறை கீழே இருந்த மொத்தக் கூடத்தையும் உள்வாங்கி விசிராந்திரமாய் இருந்தது. அறையின் எல்லா திசைகளிலும் மர அலமாரிகள் இருக்க, ஒரு மாவட்ட நூலகம் அமைக்கும் அளவிற்கு அங்கு நூல்கள் வீற்றிருந்தன.

அதோடு எல்லா வயதிலும் மாணவர்கள் கையில் ஆளுக்கு ஒரு புத்தகத்தோடு அங்கிருந்த நீண்ட இருக்கைகளில் அமர்ந்திருக்க,

பெரியவரை சுற்றி மிகச் சிறியக் குழந்தைகள் அமர்ந்திருந்தனர். அவர்கள் அனைவருக்கும் வயது மிஞ்சி மிஞ்சிப் போனால் மூன்றில் இருந்து ஆறுக்குள் இருக்க வேண்டும்.

நடுவில் ஏதோ ஒரு வண்ண புத்தகத்தை விரித்து வைத்து அமர்ந்திருந்தவர், அவர்களுக்கு கதை சொல்லியாய் கையை விரித்து, முகத்தைக் கோணி, கண்ணை சுருக்கி எதையோ அழகாய் விவரித்துக் கொண்டிருக்க, அவர் சொல்லும் கதைக்கு குழந்தைகள் கை தட்டி ஆர்பரித்துக் கொண்டிருந்தனர். அந்தக் காட்சியே ஏதோ ஒர்க் கவிதைப் போல இருந்தது.

அவர்களை நெருங்கியவள், யாரையும் கலைக்க மனமின்றி முழங்காலிட்டு அந்த சிறுவர்களோடு சிறுமியாய் தானும் சென்று அமர்ந்துக் கொள்ள, ஜேம்ஸ் தன் வழக்கமான பணியைத் தொடங்கினான்.

மாடி அறையின் சாளரத்தின் வழியே, கதை கேட்டுக் கொண்டிருத்த கவிதைப் பெண்ணை ரசித்துக் கொண்டிருந்தான் கள்வன் ஒருவன்.

உனக்கென வலை விரித்து காத்திருக்கிறேன்..

உன்னை வீழ்த்துவதற்கில்லையடி.....

உன்னிடம் வீழ்ந்துவிட.

DO NOT COPY

வில் - 9

ஏற்றியவர்கள் மாண்டுபோனார்கள் ஆயினும்

எரிந்துக் கொண்டே இருக்கிறது ஜாதீய தீ.

குழந்தைகளுக்கு குழந்தையாய் மாறி கதை சொல்லிக் கொண்டிருந்தவர், கதை முடியும் தருவாயில் தான் வள்ளி குழந்தைகள் கூட்டத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டு, கதையை நிறுத்திவிட்டு அவளிடம் பேச தொடங்கினார்.

“அடடே எப்பமா மாடிக்கு வந்தீக. உங்களை நான் கவனிக்கவே இல்ல. ரெண்டு பேரும் சாப்டீங்களா.... வீடு நீங்க தங்க வசதியா இருந்ததுங்களா..?” அவர் தொடர்ந்து விசாரிக்கவும்,

கதையின் குறுக்கே வந்த வள்ளியை அங்கிருந்த குழந்தைகள், “யார் இந்தப் புதியவள்...?” என்பதைப் போல பார்க்க, அந்தக் குழந்தைகளைப் பார்த்து சிநேகமாய் புன்னகைத்தவள்,

“உங்க நட்சத்திரம் வழி மாறி பூமிக்கு வரும் போதே நானும் வந்துட்டேன் ஐயா. ரொம்ப திருப்தியா சாப்டோம். எங்களுக்கு உங்க வீடு ரொம்ப வசதியா இருக்கு. நீங்க கதைய முடிச்சிட்டு வாங்க. நாம பொறுமையா பேசலாம்.” என்றவள் அங்கிருந்து எழுந்துக் கொண்டாள்.

சிறு தலை அசைப்பில் அவளுக்கு விடை கொடுத்தவர் மீண்டும் குழந்தைகளோடான தன் உலகில் தொலைந்து போக, வள்ளி ஜேம்சை நோக்கி நடத்தாள்.

ஜேம்ஸ் தன் புகைப்படக் கருவியின் மூலம் அங்கிருந்த பால்கனியில் நின்ற படி எதையோ படம் பிடித்துக் கொண்டிருந்தான்.

அவனை நெருங்கியவள், “ஜேம்ஸ் என்ன போகஸ் பண்ணிட்டு இருக்கீங்க..?” எனக் கேட்க,

தன் அருகில் திடுமென ஒலித்த குரலில் சற்றே திகைத்துப் போய் நிமிர்ந்தவன், பின்பு அவளை நோக்கி ஒரு புன்னகையை செலுத்திவிட்டு,

“கீழ இருக்க ஒரு மரத்துல சிட்டுக் குருவி கூடு ஒன்னு தெரியுது மேடம். கூட்ல முட்டையோட பாக்கவே ரொம்ப அழகா இருக்கு...அதான் சும்மா போகஸ் பண்ணி பாத்துட்டு இருந்தேன்..” அவன் சொல்லியதும் எட்டிப் பார்த்தவள் முகம் பெரிதாய் மலர்ந்தது.

ஆம் அது சிட்டுக் குருவியின் கூடு தான். இப்பொழுதெல்லாம் அந்தப் பறவை பார்வைக்கே கிடைப்பதில்லை.. என மனதிற்குள் அவள் வருத்தமாய் எண்ணிக் கொண்டிருக்கும் போதே,

“தாய் தமிழ் வணக்கம்..” என்று தங்களின் பின்னால் கேட்ட உற்சாக குரலால் இருவரும் ஒரு சேர முன்னால் திரும்பினர். அங்கே தன்னம்பிக்கை மின்னும் முகத்தோடு, கண்களில் உற்ச்சாக மின்னல் தெறிக்க இளைனன் ஒருவன் நின்றுக் கொண்டிருந்தான்.

இவர்கள் அவன் புறம் திரும்பியதும், மீண்டும் ஒரு முறை கைகளை முறையாய் கூப்பி, “தாய் தமிழ் வணக்கம் நண்பர்.” என்று சொல்லவும், ஜேம்ஸ் அடக்க மாட்டாமல் வெடித்து சிரித்துவிட்டான்.


DO NOT COPY

வள்ளிக்கு சிரிக்க வேண்டும் போல தோன்றினாலும் முயன்று அடக்கிக் கொண்டு, “வணக்கம் நண்பர். நீங்க..?” என கேள்வியாய் நிறுத்தவும்,

“எங்க இணைந்த கரம் குழுவோட செயலாளர். என்னோட பெயர் மதியழகன். நண்பர்களுக்கு மதி. நீங்க அழகன்னு கூப்பிட்டா கூட எனக்கு மகிழ்ச்சி நண்பர்..” என்று கண்களில் குறும்பு கூத்ததாட சொல்ல,

ஜேம்ஸின் உடலில் உடனே ஒரு இறுக்கம் வந்தது. ஏன் எனில் அந்த மதி அத்தனை அழகாய் தான் இருந்தான். கட்டுக் கோப்பான உடலோடும் திருத்தமான முகத்தோடும். அதோடு சதா உதட்டில் தேங்கி இருந்த புன்னகை அவனுக்கு தனி சோபையை வாரி வழங்கிக் கொண்டிருந்தது.

ஜேம்ஸ் உடனே, “மதிங்கிற பேர் தான் கூப்பிட வசதியா இருக்கும்..” என்று சொல்ல, மதி, “உங்கள் விருப்பம் நண்பர்..” என்ற ஒரே வார்த்தையில் தன் சம்மதத்தை தெரிவித்தவன்,

“உங்கள் சுய அறிமுகம்.” என்று வள்ளியை நோக்கி கேட்க, அப்பொழுது தான் தங்களை அறிமுகம் செய்துக் கொள்ளாததே வள்ளிக்கு உறைத்தது.

“சாரி.... நீங்க பேசின தமிழ்ல கொஞ்சம் ஸ்டன் ஆயிட்டேன்..” என்று மெலிதாய் புன்னகைத்தவள்,

“நான் வள்ளி... முழுப் பேர் தில்லையாடி வள்ளியம்மை. எங்க தாத்தா வச்ச பேர். கனல் மேகஸின் ரிப்போட்டர்.... இவர் ஜேம்ஸ் எங்க பத்திரிக்கையோட பேமஸ் போட்டோகிராபர்....” என தங்களை அவனுக்கு அறிமுகம் செய்விக்க, ஜேம்ஸ் ஒரு அடி முன்னால் வந்து மதியின் கரம் பற்றி குலுக்கினான்.

அறிமுகப் படலம் முடிந்ததும், “எங்க கிராமத்தை பற்றி உங்க பத்திரிக்கையில எழுதப் போவதற்கு மகிழ்ச்சியும் வாழ்த்துக்களும் நண்பர். ஆனி ஐயா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் உங்க வருகையை அலைபேசியில தெரிவிச்சார்.

எங்க பள்ளிககளை செம்மை செய்த விதம் பற்றின தகவல்களை உங்களுக்கு தர சொல்லி எனக்கு உத்தரவு. நீங்கள் புசித்திருந்தால் நாம பள்ளியை நோக்கி நடந்துக் கொண்டே பேசலாமா நண்பர்.”

மதியழகன் அப்படி தெரிவித்தும், ஜேம்ஸின் முகம், மறுபடி நடக்கணுமா என்று வெய்யிலில் போட்ட வற்றலாய் சுருங்கி விட, வள்ளி அவன் இனிமையான தமிழை ரசித்துக் கொண்டே, “ஓ நாங்க சாப்பிட்டாச்சு நண்பர்.” என்றபடி, அவனோடு நடக்க தொடங்க, ஜேம்சும் வேறு வழியின்றி அவர்களை தொடர்ந்தான்.

“எங்க ஊர்ல பதினாறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மொத்தம் மூவாயிரத்து எழுநூற்றி மூணு பேர் இருக்காங்க. இதுக்கு முன்னாடி இங்க அரசோட இரண்டு ஆரம்பப் பள்ளிகள், இரண்டு மேல் நிலை, ஒரே ஒரு உயர் நிலைப் பள்ளி மட்டும் செயல்பாட்டுல இருந்துச்சி.

தனியார் பள்ளிகள் எப்படியும் ஐந்து கிலோ மீட்டருக்கு ஒரு ஆரம்பப் பள்ளியும், இரண்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் செயல் பாட்டுல இருந்துச்சி.

எங்க அமைப்பு ஐந்து வருடங்களுக்கு முன்னாடி உருவானப்ப... நாங்க கையில எடுத்த முதல் விசயமே  தனியார் கல்வி மோகத்தை ஒழிக்கணும் அப்படிங்கிறது தான்.



DO NOT COPY

முதல்ல எங்க அமைப்புல இருந்த படித்த இளைஞர்கள் எல்லாம் அரசு பள்ளிகள்ல சுழற்சி முறையில பாடம் நடத்த தொடங்கினோம். முதல்ல பள்ளிகள் எங்கள் இலவச சேவையை ஏத்துக்க மறுத்தாங்க.

அப்புறம் ஊர்த் தலைவர் ஆனி ஐயா மூலமா, ஆட்சியர்கிட்ட மனுக் கொடுத்து சம்மதம் வாங்கி நாங்க அந்த சேவையை தொடங்கினோம். கற்பித்தல் அப்படினா வெறும் கரும் பலகையில சுண்ணாம்பு கட்டிகளை கோட்டோவியமாக்கி குழந்தைகளை கொட்டாவி விட வைக்குற கற்றல் முறையா இல்லாம,

எங்கள் கற்பித்தல் முறையை செயல் வழிக் கற்பித்தல் முறையா மாத்தினோம். எங்க அமைப்புல அறிவியல் ஆர்வம் இருந்தவங்க... அது தொடர்பாவும், கணினியில ஆர்வம் இருந்தவங்க அது தொடர்பாகவும், மொழியியல் ஆர்வம் இருந்தவங்க அது தொடர்பாவும் அவங்க கற்பித்தலை தொடர்ந்தாங்க.

அப்போ நம்ம கலாம் ஐயா உயிரோட இருந்த சமயம். அந்த சமயத்துல நடந்த தேசிய மாணவர் அறிவியல் கண்காட்சியில ஏற்கனவே மாநில அளவுல முதல் பரிசு வாங்கி இருந்த எங்க மாணவர் ஒருவர் தேசிய அளவுலயும் வெற்றிக் கோப்பையை... அதுவும் அப்துல்கலாம் ஐயா கையால சுமந்துட்டு வந்தார்.

அதுக்கு அப்புறம் தான் எங்க கிராம மக்களே எங்களை திரும்பி பாக்க ஆரம்பிச்சாங்க. எங்க அமைப்பு ஆரம்பித்த ஒரு வருஷம் எங்களுக்கு எந்தவிதமான ஒத்துழைப்பும் எங்க கிராம மக்கள் கிட்டயிருந்து கிடைக்கவேயில்ல.

அதுக்கு அப்புறம் வீட்ல பட்ட படிப்பை முடிச்சிட்டு பொழுது போகாம இருந்த சகோதரிகள் எல்லாம் எங்க பள்ளி சேவையில வந்து இணைஞ்சாங்க. அப்படியே படிப்படியா படிப்போட விளையாட்டுலையும் எங்க பங்களிப்பைக் கொடுத்தோம்

அங்கயும் எங்க குழந்தைகள் மாநில, தேசிய அளவுல அவங்க திறமையை நிரூபிச்சிட்டு வந்தாங்க. மக்களும் அரசுப் பள்ளி வாசல்ல வந்து நின்னாங்க.

ஆனா இப்போ இன்னொரு புதுப் பிரச்சனை உதயமாச்சு. எல்லாக் குழந்தைகளுக்கும் இருக்குற இரண்டுப் பள்ளிகள்ல சேக்க இடம் இல்லை.

நாங்க முறையா அரசுக்கு மனு கொடுத்தோம். ஆனா உடனடியா பள்ளிகள் அமைச்சிக் கொடுக்குறது சிரமம்னு அவங்க எங்க கோரிக்கையை புறம் தள்ளிட்டாங்க.

அப்போ எங்க அமைப்போட தலைவர், அரசின் உதவி பெறும் பள்ளிகளை அமைக்கலாம்னு சொல்லி, இதுவரை தனியார் பள்ளிகளுக்கு கட்டின பணத்தில் பாதியை நன்கொடையா வசூல் பண்ணி,

அரசுகிட்ட மான்யம் வாங்கி புதுசா ரெண்டு ஆரம்பப் பள்ளிகளைக் கட்டி முடிச்சோம். செலவு கம்மியா ஆகணும்னு எங்க ஊர் மக்கள் எல்லாம் அவங்க சொந்த வேலைக்கு காலைல போனா இங்க கொத்தனார் வேலை பாக்க இரவு வந்துடுவாங்க.

சுத்தி விளக்கு எரிய, பெருசுங்க எல்லாம் பகடி கதை சொல்ல நாங்க எல்லாம் சிரிச்சிகிட்டே வேலை செய்வோம்.

பொன்னாத்தா சில நேரம் தெம்மாங்கு பாட்டு பாடும். கலவை சாதம் ஊருக்கே ஒரே உலைல கொதிக்கும்.

இலையில சூடு பறக்க அந்த சாதம்... ஆஹா அப்படியே அமிர்தமா இருக்கும். கட்டிட வேலை நடந்த ரெண்டு மாசமும் எங்க ஊர்ல ஏதோ திருவிழா நடந்த உணர்வு தான் இருந்தது. எல்லாருமே இரவு ஏழு மணியில இருந்து பத்து மணி வரைக்கும் வேலை செய்வோம்.

எங்க ஆனி ஐயா சம்சாரம் தனம் அம்மா தான், வேலைக்கு வந்தவங்களுக்கு எல்லாம், தினம் கலவை சாதம் கிண்டிக் கொடுப்பாங்க.

அதுக்கு அப்புறம் எங்க தலைவர் நமக்கு எது வேணுமோ அதை நாம் தான் உருவாகிக்கணும்னு சொல்லிட்டு, எங்க ஊர் சாலையில இருந்து குடி நீர், மின்சாரம் இப்படி எங்க தேவையை நாங்க தான் பூர்த்தி செய்துகிறோம்.

இப்போ உங்களுக்கு ஒரு கேள்வி வரலாம். அப்புறம் எதுக்கு அரசாங்கம்னு. எதுக்கு நாம வரிப் பணம் கட்டணும்னு....உங்க எண்ணம் சரி தான்.

இப்படி தான் நாலு வருசத்துக்கு முன்னாடி நிறையப் பேர் கேள்வி எழுப்பிட்டு இருந்தாங்க. அதுக்கு எங்க தலைவர் சொன்னே ஒரே பதில்,

“நம்மால முடிந்ததை முதல்ல நாம சமூகத்துக்கு கொடுப்போம். அது கல்வியா இருந்தாலும் சரி. உடல் உழைப்பா இருந்தாலும் சரின்னு.

இப்போ எங்க கிராம மக்கள் ரொம்ப மகிழ்ச்சியா தான் இருக்காங்க. எங்க ஊர்ல எங்க முயற்சில அரசு சார்ந்த நான்கு பள்ளிகள் இயங்கிட்டு இருக்கு.


DO NOT COPY

தனியார் பள்ளிகள்ல சேர்கை குறைஞ்சி ஒரு கட்டத்துல யாருமே போகாததால அதையெல்லாம் அவங்களே இழுத்து மூடிட்டு வேற தொழிலை தேடி போயிட்டாங்க."

பேசிக் கொண்டே நடந்ததில் பள்ளி வந்து விட, அவன் விவரித்த காட்சிகள் மனத் திரையில் விரிய, வள்ளியின் மனதில் சொல்லொண்ணா உணர்வுகள். பள்ளியை கண்டவுடன் அவள் மனதில் வந்த எண்ணம், "இது ஊர் கூடி இழுத்த தேர்.." என்பது தான்.

நடக்க வருந்திய ஜேம்ஸ் கூட, மதியின் பேச்சை கேட்டுக் கொண்டே வந்ததில், நடந்து வந்த உணர்வே அவனுக்கு தெரியவில்லை.

இவர்கள் வந்த இடம் ஆரம்பப் பள்ளி. முதலில் இவர்கள் நுழைந்தது ஒன்றாம் வகுப்பிற்குள். இளம் பெண் ஒருவர் வடிவங்கள் பற்றிய பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார்.

வகுப்பில் இருந்த முப்பது மாணவர்கள் கையிலும் களி மண்.

அந்த ஆசிரியர் வட்டம் என்று சொன்னதும், மாணவர்கள் களி மண்ணைக் கொஞ்சம் பிட்டு அங்கு ஏற்கனவே தயாராய் இருந்த வட்ட வடிவ செயற்கை அச்சில் வார்த்து ஒரு வட்டத்தை உருவாக்கினர்.

ஆசிரியர்... "உங்கள் வட்டத்தை காண்பியுங்கள்..." என்றுக் கேட்டதும், அனைவரும் ஒரு சேர தங்கள் வட்டக் களிமண் வடிவத்தை உயர்த்திக் காண்பித்தனர்.



DO NOT COPY

அதே போல நான்கு வெவ்வேறு வடிவங்களை அச்சில் எடுத்து முடித்ததும், ஆசிரியர் ஒவ்வொரு வண்ணங்களின் பெயர்களை குறிப்பிட்டு, அதை ஒவ்வொரு வடிவத்திற்கும் அடிக்க சொல்ல,

தங்கள் பிஞ்சு விரல்களால் ஏற்கனவே நீர்க் கரைசலில் தயாராய் இருந்த வண்ணங்களை குழந்தைகள், வடிவத்தில் தூரிகை கொண்டு தீட்ட தொடங்கினர். வகுப்பு முழுக்க ஒரே ஆரவாரக் கூச்சல்.

"ஷ்.. அமைதியாயிரு.." என்று மிரட்ட வேண்டிய ஆசிரியையும் அங்கே குழந்தைகளோடு குழந்தையாய் குதூகலித்துக் கொண்டிருக்க, ஜேம்ஸ் தன் கை வண்ணத்தில் அந்த அழகிய மலர்ச் செண்டுகளை தன் கருவியில் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தான்.

வள்ளிக்கு அதிர்ச்சி ஆச்சர்யம் பிரம்மாண்டம் எல்லாம் தாண்டி ஏதோ ஓர் முக்தி நிலையில் அந்தக் குழந்தைகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அடுத்து இவர்கள் சென்ற இரண்டாம் வகுப்பில் மொழிப் பாடம். ஏழு வயதுக் குழந்தைகள் பாண்டியாட்டத்தோடு திருக்குறளையும் சேர்த்து, புதுமையாய் ஒரு விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த மூன்றாம் வகுப்பில் தெள்ளத் தெளிவாய் ஆங்கில நாடகம் ஒன்று அரங்கேறிக் கொண்டிருந்தது. அதுவரை இவர்களோடு தூய தமிழில் உரையாடிக் கொண்டு வந்த மதி அந்த வகுப்பிற்குள் நுழைந்ததும் தானும் ஆங்கிலம் பேச தொடங்கினான். அது அவர்கள் வழமையாம்.



DO NOT COPY

அடுத்து அவர்கள் நுழைந்த இடம் அறிவியில் ஆய்வகம். நான்காம் வகுப்பு குழந்தைகள் எதையோ பரிட்சித்துக் கொண்டிருக்க,

மதியைக் கண்டதும் அங்கிருந்த குழந்தைகள் முகம் வெண் தாமரையாய் மலர்ந்து. அங்கிருந்த ஒரு சுட்டிப் பெண்ணை அழைத்தவன்,

"கவி இவங்க நம்ம பள்ளிக் கூடத்தை பற்றி செய்தி எழுத வந்து இருக்காங்க. எங்க இவங்களுக்கு அதிரடியா உன்னோட மந்திர வித்தை ஒன்னை காட்டுப் பாப்போம்." என சொல்ல,

ஒரு சிறிய கண்ணாடி சோதனைக் குழாயில் நீர் போல எதையோ கொண்டு வந்தக் குழந்தை, வேறு ஒரு சிறியக் காகிதத்தில் உப்பை போல வெண்ணிறப் பொடி ஒன்றைக் கொண்டு வந்து,

"மிஸ் இதுல கொஞ்சம் கொஞ்சமா இந்த உப்பைப் போடுங்க.." என சொல்ல, வள்ளி சாதாரணமாகத் தான் உப்பைப் போட்டாள்.

அவள் போட்டு முடித்ததும்..."உனக்கு பிடிச்ச ஊறுகா தட்டுக்குள்ள வச்சிருக்கேன். வந்து எடுத்துக்கோ மாயா.." என்று சொல்லியபடி தன் ஸ்கேலால் அந்த குடுவையை நோக்கி மந்திரம் போடுவதைப் போல ஒரு சுழற்று சுழற்ற, குடுவை நொடியில் புசு புசுவென பொங்கி வந்தது.

வள்ளி ஒரு நிமிடம் ஒரே நிமிடம் பயந்தே போய் விட்டாள். அங்கிருந்த மற்றக் குழந்தைகள் குலுங்கிச் சிரிக்க, வள்ளியின் பயந்த தோற்றத்தை பார்த்த ஜேம்ஸ் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தான்.



DO NOT COPY

அவனைப் பார்த்து அவள் முறைத்துக் கொண்டிருக்கும் போதே, அவளை கனிவாய் அழைத்தக் குழந்தை,

“மிஸ்.... சாரி பயந்துடீங்களா..? எங்க சாரோட பிரண்ட்ஸ் வந்தா நாங்க இப்படித் தான் அவங்களை சும்மா பயங்காட்டுவோம்.

நீங்க கையில வச்சி இருக்குறது சமயல் சோடா மிஸ். அதோட கெமிகல் நேம் சோடியம் பை கார்பனேட். உங்க கையில இருந்தது வெறும் தண்ணி தான், ஆனா லேசா தேங்காய் எண்ணெய் ஊத்தி உங்கக் கிட்ட கொடுத்துட்டேன்.

நான் கொண்டு வந்து கொடுக்கும் போது நீங்க மேல இருந்த தேங்காய் எண்ணெய் மேலா தான் சோடா உப்பை போட்டீங்க. எண்ணையோட அடர்த்தி அதிகம் அதனால அது முதல்ல நீர்ல மூழ்கி அதுக்கு அப்புறம் மிதந்தது. சோ நீங்க போட்ட சமையல் சோடா தேங்கா எண்ணையோட சேர்ந்து வினை புரிஞ்சி பொங்கி வந்தது.”

எட்டாம் வகுப்பிலோ, பத்தாம் வகுப்பிலோ கஷ்டப்பட்டு மனனம் செய்த வேதியல் பக்கங்கள் வள்ளியின் கண் முன் நிழலாடியது.

அந்தக் குழந்தையை இழுத்து மடியில் அமர்த்திக் கொண்டவள், அன்பாய் அதன் கன்னத்தில் முத்தம் கொடுக்க, மதி அவளை குறும்போடு பார்த்துக் கொண்டிருந்தான். இந்த ஆசிரியனுக்கு ஒன்றும் இல்லையா என்பதைப் போல.

மேலும் அவர்கள் வகுப்பறைகளை சுற்றி முடித்து கிளம்பும் பொழுது நேரம் மதியத்தை நெருங்கி இருந்தது.

வந்திருந்த முதல் நாளே அவள் எண்ணத்தில் பல பல தாக்கங்களை ஏற்படுத்தி இருந்த பள்ளியை பெருமையோடு பார்த்தவள்,

விடைபெறும் நோக்கோடு மதியின் கரம் பற்றி குலுக்கி விட்டு, "ரியலி ய கிரேட் ஜாப். நான் கண்ணுல பார்த்த விசயங்களை படிக்கிற வாசகர்கள் பீல் பண்ற அளவுக்கு உணர்வுப் பூர்வமா எழுதணும். இன்னைக்கே கட்டுரையோட முதல் பதிவை தொடங்கிடலாம்னு இருக்கேன்.

உங்களோட ஸ்பென்ட் பண்ண டைம் ரொம்ப ரொம்ப எனர்ஜிடிக்கா... ரொம்ப ரொம்ப பெஸ்டா இருந்தது. உங்க ஸ்கூல் கிட்ஸ் பாக்கும் போது ரொம்ப பாசிடிவ் பீல் வருது... நம்ம சொசைடி மேல. நீங்க சென்னை வந்தா கண்டிப்பா என்னை மீட் பண்ண வரணும்.

எங்க அம்மாகிட்ட உங்களைக் காட்டணும். எப்போ பாரு என்னை திட்டிக்கிட்டே இருப்பாங்க... நான் சோசியல் சர்விஸ் பண்றதா சொல்லி புலம்பிட்டே இருப்பாங்க. நான் பண்றது எல்லாம் சர்வீசே இல்ல. ஜஸ்ட் சொசைடிய குறை சொல்ற சுய தம்பட்டம்னு உங்களை மாதிரி ஆளுங்களை பாத்தா தெரிஞ்சிப்பாங்க. மறுபடியும் சந்திப்போம் நண்பர்." என அவள் விடை பெற, ஜேம்சும் கைகளை குலுக்கி விடைப் பெற்றுக் கொண்டான்.

மதி, "உங்களோடு தலைவர் வீடு வரை துணைக்கு வரவா நண்பர்.." என்று அன்பாய் கேட்க, "நாங்களே போய்கிறோம் நண்பர். தேங்க்ஸ் பார் யுவர் கன்சர்ன்.." என்றவள் பின் தன் நாக்கை கடித்துக் கொண்டு,

“உங்க அளவுக்கு தூய தமிழ் பேச முடியல சாரி…” என்று சொல்லி சிரிக்க, அவளை மையமாய்ப் பார்த்தவன்,

“செந்தமிழும் நாப் பழக்கமும் தான் நண்பர்… பழகிக் கொடுத்துடுவோம் விடுங்க..” என்றவன் குறிப்பாய் அவள் இதழ்களைப் பார்க்க,

அவன் குறும்புப் பேச்சை ரசித்தவள், “கற்றுக் கொள்ளும் ஆர்வம் வந்தால் கண்டிப்பாய் கற்றுக் கொள்வேன் நண்பர். இப்போதைக்கு கிளம்புறேன்.” என்ற படி, அங்கிருந்து நடக்க தொடங்க,

நடந்துக் கொண்டிருந்த அவளை மீண்டும் அழைத்தவன், “நண்பர்… நாளை எங்கள் குடிநீர் தேவை மற்றும் விவசாயம் பற்றி பகிர்ந்துக் கொள்ள, எங்கள் அமைப்பின் துணை தலைவர், நண்பர் ரோஷன் உங்களை சந்திக்கக் வருவார். எங்கள் அமைப்பின் தலைவர் மின் அஞ்சல் முகவரி ஊர்த் தலைவர் ஆனி ஐயாவிடம் இருக்கும். முதல் பத்தியை நீங்கள் முடித்து விட்டால்…அதை அவருக்கு மின் அஞ்சல் செய்து விடுங்கள். அவருடைய அன்பு வேண்டுகோள் அது..” என்று தெரிவிக்க,

“கட்டாயம் நண்பர்..” என கையசைத்து விட்டு மேலே நடந்தாள்.

ஊர் தலைவர் வீட்டை அடைந்து மதிய உணவை முடித்ததும், ஜேம்ஸ் உறக்கத்தில் ஆழ்ந்து விட, வள்ளியோ செல்கள் இணைந்து கருவாகி உயிர் ஆவதைப் போல,

தன் சிந்தனையில் உதித்த சொற்கள் என்ற செல் எடுத்து, தன் கட்டுரையை உயிரோவியமாய் செதுக்கிக் கொண்டிருந்தாள்.



DO NOT COPY

இரவு உணவிற்கு கூட எழுந்துக் கொள்ளவில்லை. தனம் தான் அவளுக்கு, "இதையாவது குடிச்சிட்டு வேலை செய் கண்ணு..." என்று பனங்கற்கண்டு கலந்த பாலைக் கொடுத்து விட்டு சென்று இருந்தார்.

ஆனி ஐயா சற்று நேரம் அவளிடம் அவள் பார்த்து வந்த விசயங்கள் குறித்து கேட்டுவிட்டு, அவள் அறியாத சில முக்கிய தகவல்களையும் சொல்லிவிட்டு, இணைந்த கரம் அமைப்பின் தலைவனின் மின் அஞ்சல் முகவரியைக் கொடுத்து விட்டு உறங்க சென்று விட்டார்.

அவள் தன் கட்டுரையின் முதல் பகுதியை திருப்திகரமாய் வடித்த மறுநொடி `பொறுப்பாசிரியருக்கும், இணைந்த கரம் அமைப்பின் தலைவனுக்கும் அந்த கோப்பை மின் அஞ்சலில் அனுப்பிவிட்டு உறங்க சென்று விட,

இரவு முதல் நொடிக்கொரு முறை அலைபேசியை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த வில்லன், மின் அஞ்சல் வந்ததின் அறிகுறியாய் அலைபேசி சிணுங்கவும், வேகமாய் தன் உள்ப் பெட்டியை திறந்து, தனக்கு வந்திருந்த கட்டுரையை வாசிக்கத் தொடங்கினான்.

ஏனோ ஐந்து வருடங்களுக்கு முன்னால் கால இயந்திரத்தில் பயணித்து திரும்பி வந்த உணர்வை அந்தக் கட்டுரைக் கொடுக்க, அத்யாயத்தின் இறுதி வரிகளில்,

'மாற்றத்தின் விதை தனை இம்மண்ணில் விதைத்த மா மனிதரின் சுவடுகளில் பயணிக்க விரும்பும் அவரின் விசிறியாய் நான். அடுத்த பதிவோடு விரைவில் வருகிறேன்.' என்றிருந்த கடைசி இருவரிகளை மட்டும் எத்தனை முறை வாசித்து இருப்பானோ அவனுக்கே தெரியாது.



DO NOT COPY

அக்கணமே வள்ளியின் பட்டுப் பாதங்களை தன் பாதத்தின் மேல் வைத்துக் கொண்டு,

சுவடின் அரிச்சுவடே நீ தான் பெண்ணே......எனக் கூவ வேண்டும் போல இருந்தது.

முயன்று அடக்கிக் கொண்டு படுக்கையில் வீழ்ந்தான்.

மனதெல்லாம் தித்திப்பாய் அவள் நினைவுகளின் ஊர்வலங்கள்...

கண்ணாமூச்சி ஆட்டத்தில் - உன்

கண்கள் தேடும் கள்வன் நானடி.

கண்டு கொண்டால் கை சேர்வாயோ...?

காதலியே கோபம் கொண்டு மாயமாவாயோ..?

வில் - 10

மனிதனின் முதல் அடையாளம் மனிதமில்லை எனில்

மனிதன் மனிதனாய் பிறந்தென்ன பயன்..?

வள்ளி அடுத்த நாள் கண்விழிக்கையில் நேரம் காலை ஒன்பதை நெருங்கி இருந்தது. படுக்கையில் சோம்பலாய் உருண்ட படி கடிகாரத்தில் நேரத்தை கண்டவள் அடித்து, பிடித்து எழுந்து அமர்ந்தாள்.



DO NOT COPY

“ச்சே நாளைல இருந்து அலராம் வச்சிட்டு தான் தூங்கனும்..” என மனதிற்குள் முடிவெடுத்துக் கொண்டவள், வேக வேகமாய் மாற்றுடைகளை எடுத்துக் கொண்டு குளியலறை நோக்கி கிட்ட தட்ட ஓடினாள்.

கொல்லைப் புறத்தில் துணிகளை காய வைத்துக் கொண்டிருந்த தனம், “அம்மாடி எழுந்துட்டியா கண்ணு. பல் விளக்கிட்டு வாத்தா காபித் தண்ணி குடிச்சிட்டு அப்புறம் போய் குளிப்பியாம்..” என அன்பாய் விளிக்க,

“இல்லமா நேரம் ஆச்சு.... நான் குளிச்சிட்டு வந்துடுறேன். இன்னைக்கும் நாங்க வெளிய போற மாதிரி இருக்கும் போல இருக்கு.” என்று சொல்லிவிட்டு அவர் பதிலுக்காய் காத்திருக்காமல் குளியலறைக்குள் புகுந்துக் கொண்டாள்.

அவள் தயாராகி வெளியே வரும் போது, ஜேம்ஸ் உணவுக் கூடத்தில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தான்.

இவளைக் கண்டதும், “மேம் வாங்க வாங்க..... தனம் அம்மா இன்னைக்கு ஆப்பமும் தேங்காய்ப் பாலும் செஞ்சி இருக்காங்க... மெத்து மெத்துன்னு ஆப்பம்... சூப்பரா இருக்கு..” என சப்புக் கொட்டிக் கொண்டே, பாத்திரத்தில் இருந்த தேங்காய்ப் பாலை டம்ளரில் ஊற்றி குடித்துக் கொண்டிருந்தான்.

அவனையும் அவன் வயிற்றையும் மாறி மாறிப் பார்த்தவள், “ஜேம்ஸ்... இங்க வரும் போது எக்ஸ்ட்ரா லார்ஜ்ல இருந்த உங்க தொப்பை இப்ப டபுள் எக்சல் ரேஞ்சுக்கு பெருசாயிடுச்சி.... இப்படியே போனா... உங்க எல்லா பேன்ட்டையும் நீங்க எடைக்கு தான் போட வேண்டி வரும்” என சொல்லிக் கொண்டே அவன் எதிரே அமர்ந்தாள்.



DO NOT COPY

அவள் அப்படி சொன்னதும் முகத்தை சுருக்கியவன், “போங்க மேம்.... சாப்பிடும் போது அதையும் இதையும் சொல்லிக்கிட்டு....” என்றவன் கையில் இருந்த டம்ளரோடு தோட்டத்து பக்கம் நடக்க, “கோவத்துல கூட டம்ளரை தூக்கிட்டுப் போகுது பார்...” என எண்ணி வள்ளி மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.

இவள் வரவை உணர்ந்த தனம் சூடான ஆப்பத்தை இலையில் பரிமாற, ஜேம்சை கிண்டல் அடித்த வள்ளி முழுதாய் ஆறு ஆப்பங்களை விழுங்கி ஏப்பம் விட்டாள். இன்னும் கூட இரண்டை உள்ளே தள்ளி இருப்பாள்...

அதற்குள் ஜேம்ஸ் வந்து, “மேம் ரோஷன் வந்துட்டார். உங்களுக்காக ஹால்ல வைட் பண்ணிட்டு இருக்கார்.” என பணி பற்றி நினைவூட்ட, வள்ளி அதோடு தன் உணவை முடித்துக் கொண்டாள்.

தனம் தான், “என்ன பிள்ளையோ... காலையில காபித் தண்ணிக் கூட குடிக்கல. சின்ன சின்ன ஆப்பம் இன்னும் ரெண்டு வச்சுக்கத்தா...?” என பிடிவாதமாய் நின்றுக் கொண்டிருந்தார்.

“போதும்மா கொஞ்ச நேரம் கழிச்சி வேணா தேங்காய்ப் பால் குடிக்கிறேன். கொஞ்சமா எடுத்து வையுங்க..” என்று விட்டு உணவு மேஜையில் இருந்து எழுந்துக் கொண்டாள்.

வள்ளி கூடத்திற்கு வரும் போது யாரோ ஒரு புதியவனும், ஆனி ஐயாவும் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

DO NOT COPY

புதியவன் வள்ளிக்கு முதுகு காட்டி அமர்ந்திருக்க, இவளை நோக்கி அமர்ந்திருந்த ஆனி ஐயா, “இதோ நம்ம வள்ளிப் பாப்பா வந்துட்டாங்க தம்பி.... நீங்க பேசுங்க... நான் நேத்தையப் போல.. வள்ளியம்மாகிட்ட... இராப்பொழுது பேசிக்கிறேன். குழந்தைக ரொம்ப நேரமா காத்துக் கிடக்குதுக..” என்றபடி எழுந்துக் கொண்டார்.

ஆனி ஐயா இவள் வரவு பற்றி அறிவிக்கவும் இவள் புறம் திரும்பியவன், இவள் அருகில் நெருங்கவும் எழுந்து நின்று, “ஹாய் மேம். ஐயம் ரோஷன். ரோஷன் ரித்விக். நீங்க வள்ளி... தில்லையாடி வள்ளியம்மை ஆம் ஐ கரெக்ட்..” என முறுவலோடு கேட்க,

நீட்டியிருந்த அவன் கரம் பற்றி குலுக்கியபடி, “எஸ்....” என்றவள் அவன் தனக்கு அளித்த முறுவலை உதடுகளில் தேக்கி அவனுக்கே திருப்பிக் கொடுத்தாள்.

ரோஷனின் கண்களில் இளம் பெண்ணை அறிமுகம் செய்துக் கொள்ளும் எவ்வித ரசனையும் இல்லை. நிமிர்ந்த உடலும், நேர் கொண்ட பார்வையுமாய் அப்படியே மதிக்கு எதிர்ப்பதமாய் இருந்தான்.

அவள் கண்களால் ஜேம்சை தேட, “அவர்கிட்ட ஒரு பென்-ட்ரைவ் கொடுத்து அதுல இருக்க போட்டோஸ் எல்லாம் அனலைஸ் பண்ண சொல்லி இருக்கேன் மேம். கடைசியா எந்த பிளேஸ் சூஸ் பன்றாரோ அந்த இடத்துல போட்டோ சூட் வச்சிக்கலாம்..” என்றவன், அவளை எதிரே அமர சொல்லிவிட்டு தன் மடிக் கணினியை உயிர்ப்பித்தான்.

“நான் பேசி பேசி மொக்கைப் போடுறதை விட.... நீங்க இந்த டாக்குமெண்டரிய பாத்தீங்கன்னா எங்க ஊரோட வாட்டர் அண்ட் அக்ரிகல்ச்சர்


DO NOT COPY

மேனேஜ்மென்ட் பத்தி உங்களுக்கு ஈசியா புரியும்னு நம்புறேன்.” என்றுவிட்டு ஒரு காணொளியை உயிர்ப்பித்து மடிக் கணினியை அவள் புறம் திருப்பி வைத்தான்.

ரோஷனை ஒரு முறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, வள்ளி தன் பார்வையை, மடிக் கணினியின் திரை நோக்கி திருப்பினாள்.

அதில் கருப்பு வெள்ளைப் புகைப்படமாய் அவர்கள் ஊரின் ஏரி காட்சியாய் விரிய, பின்னணியில் ஏதோ ஒரு மந்திரக் குரல்,

“எங்கள் ஊரின் ஏரியின் புகைப்படம் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பு..” என கதை சொல்ல தொடங்கியது.

அரசனூருக்குள்... வந்த அன்று பார்த்த ஏரி அது தான் என்றால்... நிச்சயம் வள்ளியால் தன் கண்களைத் தானே நம்ப முடியவில்லை.

ஏன் எனில் கரைகளில் புதர்கள் மண்டிப் போய், நீர் முழுக்க ஆகாயத் தாமரை படர்ந்திருக்க, ஆங்காங்கே குப்பைக் கூளங்களோடு மிக மோசமாய் சிதைந்து போய் இருந்தது.

தற்சமயம் உள்ள ஏரிக்கும் பழைய ஏரிக்கும் எளிதாய் நூறு வித்யாசங்கள் கண்டு பிடிக்கலாம் போல இருந்தது.

அதோடு ஊரில் இருந்த சில பல சிதிலமான கிணறுகள்.... ஊரை சுற்றி ஓடிக் கொண்டிருந்த கழிவு நீர் வாய்க்கால்கள்...

DO NOT COPY

என்று பல விதங்களில் முன்பிருந்த நிலையை கருப்பு வெள்ளை காட்சியாய்க் காட்டிக் கொண்டிருந்த காணொளி... திடும் என...அனிமேசன் முறைக்கு தாவியது.

முறையான நீர் மேலாண்மை என்றால் என்ன...? என்ற தலைப்பின் விவாதப் புள்ளியில்.

நீர் சமநிலைப் பேணுதல்... என்று தொடங்கி..

ஊரின் ஏரி குளங்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்... அதற்கு முறையான பரமாரிப்பு எப்படி இருக்க வேண்டும். பொதுக் கிணறு பராமரிப்பு மற்றும் கையாளும் முறை... விவசாயத்திற்கு நீரை எப்படி சிக்கனமாய் உபயோகிக்க வேண்டும். வீடுகளில் தண்ணீர் மேலாண்மை எவ்வாறு இருக்க வேண்டும். உபயோகப்படுத்தப்பட்ட நீரை சுத்திகரித்தல் எவ்வாறு..? இப்படி நிறைய விளக்கி விட்டு..

இப்பொழுது எங்கள் கிரமாம் என்று காணொளி... வண்ண மயத்திற்கு மீண்டது.

அதில் அவள் வரும் போது கண்ட ஏரி அதே தூய்மையோடும், கம்பீரத்தோடும் மரங்கள் சூழ அழகாய் பரந்து விரிந்து இருந்தது.

இதற்கு முன் பாழுங் கிணறாய் இருந்தவைகள் எல்லாம், சுற்று சுவர் எழுப்பப்பட்டு மேற்புறம் முழுதாய் மரக் கதவுகள் கொண்டு மூடப்பட்டு, நீர் பெற பக்கவாட்டில் குழாய்கள் இணைக்கப் பெற்று, அதோடு மின்சார மோட்டார் வசதிகளும் செய்யப் பெற்று இருந்தது.

விவசாய நிலத்தில் சொட்டு நீர் பாசன முறைக்கு நிலங்களில் குழாய்கள் பதிக்கப்பட்டு இருக்க, வீட்டின் கழிவு நீர் சாதாரண தேக்குதல் வடிகட்டுதல் முறைப்படி சுத்தம் செய்யப்பட்டு, தோட்ட செடிகளுக்கோ வேறு பிற தேவைகளுக்கோ பயன்படுத்தப்பட்டது.

பசுமை பூத்த வயல் வெளிகளோடு, காட்சி நிறைவுற, வள்ளி தன்னையும் அறியாமல் எழுந்து நின்று தன் கைகள் வலிக்கும் அளவிற்கு வேக வேகமாய் கை தட்டினாள்.

அவளின் செய்கையை சிறு முறுவலோடு பார்த்துக் கொண்டிருந்தான் ரோசன். கூட்டத்தில் கேட்ட கரவொலியில், ஜேம்ஸ் தன் அறையில் இருந்து வெளியே வந்திருந்தான்.

“ரோசன் ப்ளீஸ்... எனக்கு இந்த ப்ளேசஸ் எல்லாம் உடனே பாக்கணும்..குவிக்..” என்றபடி எழுந்து நிற்க, ஜேம்ஸ் தன் புகைப்படக் கருவியை எடுத்துக் கொண்டு, தானும் கிளம்ப தயாரானான்.

பொறுமையாய் எழுந்து நின்ற ரோஷன், “மேம்.... இங்க நம்ம ஊர் தலைவர் வீட்ல கூட நீர் மேலாண்மை திட்டம் செயல் பாட்டுல தான் இருக்க்கு. முதல்ல இந்த வீட்டை சுத்திப் பாருங்க.” என அறிவிக்க, வள்ளி அரக்க பறக்க கொல்லைப் புறம் நோக்கி நடந்தாள்.

இவளைக் கண்டதும், “தேங்காய்ப் பாலு குடிக்கிறியாத்தா...?” எனக் கேட்ட தனத்தின் குரலுக்கு பதில் சொல்லக் கூட அவள் நிற்கவில்லை.

அங்க கொல்லைப் புறத்தில் பெரிய தொட்டி...அதில் வீட்டில் இருந்து வெளியேறும் கழிவு நீர் வந்து சேர அதில் அமைக்கப்பட்டிருந்த கீழ்க் குழாயின் மூலம் பளிங்கு நிற தண்ணீர்... தோட்டத்திற்குள் பாய்ந்துக் கொண்டிருந்தது.

அந்த சுத்திகரிப்பு தொட்டியை அவள் எட்டிப் பார்க்க மேற்புற அடுக்கில் இருந்த வைக்கோல் மட்டும் அவள் கண்ணனுக்கு காட்சி அளித்தது. அடுத்தடுத்த மூன்று அடுக்குகளில் என்ன இருக்கும் என்பதை அவள் சற்று முன் பார்த்த காணொளி அவளுக்கு காட்டிக் கொடுத்திருந்தது.

இரண்டாம் அடுக்கில் பெரிய கூழாங்கற்களும்... மூன்றாம் அடுக்கில் சிறிய கூழாங்கற்களும் நான்காம் அடுக்கில் மணலும் இருக்கும் என்பதை உணர்ந்தவள், மேலே அசுத்தமாய் விழும் நீர், கீழே பளிங்குப் போல வெளிவருவதை சிரித்து நேரம் மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிறகு ரோஷன் அவளை அவர்களின் விவசாய நிலத்திற்கு அழைத்து சென்றான். செல்லும் வழியில், "எங்க ஊர்ல யார் வீட்லயும் வெஸ்டர்ன் டாய்லெட் கிடையாது மேம். ஏன்னா ஓவ்வொரு ப்ளஷ்க்கும் டென் டு பிப்டீன் லிட்டர் வாட்டர் வெஸ்ட் ஆகும். சீ ஒரு நாளைக்கு ஆறு டைம் யூரின் பாஸ் பண்றோம்னு வையுங்க.... ஒரு ஆளுக்கே 90 லிட்டர் வாட்டர் வேஸ்ட் ஆகும். நாலு பேர் இருக்க குடும்பன்னா கிட்ட தட்ட 400 லிட்டர் தண்ணி....

சோ... எங்க எல்லார் வீட்லயும் இந்தியன் டாய்லெட் தான் மாக்சிமம் ஐஞ்சி லிட்டர் தண்ணி யூஸ் பண்ணினா போதும் யூரின் போக.

அதே மாதிரி... எங்க ஊர்ல ரொம்ப ஹெவி கெமிகல் கலந்த சோப்பு சோப்புத்தூள் ஷாம்போ இதெல்லாம் யூஸ் பண்ண மாட்டோம் மேம்.

தண்ணியில கலக்குற விஷம் மண்ணுக்குள்ள போனா மண்ணும் தானே விசமா ஆகும்.

வேரே விசமா இருந்தா அங்க எப்படி நல்ல உணவுப் பொருளை நாம விளைவிக்க முடியும். எங்க ஊர்ல விளையுற பொருள் முதல்ல எங்க சந்தைக்கு தான் வரும். எங்க மக்களுக்கு போக தான் வெளியூருக்கு நாங்க அனுப்புறது எல்லாம்.

அவர்கள் பேசிக் கொண்டே நடக்கும் பொழுது விவசாய நிலம் வந்து விட, ரோஷன் தன் காலணியை கழட்டி கையில் எடுத்துக் கொண்டான்.

அவனைப் பார்த்தவர்கள் தாங்களும் தங்கள் காலணியை கழட்டி கையில் எடுத்துக் கொண்டு நடந்தார்கள்.

இவர்கள் சென்ற இடம் பருத்திக் காடு. அப்பொழுது தான் விதைத்திருப்பார்கள் போலும். குட்டி குட்டியாய் பசுமை நுனிகாட்டி நின்றது செடி .

சரியாய் செடிகள் மட்டும் நீர்வளம் பெறும்படி, சொட்டு நீர் பாசன குழாய்கள் அமைக்கப்பட்டு இருந்ததை வள்ளி வியந்து பார்த்துக் கொண்டிருக்க,

ஜேம்ஸ் தன் புகைப்படக் கருவியில் அக்காட்சிகளை சிறை பிடித்துக் கொண்டிருந்தான்.

அடுத்து அவர்கள் இயற்கை வேளாண் உரம் தயாரிக்கும் கூடத்தை அடைந்தனர்.



DO NOT COPY

பசுவின் சிறுநீர் மற்றும் சாணத்தை உபயோகித்து இயற்கை பூச்சிக் கொல்லி மருந்தான பஞ்சகவ்யம் தயாரிக்கும் முறையையும், மண் புழுவில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கும் விதத்தைதையும் நேரில் கண்டு ஆச்சர்யம் கொண்டனர்.

அந்த இயற்கை உரம் தாயரிக்கும் சிறுதொழிலை  திறம்பட நடத்திக் கொண்டிருந்த மகளிர் குழுவினர்... வள்ளிக் கேட்ட கேள்விகளுக்கு மிகப் பொறுமையாய் பதில் அளித்துக் கொண்டிருக்க, ஜேம்ஸ் வளைத்து வளைத்து அந்த தொழிற் கூடம் செயல்படும் விதத்தை நிழற்படம் எடுத்துக் கொண்டிருந்தான்.

அடுத்து அவர்கள் பயணம் ஏரியை நோக்கி தொடங்கியது. அப்பொழுது தான் வள்ளி எந்த வீதிகளிலும் கழிவு நீர் கால்வாய் ஓடாதிருப்பதைக் கவனித்தாள். வழக்கம் போல அக்கிராமத்தை குறித்து உள்ளத்தில் பெருமிதம் பொங்கியபடி தன் நடையை தொடர்ந்தாள்.

ஏரியை நெருங்க நெருங்க, காற்றின் குளுமை அதிகரிக்க, ஏரி எப்படி அவர்கள் குடி நீர் தேவையையும் பாசன தேவையையும் பூர்த்தி செய்கிறது என்பதை ரோஷன் விளக்கிக் கொண்டே வந்தான்.

அவர்கள் குடிநீர் மாதம் ஒரு முறை நுண்ணுயிர் பரிசோதனைக்கு செல்வதையும், அந்த நீர் குடிப்பதற்கு ஏற்றது தான் என்று பரிசோதனை முடிவு வருவதையும், அங்கிருந்த ஒரு சுவற்றில் ஆவணப்படுத்தி இருந்தார்கள்.

“ஒவ்வொரு வீட்டுக்கும் ரேசன் முறையில தான் குடிநீர் விநியோகம் நடக்கும் மேடம். இரண்டு நாளுக்கு ஒரு முறை நல்ல தண்ணீர் திறந்து விடுவோம்.


DO NOT COPY

நான்கு ஆட்கள் இருக்க வீடுன்னா ஐந்து குடம் தண்ணீர் மட்டுமே அவர்கள் பிடிக்க அனுமதி. இங்க நல்ல தண்ணீர் குழாய் வசதி தெருவிற்கு மட்டும் தான். வீடுகளுக்கு தனி கனெக்சன் கிடையாது. அதனால குடிப்பதற்க்கு நாங்க சுத்திகரிப்பு பண்ணி அனுப்புற தண்ணியை யாரும் குளிக்கவோ துவைக்கவோ பயன்படுத்த முடியாது.''

ரோஷன் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க, ஒருக் காலத்தில் அவர்கள் வீட்டில் நன்னீரை மட்டுமே மின் மோட்டார் மூலம் தொட்டிகளில் தேக்கி அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்தியது குற்ற உணர்ச்சியோடு அவளுக்கு நினைவிற்கு வந்தது.

ரோஷன் அதற்குள் விவசாய நிலத்திற்கு எப்படி நீரை பகிர்ந்தளிக்கிறார்கள் என்று விளக்கி முடித்திருந்தான்.

வள்ளி மோன நிலையில் ஆழ்ந்திருந்தாள். ஜேம்ஸ் ஏரிக் கரையில் நின்றுக் கொண்டிருந்த பறவைகளை தன் கருவியின் மூலம் கவனித்துக் கொண்டிருக்க, ரோஷனும் சற்று நேரம் பரந்து விரிந்திருந்த ஏரியில் தன் பார்வையை நிலைக்க விட்டிருந்தான்.

பிறகு ஏதோ நினைவிற்கு வந்தவன் போல, " நான் லண்டன்ல பிலிம் மேக்கிங் படிச்சிட்டு இருந்தேன். இது எங்க அப்பாவோட பூர்வீக கிராமம். இங்க இப்படி ஒருத்தர் ஊரை மாத்த போராடிட்டு இருக்கார்னு அப்பா மூலம் தெரிஞ்சி நான் பாதியில தான் இவங்களோட வந்து ஜாயின் பண்ணேன்.

இப்போ கூட வாரத்துல ஐஞ்சி நாள் சென்னையில தான் இருக்கேன். பட் வீக் என்ட்ஸ் இந்த ஊரை பாத்து ஓடி வந்துடுவேன். இந்த ஏரிய சுத்தப்படுத்தும்

போது டீம்ல நானும் இருந்தேன். அவ்ளோ பேட் ஸ்மெல் அடிக்கும் இந்தப் பக்கம் வந்தாலே.

ஆனா இப்போ ஒவ்வொருவாட்டி இந்த ஏரியைக் கடந்துப் போகும் போதும் ரொம்ப பெருமையா இருக்கும். ஜில்லுனு ஏரிக் காத்து முகத்துல வந்து மோதும் போது, வாழ்நாள்ல யாரோ பெரிய அவார்ட் தூக்கி கொடுத்த மாதிரி இருக்கும். எங்க தாத்தாவை ஒரு நாள் சென்னையில இருந்து கூட்டிட்டு வந்தேன் இந்த ஏரியைக் காட்ட.

மனுஷன் அப்படியே ஸ்டன் ஆயிட்டார். அவர் சின்னப் பையனா இருக்கும் போது இருந்த ஏரிய அப்படியே பாக்குற மாதிரி இருக்குன்னு சொல்லி... எதுவுமே பேசாம அப்படியே இங்க இருக்க கல் பெஞ்சில கொஞ்ச நேரம் உக்காந்து இருந்தார்.

நாங்க கிளம்பும் போது, "நாங்க பாதுகாத்து உங்க தலைமுறைக்கு பத்திரமா கொடுக்க வேண்டிய விசயத்தை நீங்க மீட்டு எங்க தலைமுறைக் கண்ணுல காட்டி இருக்கீங்க. பத்திரமா பாத்துக்கோங்க....உங்களை எல்லாம் நினைச்சா ரொம்ப பெருமையா இருக்குப்பா.." அப்படின்னு சொன்னார்.

லண்டன் யூனிவர்சிடியில இருந்து பெஸ்ட் பெர்பாமர் அவார்ட் வாங்கிட்டு வந்தப்ப கூட, எங்க தாத்தா முகத்துல நான் அப்படி ஒரு பூரிப்பை பாத்ததே இல்ல." ரோஷன் ஏதோ கனவுலகத்தில் சஞ்சரிப்பவன் போல சொல்லிக் கொண்டே இருக்க,


DO NOT COPY

அவன் முன் வந்து நின்றவள், “எனக்கும் தான் ரோசன். இப்படி ஒரு கிராமத்தை பத்தி எழுதுற வாய்ப்பு கிடச்சதை நினச்சி ரொம்ப ரொம்ப சந்தோசமா, பெருமையா, பூரிப்பா இருக்கு.” என உணர்வுகள் பொங்கிய கரகரத்த குரலில் சொன்னாள்.

தன் நிலைக்கு மீண்ட ரோஷன்…”ஓகே மேம். நான் ரொம்ப பேசிட்டேன்னு நினைக்கிறேன். சாரி. நாம போலாமா..?” என முன்னால் நடக்க,

“இந்த  ஊர்ல முதல்ல மாற்றம் கொண்டு வர போராடினதா சொன்னீங்க இல்ல… யார் அவர்..?” என்று ஆர்வம் தாளாமல் வினவினாள்.

“ஓ இன்னும் அவர் கூட உங்களுக்கு அறிமுகம் ஆகலையா… இங்க எல்லா மாற்றமும் ஏற்பட முழு முதற் காரணம் அவர் தான். அவரை இங்க எல்லாரும் பொதுவா சின்னவர்னும் ஊர்த் தலைவரை பெரியவர்னும் சொல்லுவாங்க… எங்க டீம் மெம்பர்ஸ் எல்லாம் அவரை செல்லமா ஹீரோன்னு கூப்பிடுவோம்..” என்று சொல்ல..

“அவரை எப்ப பாக்கலாம் நாங்க..?” என அவள் ஆவலாய் விசாரிக்க, “அவர் இன்னும் மூணு நாளைக்கு செம பிசி… நாங்களும் பல முறை அவர்கிட்ட கேட்டு இருக்கோம்… உங்களுக்கு இந்தக் கிராமத்துல மாற்றத்தை ஏற்படுத்தணும்னு எப்படி தோணுச்சின்னு…மனுஷன் சொல்லவே இல்ல… இந்த முறை நீங்க விடாதீங்க அவரை… பேசி வாங்கிடுங்க மேட்டரை..” என சொல்லி பெரிதாய் சிரித்தான்.

“கண்டிப்பா ரோஷன்…” என்றவள், கண்களை சுருக்கி, “உங்க ஹீரோக்கு மேரேஜ் ஆயிடுச்சா..?” என ரகசிய குரலில் விசாரிக்க,

ஏன் கேட்கிறாள் என்று புரிந்த போதும், “அதை ஏன் நீங்க கேக்குறீங்க..?” என விசமப் புன்னகையோடு அவளையே திருப்பிக் கேட்டான்.

அவன் பதிலை கொஞ்சமும் கண்டுக்கொள்ளாமல், “ஆகி இருந்தாலும் பாரவாயில்ல...” என்று ரோஷனிடம் கண் சிமிட்டியவள்,

அவர்கள் நடந்துக் கடந்துக் கொண்டிருந்த, ஏரியை நோக்கி திரும்பி, உதட்டில் கைகளைக் குவித்து, “ஐ லவ் யூ ஹீரோ...” எனக் கத்திச் சொன்னாள்.

ரோசன் அவளை பார்த்து வெடித்து சிரிக்க, ஜேம்ஸ் அவளை முறைக்க, அவளுக்கு தெரியாமல் அவளை ரசிக்க வந்திருந்த வில்லனின் காதுகளை அவளின் தேன் குரல் தீண்டிய நேரம்...

“மீ டூ தில்லு..” என அவள் முன் குதித்துவிடலாமா..? என்றுக் கூட ஒரு நொடி அவனுக்கு தோன்றியது.

முயன்று தன்னை நிலை நிறுத்திக் கொண்டான்.

தொலைவில் புன்னகையும், குறும்பும் நிறைந்த முகத்தோடு அவள் துள்ளல் நடையில் செல்வதை மனதிற்குள் பதித்துக் கொண்டான்.

அணு அணுவாய் என்னில்

அமிழ்ந்திருக்கும் அலையே..

கடந்த கால கடலை தாண்டி - என்

காதல் நனைத்திடு பூவே.

வில் - 11

இவன் அவன் தாண்டி

அது இது என எதிலும் இருக்கிறது - ஜா… 'தீ'.

கணினியின் முன் அமர்ந்திருந்த வள்ளியின் முகம் புன்னகையில் விரிந்து இருந்தது. இதற்கு மேல் இவர்களின் ஒரே ஒரு சாதனையை கேட்டால் கூட அந்த இடத்திலேயே ஆச்சர்யத்தில் மயங்கி விழும் அளவிற்கு வள்ளி ஆச்சர்யங்களின் விளிம்பு நிலையில் இருந்தாள்.

கண்டு வந்த மாற்றங்களை எழுத்துக்களுக்கும் உணர்வுகள் கொடுத்து வார்த்தைகளாய் அவள் வடித்துக் கொண்டிருக்கும் பொழுது, ஜேம்ஸ் அவள் அறைக்குள் நுழைந்தான்.

அவள் நிமிர்ந்து பார்க்கையில், "மேம் இதெல்லாம் அநியாயம்…. இன்னைக்கு நைட் தனம்மா பூரி மசால் செஞ்சி இருக்காங்க. ஆசையா சாப்பிட போலாம்னு பாத்தா… நேத்து நைட் நீங்க சாப்பிடாமலேயே படுத்துட்டீங்கலாம். அதனால உங்களையும் கையோட கூட்டிட்டு வர சொன்னாங்க. ரெண்டு பேரும் ஒண்ணா போனாத் தான் இலை வைப்பேன்னு ஸ்ட்ரிக்ட்டா சொல்லிட்டாங்க."

பலூன் பிடுங்கப்பட்ட குழந்தையாய் அவன் முகம் சுருங்கி இருக்க, ஏனோ வள்ளிக்கு யாரைப் பார்த்தாலும் சிரித்துக் கொண்டே இருக்க தோன்றியது.

உலகம் முழுமைக்குமான அன்பை ஒற்றைப் புன்னகையில் வாரி வாரி வழங்கத் தோன்றியது.

உடனே தன் மடிக் கணினியை அணைத்தவள், “அவ்ளோ தானே வாங்கப் போகலாம்.” என சிரித்தபடி எழுத்துக் கொள்ள, ஜேம்சிற்கு பேசுவது வள்ளி தானா என ஆச்சர்யமாய் இருந்தது.

ஏனெனில் வள்ளிக்கு பொதுவாய் அவள் வேலை நேரத்தில் யார் குறுக்கிட்டாலும் பிடிக்காது. முக தாட்சண்யமின்றி கடுமையாய் பேசிவிடுவாள். அதனால் தான் ஜேம்ஸ் சற்றே வாடிய முகத்தோடு உள்ளே வந்தான்.

ஆனால் அவள் உடனே புன்னகை முகமாய் எழுந்துக் கொள்ளவும், “என்ன ஆச்சு இவங்களுக்கு..?” என்ற சிந்தனையோடு அவளைப் பின்தொடர்ந்து நடந்தான்.

இருவரும் உணவுக் கூடத்தை அடையவும், தனம் இருவருக்கும் பரிமாற முன் வர,

தனத்தை புன்னகை முகமாய் ஏறிட்டவள், “தனம்மா... இன்னைக்கு உங்க கிட்சன்ல இருக்க எல்லா பூரியையும் நான் தான் சாப்பிட போறேன்.... உங்களுக்கெல்லாம் வேணும்னா முன் ஏற்ப்பாடா கொஞ்சம் எடுத்து வச்சிக்கோங்க..” என கிண்டல் செய்ய, அவரோ,

“நீ மொதல்ல முழுசா நாலு பூரித் தின்னுத்தா.... எங்க கிழக்கால தோட்டத்தை உம் பேருக்கு மாத்தி தர சொல்றேன்...” என்று தானும் பதிலுக்கு வம்பிழுத்த படி இருவருக்கும் பரிமாற தொடங்கினார்.

அவர் கூறியது முற்றிலும் உண்மை என்பதைப் போல. பெரிது பெரிதாய் இருந்த பூரிகளை மூன்றிற்கு மேல் வள்ளியால் உண்ண முடியவில்லை.

எல்லா வகை உணவையும் வெளுத்து வாங்கும் ஜேம்ஸ் கூட ஐந்தாவது பூரிக்கே ஏப்பம் விட்டபடி, வயிற்றை தடவ தொடங்கி விட, வள்ளி பரிதாபமாய் தனத்தைப் பார்த்தாள்.

வாய்க் கொள்ளா சிரிப்புடன், “ஆத்தி மூணாவது பூரியே இலையில குட்டிக் கரணம் போடுது போலையே..” என அவர் இவளை வம்பிழுக்க,

“போங்க தனம்மா... இது போங்காட்டாம்... கால் கிலோ மாவுல ஒரு பூரி சுட்டு இருக்கீங்க... இதெல்லாம் செல்லாது செல்லாது...வேணா ஒன்னு பண்ணுவோம். காலையில சுட்ட மெது மெது ஆப்பம் சுடும் போது நாம போட்டி வச்சிக்கலாம். அப்போ காட்றேன் இந்த வள்ளி யாருன்னு. இந்த ஊரை விட்டுப் போகும் போது உங்க தோட்டத்தை எழுதி வாங்காம நான் போகப் போறதில்லையாக்கும்..” என விளையாட்டாய் பதில் சொல்லியபடி, மூன்றாவது பூரியை கொஞ்சம் சிரமப்பட்டே உள்ளே தள்ளிக் கொண்டிருந்தாள் வள்ளி.

ஜேம்ஸ், குழந்தை போல தனத்துடன் சரிக்கு சரியாய் வாயடிக்கும் வள்ளியை வியந்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் இப்படியெல்லாம் யாருடனும் பேசி அவன் இதுவரைக் கண்டதில்லை.



DO NOT COPY

தனமும், “பாப்போம்.. பாப்போம்.... எங்க ஊரு ஈருகொலிக்கு சேலைக்கட்டி விட்டா அது கூட உன்ன விட எடுப்பா இருக்கும் போ...” என்றபடி சமையல் அறைக்குள் நுழைந்து விட வள்ளியும் இதழில் மலர்ந்த முறுவலோடே உணவருந்தி விட்டு எழுந்துக் கொண்டாள்.

வழக்கம் போல உடனே அறைக்கு திரும்பாமல், தொட்டியில் இருந்த பாத்திரங்களை அவள் விளக்கி வைக்கத் தொடங்கவும்,

தனம் ஒன்றும் பேசமால், அடுப்பு மேடையை சுத்தப்படுத்திய படி, அவளோடு பொதுவான விசயங்களை அளாவளாவ தொடங்கினார்.

வள்ளியும் அவர் கேள்விகளுக்கு புன்னகை முகமாவே பதில் சொல்லத் தொடங்கினாள். சற்று நேரத்தில் ஜேம்ஸ் சமையலறைக்குள் கை கழுவ வர, வள்ளி அவனிடம்,

“ஜேம்ஸ் இந்த யூடன்சில்ஸ் எல்லாம் கிளாத்ல ட்ரை பண்ணிட்டு செல்ப்ல அடுக்குங்க..” என சொல்ல ஜேம்ஸ் உடனே இயல்பாக அந்தப் பணியை செய்ய வந்தான்.

அவள் அவனை பணித்தது ஆங்கிலத்தில் என்பதால் தனத்திற்கு அவள் பேசியது புரியாமல் அமைதியாக இருந்தார். ஆனால் ஜேம்ஸ் அடுப்பு மேடையில் இருந்த துணியை கையில் எடுத்துக் கொண்டு, அவள் கழுவி வைத்திருந்த பாத்திரத்தில் ஒன்றைக் கையில் எடுக்கவும்,

“ஐய தம்பி இதெல்லாம் நீங்க எதுக்கு செய்யிறீக. மொதோ போங்க வெளிய.... யார்னாச்சும் பாத்தா அசிங்கம்.

ஏத்தா இந்த வேலை எல்லாம் நீ ஏன் தம்பிகிட்ட ஏவிகிட்டு கிடக்க.... உனக்கு முடியாட்டி வச்சிட்டு போத்தா... நான் செல்விய கூப்பிட்டு வேலை வாங்கிக்கிடுதேன்."

அவர் குரலில் இருந்த பதட்டத்தில் வள்ளியின் முகம் சுருங்கியது. அவரின் பதட்டம் கண்ட ஜேம்ஸ் கையில் இருந்த பாத்திரத்தை என்ன செய்வது எனப் புரியாமல் அப்படியே விழித்தபடி இருக்க,

நிதாமனாய் அவரை ஏறிட்டு பார்த்த வள்ளி,. "எது தனம்மா அசிங்கம்..?" எனப் பொறுமையாய் அவரைக் கேள்விக் கேட்டாள்.

அவரோ, "எங்க அப்பா காலத்துல ஆம்பளைங்க எல்லாம் சமயல்கட்டு வாசலுக்கு வரமாட்டாங்க. அவுக கைகழுவின தட்டைக் கூட நாங்க தான் எடுத்து வைப்போம். இன்னைக்கு ஆம்பளைக சமயல்கட்டுப் பக்கம் வந்து போனாலும் கூட ஒரு ஆம்பளைய எப்படி பாத்திரத்தை துடைக்க சொல்லுவ வள்ளிமா.... இதெல்லாம் பொம்பளைங்க வேலை தானே... அதோட.... ஊருக்குள்ள யாரச்சும் பாத்துட்டு வெளிய பரப்பி விட்டாய்ங்கன்னு வையி.... தம்பிய தானே ஊரு நாளப் பின்ன தப்பா பேசும்.."

ஏனோ இதுவரை பிரமாண்ட நுரையாய் அவள் மனதில் கூடுக் கட்டியிருந்த ஊரின் மேல் இருந்த பிரமிப்பு காற்றில் உடையும் நீர்க் குமிழிகளாய் சட சடவென உடைந்து கரைந்தது.

மொத்தமாய் முகம் மாறிவிட, சற்றே கடினப்பட்டு விட்ட குரலில், "ஜேம்ஸ் இப்பவே போய் ஆனி ஐயாவ இங்க கூட்டிட்டு வா..." என்றவள், கையில் இருந்த பாத்திரத்தை அப்படியே தொட்டியில் வைத்தாள்.

தனம் ஒன்றும் புரியாமல், “ஏத்தா என்ன ஆச்சு உனக்கு..? ஏன் முகம் எல்லாம் சுணங்கிப் போச்சு...? நான் ஏதாச்சும் தப்பா சொல்லிப் போட்டேனா..?” அவர் விசாரித்துக் கொண்டிருக்கும் போதே, ஆனி ஐயா ஜேம்ஸோடு சமயலறைக்குள் வந்தார்.

கூர்மையாய் அவரைப் பார்த்தவள், “ஐயா....நான் நாளைக்கே ஊருக்கு கிளம்புறேன். எங்க எடிட்டர்கிட்ட சொல்லி வேற யாரையாச்சும் ஆர்டிகிள் கண்டினியூ பண்ண அனுப்பி வைக்குறேன்..” என்று சொல்ல,

அவர், “ஏம்மா... என்ன ஆச்சு திடீர்னு.... யாரச்சும் உங்களை ஏதாச்சும் சொன்னாங்களா..?” என பட படப்பாய் வினவினார்.

ஒரு பெரு மூச்சை வெளியேற்றியவள், “ஐயா.... உங்க கிராமத்துல இருந்து உங்க சொந்த முயற்சியில நீங்க ஒரு ராக்கெட்டையே தயார் பண்ணி விண்வெளிக்கு அனுப்பி வச்சாலும்.... பொண்ணுக்கு சக ஜீவியா சம உரிமைக் கொடுக்காத சமூகம் முன்னேறி எந்த பிரயோஜனமும் இல்ல.... பொண்ணுங்களும் சமூக முன்னேற்றத்துல ஆணுக்கு இணையா எழுந்து நிக்கணும்..

பூஜ்யத்துக்கு முன்னாடி இருக்க ஒண்ணைப் போல...அப்படி பொண்ணை இணையா நிக்க வைக்காம நீங்க எத்தனை மாற்றத்தைக் கொண்டு வந்தாலும்..... அதெல்லாம் வெறும் ஜீரோவா மட்டுமா தான் இருக்கும்யா..” வள்ளியின் குரலில் வெளிப்பட்ட ஆதங்கத்தில் ஜேம்ஸ் சற்றே மிரண்டுப் போய் பின்னால் நின்றுக் கொண்டான்.

ஆனி ஐயா திகைப்புடன், “நீ இப்படி பேசுற அளவுக்கு இங்க என்னமா நடந்துச்சி..?” என வினவ, தனம் குறுக்கிட்டு,


DO NOT COPY

“தப்பு என்னோடதுதேன்.... வள்ளிமா... நம்ம ஜேம்ஸ் தம்பிய சாமான் தொடச்சி வைக்க சொல்லுச்சி... நான் தேன் பொம்பளை செய்யிற வேலையை எல்லாம் நீ ஏந்தாயி ஆம்பளைப் பையனுக்கு வைக்குற.... அப்படின்னு சொல்லிட்டேன்....உடனே அவுக முகம் கூட சுணங்கிப் போச்சு..” என வருத்தமாய் மொழிய, ஆனி ஐயா, அந்த வீடே கிடுகிடுத்துப் போகும் அளவிற்கு விழுந்து விழுந்து சிரித்தார்.

வள்ளி அவரைப் புரியாமல் பார்க்கவும், “வள்ளிமா இந்த ஒரு சம்பவத்தை வச்சி எங்க ஒட்டு மொத்த கிராமத்தையும் முடிவு செய்யாதீக. கிழவிக்கு வயசு இப்ப ஐம்பத்தி ஏழு. எட்டு வயசுல இருந்து கரண்டி பிடிச்சி வளந்தவ. சில விசயத்துல அவளை மாதவே முடியாதுன்னு விட்டாச்சு.

உதாரணமா எங்க ஊர்ப் பக்கம் எந்த விசேஷம்னாலும் மொதோ பந்தி ஆம்பளைக மட்டும்தேன் உக்கார சொல்லுவாங்க....குலசாமி ராப் பூசையை பொம்பளைங்க கண்ணுல பாக்கக் கூடாது... ஊர்க் கோடி மயானத்துக்கு பொம்பளைக வரக் கூடாது....

இதையெல்லாம் எதிர்த்து நான் குரல் கொடுத்தப்ப எனக்கு பக்க பலமா நின்னது எங்க வீட்டம்மா தான். ஏன் அவுக அப்பா சாவுக்கு பதினோரு வருசத்துக்கு முன்னையே தீப்பந்தம் சுமந்து கொல்லி வச்சவ அவ....ஆனா இந்த சமயல்கட்டு விசயத்துல மட்டும் பிடிச்ச பிடிவாதம் மொசக் குட்டி பிடிவாதம் தேன்... ஏன்னா... அது ஒரு நாப்பது வருசத்துக்கு முந்தின ரகசியம்..”

சொல்லிவிட்டு அவர் மீண்டும் பொங்கி சிரிக்கத் தொடங்கி விட, தனம் அம்மாவின் முகம் இலட்சையில் சிவந்து விட்டடது.



DO NOT COPY

“அடக் கருமத்த… மீசை வெளுத்த கிழவன் பேச்சைப் பாரு…” என்று தன் கணவனின் வாயடைக்க முயல, வள்ளிக்கும், ஜேம்சிற்கும் அது என்ன அப்படி ஒரு ரகசியம் என்பதை தெரிந்துக் கொள்ளும் ஆர்வம் மேலோங்கி விட, அதே ஆர்வத்தை கண்களில் பிரதிபலித்தபடி அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவரோ, “நாப்பது வருசத்துக்கு முந்தியே எனக்கு மீசை வெளுத்துப் போச்சாக்கும்… அடப் போடி வாயடிக் கிழவி…. வள்ளிமா… நாப்பது வருசத்துக்கு முந்தி… மூணு ஏக்கரா காட்டை பொழுது சாயிரதுக்குள்ள உழவு ஓட்டுன… இளந்தாரிப் பய நானு…

என் உழைப்பை பாத்துல அரசனூர் பெரிய பண்ணை எனக்கு பொண்ணு கொடுத்தாரு. எங்க கல்யாணம் முடிஞ்சி மறு வீடு அழைப்புன்னு இவ வீட்டுக்கு போய் இருந்தோம்… புதுசா கல்யாணம் ஆணவக இல்லையா…. என் கண்ணு நொடிக்கு ஒருக்கா இவ முகம் தேடுது…

ராங்கி அவ அப்பன் ஆயி வூட்டைப் பாத்ததும் என்னைக் கிடப்பில விட்டுட்டு அவ ஜோடி பொண்ணுகளோட, ஆட்டம் போட வயக் காட்டுக்கு ஓடிப் போயிட்டா… ராப் பொழுதும் எல்லோரோடையும் கூடத்துல படுத்துகிட்டு எனக்கு தண்ணி காட்டிட்டு இருந்தா..

நான் யாரு ஓடை மீனையே திசை பாத்து பிடிச்சவன் ஆச்சே. மூணாவது நாள் காலையில அடுப்பங்கரையில நின்னு என் கெழுத்தி மீனு குண்டா குண்டானா இட்டிலி வேக வச்சிட்டு இருந்துச்சி..” ஆனி ஐயா இதற்கு மேல் என்ன சொல்லி இருப்பாரோ, அதற்குள் தனம்,

“ஐய… உங்க கதைய நிப்பாட்டுங்க சாமி போதும். பிள்ளைகளுக்கு தின்ன பூரி செரிச்சி இருக்கும்.

நாளைக்கு காலைல... உங்க பொழப்பு தலைப்ப பக்க வேணாமா... போய் ரெண்டு பேரும் படுங்க போங்க.." என இருவரையும் அங்கிருந்து கிளப்ப முயல,

வள்ளியோ, "வாவ் செம இன்ட்ரஸ்டிங் ஸ்டோரி...ஐயா நீங்க சொல்லுங்க... அப்புறம் என்ன ஆச்சு...." என குதூகலமாய் கதை கேட்க தொடங்கிவிட்டாள்.

அடுத்து ஏதோ அடல்ட் ஒன்லி சீன் வரப் போகிறது என எண்ணிய ஜேம்ஸ் தானும் திறந்த வாய் மூடாமல் கதை கேட்டுக் கொண்டிருந்தான்.

"எப்படியோ போங்க எல்லாரும் நான் போறேன் தூங்க.." என்று தனம் அங்கிருந்து கிளம்ப முயல, வள்ளி அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு,

"கதை முடியிற வரைக்கும் நீங்க எங்கயும் நகர கூடாது. ஆனி ஐயா... ஸ்டார்ட் நீங்க விட்ட இடத்துல இருந்து உங்க கதையை தொடருங்க..." என ஆணையிட,

மென்மையாய் ஒரு முறை புன்னகைத்தவர், "இவ இட்லி சுட்டுகிட்டு இருக்க.... நான் சமயல்கட்டுல ஆளுக யாரும் இல்லைங்கிற தெனாவட்டுல... இவளை பயம் காட்ட... பின் பக்கம் நின்னு இவ வாயப் பொத்தி தூக்கிட்டேன்.

இவ யாரோ எவரோன்னு பயந்து ஜான்சி ராணி கணக்கா பின்னங்கால்ல விட்டாலே ஒரு எத்து... ஆத்தி இப்ப அதை நினைக்கும் போது கூட வலிக்குற மாதிரியே இருக்கு.... வலியில இவளை தொப்புன்னு கீழ போட்டுட்டு... நான் ஐயோ அம்மான்னு அலற...



DO NOT COPY

என் மூஞ்சப் பாத்ததும் இவ வேற பயந்து போயி சமயல்கட்டு கதவு மூலையில போய் ஒண்டிட்டா... ரெண்டே நிமிஷத்துல மொத்த சொந்தமும் சமையல்கட்டு வாசல்ல வந்து குவிஞ்சிட்டாக...

“நீங்க என்ன மாப்பிளை செய்றீக இங்கனன்னு...” என் மச்சானுக கேள்வி கேட்க, பதட்டத்துல நானு முன்னாடி இருந்த இட்லி கொப்பறைய இறக்கி, “இட்லி வெந்துடுச்சான்னு... பாக்க வந்தேன்னு..” சொல்ல எல்லாரும் விழுந்து விழுந்து சிரிச்சாக.

எங்க மாமனார் தான் எல்லாரையும் அதட்டிட்டு, “மாப்பிள்ளை பசிச்சா உங்க பொண்டாட்டிய கூப்பிட்டு பரிமாற சொல்லுங்க... அதை விட்டுப் புட்டு... நீங்க ஏன் அடுப்பாங்கரைக்கு எல்லாம் போறீக... மொதல்ல வெளிய வாங்க...” அப்படின்னு சொல்லி என்ன வெளிய கூட்டிட்டு போயிட்டார்.

வீட்ல வேலை செஞ்சிட்டு இருந்த வம்பாடி பயலுக, நான் சமையல்கட்டுல நின்னுகிட்டு இருந்ததை வித விதமா ஊருக்குள்ள திரிச்சி விட,

“ஆனி... பொண்டுக பயலாட்டாம்... பெரிய பண்ணை வீட்ல அடுப்பாங்கரை வேலை செய்யுதானாம் டோய்....” அப்படின்னு கதை கட்டி விட்டுட்டாங்க.

எங்க குடும்பம் வசதியில கொஞ்சம் பின்ன உள்ளவுக தான். இந்த விஷயம் அவுக காதுக்கு போய், மறு வீடு வந்தப் பயல, சமைக்க விட்டு அவமானப்படுத்திட்டாய்ங்கன்னு... எங்க வீட்டு ஆளுக ரெண்டாம் நாளே வேல் கம்போட எம் மாமனார் வீட்டு வாசல்ல வந்து நிக்க.... வார்த்தைக்கு வார்த்தை தடிச்சி.... தனத்தை பொறந்த வூட்டு சொந்தம் வேண்டாம்னு சொல்ல சொல்லி எங்க வீட்டுக்கு இழுத்துகிட்டு வந்தாங்க...

அதுக்குப் புறவும் பத்து வருஷம் கல்யாணமாகியும் எங்களுக்கு குழந்தை குட்டி இல்லையா.. ஒரு பங்காளி சண்டையில... என் மச்சான்காரன்...

"மறு வீடு வந்தப்ப நீ இட்லி குண்டானை தூக்கும் போதே உன் பவுசு எங்களுக்கு தெரிஞ்சிப் போச்சுலே நீ ஒரு பொண்டுக பயன்னு..உனக்கு கட்டிக் கொடுத்து என் தங்கச்சி வாழ்கையை நாசம் பண்ணிட்டோமே.." அப்படின்னு வார்த்தையை விட,

இந்த வாட்டி... தனமே முன்ன வந்து "எம் புருஷனை தப்பா பேசின உங்களுக்கு எனக்கும் எந்த ஒட்டு உறவும் இல்ல" அப்படின்னு சொல்லிட்டு வந்துட்டா.

எங்களுக்கு குழந்தைக் குட்டின்னு ஆகி இருந்தா இந்த சம்பவத்தை அவ மறந்து இருப்பாளோ என்னவோ...கடைசி வரை கடவுள் குழந்தை வரத்தை எங்களுக்கு கொடுக்கவே இல்ல...

அதனால இவளும் இன்னைக்கு வரை என்னை சமயல்கட்டுக்குள்ள விடுறதே இல்ல....அது என்னவோ அவுக அப்பா சொல்லிட்டு போன வார்தையில சமயல் பொம்பளை பொறுப்பு அப்படிங்கிறதை மட்டும் இன்னும் கெட்டியா பிடிச்சி தொங்கிட்டு கிடக்கா..." சொல்லி முடித்த ஆனி ஐயா வெறுமையாய் சிரிக்கவும்,

வள்ளி தான் கரம் பற்றியிருந்த தனத்தின் முகம் பார்த்தாள். முகம் வருத்தத்தில் தொய்ந்திருக்க, கண்களில் கண்ணீர் குளம் கட்டியிருந்தது.



DO NOT COPY

அவள் கைகளில் இருந்து தன் கரத்தை மென்மையாய் விடுவித்துக் கொண்டவர், மெதுவாய், "என்னவோ எந்த ஆம்பளை சமையல்கட்டுக்குள்ள வந்து நின்னாலும், கிணத்துக்குள்ள விழுந்த கல்லு கணக்கா மனசு பழைய நினைப்புக்குள்ள மூழ்கிப் போயிடுது. உன்ன வருத்தியிருந்தா மன்னிச்சிக்கோ வள்ளிமா.. என்னையும் மீறி பேசிடுதேன்... ஆம்பளை பொம்பளைன்னு... என்ன செய்ய பொறந்த நேரத்துல இருந்து கேட்டு வளந்த வார்த்தை... பொட்ட பிள்ள அடங்கி இருன்னு... தொட்டில் பழக்கம்... கட்டைப் போற வரைக்கும் விடாது போல.." என வருத்தமாய் பேச,

அவரை மென்மையாய் அணைத்துக் கொண்ட வள்ளி, "அதெல்லாம் நீங்க ஒன்னும் என்ன வருத்தல... நான் வந்தா தான் இந்த ஸ்நாக்ஸ் டப்பாவுக்கு சாப்பாடுன்னு அவனை பத்தி விட்ட இடத்துலயே நீங்க பெரிய சமத்துவவாதி ஆயிட்டீங்க.... தனம்மா.." என்று சொல்ல தனம் கண்களில் தளும்பி இருந்த கண்ணீரோடு புன்னகைத்தார்.

ஆனி ஐயாவோ, சூழலை இலகுவாக்க, "வள்ளிமா எம் பொஞ்சாதி சமையல்கட்டுக்குள்ள தான் என்ன வேலை வாங்குறது இல்ல.... மத்தபடி மீதி எல்லா இடத்துலையும் என்னை தினம் பிழிஞ்சி எடுத்துடுவா.... அதுவும் எங்க அறையில.."

அவர் அடுத்து என்ன சொல்லி இருப்பாரோ, வள்ளியிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவர், "சின்னப் பிள்ளைக முன்னாடி என்னத்த பேசிக்கிட்டு கிடக்கீக.... ஒழுங்கா வந்துப் படுங்க வாங்க..." என அவரை தங்கள் அறைக்குள் இழுத்துச் செல்ல முயல,

கொஞ்சமும் அசையாமல் அதே இடத்தில் நின்றவர், "எங்க வீட்டு அம்மாக்கு கைகால் அமுக்கி, மூட்டு வலி தைலம் தேய்க்குற சீடனே நாந்தேன்.." என சொல்ல, தனம் அழகாய் வெட்கப்பட்டுக் கொண்டு,



DO NOT COPY

“உங்களை... எப்படியோ போங்க நான் [போறேன் தூங்க..” என்று வேகமாய் அந்த இடத்தை விட்டு அகன்றுவிட்டார்.

அவர் ஓட, ஆனி ஐயாவோடு, வள்ளி மற்றும் ஜேம்ஸின் சிரிப்பொலி வீட்டை நிறைத்தது. ஒரு வழியாய் சிரித்து முடித்தவள்,

“சரியா... நாங்க கிச்சனை கிளீன் பண்ணிட்டு தூங்கப் போறோம். நீங்க போய் உங்க சிஷ்யப் பிள்ளை வேலையைப் பாருங்க,” என வாஞ்சையாய் சொல்ல,

“பின்ன... பொண்டாட்டிக்கு சேவை செய்ய கொடுத்து வச்சி இருக்கணும் ஆத்தா.... நாளைக்கு ஊர் மைதானத்துல..... விளையாட்டுப் போட்டிங்க முன் ஏற்ப்பாடு இருக்கு... ரொம்ப நாளா இந்த அமைப்பை உருவாக்கினவனை பாக்கணும் பாக்கணும்னு சொல்லிட்டு இருந்தீக இல்ல...

பொடியன் அங்கன தான் பழி கிடப்பான்... நாளைக்கு முச்சூடும்.... ஆம்பளைக்கு இணையா பொம்பளைய தூக்கி நிறுத்தனும்னு சொன்ன இல்லத்ததா..... அங்கன போயிப் பாரு... எங்க அரசனூர் வம்சத்தை.... எங்க ஊரு பொம்பளைப் பிள்ளைகளை எங்க தலைக்கு மேல தூக்கி வச்சி இருக்கோம்... நிழல் இல்ல... அவுக பாதம் கூட மண்ணைத் தொடாது.

ஊரு உலகத்துல இருக்க எல்லா விளையாட்டுளையும்.... எல்லா தொழில்லையும் ஆணுக்கு பொண்ணுங்க சரி சமமா நிக்க வந்துட்டாக.... ஆனா நாளைக்கு நீ பாக்கப் போற விளையாட்டுல மொதோ முறை பொண்ணுகளை களம் இறக்கப் போறதே எங்க அரசனூர் தான் வள்ளிமா....



DO NOT COPY

இன்னைக்கு நான் எது சொன்னாலும் அது மிகையா தோணும்... நாளைக்கு நாம உக்காந்து பேசுவோம்.... எப்போ எங்க கிராமத்தை சுத்தி பாத்துட்டு வந்தாலும் உங்க கண்ணுல ஆச்சர்யம் தெரியும்... அது நாளைக்கு நூறு மடங்கா தெரியும்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு...

உங்க எழுத்து வேலையை எல்லாம் சீக்கிரம் முடிச்சிட்டு போய் தூங்குங்க வள்ளிமா. நாளைக்கு காலையில ஆறு மணிக்கு எல்லாம் நீங்க வெளிய கிளம்புற மாதிரி இருக்கும்... பிறகு பாப்போம்... வறேன் தம்பி.." என்று ஜேம்சிடமும் விடை பெற்றவர் தன்னுடைய அறைக்கு செல்ல, வள்ளி சற்று நேரம் அவர் பேசிய வார்த்தைகளில் அப்படியே கட்டுண்டு நின்றாள்.

ஜேம்ஸ் அங்கிருந்த பாத்திரங்களை துடைத்து வைத்த படி, "இதுவரைக்கும் பொண்ணுங்க விளையாடாத கேம்ஸ் என்னவா இருக்கும் மேம்..?" என அவளிடம் கேட்க,

தொட்டியில் இருந்த மிச்ச பாத்திரங்களை கழுவ வந்தவள், "அதை நாம நாளைக்கு போய் தான் தெரிஞ்சிக்கணும் ஜேம்ஸ்.." என்றுவிட்டு தன் பணியை தொடர்ந்தாள்.

பாவம் வள்ளி அறியவில்லை நாளை மைதானத்தில் ஆச்சர்யத்தின் உச்சிப் புள்ளிக்கு தான் தூக்கி வீசப்படப் போகிறோம் என்பதை.

நள்ளிரவு ஒரு மணிக்கு வில்லனின் கைபேசி மின் அஞ்சல் வந்ததின் அறிகுறியாய் ஒரு முறை சிணுங்க... வேக வேகமாய் இன்றைய கட்டுரையை எடுத்து வாசித்தவன் இதழ்களில் மந்திரப் புன்னகை.



DO NOT COPY

“இன்றைய மணித்துளிகளை கடிகார நிமிட முள்ளாய் எண்ணிக் கொண்டிருக்கிறேன்… நாளைய விடியலுக்காய்…. மீண்டும் பல சுவாரசிய தகவலோடும் புதிய உறவுகளோடும் நம் அரசனூர் பயம் தொடரும்….” என்று முடித்திருந்தாள்.

வில்லன் தன் அறையில் இருந்த கடிகாரத்தின் நிமிட முள்ளை ரசித்த படி உறங்கிப் போக, நாளை என்ன நடக்கும் என்ற ரகசியம் அறிந்திருந்த காலக் கடிகாரம் வேகமாய் சுழல தொடங்கியது.

வில் - 11

காலில் பிறந்தோம் என்றீர்கள்…

கடவுளா அது யார் என்றோம் யாம்.

வள்ளி இரவு வெகு நேரம் கழித்து உறங்கி இருந்தாலும்…. அதிகாலையிலேயே விழித்து விட்டாள். ஆழ்மனதிற்குள் அமிழ்ந்திருந்த, ‘அப்படி அது என்ன விளையாட்டு’ என்ற ஆர்வம் அவளுக்கு அதிகாலை விழிப்பைக் கொடுத்திருந்தது.

இவள் குளித்து தயாரகி வெளிக் கூடத்திற்கு வரும் போது தான் தனம் வாசல் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தார்.

இவளைக் கண்டதும், “வள்ளிமா இன்னைக்கு வெள்ளன எழுந்தாச்சு போல..” என்று புன்னகைக்க, அவரை நோக்கி தானும் புன்னகைத்தாள்.



DO NOT COPY

“ஆமா.... தனம்மா... நேத்து ஐயா பத்த வச்ச சஸ்பென்ஸ் பட்டாசு என்னை தூங்கவே விடல. எப்படியும் இன்னைக்கு கிரவுண்ட்ல வெடிக்கும் இல்ல. அதை வேடிக்கைப் பாக்க தான் சீக்கிரம் எழுந்தாச்சு.... சரி இங்க எந்த இடத்துல விளையாட்டு போட்டி எல்லாம் நடக்குற மைதானம் இருக்கு..?” வள்ளி ஆர்வமாய் வினவ,

“இங்க பக்கத்துல தான்தா...ஒரு கல் தொலவு இருக்கும்.. கொஞ்சம் பொறு நான் காபி போடுறேன்... எப்படியும் மதி பய இங்கன வருவான். அவன் கூட சேந்து போவியாம். நீ மட்டும் கிளம்பி இருக்க.. இன்னைக்கி போட்டோகார தம்பி உங் கூட வரலையா..?” என கேட்டுக் கொண்டே தனம் அம்மா கோலப் பொடியை வெளித் திண்ணையின் ஓரத்தில் வைத்தவர், சமயலறை நோக்கி நடந்தார்.

அவர் பின்னே ஆட்டுக் குட்டியைப் போல அவரை தொடர்ந்து சென்றவள், “கண்டிப்பா வருவார் தனம்மா... எனக்கு சஸ்பென்ஸ் தாங்கல.... அதான் நான் சீக்கிரம் கிளம்ப போறேன். எப்படியும் ப்ராக்டீஸ் பண்ண இந்நேரம் மைதானத்துல கூடி இருப்பாங்க இல்லையா..?” அவள் வினவ,

“ஹும்.. கருக்கல் வெளுக்கும் போதே ஊர்ப் பிள்ளைக மைதானத்துக்கு ஓடிரும்க. அதுவும் விளையாட்டுப் போட்டி வந்தா கேக்கவே வேணாம்.... அம்புட்டும் அங்கன தான் பழிகிடக்கும்.... நீ காப்பிய குடித்தா... நான் தொழுவத்தை போய் எட்டிப் பாக்குதேன். மணிப் பய பால் பீச வந்து இருப்பான்..” சொன்னவர், அவள் கைகளில் ஆவி பறக்கும் காபியை திணித்துவிட்டு கொல்லைப் புறம் நோக்கி நடந்துவிட்டார்.

அதிகாலைக் குளிருக்கு அந்த சூடான பானம் இதமாய் இருக்க, வள்ளி மிடறு மிடறாய் ரசித்து ருசித்து காபியை அருந்திக் கொண்டிருந்தாள்.



DO NOT COPY

“கடல் கன்னி  காப்பியும் அருந்துமா...? அட! அட! அட! ஆச்சர்யக் குறி..!” வெளி வராண்டாவில் கேட்ட குரலில் வள்ளி நிமிர்ந்துப் பார்க்க, மதி இவளை நோக்கி உற்சாகப் புன்னகைப் புரிந்தான்.

மதியைக் கண்டதும் வள்ளியின் உதடுகள் இயல்பாய் புன்னகையில் விரிய, “கடல் கன்னி குளிர் மிகுந்த கரைக்கு வந்தால் காப்பி என்ன...? ஸ்க்காட்ச் ஒயின் ரம்... இப்படி எது எல்லாம் உடம்பை சூடேற்றுமோ அத்தனையும் குடிக்கும்..” என விளையாட்டாய் பதிலுரைக்க, ஒரு நொடி என்றாலும் மதியின் முகம் அதிர்ச்சியை பிரதிபலித்தது.

அவன் அதிர்ச்சியைக் கண்டவள், பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, “நண்பர் கைவசம் ஏதேனும் உற்சாக பானம் இருக்குமோ..? ஆதிகால சோமபானம் என்றாலும் சரி... இல்லை பனை கொடுத்த கள் என்றாலும் நன்று....அதுவும் இல்லை என்றால் மீன் பிடிப்பதில் மன்னவன் பெயர் கொண்ட குளு குளு நுரை பானம் என்றாலும் இரட்டிப்பு மகிழ்ச்சி... கிடைக்குமா... உடல் குளிரில் வெட வெடக்கிறது...”

அவளின் அடுக்கு மொழி வசனத்தின் மூலம் அவள் தன்னை கிண்டல் செய்வதை உணர்ந்தவன், பெரிதாய் சிரித்துவிட்டு, “நண்பர்..... மிக அழகாய் செந்தமிழ் உங்கள் நாவில் ஒட்டிக் கொண்டுவிட்டது போலும்....ஆனாலும் நீங்கள் கேட்கும் எதுவும் தற்சமயம் தர இயலாதமைக்கு அடியேன் வருந்துகிறேன். ஏனெனில் எங்கள் ஊரில் அரசின் மதுபானக் கடைகள் ஏதுமில்லை... நாங்கள் பனையில் இருந்து பதநீர் செய்வோமே தவிர பிறரை பதறாக்கும் கள் அல்ல... ஆகவே கடல் கன்னியே என்னை மன்னித்து அருள்வீர்களாக..” என்று கை கூப்ப,

குலுங்கி சிரித்தவள் “ஷப்பா முடியல....நண்பர் உங்க அளவுக்கு என்னால தமிழ் பேச முடியாது. ஐயம் அவுட் ஆப் கேம்....” என சொல்லிவிட்டு, அவள் கைகளை உயர்த்த இருவரின் சிரிப்பொலியும் அந்த கூடத்தை நிறைத்தது.

இவர்களின் சிரிப்பொலியில் உறக்கம் கலைந்த ஜேம்ஸ், “யார்டா அது காலங் காத்தால லவுட் ஸ்பீக்கர் ஆன் பண்ண மாதிரி சிரிக்கிறது..” என்று எண்ணிக் கொண்டே, தன் உறக்கம் பிரியாத விழிகளை தேய்த்துக் கொண்டே வெளியே வந்தவன், கண்ட காட்சியில் அவன் உறக்கம் அப்படியே கலைந்து போனது.

வள்ளி கிளம்பி வெளியே செல்ல ஆயத்தமாய் இருப்பதைக் கண்டதும், தான் தான் தாமதித்து விட்டோமோ எனப் பயந்துப் போனவன்,

“என்னை எழுப்பி இருக்கலாம் இல்ல மேடம். ஒரு அஞ்சி நிமிஷம் வெயிட் பண்ணுங்க... நான் சீக்கிரம் வந்துடுறேன்..” என்றவன், வள்ளியின் பதிலுக்கு கூட காத்திருக்காமல் கொல்லைபுறம் நோக்கி ஓடினான்.

மதி ஜேம்சின் அந்த செயல் கண்டு வேடிக்கையாய் சிரித்தவன், “கடல் கன்னியை கண்டு காதல் கொள்பவர்களை விட பீதி கொள்வோர் எண்ணிக்கை அதிகம் போல..” என்று சொல்லி சிரிக்க,

மதியை பார்த்து பத்திரம் காட்டியவள், தனம் அம்மா புதிதாய் கறந்த பாலுடன் கொல்லைப் புறத்தில் இருந்து உள்ளே நுழைவதைக் கண்டதும்,

“தனம்மா உங்க மதி பையன் வந்தாச்சு. அவரோட சேத்து எனக்கும் ஒரு ப்ரெஸ் காபி...” என்று அறிவித்தாள்.

ஜேம்ஸ் சொன்னபடி அவன் ஐந்தே நிமிடங்களில் தயாராகி தன் புகைப்படக் கருவியோடு வெளியே வர, மூவரும் காபியை அருந்தி முடித்ததும், ஊரின் மையத்தில் இருக்கும் மைதானத்தை நோக்கி தங்கள் பயணத்தை தொடங்கினர்.

பொதுவாய் நடப்பதற்கு அலுத்துக் கொள்ளும் ஜேம்சிற்கு கூட, ஊர் பற்றிய செய்திகளை கேட்டபடி, அடர் மரங்கள் நிறைந்த தெருக்களின் குளுமையில், மிதமான தென்றல் தேகம் தாலாட்ட, கடக்கும் பயணம் பிடித்து தான் போயிற்று.

அவர்கள் நடக்க தொடங்கி இரண்டு நிமிடங்கள் கூட முடியவில்லை. அதற்குள் வள்ளி தன் கேள்விக் கணைகளை தொடுக்க தொடங்கி இருந்தாள்.

"நண்பர் வழக்கமாய் ஊர்த் திருவிழானா எல்லா ஊர்லையும் விளையாட்டு போட்டிங்க நடக்கும்... லைக் குழந்தைகளுக்கு மியூசிகல் சேர்... லெமன் இன் த ஸ்பூன்... அப்புறம் பசங்களுக்கு  கபடி, வழுக்கு மரம் ஏறுறது... உரிப் பானை உடைக்கிறது... இப்படி நிறைய கேம்ஸ் வைப்பாங்க....

ஆனா உங்க ஊர்ல விளையாட்டுப் போட்டியையே ஒரு திருவிழா மாதிரி நடத்துவீங்கன்னு நேத்து ஆனி ஐயா பேசும் போது தெரிஞ்சிகிட்டேன். மத்த ஊர் விளையாட்டுப் போட்டிக்கும் உங்க ஊர் விளையாட்டுப் போட்டிக்கும் என்ன நண்பர் வித்தாயசம்...?"

அவள் அப்படிக் கேட்டதும், மதியின் குரல் வழக்கமான இலகு தன்மையில் இருந்து அழுத்தத்திற்கு மாறி இருந்தது.

“நண்பர்... நீங்கள் சொன்ன அத்தனை விளையாட்டு போட்டிகளும் பொழுதை போக்கவும் மகிழ்ச்சிக்காகவும் கிராமங்களில் நடைபெறும்.

ஆனால் சிலர் பொழுதையே அதாவது தங்கள் எதிர் காலத்தையே விளையாட்டு என்று தீர்மானித்து இருப்பார்கள்.

அப்படி தீர்மானித்து இருக்கும் இளைய தலைமுறையை ஊக்குவிக்கவே எங்கள் கிராமத்தில் வருடம் தோறும் விளையாட்டுப் போட்டி திருவிழாவை நாங்கள் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.

அதோடு எங்கள் ஊர் என்று மட்டும் இல்லாமல்... அக்கம் பக்கத்து ஊர்களில் இருந்தும் வீரர்கள் இங்கு நடைபெறும் போட்டிகளில் வந்து கலந்துக் கொள்வார்கள் நண்பர்.

போட்டியில் வெல்பவர்களுக்கு... பரிசுக் கோப்பைகளோடு மேலும் அவர்கள் அந்த குறிப்பிட்ட விளையாட்டில் மேம்பட பயிற்சியோடு, மாநில, தேசிய போட்டிகளில் பங்கு பெற வழிகாட்டுதல் சேவைகளையும் நாங்கள் வழங்குகிறோம்.

அதோடு ஒவ்வொரு ஆண்டும், தேசிய அளவில் சாதனை புரிந்த இளம் விளையாட்டு வீரர்களை பரிசளிப்பதற்கு அழைத்து, அவர்கள் மேற்கொண்ட பயிற்சி, விடா முயற்சி மற்றும் தன்னம்பிக்கை வரலாற்றை அவர்கள் மூலமே எங்கள் இளம் தலைமுறையினர் அறியவும் ஏற்பாடு செய்கிறோம்.

ஒரு நாட்டின் வீரம் போர் முனையில் மட்டும் அல்ல... விளையாட்டு அரங்கிலும் தான் தீர்மானிக்கப்படுகிறது.

உலகின் இரண்டாவது அதிக மக்கள் சக்தியை கொண்ட நாம்... ஒலிம்பிக் போட்டிகளில் ஒரு தங்கம் வாங்க முடியாமல் திணறும் நிகழ்வுகள் உலக அரங்கில் நமக்கு பெருந்த தலைக் குனிவு அல்லவா...?

இதையெல்லாம் யோசித்து தான் நாங்கள் விளையாட்டு போட்டிகளுக்கு இத்துணை முக்கியத்துவம் கொடுப்பது....நண்பர் நாம் மைதானத்தை நெருங்கிவிட்டோம்.... ஆரவார சத்தம் இங்கு வரை எதிரொலிக்கிறது இல்லையா..?"

மதி வள்ளியிடம் கேட்க, வள்ளியும் புன்னகையுடன், 'ஆம்' என்பதைப் போல தலை அசைத்தாள். மைதானத்தை சுற்றி சுற்று சுவர் எழும்பி இருக்க, முன் வாசலில் பெரிய இரும்புக் கதவு விரிய திறந்திருந்தது.

மைதானத்தின் வாசலில், சிறுவர்கள் சிலர் என்.சி.சி உடையில், ட்ரம்ஸ் வாசித்துக் கொண்டிருக்க, பத்து வயது மாணவ மாணவிகள் சிலர் வந்தவர்களை வரவேற்கும் விதமாக, சிலம்பம் சுற்றிக் கொண்டிருந்தனர்.

பச்சை, மஞ்சள், சிவப்பு, நீலம் என வித விதமான வண்ணங்களில் உடை அணிந்து இருந்த போட்டியாளர்கள் தம் தம் குழுவினரோடு, கபடி, கோ- கோ, கூடைப்பந்து, கால் பந்து, இறகுப் பந்து போன்ற விளையாட்டுக்களின் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

தனி நபர் விளையாட்டு போட்டிகளான, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், வட்டு, குண்டு, ஈட்டி போன்றவற்றை எறிதல் போட்டிகளுக்கான பயிற்சியில் சிலர் ஈடுபட்டிருக்க, இன்னும் கொஞ்சம் உள்ளே அவர்கள் நடந்ததும், 100 மீட்டர், 200 மீட்டர் மற்றும் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்திற்கான எல்லைகள் குறிக்கப்பட்டிருந்தன.

இன்னும் உள்ளே செல்ல, சரியான இலக்கை குறிவைக்க உதவும் பதாகைகள் நின்றுக் கொண்டிருக்க, அதன் கீழே, சில சிறுவர்கள் நின்று வில்வித்தை பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

நடந்துக் கொண்டே இருந்த வள்ளி, “இந்த மைதானம் எத்தனை சதுர கிலோ மீட்டர் நண்பர்..?” என்றுக் கேட்க,

முன்னால் நடந்துக் கொண்டிருந்த மதி, இந்த முழு மைதானமும் மொத்தம் இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவைக் கொண்டது தோழர். இதற்கு முன் பொட்டல் காடாய் இருந்தது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், எங்கள் பயிற்சிகளுக்கு தேவைப்படுகிறது என்று எங்கள் அமைப்பின் மூலம் சரி செய்தோம். சில தொண்டு நிறுவனங்களின் உதவியால் சுற்று சுவர் அமைக்க முடிந்தது. விளையாட்டு உபகரணங்கள் எல்லாம் விளையாட்டு வீரர்கள் சொந்த பொறுப்பு..”

மதி சொல்லிக் கொண்டே வர, வள்ளி முனைப்போடு பயிற்சியில் ஈடுபட்டிருந்த வீரர்களை களிப்போடு கண்டபடி மதியை பின் தொடர்ந்தாள். சற்று தொலைவில் நீச்சல் குளம் அமைத்திருக்க, நிறைய வீரர்கள் அங்கும் பயிற்சியில் ஈட்பட்டிருந்தனர்.

ஜேம்ஸோ, அங்கிருந்த ஒவ்வொருக் காட்சியையும் விடாது தன் புகைப்படக் கருவியில் பதித்தபடியே நடந்துக் கொண்டிருந்தான்.

அங்கே பலவிதமான விளையாட்டுப் போட்டிகளின் பயிற்சியைக் கண்டிருந்தாலும், வள்ளிக்கு அந்த புது விதமான பெண்கள் விளையாட்டுப் போட்டியை காண பேராவல் எழுந்தது.

அவள் அதைப் பற்றி மதியிடம் கேட்க, "கொஞ்சம் பொறுங்க நண்பர்... நாம அங்க தான் போயிட்டு இருக்கோம்.."

அவர்கள் நடந்துக் கொண்டு இருக்கும் பொழுதே, மைதானத்தை இரண்டாய் பிரிப்பதைப் போல, பெரிதாய் தட்டி அமைத்து இருந்தார்கள். உள் நுழைய சிறு இடைவெளி மட்டும் திறந்து மூடும் கதவைப் போல அமைக்கப்பட்டிருந்தது.

அந்த தடுப்பிற்குள் நுழைந்தவள், அங்க கண்ட காட்சியில் வழி தவறி வேறு எங்கேனும் வந்துவிட்டோமோ என பயந்தே போனாள்.

அங்கே பட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்க, அதில் இருபதுக்கும் மேற்பட்ட வித விதமான காளை மாடுகள், கூரான கொம்போடும், பெரிய திமில்களோடும் தங்களுக்கு முன் இருந்த வைக்கோற் புல்லை மேய்ந்தபடி இருந்தன.

மதி அவர்களை சற்றே மேடை போல அமைக்கப்பட்டிருந்த பகுதிக்கும் அழைத்து சென்றான். அந்த மேடையில் இருந்து பார்த்தால்... நீண்ட வரிசையாக இருபுறம் தடுப்புகள் அமைக்கப்பட்டிருக்க, ஒரு புறம் குறுகிய வழியும், மறுபுறம் நீண்ட ஓடு பாதையும் அமைக்கப்பட்டிருந்தது.


DO NOT COPY

வள்ளி அதிர்ச்சியோடு, “ஜல்லிக் காட்டா....?” என மதியை நோக்கி பார்க்க, மதி சிரித்தபடி, “பெண்கள் களம் காணும் ஜல்லிக் கட்டு..” என சொல்ல, வள்ளி வியப்பின் உச்சிக்கே சென்றாள்.

ஜேம்ஸ் கூட புகைப்படம் எடுப்பதை நிறுத்திவிட்டு அதிர்ந்து போய் அந்த இடத்தை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, மஞ்சள் நிறத்தில் உடை அணிந்த பெண்கள் அணி ஒருபுறமும், சிவப்பு நிறத்தில் உடை அணிந்த ஆண்கள் அணி ஒருபுறமும் தட்டியின் இருபுறமும் வந்து நின்றனர்.

அவர்கள் பாதி உடலை மறைக்கும் படி ஒரு உடைக் கவசமும், தலையில், ஹெல்மெட் போன்ற தலைக் கவசமும் அணிந்து இருந்தனர்.

அதில் ஆண் பெண் வித்யாசத்தை அவர்கள் கால்களைக் கண்டே அறிய முடிந்தது. அவர்கள் வரிசையில் நின்றதும், ஒலிப்பெருக்கியில் கம்பீர ஆண் குரல் ஒன்று ஒலித்தது.

“டியர் ஸ்டூடெண்ட்ஸ்... உங்க எல்லாருக்கும் கேம் ரூல் நல்லா நியாபகம் இருக்கும்னு நம்புறேன். இருந்தாலும் இன்னும் ஒரு முறை உங்களுக்கு நியாபகப்படுத்துறேன்.

இந்த கேம் நம்ம ரீஜினல் கேம். நம்ம இனத்தோட அடையாளம். இந்த கேமோட மோடிவ் பழைய காலத்துல வேற விதமா இருந்தது. இடைக் காலத்துல வேற விதமா மாறுச்சி.

DO NOT COPY

இப்போ ஜல்லிக்கட்டு தடைக்கு அப்புறம் எல்லா இளைஞர்களும் போராடி மீட்டு வந்து இருக்க இந்த விளையாட்டோட மோடிவ் இப்ப கண்டிப்பா வேறையா இருக்கு.

முதல்ல இது ஒரு விளையாட்டு மட்டும் தான். இதுல மனுஷ உயிரிழப்பையும்... மாடுகள் துன்பப்படுத்தப்படுறதையும் நாம கண்டிப்பாய் தவிர்க்கணும். அதே சமயம் ஆயிரமாயிரம் வருசமா நம்ம பண்பாட்டை உலகத்துக்கு எடுத்துக் காட்ற இந்த விளையாட்டை நாம நிறுத்தவும் கூடாது.

கேம் ரூல் சொல்றேன்னு நான் என்ன என்னவோ சொல்லிட்டு இருக்கேன் சாரி... பட்டிகுள்ள ஒரு ஒரு காளையா அனுப்புவோம்.

காளையை ஒரு நேரத்துல ஒருத்தர் தான் அடக்க முயற்சி பண்ணனும். முதல்ல கைவச்சவர் பிடியை விட்டதுக்கு அப்புறம் தான் அடுத்தவர் தொடணும்.

காளை பட்டியை விட்டு தாண்டுற வரை மட்டும் தான் உங்களுக்கு நேரம். காளையோட கொம்பு, இல்லனா திமிலை பிடிச்சி முழுசா ஒரு நிமிஷம் தாக்கு பிடிக்கணும்.

கொம்பு, திமில் தவிர வேற எங்கயும் மாட்டை அடிக்கவோ, தட்டவோ கூடாது.

உங்க உடம்பை இல்ல மனசை திடப்படுத்துற விளையாட்டு. சீறி வர காளைங்க முன்னாடி தைரியமா நிக்க முடிஞ்சாலே வாழ்கையில எவ்வளவு பிரச்சனை வந்தாலும் துணிஞ்சி போராடலாம்.

போட்டி இன்னும் அஞ்சி நிமிஷத்துல துவங்கப் போறதால... வீரர்களை தாயரா இருக்கும் படி கேட்குறேன்...அடுத்த அறிவிப்பை அண்ணன் செந்தமிழ்தாசன் தொடர்வார்.." என்று அந்தக் குரல் முடிவடைந்தது.

அடுத்து யாரோ ஒலிபெருக்கியில், "பட்டிக்குள்ள முதலாவதா.... பத்து வாடி வாசல் கண்ட, பெரிய மருது அண்ணன் காளை காங்கேயம் வகையறா கொடிய கருப்பன் வரான்.... தில்லு உள்ள மக்க வந்து திமிலை தொடுங்க.."

அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே... பாய்ந்தோடும் மின்னல் போல இரண்டே எட்டுக்களில் காளை அகன்ற பாதையை நோக்கி தாவி இருந்தது.

பெரும்பாலும் காளைகள் தப்பி செல்லும் முறைகே பழக்கப்படுத்தப்பட்டிருக்கும். வெகு சிலவே பட்டியில் நின்று போராடும்.

அடுத்து செம்மறி வகையில் வந்த வெட்டுப் புலி காளை பாய்ந்து வர பெண்கள் அணியில் இருந்த துணிச்சல்காரி ஒருத்தி துணிந்து அதன் திமிலில் ஒரு நிமிடம் தொங்கிக் கொண்டே பட்டியின் இறுதிவரை பயணிக்க, மேடையின் அருகில் ஒரே ஆரவாரம்.

அவள் வென்றதாய் அறிவிப்பு வரவும், பெண்கள் அணி அவளை தோளுக்கு மேல் தூக்கிக் கொண்டாடியது. அடுத்தடுத்து வந்த காளைகளை அங்கிருந்த பெண்களும், ஆண்களும் அடக்க, ஆடுகளம் பயங்கர சுவரசியமாகியது.

இறுதியாய், "அடுத்து வட்டக்கரியன் வகையறா சுடலை பட்டிக்கு வாரான்.." அந்த அறிவிப்பு வந்த அடுத்த நொடி, அந்த இடம் முழுவதும் முழு அமைதிக்கு மாறியது.



DO NOT COPY

“இதுவரை உற்சாகமாய் இருந்த வீரர்கள் ஒழுங்கு முறைக்கு வந்தனர்.

இதுவரை துள்ளிக் குதித்து ஓடிய காளைகளைப் போல அல்லாமல், வட்டக் கரியன் நிதானமாய் அடியெடுத்து வைத்து பட்டிக்குள் வந்தான்.

அடியெடுத்து வைத்தால் பூமி அதிர்ந்து அதனால் தூசு கிளம்பும் அளவிற்கு அதன் கால்கள் பலம் வாய்ந்ததாய் இருந்தது.

திமில்கள் ஒவ்வொன்றும் தஞ்சை கோவிலின், நந்தியின் உருவுக்கு இணையாக இருக்க, அதன் கூர்க் கொம்புகள் பார்ப்பவருக்கு பெரும் அச்சத்தை கொடுக்க கூடியதாய் இருந்தது.

அதுவரை போட்டியை ரசித்துக் கொண்டிருந்த வள்ளியின் நெஞ்சத்தில் கூட பயம் வந்து அமர்ந்தது.

ஜேம்ஸ் தன் புகைப்படக் கருவியில் அதை கண்காணித்த படியே,

“இது என்ன மேம்.... ஏதோ ப்ரெஸ் மீட்டுக்கு வந்த அரசியல் மாதிரி தெனாவட்டா நிக்குது. யப்பா... என்னா சைசு. பக்கத்துல போய் நிக்க சொன்னாலே... எனக்கு எல்லாம் அல்லு போயிரும்.”

தன் பாட்டிற்கு புலம்பிக் கொண்டே இருந்தவனின் குரலை கேட்கும் மனநிலையில் அங்கு யாரும் இல்லை. அவர்கள் விழியும், செவியும் தட்டியிலேயே இருந்தது.



DO NOT COPY

யார் என்னை தொட முடியும் என்பதைப் போல, கால்களால் மண்ணை இருமுறைக் கீறி விட்டு, கொம்பைக் கொண்டும் மண்ணில் பள்ளம் பறித்தது.

மீண்டும் ஒரு முறை நிமிர்ந்து இருபுறமும் ஏதேனும் அசைவு இருக்கிறதா என பார்த்தது. அசைவு தெரிந்தால் அந்த திசையில் ஒரு முட்டு.... இருபுற அணியும் அமைதி காக்கவே, மேலும் கொஞ்ச தூரம் நடந்தது.

அதே நொடி, அதன் பின்னால் அசைவு தெரிய சாடாரென அது பின் திரும்பிய நேரம், பெண்கள் அணியின் புறம் இருந்த ஒருத்தி அதன் திமிலைப்பற்றியிருந்தாள்.

அந்த காளையோ அப்பொழுதும் வெளியே ஓட முனையாமல், நின்ற இடத்தில் இருந்தே அதன் முழு உடல்லையும் மேலே தூக்கி, கீழே குதித்தது.

அந்த அதிர்வு முழு தூசியைக் கிளப்ப, அப்பொழுதும் அந்தப் பெண் அதன் திமில் மேல் இருந்த தன் பிடியை விடவில்லை.

அடுத்து காளை கொம்பை திமில் பக்கம் செலுத்த முயல, அந்தப் பெண்ணோ திமிலில் இருந்து கையை அகற்றாமல் உடலை மட்டும் வளைத்து அதன் வயிற்றின் மேல் தன் தொங்கலை தொடர்ந்தாள்.

மூன்றாம் முறை அது குதித்து நிற்கவும், ஒரு நிமிடம் முடிந்ததற்க்கான அறிவிப்பு வரவும், அந்தப் பெண் அப்படியே காளைக்கு பின்பக்கம் குதித்து நின்று தன்னை சமநிலைப்படுத்திக் கொண்டாள்.

DO NOT COPY

காளை அடுத்த நொடி வேகமாய் பட்டியை விட்டு வெளியேறி இருந்தது. மிக மிக நுட்பமாய், ஜல்லிக்கட்டுக்கு பயிற்சி கொடுக்கப்படும் காளைகளின் செயல்பாடு இவ்வாறு தான் இருக்கும் என்பதை உணர்த்தி செல்வதைப் போல அந்தக் காளையின் செயல் இருந்தது.

போட்டிக்கான பயிற்சி முடிந்ததாய் அறிவிக்கப் பட, அங்கிருந்தவர்கள் தங்கள் கவச உடையை நீக்கியபடியே பட்டியில் இருந்து வெளியே வந்துக் கொண்டிருந்தனர்.

வள்ளிக்கு ஏதோ ஹாலிவுட் படத்தை நேரில் கண்டவளைப் போல, பலவிதமான உணர்சிகளின் தாக்கத்தில் இருந்தாள்.

மதி அவளின் தோள் தட்ட, "நிச்சயமா பெண்கள் விளையாடாத விளையாட்டா நான் ஜல்லிக்கட்டி நினச்சி பாக்கவே இல்ல.."

அவளின் குரலில் இருந்த ஆச்சர்யத்தின் தாக்கத்தில் சற்றே சிரித்தவன்,

"ஹா ஹா ஹா.... நம்ம ஊர் பொண்ணுங்க ராக்கெட்ல போறதை கூட இப்ப சாதாரண விசயமா தான் பாக்குறாங்க...நீங்க ஏன் எப்பவும் எல்லாத்தையும் ஆச்சர்யமாவும், அதிர்ச்சியாவுமே பாக்குறீங்க நண்பர்.." என அவளை சாந்தப்படுத்த முயல,

அவளோ, "எனக்கு உடனே உங்க டீம் ஹெட்டை பாக்கணும்.." என்றாள்.

அதுவரை கலைந்து சென்றுக் கொண்டிருந்த வீரர்களை புகைப்படம் எடுத்துக் கொண்டிருதவன்,



DO NOT COPY

“ஆமா... ஆமா... முதல்ல அவரை கண்ணுல காட்டுங்க... இவங்க அவரைப்பத்தி கட்டுரையில எழுதி எழுதி.... ஏகப்பட்ட பேன்ஸ் இப்ப அவருக்கு. என்னை பர்சனலா தெரிஞ்சவங்க எல்லாம்... அவர் போட்டோ அனுப்ப சொல்லி, ரொம்ப டார்ச்சர் பண்றாங்க...”

அவன் அப்படி சொன்னதும் வாய் விட்டு சிரித்த மதி, “ஓஹோ.... எங்க நாயகருக்கு அவ்ளோ ரசிகர்களா... சரி வாங்க போகலாம். இந்நேரம் காளைப் பட்டியில் தான் இருப்பார்.” என்று சொன்னவன் முன்னே நடக்க, வள்ளியும் ஜேம்சும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

பட்டியில் காளைகளுக்கு தண்ணீர் காட்டிக் கொண்டிருந்தனர். ஆடுகளத்தில் போட்டியாளர்களாய் இருந்த பலர், அங்கு இருப்பதை அவர்கள் உடை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது.

உருவத்தில் மிரட்சியூட்டக்கூடிய காளையை சர்வ சாதாரணமாய் பெண்கள் அதன் கழுத்துப் பகுதியில் தடவிக் கொடுத்தபடியே, அதனோடு ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

இதெல்லாம் அவர்கள் வளர்ப்பு காளைகள் என்பதை வள்ளி அவர்களின் செயல்கள் மூலம் உணர்ந்துக் கொண்டாள்.

அவர்கள் இன்னும் கொஞ்சம் உள்ளே செல்ல, இவர்களுக்கு முதுகு காட்டியபடி வட்டக்கரியன் காளையின் முன் ஒருவன் நின்றுக் கொண்டிருந்தான்.


DO NOT COPY

அவன் கரங்கள் ஆதுரமாய் காளையின் தலையை நீவிக் கொண்டிருக்க, அவனுக்கு பக்கத்தில் இருந்த ஒருவன் காளைக்கு தண்ணீர் காட்டிக் கொண்டிருந்தான்.

அந்தக் காளையை அங்க கண்டதும், ஜேம்சும், வள்ளியும் ஆனி அடித்தார் போன்று அதே இடத்தில், அசையாமல் நின்றுக் கொண்டிருந்தனர் அச்சத்தில்.

மதி இயல்பாய் அவர்களுக்கு முதுகுகாட்டி நின்றுக் கொண்டிருந்தவனின் அருகில் சென்றவன், "சகா... உங்களைக் காண கனல் பத்திரிக்கை நிருபர்கள் வந்துள்ளனர்." என அறிவிக்க,

அத்துணை நேரம் அவர்களுக்கு முதுகுகாட்டி நின்றுக் கொண்டிருந்தவன், மெதுவாய் இவர்கள் புறம் திரும்பினான்.

திரும்பியவனின் முகத்தை கண்ட வள்ளி, "இவனா...?" என்று பேச்சு வரமால் அப்படியே நிற்க, ஜேம்சிற்கு ஒருமுறைக் கண்ட அவனை அவ்வளவாக நினைவில் இல்லை.

ஆனாலும், சற்றே நெருங்கி, அவனை நோக்கி, கரம் நீட்டியவன், "சார் ஐயம் ஜேம்ஸ்.. கனல் போட்டோகிராபர்..... உங்களை எங்கையோ பாத்த மாதிரி இருக்கு. ஆனா எங்கன்னு சரியா நியாபகம் இல்லை." அவன் நெற்றியை நீவிக் கொண்டு யோசித்துக் கொண்டிருக்க,

மெலிதாய் புன்னகைத்தவன், "இவங்க...?" என வள்ளியை காட்டி வினவ, அப்பொழுதும் வள்ளி ஏதோ ஆழ்ந்த யோசனையில் தான் இருந்தாள்.



DO NOT COPY

ஜேம்ஸ் வள்ளியின் முகம் பார்க்க, அவளின் முக பாவத்தில் குழம்பியவன், சற்றே உரத்த குரலில்,

"மேம்.." என அழைக்க, சட்டென நிமிர்ந்தவள், உணர்வுகள் தொலைத்த முகத்துடன், இரு கரத்தினையும் கூப்பி,

"நான் வள்ளி... தில்லையாடி வள்ளியம்மை... கனல் நிருபர்... உங்க ஊரை பாக்கும் போது... ரொம்ப சந்தோசமா இருக்கு... அதே சமயம்.... இந்த மாற்றம் ஏற்பட அடித்தளம் போட்ட உங்களை நினச்சி பெருமையாவும் இருக்கு.... உங்களை சந்திச்சதுல ரொம்ப சந்தோசம்....ஊரைப்பத்தி உங்ககிட்ட கொஞ்ச நேரம் பேசணும்... எங்களுக்கு நேரம் ஒதுக்க முடியுமா சார்...?"

அவள் பணிவாய் பேசவும், இதழ்க்கடையில் மலர முயன்ற புன்னகையை சிரமப்பட்டு அடக்கியவன், மதியைப் பார்த்து, "இன்னைக்கும் நாளைக்கும் நமக்கு நிறைய வேலை இருக்கு உனக்கே தெரியும் இல்ல...வேணா இவங்களை நீ நம்ம விளையாட்டு திருவிழா முடியிற வரைக்கும் தினம் இங்க கூட்டிட்டு வா...." என்றவன்,

வள்ளியைப் பார்த்து, "சாரி மேடம்... நாம இன்னொரு நாள் பொறுமையா... நிதானமா நிறையப் பேசலாம். இன்னும் ரெண்டு நாள் நாங்கள் புல் பிசி. சாரி.." என்று மறுக்க,

வள்ளி தலையை மட்டும் ஆட்டி வைத்தாள். உள்ளுக்குள் இருந்த ரோசக்காரி கனன்றுக் கொண்டிருந்தாள்.


DO NOT COPY

மதி அவளின் சுருங்கிவிட்ட முகத்தை பாவமாய் பார்க்க, வள்ளி, "பரவாயில்ல சார்... உங்களுக்கு டைம் இருக்கும் போது நாம பேசலாம்." என்றவள் திரும்பி நடக்க தொடங்க, ஜேம்சும், "மறுபடி மீட் பண்ணுவோம் சார்..!" என்றுவிட்டு வள்ளியோடு இணைந்துக் கொண்டான்.

ஒரு பத்து எட்டு எடுத்து வைத்தவள், என்ன நினைத்தாலோ, மீண்டும் வில்லனை நோக்கி நடந்தாள்.

"நீங்க எத்தனை நாள் வேணா பேச டைம் எடுத்துக்கோங்க. ஆனா நான் இன்னும் இங்க ரெண்டு நாள் தான் இருப்பேன் மிஸ்டர் வில்லாளன்." எனக் கூர்மையாய் அவன் கண்களைப் பார்த்து, திமிராய் சொல்லிவிட்டு, ஒரு ராணியின் கம்பீரத்தோடு திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

ஜேம்ஸ் அவளின் அந்த செய்கையில் திகைத்துப் போய் அவளைப் பார்த்தவன், அவள் உச்சரித்த பெயரை உள்வாங்கிய பிறகே, வில்லனை தான் இதற்கு முன் சந்தித்தது அவன் நினைவில் வந்தது.

மூன்று மாதங்களுக்கு முன், ஜீன்ஸ், டீ ஷர்டில் நவ நாகரீக யுவனாய் சந்தித்த ஒருவனை, வெண்ணிற வேட்டி சட்டையில், கிரிதாவுடன் இணைந்த முறுக்கு மீசை ஜேம்சிற்கு யாரோ ஒருவனாய்த் தான் காட்டியது.

ஜேம்ஸ் வேகமாய் நடந்து செல்லும் வள்ளியையும், அப்படி அவள் நடந்து செல்வதை புன்னகை முகமாய் ரசித்துக் கொண்டிருக்கும் வில்லனையும் மாறி மாறிப் பார்த்தவன்,

“என்னடா நடக்குது இங்க..?” என்ற கேள்வியோடு வள்ளியை பின் தொடர தொடங்கினான்.

மதியோ இவர்கள் இருவரும் பேசிக் கொண்ட தினுசில் ஏற்கனவே அறிமுகமான சாயல் தெரிய, “சகா... இவர்கள் என்ன இன்னும் இரு தினங்கள் மட்டும் இங்கு தங்கப் போவதாய் சொல்லி செல்கிறார்கள்..?” என வினவ,

வில்லனோ சற்றும் அசராமல், “ரெண்டு நாளா...? ஹா ஹா ஹா.... இனிமே இவங்க பர்மனென்ட்டா இங்க தான் தங்கப் போறாங்க மதி.” என்று சொல்லிவிட்டு மீண்டும் தன் கவனத்தை காளையிடம் திருப்ப, இம்முறை மதியும், “என்னடா நடக்குது இங்க..?” எனக் குழம்பித் தான் போனான்.

ஆனி ஐயா வீட்டை அடைந்த வள்ளி, ஜேம்ஸ் எதிர்பார்த்தார் போன்று, கோபம் ஆத்திரம், ஏமாற்றம் இப்படி எந்த உணர்வையும் வெளிக்காட்டாமல், கருமமே கண்ணாக தன் கட்டுரை பணியை தொடங்கி விட, ஜேம்சும் எடுத்த புகைப்படங்களை சீரமைத்துக் கொண்டிருந்தான்.

மாலை ஆனி ஐயாவிடமும், விளையாட்டுப் போட்டிகள் குறித்து உரையாடியவள்,

“என்னவோ ஐயா... ஜல்லிக்கட்டு வீர விளையாட்டா இருந்தாலும் மாறி வர காலத்துல அந்த விளையாட்டு எல்லாம் தேவையான்னு தோணுது.

முன்ன வேல்கம்பு, கத்தி, வில், அம்பு இதெல்லாம் வச்சி சண்டை போட்டுட்டு இருந்தாங்க.

ஆனா இப்போ நியூகிளியர் பாம், பயோ வெப்பன்னு நம்ம போர் முறை ரொம்ப நூதனமா மாறிடுச்சி... இன்னும் ஜல்லிக்கட்டு எல்லாம் தேவையா..?"

அவள் அப்படிக் கேட்டதும் அவளை வாஞ்சையோடு பார்த்தவர், "நீ சொல்றது எல்லாம் நூத்துக்கு நூறு உண்மைமா.... இதோ என் பொண்டாட்டி கட்டிக்கிட்டு இருக்காலே சேலை... பின் கொசுவ சேலை... அதை உனக்கு கட்டத் தெரியுமா..?"

அவர் அப்படி கேட்பார் என்று எதிர்பார்க்காத வள்ளி புன்னகையோடு, "எனக்கு சேலையே கட்டத் தெரியாது ஐயா..." என்று பதிலுரைக்க,

அவள் அப்படி சொன்னதும், "சரியாப் போச்சு போ.." என்று வெடித்து சிரித்தவர், "நாம எல்லாம் அடிப்படையில மனுசங்களா இருந்தாலும்.... பேசுற மொழியில, கும்பிடுற சாமியில, பழக்க வழக்கத்துல... சின்ன சின்ன குழுவா இருக்கோம்...

தமிழ் மொழி பேசுற நாம தமிழர்கள்ன்னு சொல்லிக்கிறோம்... நம்ம மொழியோட இலக்கண இலக்கியம் மட்டும் இல்ல... நம்ம உடை.... நம்ம பண்பாடு, கலாச்சாரம்... இது எல்லாமே தமிழன்னா இவன் இப்படிதான்யா அப்படின்னு நம்ம மேல ஒரு அடையாளத்தை கொடுக்கும்.

அதுக்காக உன்னை நான் தினம் புடவை கட்ட சொல்லலை தாயி.... உனக்கு இசைவான உடையை நீ போட்டுக்குற அதே சமயம்... நம்ம புடவையை பதியும் தெரிஞ்சிக்கலாம் தப்பில்ல... அந்தக் காலத்துல பெண்களுக்கு எல்லா விதத்திலும் இலகுவான உடையா புடவை இருந்துச்சி... அது ஒரு பெரிய விஷயம்... அதை இன்னொரு நாள் பேசுவோம்.


DO NOT COPY

என்ன தான் போர் முறைகள் நீ சொன்ன படி மாறி இருந்தாலும், வெறும் கையில சீறி வர காளை முன்னாடி நிக்குறவனை இந்த உலகம் கொஞ்சம் பயமாத் தான் பாக்கும்.

ஜல்லிக்கட்டு தடை எல்லாம் தாண்டி தொடங்குணப்ப, வில்லன் பய நிறைய பொண்ணுங்க காளையை அடக்க பிரியப்படுதாகன்னு என் முன்னாடி வந்து நின்னான்.

அது என்ன காலம் காலமா காளையை ஆம்பளைங்க மட்டும் அடக்கி,அவங்க வீரத்தை பிரதாநிக்கனுமா... நம்ம பொண்ணுங்க என்ன ஆம்பளைகளுக்கு இளப்பமா..?

நானும் சரி தான் பாத்து செய்டா சாமின்னு சொன்னேன்.

பய பாதுகாப்பு உடை கொண்டு வந்தான். நிறைய பயிற்சி கொடுத்தான்.

இப்ப எங்க பொண்ணுங்க பயலுகளுக்கு இணையா மாடு பிடிக்குதாக.

பாக்கும் போதே அம்புட்டு சந்தோசமா இருக்கு தாயி.

ஆணுக்கு பெண் இங்கு இளைப்பில்லை காண் என கும்மியடி.... நம்ம முண்டாசுக் கவி சொல்லிட்டு போயிட்டாரு.


DO NOT COPY

ஆனா அப்படி ஒரு நாள் நம்ம மண்ணுல வரும் போது தான் உண்மையான விடுதலையை நோக்கி நம்ம சமூகம் நகரும்... சரித்தா ரொம்ப நேரமா உன் நேரத்தை இன்னைக்கி பிடிச்சிட்டேன்.

கிழவி மூட்டை பிடிச்சிக்கிட்டு உக்காந்து கிடப்பா. போய் தைலம் தேய்க்கணும். நீயும் போய் உன்னோட கட்டுரை வேலையை பாரும்மா..." என்றவர் தங்கள் அறை நோக்கி நடக்க, அவரை கனிவுடன் வள்ளி பார்த்துக் கொண்டிருந்தாள்.

கட்டுரையை அன்று அனுப்பும் பொழுது தான், வள்ளி அதை கவனித்தாள். இருவரின் முதல் எழுத்தோடு ஏதோ ஒரு தேதி வருடத்தை வைத்து அவனுடைய மின் அஞ்சல் முகவரியை உருவாக்கி இருந்தான்.

வள்ளி சற்றே ஆழ்ந்து சிந்தித்துப் பார்கையில், அது தங்கள் திருமண நாள் என்பது அவளுக்கு நினைவிற்கு வந்தது.

அதோடு இதழோரம் ஒரு விரக்கதிப் புன்னகை. அதே நாளில் தான் அவள் அக்கா குடும்பம் வயிற்றில் இருந்த சிசு உள்பட மொத்தமாய் அழிக்கப்பட்டது.

தலையை உலுக்கி அந்த நினைவுகளை விரட்டினாள்.

கட்டுரையை அனுப்பி முடித்தவள்.... தொடர்ந்த அதிர்ச்சிகள் அலுப்பை தர, படுக்கையில் விழுந்த இரண்டாம் நிமிடம் உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

அந்தோ பரிதாபம்....அன்று அவள் ஆழ்ந்த உறக்கத்திற்கு கொடுத்து வைக்கவில்லை போலும்.



DO NOT COPY

நள்ளிரவு பிறக்க, பத்து நிமிடங்கள் இருக்கும் பொழுது, மூன்று முக மூடி அணிந்த உருவங்கள், குண்டுக்கட்டாய், அவள் திமிர திமிர, அவள் வாய் திறக்க வழியின்றி செய்து, அவளை எங்கோ கடத்திக் கொண்டு சென்றனர்.

வில் - 12

சா'தீ'யம் - சீமைக் கருவேலம்...

வெட்டுதல் வீண்...வேரறுப்போம் வாருங்கள்....

வள்ளி கடத்தல்காரர்களின் பிடியில் இருந்து விடுபட்டதுமே, தன் முகம் வரை மூடியிருந்த போர்வையை உதறிக் கொண்டு வெளியே வந்தாள்.

அவள் கோபமாய் திரும்பும் போதே, அவளின் முகத்திற்கு நேரே பெரிய கேக் ஒன்று நீட்டப்பட, அதன் மேல் பூங்கொத்தைப் ஒத்த மெழுகுவர்த்தி ஒளி உமிழ்ந்துக் கொண்டிருந்தது.

சுற்றிலும் இருள் சூழ்ந்திருக்க, அம்மெழுகுவர்த்தி மட்டுமே அங்கு இருளை முடிந்த அளவு விரட்டிக் கொண்டிருந்தது. கூடவே பிறந்த நாள் வாழ்த்துப்பாவை இசைத்துக் கொண்டிருந்தது.

வள்ளி திகைப்போடு நிமிர்ந்து பார்க்க, பார்த்தவளால் அவள் விழிகளையே நம்ப முடியவில்லை. ஆனந்த திகைப்பில் வள்ளி உறைந்து நிற்க,

ஜுலைகாவின் கைகளில் கேக்கை கொடுத்துவிட்டு மற்ற இரு தோழிகளும், “மச்சி...” என பாய்ந்து சென்று வள்ளியை கட்டி அணைத்துக் கொண்டனர்.



DO NOT COPY

அவளும் தன் பங்கிற்கு இரு தோழிகளின் கழுத்திலும் கரம் கோர்த்துக் கொண்டாள்.

இவர்கள் பிரிவார்கள் என பொறுத்து பொறுத்துப் பார்த்த ஜுலைகா, அவர்கள் அதே நிலையில் தழுவிக் கிடக்கவும், “அடியே எருமைகளா.... இப்படியே போஸ் கொடுத்துட்டு இருந்தீங்க.... கேக்கோட நான் மட்டும் ஓரமா போய் செட்டில் ஆயிடுவேன்.” என அறிவிக்க, மூன்று தோழிகளும் நிமிர்ந்து அவளைப் பார்த்தனர்.

வள்ளி உதட்டில் மலர்ந்த முறுவலோடு, “கேக் பாக்ஸ்.... கேக் ஆட்டையப் போடுறப் பழக்கத்தை இன்னும் நீ நிறுத்தலையா..?” என வேடிக்கையாய் வினவ,

“மச்சி... அவ ஹிப் சைஸ் பாத்தா தெரியல.... அக்கம் பக்கத்து குழந்தைங்க பர்த்டே பார்ட்டிக்கு வாங்குற கேக்கை கூட இன்னும் ஆட்டைய போட்டுக்கிட்டு தான் சுத்துறான்னு....!”

ரித்திகா ஜுலைகாவை கலாய்க்கத் தொடங்கியதும், “அடியே கொத்தவரங்கா..... நான் உன்ன கலாய்ச்சேன்... நீ குமுறி குமுறி அழுவ.... உன்ன நான் அப்புறம் கவனிச்சுகிறேன்.” என ரித்திகாவிற்கு பொங்கல் வைத்தவள்,

“மச்சி....கை வலிக்குது மச்சி... சீக்கிரம் கேக் கட் பண்ணுடி..” என கெஞ்சலில் இறங்கினாள்.

அவளை நோக்கி அன்பாய் புன்னகைத்தவள், கேக் இருந்த தெர்மாகோல் அட்டையில் இணைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் கத்தியை எடுத்து, எரிந்துக் கொண்டிருந்த மெழுகுவர்த்தியை ஊதி அணைத்ததும், மற்ற மூன்று தோழிகளும் உற்சாகக் குரலில் பிறந்தநாள் பாடலை பாடினர்.

கேக்கை வெட்டி, வள்ளி மூன்று தோழிகளுக்கும் ஊட்ட, அவர்கள் மூவரும் இவளுக்கு ஊட்ட, ஒருத்தி கேக்கின் கிரீமை எடுத்து வள்ளியின் கன்னத்தில் தடவ, அப்படியே அது ஒரு விளையாட்டாய் மாறி, நான்கு தோழிகளுக்கும் கொஞ்ச நேரத்தில் முகம் முழுக்க கேக்கை அப்பிக் கொண்டும் ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டும் உற்சாகமாய் விளையாடிக் கொண்டிருந்தனர்.

“நான் வரலாமா…” சற்று தொலைவில் உரத்த ஆண் குரல் கேட்க, நான்கு தோழிகளும் அப்படியே நின்றனர்.

கையில் பெரிய ரோஜாப்பூ செடியோடு வில்லன் நின்றுக் கொண்டிருந்தான். பெரிய மஞ்சள் நிற ரோஜா ஒன்று அதில் மலர்ந்திருக்க, பெரிய புன்னகையோடு அவளை நெருங்கியவன், “பிறந்த நாள் வாழ்த்துக்கள்…” என வாழ்த்த, “தேங்கஸ்…” என்றவள், அந்த செடியை வாங்கிக் கொண்டாள்.

அவனையே ஊன்றிப் பார்த்தவள், “எல்லாம் உங்க ஏற்பாடா..?” என கேட்க, மற்ற மூவரையும் நோக்கி திரும்பியவன்,

“கேர்ள்ஸ் ஒரு ஐஞ்சி நிமிஷம்… தனியா பேசிட்டு… உங்க பிரண்டை உங்ககிட்டையே பத்திரமா ஒப்படைச்சிடுறேன்….” அவன் அப்படி சொன்னதும், “ஹே..” என்ற உற்சாக கூக்குரல் எழும்ப வள்ளிக்கு ஏனோ அவஸ்தையான உணர்வுகள் தாக்கியது.

அவள் கரம் பற்றி அவளை கொஞ்சம் தள்ளி அழைத்து செல்லும் போது தான், தாங்கள் ஏரிக்கு வந்திருப்பதை வள்ளி உணர்ந்தாள்.

வள்ளியின் கண்களைப் பார்த்தவன், "நான் உன் வாழ்கையில வந்த நிமிஷத்துல இருந்து நீ நிறைய இழந்துட்ட வள்ளி. உன் இழப்புக்கு நான் காரணமா இல்லாம இருக்கலாம். ஆனா... எனக்குள்ள ஒரு உறுத்தல் இருந்துகிட்டே இருக்கு.

பட்டாம்பூச்சி மாதிரி ஜாலியா சுத்திட்டு இருந்த பொண்ணு நீன்னு உங்க அம்மா அடிக்கடி என்கிட்ட சொல்லுவாங்க. என்னால நீ இழந்த எல்லாத்தையும் திருப்பிக் கொடுக்க முடியுமா தெரியல. அட்லீஸ்ட்... இந்த ஒரு நாள் ராத்திரியை என்னோட கிப்ட்டா கொடுக்குறேன் வாங்கிக்கோ வள்ளி.

வாழ்கையில நடந்த எல்லா கசப்பான சம்பவத்தையும் இன்னைக்கு ஒரு நாள் நைட் மறந்துடு. உன்னோட ரொம்ப நாள் ஆசையை எல்லாம் உன் பிரண்ட்ஸ்கிட்ட கேட்டு.. கேட்டு ஏற்பாடு பண்ணி இருக்கேன்.

நீ ஆசைப்பட்ட மாதிரி காட்டுல என்னால இந்த ஏற்பாட்டை பண்ண முடியல. ஆனாலும் எங்க ஏரியும் சின்ன காடு தான். நடுராத்திரி அவுடிங். நீ ஆசைப்பட்ட கேம்ப் பயர். உன்னோட பெஸ்ட் பிரண்ட்ஸ்சோடா ஒரு மூன் வாக். விடிய விடிய அரட்டை. அப்புறம் இதுவும் லிஸ்ட்ல இருக்கு.." என்றவன், சட்டை மறைவில் இருந்து ஒரு பொருளை எடுத்து நீட்ட, அது ஒரு உயர் வகை ஒயின் பாட்டில்.

வள்ளிக்கு ஏனோ முதல் முறை ஒரு மதுபாட்டிலைக் கண்டு சிரிப்பு வந்தது.

“இதெல்லாம் உங்ககிட்ட யார் சொன்னா..?” என்று உதட்டில் தேங்கிய புன்னகையோடு கேட்க, தானும் புன்னகைத்தவன், “வேற யாரு எல்லாம் உன் பிரண்ட்ஸ் தான்..” என்று சொல்லிவிட்டு பெரிதாய் சிரித்தான்.

“இது மட்டும் தான் சொன்னாங்களா.....? இல்ல எல்லாத்தையும் உளறிட்டாங்களா..?” வள்ளி உதட்டுக்குள் மேலும் பொங்க முயன்ற புன்னகையை அடக்கியபடி கேட்க,

“அவங்க இவ்ளோ தான் சொன்னாங்க.... நானா நிறைய ஆராய்ச்சி பண்ணி உன்னைப்பத்தி தெரிஞ்சிகிட்டேன்.” வில்லனின் முகத்தில் தெரிந்த விசமதனத்தில், வள்ளிக்கு அப்படி என்ன தெரிந்துக் கொண்டான் என்று கேட்டே ஆக வேண்டும் போல ஒரு உந்துதல் வர,

“என்ன தெரிஞ்சிட்கிடீங்க...?” வள்ளி சாதாரணம் போல முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாலும், என்ன பதில் வருமோ என்ற எதிர்பார்ப்பை அவள் முகம் பிரதிபலித்தது.

“ஜாஸ் மியூசிக் உனக்கு ரொம்ப பிடிக்கும். ராபர்ட் கிளாஸ்பரோட டை ஹார்ட் ஃபேன் நீ. ஹாரிபாட்டருக்கு ரசிகைமன்ற தலைவி நீ. உங்க அக்கா இறந்து போற ஒரு நிமிஷம் முன்னாடி வரைக்கும் உனக்கு பிடிச்ச சாமி ஐயப்பன்.

உன்னோட எல்லா புக்லையும் உன்னோட பேருக்கு முன்னாடி சாமியே சரணம் ஐயப்பா போட்டு வச்சி இருக்க.... அப்புறம் ரூம் கதவை பூட்டிட்டு குத்து பாட்டுக்கு டான்ஸ் ஆட ரொம்ப பிடிக்கும்.

அம்மா கையால செஞ்சா எல்லாமே அன்லிமிடெட் மீல்ஸ் தான் உனக்கு. ஆனாலும் தக்காளி ரசமும், சேனை வறுவலும் உன்னோட பேவரிட்... மஞ்சள் ரோஜா பிடிக்கும் உனக்கு. உங்க அக்கா கூட சண்டைப் போட பிடிக்கும்.

சைக்கிள்ல வேகமா போக பிடிக்கும். ஸ்போர்ட்ஸ் கார், ஸ்போர்ட்ஸ் பைக் இதெல்லாம் உன்னோட பெரிய கனவு. வீட்ல பொய் சொல்லிட்டு திருட்டுத்தனமா பிரண்ட்ஸ் கூட ஊர் சுத்த பிடிக்கும் உனக்கு.

இதெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் உன் அம்மாவும் ப்ரண்ட்சும் சொன்னது. மீதி நானா உன் கபோர்ட் ஆரய்ச்சி செஞ்சி கண்டுபிடிச்சது."

வில்லன் அவளுக்கு பிடித்தன பற்றிய பட்டியலை முடித்ததும், "என் கபோர்ட் எல்லாம் நோண்டிப் பாத்தீங்களா என்ன.....!" வள்ளி உதட்டை கடித்துக் கொண்டு கேட்க,

வில்லனின் முகம் உல்லாசத்திற்கு மாறியது. "எஸ் பேபி... நான் எல்லாமே பாத்துட்டேன். உன்னோட அந்த ப்ளே பாய் புக் கூட. நான் கூட உன்ன சின்ன பொண்ணுன்னு நினச்சிட்டு இருந்தேன். அந்த வயசுல என்ன வேலை எல்லாம் பண்ணி இருக்க நீ...ஹா ஹா ஹா.."

வில்லன் மந்தகாசமாய் புன்னகைக்க, வள்ளிக்கு வெட்கத்திலும் கூச்சத்திலும் முகம் சிவந்து விட்டது.

அவனை நேர் பார்வைப் பார்க்க முடியாதவள், "அதெல்லாம் நீங்க நினைக்கிற மாதிரி ஒன்னும் இல்ல. டீன் ஏஜ்ல எல்லாருக்கும் இருக்க கியூரியாசிட்டி....

நாங்க டுவல்த் படிச்சிட்டு இருக்கும் போது, எங்க கிளாஸ் மேட் ஒருத்தி மேரேஜ் பண்ணிக்கிட்டு ஸ்கூலுக்கு வந்துட்டு இருந்தா.

எல்லா பொண்ணுங்களும் அவளை மறைமுகமா கிண்டல் பண்ணிட்டு இருப்பாங்க. பாவம் அந்த வயசுல அவ கஷ்டம் எனக்கெல்லாம் புரியல.

புவி ஒரு நாள் அவளை ஏதோ கிண்டல் பண்ணப் போயி, அவ புவியை உனக்கெல்லாம் கல்யாணமே நடந்தாலும் கடைசி வரைக்கும் ஒன்னும் தெரியாதுடி....அப்படி இப்படின்னு பயங்கரமா திட்டிட்டா...

புவி ஏற்கனவே கொஞ்சம் லோ செல்ப் எஸ்டீம் இருக்கவ.... என்ன எல்லாம் எந்தப் பையனுக்கும் பிடிக்காதா...? அப்படின்னு அவ வேற ஒரே அழுகை.

எனக்கு அப்போ என்ன பண்றதுன்னே தெரியல. அந்த நேரம் அவளை சமாதானப்படுத்த, “விடு மச்சி... அவ கிடக்கா.... கல்யாணத்துக்கு அப்புறம் என்ன நடந்து இருக்கும் இப்போதைக்கு இதானே உன் டவுட்... விடு நான் எப்படியாச்சும் தெரிஞ்சிட்டு வந்து உனக்கு சொல்றேன்னு... சொல்லிட்டேன்.

வீரா வேசமா சொல்லிட்டேன். ஆனா யார்கிட்டையும் அந்த டவுட்டை கேக்க முடியல. கடைசியா எங்க அக்காகிட்ட கேக்க, அவ செருப்பை எடுத்து அடிக்கதா குறை தான்.

என் பிரண்டஸ் வேற எப்படி சொல்லுவ எப்படி சொல்லுவன்னு ஒரே நச்சு.

அப்பன்னு பாத்து எங்க பெரியம்மா பொண்ணு கல்யாணம் முடிவாகி இருந்தது. கல்யாண வீட்ல இருந்தப்ப ஒரு நாள் எங்க அக்கா பிரண்ட் ஒருத்தி,

“இந்தாடி இந்த புக்கை பாத்து எல்லாம் தெரிஞ்சிக்கோ... சும்மா சும்மா என்ன கேட்டு டார்ச்சர் பண்ணாதன்னு...” அவ பிரண்ட் ஏதோ ஒரு புக்கை கொடுத்துட்டு போனா.

அக்காவும், “ரொம்ப தாங்க்ஸ்டீ...” அப்படின்னு சொல்லிட்டு அந்த புக்கை ஒளிச்சி வச்சா.

ஓ இந்த புக்கல கல்யாணத்துக்கு அப்புறம் என்ன நடக்கும்னு இருக்கும் போல இருக்குன்னு... அவ ரூம்ல இல்லாதப்ப அந்த புக்கை அவகிட்ட இருந்து சுட்டு என் பேக்ல வச்சிட்டேன்.

அவ அந்த புக்கை ரூமையே புரட்டி தேடினப்ப கூட ஒன்னும் தெரியாத பாப்பா மாதிரி என்ன அக்கா தேடுறீங்கன்னு அவளுக்கு ஹெல்ப் பண்ணது எல்லாம் தனிக் கதை.

அப்புறம் கல்யாணம் முடிஞ்சி வீட்டுக்கு போனதும் முதல் வேலையா என் ரூமுக்கு போயி, கதவை சாத்திட்டு புக்கோட பஸ்ட் பேஜ் தான் திறந்து பாத்து இருப்பேன்.

ஹா ஹா ஹா... இன்னைக்கு நினச்சா சிரிப்பா வருது. பட் அன்னைக்கு பயந்து போயி, கை கால் எல்லாம் நடுக்கல் வந்து, ரெண்டு நாள் பேய் அறைஞ்ச மாதிரி சுத்திட்டு இருந்தேன்.

அந்த புக்கை எடுத்து கப்போர்ட்ல ஒளிச்சி வச்சவ தான். டிஸ்போஸ் பண்ண கூட தட தைரியம் வரலைனா பாருங்க.

அப்புறம் என் பிரண்ட்ஸ் நச்சு தாங்காம... எங்க நாலு பேர்ல... யாருக்கு பஸ்ட் கல்யாணம் நடக்குதோ...அவங்க மத்த மூணு பேருக்கும் அந்த சீக்ரெட்டை சொல்லணும் அப்படின்னு ஒரு புது ஆர்டரை போட்டுட்டு நான் எஸ் ஆயிட்டேன்... வெளி உலகம் என்னனே தெரியாம புக்ஸ் கூடவும்... பிரண்ட்ஸ் கூடவும் வாழ்ந்த காலம் அது.... தோஸ் ஆர் வொண்டர்புல் டேஸ்..."

வள்ளி கண்களில் கனவு மிதக்க, உதடுகள் புன்னகையில் விரிய அந்த நாட்களின் நினைவுகளை அவனிடம் பகிர்ந்துக் கொள்ள, வில்லனும், "எஸ் காலேஜ் டேஸ் விட ஸ்கூல் டேஸ் ஆர் வொண்டர்புல் டேஸ்.." என அவனும் ரசனையோடு சொல்லிக் கொண்டான்.

"உன் பிரண்ட்ஸ்கிட்ட ஐஞ்சி நிமிசம் டைம் கேட்டுட்டு இப்போ ஹாபன் ஹவரா நாம ரெண்டு பேரும் பேசிட்டு இருக்கோம். அதுவும் உன் பிரண்ட்ல ரெண்டு பேத்துக்கு கல்யாணம் வேற ஆயிடுச்சி. சோ நீங்க பேசிக்க நிறைய விஷயம் இருக்கலாம்." அவன் அப்படி சொல்லும் போது அவன் கண்களில் குறும்பு கூத்தாட வள்ளி அவனைப் பொய்யாய் முறைத்தாள்.

அவன் முறைப்பை கண்டுக் கொள்ளாதவன், "நான் காலைல அகைன் ஐஞ்சி மணிக்கு வறேன். உங்களை பிக் பண்ணிக்க. என்ஜாய் யுவர் டே தில்லு..." என்றவன், மீண்டும் அவள் கரம் பற்ற அவனோடு வள்ளி மௌனமாய் நடந்தாள்.


DO NOT COPY

அப்பொழுது தான் மூட்டப்பட்டிருந்த நெருப்பின் முன் அமர்ந்து, மூன்று தோழிகளும் தங்களுக்குள் ஏதேதோ பேசியபடி, சிரித்துக் கொண்டிருந்தனர்.

இவர்களைக் கண்டதும், புவி வேகமாய் முன்னால் வந்து, "இதுதான் உங்க அஞ்சி நிமிசமா..?" என இடுப்பில் கரம் வைத்து முறைத்தாள்.

வில்லன், "லேட் ஆனதுக்கு நான் காரணம் இல்லமா உங்க பிரண்ட் தான் காரணம்.." என சொல்ல, "ஓஹோ.." என்ற சத்தத்தை தொடர்ந்து அங்கே பெரிய சிரிப்பலை பரவியது.

முகம் சிவந்த வள்ளி, வில்லனை முறைக்க, கிளம்புகிறேன் என்பதைப் போல அவளைப் பார்த்து தலை அசைத்தவன், மற்ற அனைவரிடமும் சொல்லிக் கொண்டு கிளம்ப, தோழிகளின் நாள் துவங்கியது.

புவி, வள்ளியிடம், "ஏன் மச்சி உன்னோட ஆசைன்னு நாங்க சொன்ன எல்லாத்தையும் அண்ணா ரெடி பண்ணிக் கொடுத்து இருக்கார். சரக்கு எங்கடி..?" என வினவ,

வள்ளி தலையை அசைத்து, "கொண்டு வந்தார் வேண்டாம்னு சொல்லி திருப்பிக் கொடுத்துட்டேன்." என சொல்ல,

புவி, "அடிப்பாவி என் ஆறு வருசக் கனவுல மண்ணை அள்ளிப் போட்டுட்டியே.." எனப் புலம்ப, சற்று நேரம் அதைப் பற்றிய பேச்சு ஓடிக் கொண்டிருந்தது.

அடுத்து ஆறு வருடங்களுக்கு முன் அவர்கள் பள்ளி ஆண்டுவிழாவில் இவர்கள் குழு நடனம் ஆடிய பாடலை ஜூலைகா தன் அலைபேசியில் உச்சஸ்தாயிலில் ஒலிக்க விட, நால்வரும் அன்றைக்கு ஆடிய அதே நடன அசைவுகளை மனதில் கொண்டு அந்த நெருப்பை சுற்றி நடனம் ஆடினர்.

ஆடி முடிந்ததும், இவர்களே கைதட்டிக் கொண்டு ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆடிக் களைத்த பின்பே நெருப்பை சுற்றி வட்டமாய் அமர்ந்தனர்.

ரித்திகா அவர்கள் தாகம் தீர்க்க, குளிர்பான பாட்டில்களை எடுத்துக் கொடுக்க, அனைவரும் அதை அருந்தி முடித்ததும், வள்ளி அனைவரிடமும் தன் விசாரனையை துவக்கினாள்.

“அப்புறம்... எல்லாரும் என்ன பண்ணிட்டு இருக்கீங்க...?”

அவள் அப்படிக் கேட்டதும் புவி தான் முதலில் பதில் சொன்னாள்.

“நான்லாம் பேருக்கு ஒரு டிகிரி முடிச்சேன் மச்சி. அதுக்கு அப்புறம் வீட்ல சும்மா தான் இருந்தேன். இப்போ தான் ஒரு மூணு மாசத்துக்கு முன்னாடி மேரேஜ் முடிஞ்சது. அவர் பாரெஸ்ட் டிபார்ட்மென்ட்ல ரேஞ்சரா இருக்காரு. என்ன வேற மேல படி படின்னு ஒரே டார்சர்.

நான் யாரு.... சீக்கிரம் குட்டி போட்டு அதை படிக்க வைக்க ப்ளான் பண்ணி இப்ப அந்த ப்ராசஸ்ல மீ வெரி பிசி..” என கண் அடித்து சொல்ல, மற்ற மூவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

ரித்தியோ, “பாவம்டி... அண்ணா...” என அவன் கணவனுக்காய் வருத்தப்பட, அதற்கும் மூவரும் வெடித்து சிரித்தனர்.

“சீ லேடிஸ் கல்யாணம் ஆச்சுன்னா இந்த அச்சம், மடம், நாணம், பெயர்ப்பு எல்லாம் உங்களை விட்டு ஓடியே போயிரும்..” என அதற்கும் கூலாய் பதில் சொன்னாள்.

அதற்கும் மூவரும் சிரித்து முடித்ததும், அடுத்து ரித்தி தன்னைப் பற்றி சொல்லத் தொடங்கினாள். “நான் ஐடீ ஆப்பிள் மச்சி. ரெண்டு வருசத்துக்கு முன்னாடி தான் ஆன்சைட் போய்ட்டு இந்தியா ரிடர்ன் வந்தேன். என்னோட ஹெட் ஆபிஸ் மும்பை. இப்போ தான் சென்னை ட்ரான்ஸ்பர் கிடச்சி இருக்கு. வீட்ல அலையன்ஸ் பாத்துட்டு இருக்காங்க. பட் எனக்கு லவ் பண்ணி தான் மேரேஜ் பண்ணிக்கணும்.

என் பின்னால ஒரு பையனை செமையா சுத்த விடனும். பேஸ் புக்ல காலாய்க்கணும். வாட்ஸ் அப்ல சண்டை போடணும், எனக்கு பாடி காட் வேலை பாக்க வைக்கணும். ஒரு முத்தம் கொடுக்க கூட அவனை கெஞ்சோ கெஞ்சுன்னு கெஞ்ச விடனும். இதெல்லாம் லைப்ல நடந்தா நல்லா இருக்கும் இல்ல மச்சி. நம்மளை கொஞ்சிகிட்டே இருக்க ஒரு ஆள்.”

ரித்தி கண்களில் கனவு மிதக்க சொல்ல, மற்ற மூவரும் அவள் பேசுவதையே, “ஆ..” என்று வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

“கண்டிப்பா அப்படி நடக்க நான் துவா செய்யிறேன் மச்சி...” என ஜூலைக்கா சொல்ல, மற்ற மூன்று தோழிகளும், கைத் தட்டி தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

ரித்தி ஏதோ அரங்க மேடையில் அமர்ந்திருப்பவளைப் போல, அந்த கைதட்டலை தலை வணங்கி பெருமையோடு ஏற்றுக் கொண்டாள்.

அடுத்து ஜுலைகா, “நான் லா முடிச்சேன். என் ஹஸ்பன்ட் கூட லாயர் தான். நான் அவர்கிட்டயே ஜூனியரா ப்ராக்டீஸ் பண்ணிட்டு இருக்கேன். எங்களுக்கு கல்யாணமாகி சிக்ஸ் மன்த்ஸ் ஆகுது. அல்லா எனக்கு ரொம்ப ரொம்ப நல்ல மனுசரை கணவனா கொடுத்து இருக்கார். ரொம்ப நல்ல புகுந்த வீட்டு சொந்தங்களையும். ஐயம் ஹாப்பி வித் மை இன் லாஸ். எனக்கு வாழ்க்கை ரொம்ப எளிமையா, நேர்மையா அதே சமயம் ரொம்ப அழகா போயிட்டு இருக்கு....அதுக்காக நான் கடவுளுக்கு நன்றி சொல்லிக்கிறேன்..”

ஜூலைக்கா பேசி முடித்ததும், மற்ற மூன்று தோழிகளும், எழுந்து நின்று கைதட்டினர். ஜுலைகா அமர்ந்த படியே அவர்களைப் பார்த்து அன்பாய் சிரிக்க, மற்ற மூன்று தோழிகளும் அவளைப் பாய்ந்து சென்று கட்டிக் கொண்டனர்.

வள்ளி, “மை டியர் கேக் பாக்ஸ்... ஐயம் ஹாப்பி பார் யூ டி...” என உணர்ச்சிமயமாய் அவள் காதுகளில் முணுமுணுக்க, ஜுலைகா பதிலுக்கு, “தாங்க்ஸ் மச்சி...!” என்றுவிட்டு ஒரு கிள்ளையும் பரிசாய் வாங்கினாள்.

இது அவர்கள் பழைய பழக்கம். நண்பிகள் ஒருவருக்கு ஒருவர் நன்றியோ மன்னிப்போ தெரிவித்தாள் பலமாய் கிள்ளி வைப்பார்கள்.

மூவரும் மீண்டும் அமர்ந்து கொள்ள, ரித்தி தன் ஆழ்ந்த குரலில், “கேஜில இருந்து டுவல்த் வரை ஒண்ணா படிச்சோம். ஸ்கூல் முடிஞ்ச நாள்ல இருந்து ஆளுக்கு ஒரு திக்கா போயிட்டோம் இல்ல.

இப்ப கூட வள்ளி ஹஸ்பன்ட் அவளுக்கு சர்ப்ரைஸ் பார்டி அரேஞ் பண்ண நம்மை தேடி வரலைனா கடைசி வரை நாம மீட் பண்ணாமையே போயிருப்போமா..?”

ரித்தியின் கேள்வி அங்கிருந்த அனைவரையும் பலமாய் தாக்கியது. வள்ளி ஊரை விட்டே சென்றிருக்க, மேற்படிப்புக்காய் ஆளுக்கு ஒரு ஊரை நோக்கி சென்று இருந்தார்கள்.

மற்ற மூவரும் தொலைபேசி தொடர்பில் இருக்க, வள்ளியை பற்றி அவர்கள் யாராலும் அறிந்துக் கொள்ள முடியவில்லை. வள்ளி இல்லாமல் ஒரு சந்திப்பை யோசிக்க கூட அவர்களுக்கு பிடிக்கவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாய் தொலைபேசி தொடர்புகளும் தேய, தோழிகள் மெல்ல மெல்ல நிதர்சன உலகில் தொலைந்து போயினர்.

ரித்தியின் கேள்விக்கு, வள்ளி பதில் சொன்னாள். “போடி பைத்தியம். டெய்லி மீட் பண்ணிட்டு...சேட் பண்ணிட்டு இருந்தா தான் பிரண்ட்ஷிப்பா. சி.... எனக்கு எப்போ கேக்கை பாத்தாலும் நம்ம ஜுலைகா நியாபகம் வராம இருந்ததே இல்ல...

ரஹ்மான் மியூசிக் கேக்கும் போது எல்லாம் ரித்தி என் முன்னாடி நின்னு ஆடுற மாதிரியே இருக்கும். புவி அவளை நானே நினச்சாலும் என்னால


DO NOT COPY

மறக்க முடியாது.... நாம தேர்ட் ஸ்டாண்டர்ட் படிக்கும் போது சூடு கொட்டையோட ஹீட்டை செக் பண்றேன்னு என் தொடையில வச்சாலே ஒரு சூடு. அந்த தழும்பு... நான் தினம் குளிக்கும் போது எல்லாம் அந்த தழும்பை பாக்கும் போது புவியை நினச்சி சிரிச்சிப்பேன்.

இப்படி நம்ம நியாபக அடுக்குல பொக்கிசமான நினைவுகளா இருக்கு பாரு அதான் பிரண்ட்ஷிப். இன்னும் இருபது வருஷம் கழிஞ்சாலும் எதேச்சையா எங்கையாவது பாத்துக்கும் போது நம்ம பிரண்டோட குரலை வச்சே அவளை அடையாளம் கண்டுபிடிக்கிறோம் பாரு அது பிரண்ட்ஷிப்.

கண்டு பிடிச்ச அவளை கட்டிப் பிடிச்சிப்போம் பாரு அது பிரண்ட்ஷிப். அப்படி கட்டி பிடிச்சிக்கும் போது நம்மையும் மீறி நம்ம பால்ய காலத்துக்கு போறோம் பாரு அது பிரண்ட்ஷிப். சோ நாம எப்பவும் பிரண்ட்ஸா தான் மச்சி இருக்கோம்."

வள்ளி பதில் சொல்லி முடித்ததும், மற்ற மூன்று தோழிகளும் அவளை கட்டிப் பிடித்துக் கொண்டனர். அடுத்து  ரித்தி அதே இடத்தில் வைத்து அவர்கள் பள்ளியின் பெயரைப் போட்டு, அதனோடு ரௌடிகள் என்ற இணைப் பெயரையும் போட்டு, இவர்கள் நால்வர் வாட்ஸ் அப் நம்பரையும் கேட்டு வாங்கி ஒரு குழுவை தொடங்கி வைத்தாள்.

புவி.... ஒரு வடிவேலு ஸ்டில்லைப் போட்டு, "இப்பவே கண்ணைக் கட்டுதே,,," என குழுவை வெற்றிகரமாக தொடங்கி வைத்தாள்.

அவர்கள் பேச்சு சற்று நேரம் வேறு திசையில் பயணிக்க, ஜுலைகா வள்ளியைப் பார்த்து,

“உனக்கும் அண்ணாவுக்கு கல்யாணம் ஆகி இப்போ சிக்ஸ் இயர்ஸ் இருக்கும் இல்ல. நீ மெட்ராஸ் போனேன்னு மட்டும் தான் தெரியும். நீ எப்போ அவர் கூட சேந்து வாழ ஆரம்பிச்ச..”

அவள் அப்படிக் கேட்டதும், வள்ளி என்ன பதில் சொல்வது எனப் புரியாமல் திகைக்க அங்க ஒரு சங்கடமான மௌனம் சூழ்ந்தது.

புவி உடனே அந்த சூழலை இலகுவாக்கும் பொருட்டு, “மச்சி எப்ப வந்து சேந்தா என்ன..? மனுஷன் எவ்ளோ ரொமாண்டிக் பாத்தியா. பொண்டாட்டி என்ன என்ன ஆசைப்பட்டான்னு தெரிஞ்சிகிட்டு... அதை எல்லாம் இம்மி குறையாம நிறைவேத்திக் கொடுத்து இருக்கார். என்கிட்டக் கூட அண்ணா பேசலை மச்சி. எங்க வீட்டுக்கு போயி என் ஹஸ்பன்ட் அட்ரெஸ் வாங்கி நேரா அவர்கிட்ட பேசி இருக்கார்..”

புவி அப்படி சொல்லியதும், ஜுலைகா, “எங்க வீட்ல கூட அவர்கிட்ட தான் பஸ்ட் பர்மிசன் கேட்டு இருக்கார்..” என பூரிப்போடு சொன்னாள்.

ரித்தியோ, “அண்ணா எனக்கு பேஸ் புக்ல பிரண்ட் ரிக்வெஸ்ட் கொடுத்தார் மச்சி. நான் கூட ஏதோ ஹன்ட்சம் கை ரிக்வஸ்ட் கொடுக்குதே நம்ம கனவு சீக்கிரம் நிறைவேறிடும் போலன்னு நம்பி அக்கெப்ட் பண்ணேன். பட் ஸ்வீட் சர்ப்ரைஸ்சா உன்னோட ஹஸ்பன்ட்னு இன்ட்ரோ கொடுத்துட்டு உன்னைப் பத்தி பேச ஆரம்பிச்சார். வீட்ல பர்மிசன் வாங்கிட்டு உன்னைப் பாக்க ஓடி வந்துட்டேன் இல்ல...” அவள் விளக்கி முடித்ததும்,

புவி அவளைப் பார்த்து, “ஏ அலைஞ்சான் குட்டி. அண்ணா டூ ஸ்மார்ட்ல அதான் நம்ம வள்ளிய செலக்ட் பண்ணி இருக்கார்..” என்று அவளுக்கு பழிப்பு காட்டவும்,



DO NOT COPY

“யார்டி அலைஞ்சான் குட்டி....?” என சற்று நேரம் அவளை அடிக்க துரத்தியவள், பின்பு ஏதோ நினைவு வந்தவளாக,

“ஏய்... எனக்கு ஒரு மேட்டர் கிடைச்சிடுச்சி.... எல்லாரும் என்னை சுத்தி ரவுண்டா உக்காருங்க. நம்ம கேங்ல முதல்ல கல்யாணம் ஆனது வள்ளிக்கு தான். பட் சில பல இஸ்யூஸ்சால... அவளை விட்ரலாம். நெக்ஸ்ட் நம்ம ஜுலைகா... பாவம் அது பச்சை மண்ணு... அவகிட்ட இந்த கேள்வியை கேக்கவே முடியாது. மூணாவது வாயடி புவி... சோ இப்போ நீ என்ன பண்றன்னா புவி... முன்னாடி வந்து உன்னோட பஸ்ட் நைட் சீக்ரெட்டை ஓபன் பண்ற. விதிய பாத்தீங்களா பிரண்ட்ஸ்... எவ டவுட் கேட்டாலோ கடைசியா அவளே டவுட் கிளியர் பண்ற மாதிரி ஆயிடுச்சி.... காட் இஸ் கிரேட்..” என தன் உரையை முடிக்க,

புவி கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், முன்னே வந்து நின்றாள். வெட்கப்படுவதைப் போல அவள் நடிக்க, ரித்தியோ, வாந்தி எடுப்பதைப் போல நடித்து அதற்கு பரிசாய் ஒரு கிள்ளை புவியிடமிருந்து பெற்றாள்.

அடுத்து, “மச்சி பஸ்ட் நைட் சீக்ரெட் மட்டும் சொன்னாப் போதும்ல செகண்ட் நைட் சீக்ரெட் எல்லாம் கேக்க மாட்டீங்க இல்ல...” என உறுதி கேக்க,

ரித்தியோ ஆர்வக் கோளாறில், “ச்சே ச்சே.... நீ ஒருக் கதை மட்டும் சொல்லு மச்சி போதும்.” என வாக்கு கொடுத்தாள்.

உடனே புவி தன் கதையை தொடர்ந்தாள்.

“எங்க வழக்கத்துல பையன் வீட்ல தான் பஸ்ட் நைட் ஏற்பாடு பண்ணுவாங்க. சோ சாயங்காலமே அங்க போயாச்சு.

அடிக்கிற சிவப்பு கலர்ல ஒரு பட்டுப் புடவை. கொஞ்சமா நகை..”

அவள் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுதே, ரித்தி இடையிட்டு, “கரெக்ட் மச்சி.... நிறைய நகை போட்டா கழட்டும் போது டைம் வேஸ்ட் ஆகும் இல்ல... ஹி ஹி ஹி...” என சொல்லிவிட்டு அசட்டுத் தனமாய் சிரிக்க,

புவியோ, “இனி நடுவுல பேசின.... அதோட கதைய நிப்பாட்டிட்டு போயிருவேன்..” என மிரட்ட, ரித்தி தன் கையால் வாயைப் பொத்திக் கொண்டு அமர்ந்துவிட்டாள்.

புவி மீண்டும் தன் கதையை தொடங்கினாள்.

“தலை நிறைய மல்லிகைப் பூ. ரெண்டு பேத்துக்கும் ஒண்ணா டிபன் பரிமாறுனாங்க. சாப்டு முடிச்சதும்... அவருக்கு அத்தை முறை உள்ள கிழவிக எல்லாம் எங்க ரெண்டு பேத்துக்கும் நலங்கு வச்சாங்க. அப்போ அந்த கிழவிஸ் எல்லாம் நான் வெஜ் ஜோக்கா சொன்னாங்க மச்சி...” என சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஜூலைக்கா இம்முறை, “அது என்ன ஜோக் மச்சி..” என வாயைப் பிளந்துக் கொண்டு கேட்க,

“உன்ன எல்லாம் பச்சை மண்ணுன்னு சொன்னாலே ஒருத்தி எங்க அவ..” என்று ரித்தியை கண்களால் தேட, அவளோ இப்பொழுது தன் வாயிலிருந்து கையை எடுத்துவிட்டு, ஜூலைகாவின் வாயைப் பொத்தி விட்டு, “யூ கண்டினியூ மச்சி..” என சொல்ல, வள்ளி சிரிப்புடன் கதை கேட்க தயாரானாள்.



DO NOT COPY

“அப்புறம் முறைக்கு அண்ணியா இருக்கவளுக எல்லாம்.... அப்படி இப்படின்னு ஒரே அட்வைஸ் அலை... அவ்ளோ நேரம் நல்லா தான் இருந்தேன் மச்சி... இவளுக சொல்லிக் கொடுக்குறேன்னு பயம் காட்டிட்டிடாளுக....

அப்படியே பால்கனி செவுத்துல இருந்து குதிச்சி வீட்டைப் பாத்து ஓடிடலாமான்னு இருந்துச்சி. அப்புறம் ஒரு மினி அண்டா சொம்பு நிறைய பாலைக் கையில கொடுத்து எங்க ரூமுக்கு அனுப்பி விட்டாங்க. உள்ள போயி கதவை திறந்ததும், எம் புருஷன் டாப் லெஸ்சா நின்னுட்டு இருந்தார்.”

புவி அப்படி சொல்லியதும், விழுந்து விழுந்து சிரித்த வள்ளி, “அண்ணா செம ஸ்பீடோ..” எனக் கேட்க.

“சட்டப்படி நீ தான் டவுட் கிளியர் பண்ணனும். ஓவரா பேசின அடுத்து உன்ன கோத்து விட்ருவேன்..” என மிரட்ட, வள்ளி சிரித்தபடியே, தன் கரம் கொண்டு வாயைப் பொத்திக் கொண்டாள்.

“அது..!” என தல அஜீத்தைப் போல வசனம் பேசியவள், “எங்க விட்டேன் ஹா... என்னோட ஹீரோ டாப் லெஸ்ஸா இருந்தார். அதைப் பாத்ததும் எனக்கு உடம்பெல்லாம் ஜில்லோனு ஆயிருச்சி.

என் கையப் பிடிச்சி கூட்டிட்டுப் போயி கட்டில உக்கார வச்சார். அப்புறம் நேரா வந்து என் தலையில இருந்த மல்லிப் பூவை வாசம் பிடிச்சார்.

எனக்கு என்ன என்னவோ ஆயிட்டு இருந்தது. அடுத்து அவர் கை என் முந்தானையை தொட, நான் கண்ணை இறுக்கி மூடிகிட்டேன்.

கொஞ்ச நேரம் ஒரு சத்தமும் இல்ல. முழிச்சி பாத்தா.... என் வீட்டுக்காரர் என் முந்தானையில வாய தொடச்சிட்டு...என்ன பாவமா பாத்து.."

ரித்தி ஆர்வம் தாங்கமால், "பார்த்து.." என அவள் பாட்டுக்கு பின் பாட்டு பாட, "கல்யாண பந்தியில சாப்பிட்டது ஏதோ ஒத்துக்காம அலர்ஜி ஆகி, மனுஷன் நிமிசத்துக்கு ஒரு முறை வாந்தி எடுத்துட்டு இருந்து இருக்கார்.

என் தலையில இருந்த மல்லிபூ வாசம் பிடிச்சது கூட.... மல்லிப்பூவை ஸ்மெல் பண்ணா கொமட்டல் நிக்கும்னு தானாம். இது தெரியாம... நான் மெர்சலாகி...ஐயோ ஐயோ... கடைசியா.. என்ன பாத்து நீ ட்ரெஸ் மாத்திட்டு தூங்கு புவி. இப்போ எனக்கு உடம்பு சரியிலைன்னு வெளிய சொன்னா யாரச்சும் ஏதாச்சும் பேசுவாங்கன்னு சொல்லிட்டு... பாத்ரூமை பாத்து ஓடிட்டார்.

நானும் பாவம் புருசன்னு அவர் வாந்தி எடுக்கும் போது எல்லாம் வாய் கழுவ தண்ணி கொடுத்து... கொடுத்து..... கொடுத்து... டயர்ட்டாகி கடைசியா கீழப் படுத்தே தூங்கிப் போயிட்டேன்.

இந்தக் கொடுமைய எல்லாம் விடப் பெருங் கொடுமை அடுத்த நாள் எங்க வீட்டுக்காரர் ரொம்ப டயர்டா இருக்குறதைப் பாத்து அவர் அத்தை கிழவிஸ் அடிச்ச ஜோக்ஸ் எல்லாம் காது கொடுத்து கேக்க முடியல... யப்பா ஒரு வழியா என் பஸ்ட் நைட் ஸ்டோரிய சொல்லி முடிச்சிட்டேன். யாரங்கே ஒரு கூல் கோக் குடுங்க.." என தன் கதையை முடிக்க,

ரித்துவோ, பொங்கி எழுந்துவிட்டாள். "நோ... இதெல்லாம் போங்காட்டம்... நான் இதை ஒத்துக்கவே மாட்டேன். அடியே இந்த மாதிரி ஒரு சப்பை கதையை சொல்லத் தான் என்னை கை கட்டி வாய் மூடி உக்கார வச்சியா..?"

என அவளிடம் சண்டைக்கு போக, ஜூலைகாவும் வள்ளியும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

இரவு முழுக்க, தோழிகள் என்ன பேசினார்கள் என்று தெரியாமலேயே, ஒருவரை ஒருவர் கிண்டல் அடித்து, கேலி பேசி சிரித்துக் கொண்டிருந்தனர். அவ்வப்போது வாழ்கையில் நடந்த சுவாரசியமான சம்பவங்களையும் பகிர்ந்துக் கொண்டனர்.

கருக்கல் வெளுக்க தொடங்கும் நேரத்தில், ஒருவர் மடியில் ஒருவர் விழுந்து அப்படியே உறங்கியும் போயினர். நட்பின் மடியில் அன்பின் அரவணைப்பில்.

வில் - 13

மாடு பெரிதென்று மனிதனைக் கொல்லும்

மூர்க்க சமூகம் விழிப்பதென்று...?

யாரோ தன்னை உலுக்குவதைப் போல தோன்ற, விடிய விடிய விழித்திருந்த அலுப்பில், வள்ளி இமைகளைப் பிரிக்கப் பிடிக்காமல், புரண்டு படுத்து, மீண்டும் உறங்க முயன்றாள்.

ஆனால் அப்பொழுதும் யாரோ அவளை தொடர்ந்து உலுக்கிக் கொண்டிருக்க, வள்ளி வேண்டா வெறுப்பாய் கொஞ்சமாய் விழிகளைப் பிரித்தாள்.

DO NOT COPY

அப்படி பிரித்தவள், தன் முகத்திற்கு வெகு அருகே தெரிந்த வில்லனின் முகத்தைக் கண்டதும், தூக்கம் மொத்தமாய் கலைய, விருட்டென்று எழுந்து அமர்ந்தாள்.

அவளின் அந்த செய்கையில் புன்னகைத்த வில்லன், "குட் மார்னிங் வள்ளி.." என புன்னகை முகமாய் அவளுக்கு காலை வாழ்த்து சொல்ல, வள்ளியும், லேசாய் இதழ் பிரித்து, "குட் மார்னிங்" என்றாள்.

வள்ளி அமர்ந்த நிலையிலேயே பார்வையை சுழற்ற, சற்று தொலைவில், ஜூலைகாவின் அருகில் யாரோ ஒருவர், அவளின் உடையில் ஒட்டி இருந்த தூசுகளை வாஞ்சையாய் தட்டி விட்டுக் கொண்டிருக்க, ஜூலைகா மலர்ந்த முகத்தோடு அவரிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

அவர்களுக்கு நேர் எதிரே, புவியும் அவளோடு யாரோ ஒரு நெடியவனும் நின்றுக் கொண்டிருக்க, அந்த நெடியவன், புவியின் கலைந்த கூந்தலை அவள் காதோரம் ஒதுக்கிவிட்டு, அவள் காதுகளில் ஏதோ ரகசியம் பேச, புவி சற்றே முகம் சிவந்து அவன் புஜத்தில் குத்தினாள். அந்தக் காட்சி அழகிய கவிதையை ஒத்து இருந்தது.

அடுத்து அவள் பார்வையால் ரித்தியை தேட, "மதி... ரித்தியை ஏரியை சுத்தி வாக் கூட்டிட்டு போய் இருக்கான். மேடம் திருப்பள்ளி எழுந்தா... டீ குடிச்சிட்டு..எல்லாரும் பெரியம்மா வீட்டுக்கு போலாம்."

அவன் அப்படி சொன்னதும், சற்றே தூரத்தில் நின்றுக் கொண்டிருந்த ஜோடிகளைக் காட்டி, "அவங்க ஜூலி, புவி... ஹஸ்பன்ட்ஸ் தானே...?" என வினவ,

'ஆம்..' எனபதைப் போல தலை அசைத்தவன், " நேத்தே எல்லாரும் அவங்க அவங்க வைப்க்கு பாடிகார்டா அரசனூர் வந்தாச்சி. ரெண்டு பெரும் மதி வீட்ல தங்கி இருந்தாங்க. இன்னைக்கு விளையாட்டு திருவிழா இல்லையா... அதனால எல்லாரையும் இருந்து திருவிழா பாத்துட்டு... அப்புறமா ஊருக்கு கிளம்ப சொல்லி இருக்கேன்.."

வில்லன் அப்படி சொன்னதும், "ஓ மை காட்... நானும் சீக்கிரம் கிளம்பனும்.." என்றவள், வேகமாய் எழுந்து நின்றாள்.

அவள் எழுந்து நிற்கவும், ஜுலைகாவும், புவியும் இவளை நோக்கி வந்தனர். கூடவே அவரவர் வாழ்க்கைத் துணை.

ஜுலைகா, புன்னகை முகமாய், இரு தோழிகளை நோக்கியும், "இவர் ரபீக்... என்னோட ஹஸ்பன்ட்... திருச்சியில பேமஸ் கிரிமினல் லாயர்..." என்று அறிமுகப்படுத்த,

புவி, "எங்க கேக் பாக்ஸையே கட்டி மேய்க்குறீங்க... உங்களுக்கு கிரிமினல் கேஸ் எல்லாம் தூசா தான் அண்ணா இருக்கும்....நான் புவனா... இவர் என்னோட ஹஸ்பன்ட் பாரெஸ்ட் ரேஞ்சர் மகேந்திரன்.." என்று தன் அறிமுகப்படலத்தை தொடங்க, ரபீக்,

"நாங்க எல்லாம் நேத்தே இன்ட்ரோ ஆயிட்டோம்... மேடம்.." என புவனாவிடம் கலகலக்க, வள்ளி முகத்தில் ஒரு புன்னகையோடு அத்தனையும் வேடிக்கைப் பார்த்தபடி நின்றுக் கொண்டிருந்தாள்.

DO NOT COPY

மகேந்திரன் வள்ளியை நோக்கி, "நீங்க எங்க வீட்டு மேடம் சொல்ற கதையில வர இன்ட்ரஸ்டிங் கேரக்ட்டர் வள்ளி தானே.... நீங்க எப்படி எல்லாம்....ஸ்கூலுக்கு டிமிக்கி கொடுத்துட்டு...." அதற்கு மேல் மகேந்திரன்.. .. 'ஆ..." என்ற அலறல் சத்தத்தை மட்டுமே வெளிபடுத்தினான். புவி பலமாய் அவன் கைகளில் கிள்ளிக் கொண்டிருந்தார்.

வள்ளியின் முகத்தில் பெரிதாய் முறுவல் மலர, "எப்படி இந்த காட்டுவாசியை சமாளிக்கிறீங்க... கிள்ளி கிள்ளியே உடம்புல இருக்குற பாதி கறியை பிச்சி எடுத்துடுவாலே..." என கேட்க,

சோகம் போல முகத்தை வைத்துக் கொண்டவன், "சரியா சொன்னீங்க வள்ளி... நீங்க எல்லாம் இருக்கீங்கன்னு கையில கிள்றா.... இல்லாட்டி... ஆ....." மேலே பேசமுடியாமல் புவி மீண்டும் வலுவாய் கிள்ளி வைக்க, பெரிய சிரிப்பலை ஒன்று அந்த இடத்தை நிறைத்தது.

அதற்குள் தன் ஏரிக்கரை நடையை முடித்துக் கொண்டு வந்திருந்த ரித்திகா, "நானும் வந்துட்டேன்... என்ன விட்டுட்டு எல்லாரும் அப்படி என்ன சொல்லி சிரிக்கிறீங்க... நானும் நானும்..." என குழந்தைப் போல காதை தீட்டிக் கொண்டு முன்னால் வர, மீண்டும் அங்கே ஒரு சிரிப்பலைக் கிளம்பியது.

ரபீக், "இவங்க கேங்கே ஒரு மாதிரி ரௌடி கேங் தான் போல... நாம தெரியாம வந்து மாட்டிட்டோம் போல மகேன்.." என்று சொல்ல, "சரியா சொன்னீங்க....ரபீக்!" என்று பதில் சொன்ன மகேன், ரபீகிற்கு ஹை பை கொடுக்க, பெண்கள் மூவரும் அவர்கள் இருவரையும் முறைத்து நின்றனர்.

உடனே அவர்கள் இணையிடம் கண்களால் கெஞ்ச துவங்க, அதே நேரம் மதி, அனைவருக்கும் புதிதாய் வேப்ப மரத்தில் இருந்து ஒடித்து வந்திருந்த, வேப்பங் குச்சிகளை விநியோகித்தான்.

பெண்கள் தங்களுக்குள் பேசி சிரித்தபடி ஒருபுறம் ஒதுங்கி விட, ஆண்கள் தங்களுக்குள் அளாவலாவியபடி ஒரு பக்கம் நின்று பல் சுத்தத்தை தொடங்கினர்.

இவர்கள் பல் சுத்தம் செய்துவிட்டு, ஏரிக்கரையோரம் இருந்த பொது குழாயில் முகம் கழுவி வரும் போது, ஜேம்ஸ் இரண்டு பெரிய பெரிய ப்ளாஸ்க்குகளில் டீயோடும், மஞ்சள் பையில் பிஸ்கட் பாக்கெட்களையும், பேப்பர் கப்புகளையும் இவர்களுக்காய் சுமந்து வந்திருந்தான்.

சுமந்து வந்தவற்றை மதியிடம் கொடுதவன், நேரே வள்ளியை நெருங்கி, “போங்க மேடம் எவ்ளோ பயந்துட்டேன் தெரியுமா..? நான் பாட்டுக்கு லூசு மாதிரி உங்களை வீடெல்லாம் தேடிட்டு இருந்தேன். அப்புறம் தான் தனம் அம்மா... உங்க பிரண்ட்ஸ் வந்து இருக்காங்கன்னு ஏரிக்கரைக்கு போய் இருக்கீங்கன்னு சொன்னாங்க...ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்து இருக்கலாம் இல்ல... இன்னும் பத்து நிமிஷம் அவங்க என்கிட்ட சொல்லாம இருந்து இருந்தா... நான் நம்ம எடிட்டர்க்கு போன் பண்ணி உங்களைக் காணோம்னு சொல்லி இருப்பேன்... கொஞ்ச நேரத்துல ரொம்ப பயந்துட்டேன் மேடம்...”

ஜேம்ஸ் உரத்த குரலில் வள்ளியிடம் சண்டைப் பிடிப்பவனைப் போல விவாதித்துக் கொண்டிருக்க, “ஜேம்ஸ் ப்ளீஸ்....ஐயம் ஆல் ரைட் ஓகே... நான் என்ன கிண்டர் கார்டன் கிட்டா.... எங்கப் போனாலும் உங்ககிட்ட சொல்லிட்டுப் போக..” என பதிலுக்கு வள்ளியும் அவனைக் கடிந்துக் கொண்டாள்.


DO NOT COPY

அது ஜேம்சை இன்னும் உசுப்பிவிட்டார் போல ஆகிவிட்டது. “நீங்க ஒன்னும் இன்ப சுற்றுலா வரலை மேம். ரெண்டு பெரும் நம்ம பத்திரிக்கை விசயமா முன்ன பின்ன தெரியாத கிராமத்துல தங்கி ஆர்டிகிள் எழுத வந்து இருக்கோம். எடிட்டர் என்னை உங்க கூட அனுப்பும் போது... வள்ளியை நீ தான் பாத்துக்கணும்னு தனிப்பட்ட முறையில சொல்லி அனுப்பி இருக்கார்.

அதோட நீங்க வேற வேலியில போற ஓணானை பிடிச்சி ட்ரெஸ்குள்ள விட்டுக்குற டைப். உங்க ரூம்ல நீங்க இல்ல. உங்க போனும் ரூம்ல அனாதையா கிடக்கு. நான் வேற என்னத்தை நினைப்பேன் சொல்லுங்க... கொஞ்சமாவது  பொறுப்பா பேசுங்க.” ஜேம்ஸ் பொங்கித் தள்ள அங்கே என்னப் பிரச்சனை என்பதைப் போல வில்லன் வந்து நின்றான்.

ஜேம்ஸ் உரக்க பேசியதில், அருகில் நின்றுக் கொண்டிருந்த தோழிகளும், “யாருடா இவன் வள்ளிக்கிட்ட இவ்ளோ உரிமையா பேசுறது..?” என்பதைப் போல பார்த்து நிற்க, மற்ற ஆண்களின் கவனமும் அவர்கள் புறம் திரும்பியது.

ஜேம்ஸின் அருகில் வில்லன் வந்து நிற்கவும், ஏதோ பிரச்சனை உருவாகப் போகிறது என்று உணர்ந்த வள்ளி. வேகமாய் வில்லனின் கரம் பற்ற வர. அவளை அங்கேயே கைக் காட்டி நிறுத்திய வில்லன்,

“நீங்க சொல்றது ரொம்ப சரி மிஸ்டர் ஜேம்ஸ். அவங்க உங்ககிட்ட சொல்லாம வந்து உங்களை டென்சன் பண்ணது தப்பு தான். அவங்க அப்படி வரக் காரணம் நான் தான். அதனால அவங்களுக்கு பதில் நான் சாரி கேட்டுகிறேன். இன்னைக்கு அவங்க பர்த்டே. அவங்க பிரண்ட்ஸ் எல்லாரையும் வேற வேற ஊர்ல இருந்து வரவழைச்சி ஒரு சர்ப்ரைஸ் பார்டி அரேஞ் பண்ணி இருந்தேன். அதான் அவங்களுக்கே சொல்லாம அவங்களை இங்க கடத்திட்டு வந்தோம்.

அவங்களுக்கே தெரியாத விசயத்தை அவங்க எப்படி உங்களுக்கு சொல்வாங்க. நீங்க வீடு முழுக்க தேடின நேரத்துல தனம் பெரியம்மாகிட்ட கேட்டு இருந்தா அவங்க உங்களுக்கு சொல்லி இருப்பாங்க. எனிவே.... உங்களை டென்சன் பண்ணத்துக்கு ரொம்ப சாரி..."

வில்லன் மறுபடியும் மன்னிப்பை வேண்ட, ஜேம்ஸின் மனதில் அத்தனை நேரம் வியாபித்திருந்த கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. வில்லன் ஏதேனும் கோபமாய் பதிலளித்து இருந்தால் அங்கே நிச்சயம் ஒரு போர்க்களத்தை ஜேம்ஸ் உருவாக்கி இருப்பான்.

வில்லன் கேட்ட மன்னிப்பு அவனுள் குற்ற உணர்வை தூண்ட, "சாரி எல்லாம் வேண்டாம் சார். நான் மேடமை காணோம்னதும் கொஞ்சம் எமோசனல் ஆயிட்டேன். இங்கயும் வந்து ஏதாவது வம்பை விலைக் கொடுத்து வாங்கிடுவாங்களோ அப்படின்னு ஒரு பயம் தான் சார்." என்றவன், வள்ளியிடம் திரும்பி,

"ஹாப்பி பர்த்டே மேம்..." என மெல்லிய குரலில் வாழ்த்த, வள்ளி ஒரு நன்றி நவில்தலுடன் அவன் வாழ்த்தை ஏற்றுக் கொண்டாள்.

மற்ற இரு தோழிகளுக்கும் கணவன் மனைவியின் செயல் ஆச்சர்யமாய் இருக்க, அவர்கள் வள்ளி வில்லனை வித்யாசமாய் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மதி அனைவருக்கும் தேநீர் கோப்பையை வழங்க, அனைவரும் ஒரே இடத்தில் கூடி நின்று, தேநீரை சுவைத்தபடி கலந்துரையாட தொடங்கினர்.



DO NOT COPY

ரபீக் வள்ளியை நோக்கி, “உங்க பேஸ் எனக்கு ரொம்ப பரிட்சயமா இருக்க மாதிரி இருக்கு.... நீங்க மீடியால வொர்க் பண்றீங்களா என்ன..?” எனக் கேட்க,

மகேந்திரனும், “ஆமா எனக்கு கூட இவங்களை எங்கையோ பாத்த பீல் இருக்கு...” என்று உரைக்க, வில்லன் முன் வந்து,

“இவங்க வேற யாரும் இல்ல... கனல் பத்திரிகையோட ஒன் ஆப் த பேமஸ் ரிப்போட்டர் விக்யா..அப்புறம் ரொம்ப நூதனமா மதுவுக்கு எதிரா லாஸ்ட் பை இயர்சா போராடிட்டு இருக்க ‘முழக்கம்’ பறை இசைக் குழுவோட தலைவி..”

வில்லன் அப்படி சொன்னதும், இருவரின் கண்களிலும் அதுவரை இருந்த தோழமை உணர்வு மறைந்து, உடல் மொழியில் ஒரு மரியாதை வந்தது.

“வாவ்... கனல்ல அரசியலும் இளைய சமூதாயமும் அப்படிங்கிற தொடர் நீங்க எழுதினது தானே. மேம் நான் உங்க கருத்துக்களுக்கும் எழுத்துக்கும் பெரிய ரசிகன்..” என ரபீக் உரைக்க,

மகேனோ, “இப்போ கூட கரன்ட்டா... விடியலும் ஒரு கிராமமும் அப்படின்னு ஒரு ரியல் ஆர்டிகிள் எழுதிட்டு இருக்கீங்க இல்லையா... நான் உங்க பேஸ் புக் பாலோவர் மேம்..” என அடக்கமாய் தெரிவிக்க, அவளின் தோழிகளும் அவளை பிரமிப்பாய் பார்த்துக் கொண்டிருந்தனர்.

“ ‘விக்யா..’ இந்தப் பேர் இதழியல் துறையில இப்போ ரொம்ப பேமஸ்னு தெரியும். பட் அது நீன்னு தெரியாது டீ. உன்னை எங்களோட பிரண்ட்னு சொல்லிக்க ரொம்ப பெருமையா இருக்கு..” என ஜுலைகா அவளை கட்டிக் கொள்ள, மற்ற தோழிகளுக்கும் அவளை பெருமைப் பொங்கப் பார்த்தனர்.

ஜுலைகாவின் அரவணைப்பில் இருந்து வெளியே வந்தவள், மகேனைப் பார்த்து, “நான் இப்போ எழுதிட்டு இருக்க கிராமத்துக்கு தான் நீங்க எல்லாரும் வந்து இருக்கீங்க....!” என சொல்ல,

மகேன் முகத்தில் அப்படி ஒரு ஆச்சர்யம். அதோடு, “நான் எழுதின பள்ளிக் கூடத்துல வர மதி கதாபாத்திரம் இவர் தான். அறிவியல் ஆசான். உங்களுக்கு அவரோட ஸ்டுடென்ட் நிறைய மேஜிக் காட்டுவாங்க..” என சொல்ல, மற்ற ஆண்கள் இருவரும் உத்வேகத்தோடு மதியுடன் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

அடுத்து வள்ளி ஜேம்சையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க, வில்லன், “சரி சரி நேரம் ஆகுது... எல்லாரும் சீக்கிரம் வாங்க... விளையாட்டுத் திருவிழா பாக்கப் போகணும் இல்லையா..?” என அவர்களைக் கிளப்ப, அனைவரும் பேசி சிரித்தபடியே ஆனி ஐயாவின் வீட்டிற்கு புறப்பட்டு சென்றனர்.

வீட்டின் வாயிலிலேயே அவர்களை வரவேற்ற தனம் அம்மா, “ஏம்பா இம்புட்டு நாளா கஷ்டப்பட்டு எல்லா வேலையும் செஞ்சிட்டு, நீங்களே திருவிழாவுக்கு தாமசமா போலாமா...? உங்க ஐயா உங்களுக்காக காத்து இருந்து பாத்துட்டு இப்பந்தான் கிளம்புனாங்க. சீக்கிரம் குளிச்சிட்டு எல்லாரும் கிளம்புங்க விரசா..” என்று அவர்களை விரட்ட தொடங்கி இருந்தார்.

வள்ளி தன் தோழிகளை அறிமுகப்படுத்த முயல, “எல்லாம் வில்லன் தம்பி சொன்னுச்சி... நீங்க மொதோ குளிச்சிட்டு சாப்பிட வாங்க... மீதிக் கதையை எல்லாம் ராப் பொழுது முச்சூடும் உக்காந்து பேசுவோம்.” என தனம் அம்மா சமையலறை நோக்கி நடக்க, அனைவரும் குளியலறை நோக்கி நடந்தனர்.

காலை உணவை முடித்துக் கொண்டதும், வில்லன் அவர்களுக்கு வாகனம் ஏற்பாடு செய்திருக்க, அனைவரும் அதில் மைதானத்தை அடைந்தனர். கூடவே தனம் அம்மாவும் விளையாட்டுப் போட்டிகளைக் காண வந்தார்.

நேற்று சுற்றி வந்த மைதானம் இது தானா என வள்ளிக்கே ஒரு நொடி சந்தேகம் வந்தது. மைதானம் விளையாட்டு அரங்கமாய் உருமாறி இருந்தது.

ஆங்காங்கே போட்டிகள் நடக்க, சுற்றிலும் பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் படி, அடுக்கடுக்காய் மர பலகையில் தற்காலிக இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன.

அதோடு மையமான இடத்தில் உயரமான மேடை அமைக்கப்பட்டிருக்க, அதில் விழாவில் பரிசளிக்க வந்திருந்த நாயகர்கள் அமர்ந்திருந்தனர்.

அவர்களுக்கு முன்னால் ஒரு பந்தம் கொழுந்து விட்டு எரிந்துக் கொண்டிருக்க, சற்று முன்னால் தான் விளையாட்டு போட்டிகள் தொடங்கி இருக்கும் என்பதை அனைவரும் உணர்ந்துக் கொண்டனர்.

வள்ளியின் தோழமைகளோடு, ஜேம்சும் அமர இடம் தேடிக் கொடுத்த வில்லன் கூட்டத்தில் கலந்து விட, மதியும் அவனைத் தொடர்ந்து சென்றுவிட்டான்.

அமர்ந்த இடத்தில் இருந்த படியே மட்டும் புகைப்படம் எடுப்பது தனக்கு சாத்தியப்படாது என்று உணர்ந்த ஜேம்ஸ், தானும் இறங்கி தாழ்வான பகுதிக்கு சென்று விட, வள்ளி அப்பொழுது தான் தெளிவாய் மேடையில் இருந்தவர்களை கவனித்தாள்.

ஊன்றிக் கவனித்ததும், அவளை அறியாமலேயே அவள் இதழ்கள், 'வாவ்' என்ற வார்த்தையை முணுமுணுக்க, அவள் அருகில் அமர்ந்திருந்த ரித்தி, "ஏய்... அது பாரா ஒலிம்பிக்ஸ்ல கோல்ட் மெடல் வாங்கின மாரியப்பன் தானே... பக்கத்துல ஒலிம்பிக்ஸ்ல சில்வர் வின் பண்ண பி.வி சிந்து தானே... அந்த தேர்ட் பர்சன் தான் யாருன்னு தெரியல.."

ரித்தி வள்ளியின் காதுகளில் முணுமுணுக்க, "அவங்க பி.டி உஷா... அவங்களுக்கு பக்கத்துல இருக்குறது... மல்லேஸ்வரி... அவங்க பக்கத்துல இருக்க பெரியவர் ஊர்த் தலைவர் ஆனி ஐயா" என்ற வள்ளியின் பதிலைக் கேட்டதும், ரித்தி,

"வாவ்.... இந்த சின்ன கிராமத்துல நடக்குற விளையாட்டு போட்டிக்கு இவ்ளோ பாப்புலர் பர்சன்ஸ் வந்து இருக்குறது பெரிய ஆச்சர்யம் தான் இல்லையா..?"

ரித்தியின் இந்த பதில் வள்ளிக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்கவில்லை. மாறாக ஏமாற்றத்தையே கொடுத்தது.

"இல்ல ரித்து... இந்தியாலா கிரிக்கெட் தவிர வேற எதையுமே விளையாட்டா நம்ம மக்கள் மதிக்கிறது இல்ல.... இதே இடத்துல தோனியோ.. கோலியோ... வந்து இப்படி உக்காந்துட முடியுமா..? அந்த மேடையில இருக்குற எல்லாரும் செலிபர்டிஸ் தான். ஆனாலும் என்னைக் கேட்டா அவங்களுக்கான அங்கீகாரத்தை நம்ம மக்கள் இன்னும் முறையா கொடுக்கலைன்னு தான் சொல்லுவேன். உனக்கே அதுல ரெண்டு பேத்தை அடையாளம் தெரியல. சாமனிய மக்களை எப்படி குறை சொல்றது.."

வள்ளியின் ஆதங்கமான பதிலைக் கேட்ட, ரித்தி, "உன்னோட தாட்ஸ் எல்லாம் இப்போ ரொம்ப வேற மாதிரி இருக்கு வள்ளி. கிரேட். நீ சொல்றதும் உண்மை தான். நாம மாறனும் மொதல்ல. அப்புறம் சமூகம் தன்னைப் போல மாறும்."

தோழிகள் பேசிய படி மைதானத்தில் கண் வைத்திருக்க, நீளம் தாண்டுதலில் ஒரு இளைனனின் வெற்றி அறிவிக்கப்பட, அரங்கம் கரகோஷத்தில் அதிர, இவர்களின் கவனம் முற்றிலும் விளையாட்டு போட்டிகளின் மீது திரும்பியது.

முழுதாய் ஆறு மணி நேரம் விளையாட்டு மைதானத்தில் எப்படி கழிந்தது என்றே தெரியாமல் நேரம் ஓடி இருந்தது. இடையில் ஒரு அரை மணி நேரம் விளையாட்டுப் போட்டிகள் உணவு இடைவேளைக்காய் நிறுத்தப்பட்டிருந்தன.

அரங்கிலேயே, சூடானான சுவையான கலைவை சாதம் விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டிருக்க, அனைவரும் அங்கேயே மதிய உணவை உண்டனர்.

அதோடு வித விதமாய் நாவில் எச்சில் ஊறவைக்கும் உள்ளூர் தின்பண்ட வகைகள் இருக்கைக்கு அருகேயே விற்கப்பட, தோழிகள் நால்வரும், தேன்மிட்டாய், அச்சு முறுக்கு, அதிரசம், தேன்குழல், மாங்காய் வத்தல், பனங்கிழங்கு என்று கண்ணில் கண்டதையெல்லாம் வாங்கி வயிற்றுக்குள் தள்ளிக் கொண்டிருந்தனர்.

மகேனும், ரபீக்கும் விளையாட்டு போட்டிகளில் ஆர்வமாகி ஜேம்சுடன் தாழ்வான பகுதிக்கு சென்று, மிக அருகில் நின்று விளையாட்டு போட்டிகளை ரசிக்கத் தொடங்கி இருந்தனர்.


DO NOT COPY

சுமார் மாலை ஐந்து மணி அளவில் விளையாட்டுப் போட்டிகள் முடிவடைய, வந்திருந்த சிறப்பு விருந்தினர்கள், போட்டியில் வென்ற, விளையாட்டு வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

பெண் வீராங்கனைகள் அனைவரும் ஒன்றே போல, சிறப்பு விளையாட்டாய் இறுதியில் நடைபெற்ற, ஜல்லிக்கட்டில் பெண்களும் கலந்துக் கொண்டதை பெருமிதமாய் குறிப்பிட்டு பேச, இறுதியாய் சிறப்புரையாற்ற மாரியப்பன் எழுந்து வந்து நின்றதும் அரங்கமே அமைதியில் ஆழ்ந்தது.

அனைவருக்கும் பொதுவாய் ஒரு வணக்கத்தை தெரிவித்த மாரியப்பன், "இவ்ளோ இளைஞர்கள் இங்க விளையாட்டு போட்டியில ஆர்வமா கலந்துகிறதைப் பாக்கும் போது ரொம்ப ரொம்ப சந்தோசமா இருக்கு. உங்களுக்கு பின்னாடி உங்க பெற்றோர்கள் உங்களுக்கு உறுதுணையா நிக்குறதைப் பாக்கும் போது... அடுத்த ஒலிம்பிக்ஸ்ல இங்க இருந்து நாலு பேர் இப்போ நான் நின்னுகிட்டு இருக்க இடத்துக்கு வருவீங்கன்னு ஒரு நம்பிக்கை வருது.."

மாரியப்பன் இப்படிப் பேசியதும், அரங்கமே கைதட்டலில் அதிர, கையை உயர்த்தி, அரங்கத்தை அமைதிக்கு கொண்டு வந்த மாரியப்பன், "ஒரு விசயத்தை நாம சாதிக்க, பணம், சூழல், உடல்நிலை இப்படி எல்லாத்தையும் விட மனசுல அந்த விஷயம் மேல நமக்கு இருக்க ஆர்வம் தான் முக்கியம். அந்த ஆர்வம் இருந்தா நம்மாள கண்டிப்பா சாதிக்க முடியும். அதுக்கு உதாரணமா நீங்க என்னையே எடுத்துக்கலாம். அப்படி ஒரு ஆர்வத்தை நான் இங்க இருக்க எல்லா இளைஞர்கள் கண்லையும் பாக்குறேன். சோ நீங்க கண்டிப்பா சாதிப்பீங்க.... எல்லாரும் சாதிக்க வாழ்த்துக்கள்.." மாரியப்பன் தன் உரையை முடித்துக் கொண்டு திரும்பும் போது, மீண்டும் அரங்கம் கைதட்டலில் அதிர்ந்தது.

விளையாட்டு திருவிழாவின் நிறைவாக, தமிழகத்தின் பாரம்பரிய நடன, மற்றும் இசை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்க,

சிலம்பாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் என்று ஒரு வரிசையில் மாணவர்கள் கலக்கிக் கொண்டிருக்க, மற்றொரு வரிசையில், உறுமிமேளம், பறை, நாதஸ்வரம் போன்ற வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன.

பறை இசைத்தபடியே ஆடும் தப்பாட்டம் அனைவர் கவனத்தையும் ஈர்க்க, வில்லன் வள்ளியின் கண்களில் தெரிந்த ஆர்வத்தைக் கண்டு, “வா… வந்து ஆடு…” என அவளை கண்களால் அழைத்தான்.

முதலில் மறுத்த வள்ளி, அவன் மீண்டும் மீண்டும் அழைக்கவே, ஒரு புன்னகையோடு நடனக் கலைஞர்களோடு சென்று இணைந்துக் கொண்டாள்.

அவள் அதிரடியாய் இசையோடு ஆட, அவள் தோழிகள், கூக் குரல் எழுப்பி அவளை உற்சாகப்படுத்த, அடுத்த பத்து நிமிடங்கள் அனைவரின் கவனமும், அடித்து ஆடிக் கொண்டிருந்த வள்ளியின் மீது திரும்பியது.

செயற்கை அலங்கார விளக்குகள் அரங்கத்தில் ஒளி வீச, சுற்றிலும் வெவ்வேறு விதமான இசைகள், அந்த இடத்தை நிறைத்திருக்க, முகத்தில் சிரிப்போடு நடனம் ஆடிக் கொண்டிருந்த வள்ளி, வில்லனின் மனதில் ஆழமான ஓவியமாய் பதிந்து போனாள்.

ஒரு வழியாய் ஆட்டம் பாட்டம் முடிந்து, ஊர் மக்கள் கலைந்து செல்ல, வில்லனும், ஆனி ஐயாவும், வந்திருந்த விளையாட்டு விருந்தினர்களை,



DO NOT COPY

வழி அனுப்பி வைத்துவிட்டு வீட்டிற்கு வரும் போது நேரம் இரவு ஒன்பதை நெருங்கி இருந்தது.

ஆனி ஐயாவின் வீட்டில் பசியாறி முடித்திருந்த வள்ளியின் தோழிகள் ஊர்க் கிளம்ப தயாராய் இருந்தனர்.

அவர்களை மதுரை பேருந்து நிலையத்தில் விட்டு வர வில்லன் ஸ்கார்பியோ வண்டியை எடுக்க, வள்ளி, "நானும் வறேன்..." என்று அவர்களோடு இணைத்துக் கொண்டாள்.

மதுரையில் இருந்து, அவரவர் ஊர் செல்ல, பேருந்து ஏற்றி விட்டதும், அனைவரும் ஒன்றே போல, வள்ளியை கட்டி அணைத்து, "எப்பவும் இதே மாதிரி சந்தோசமா இருக்கணும்..!" என்று வாழ்த்தி விடை பெற்றனர்.

அதுவும் ரித்தி இறுதியாய் கிளம்பும் முன், "எப்பவும் நடந்ததையே மனசுல வச்சிட்டு தொங்கிட்டு இருக்காத வள்ளி... லைப் ஹேஸ் டூ மூவ் ஆன்....இந்த நிமிஷம் மட்டும் தான் நமக்கு சொந்தம்... தேவையில்லாத எல்லாத்தையும் தூக்கி சுமந்துட்டு இருக்காத... உன்னோட பர்த்டேவே கொண்டாடி... கொண்டாடி போர் அடிக்குது வள்ளி. நெக்ஸ்ட் இயர் ஜூனியர் வள்ளி பர்த்டேக்கு கூப்பிட்டா தான் நான் ஊருக்கே வருவேன்..ஓகே.." எனக் கன்னத்தில் முத்தமிட,

சற்றே சிரித்த வள்ளி, "அடியே மொதோ நீ கல்யாணம் பண்ணு. அதுக்கு அப்புறம் எனக்கு அட்வைஸ் பண்ணு." என ரித்தியை கிண்டல் செய்ய,



DO NOT COPY

ரித்தியோ, "எனக்கு வாய்ச்ச நல்லவன் எங்க இருக்கானோ... வான் ..வருவான்... யாருக்கு தெரியும் வள்ளி நான் எல்லாம் என் ஜூனியர் பஸ்ட் இயர் பர்த்டே செலிபரேட் பண்ணிட்டு அதுக்கு அப்புறம் கல்யாணம் பண்ணுவேனோ என்னவோ....?" என சிரியாமல் சொல்ல,

வெடித்து சிரித்த வள்ளி, "நீ கண்டிப்பா செய்வடி.." என அவள் கன்னம் கிள்ள, ரித்தி கிளம்ப வேண்டிய சென்னைப் பேருந்து வந்து சேர, மீண்டும் ஒரு முறை வள்ளியை கட்டி அணைத்தவள்,

"சொன்னது எல்லாம் நியாபகம் இருக்கட்டும்.." என்று சொல்லியபடியே பேருந்தில் ஏறினாள். பேருந்து ஒரு புள்ளியாய் மறையும் வரை, ரித்தி பார்த்துக் கொண்டே இருப்பாள் என்ற நம்பிக்கையில், வள்ளி கையசைத்துக் கொண்டே இருந்தாள்.

வள்ளியும், வில்லனும் மீண்டும் தங்கள் பயணத்தை அரசனூர் நோக்கித் தொடங்க, இரவின் அமைதியில் அந்த தனிமையை இருவரும் மனமுவந்து ரசித்தனர்.

ஒரு வார்த்தைக் கூட இருவரும் அந்த நெடிய பயணத்தில் பேசிக் கொள்ளவில்லை. வள்ளியின் மனம் ஏதோ ஒரு விதத்தில் சற்றே நெகிழ்ந்திருந்தது.

இனி எல்லாமே சுபம் என்று வில்லன் எண்ணிக் கொண்டிருக்க, இவர்கள் வரவிற்காய், ஆனி ஐயாவின் வீட்டு வாசலில், மீசையை முறுக்கியபடி காத்திருந்தார் வள்ளியின் தந்தை மகாலிங்கம்.



DO NOT COPY

வில்- 14

மனிதத்தை மிதித்து

மதத்தை வளர்த்தென்ன பயன்..?

இன்னும் ஐந்து பத்து நிமிடங்களில், பயணம் முடிந்துவிடும் எனும் நிலையில், வள்ளி அதுவரை வியாபித்திருந்த மௌனத்தை உடைத்தெறிந்தாள்.

“உங்கள ஒன்னு கேக்கலாமா..?” வள்ளி அப்படிக் கேட்டதும், அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்த வில்லன், அவள் கண்களை ஆழ்ந்துப் பார்த்துவிட்டு,

“என்னோட பொண்டாட்டி வள்ளியா கேள்வி கேக்கப் போறியா..? இல்ல கனல் ரிப்போட்டர் விக்யாவா கேள்வி கேக்கப் போறியா..?”

வில்லன் அப்படிக் கேட்டதும், வள்ளியின் முகத்தில் குறுஞ் சிரிப்பு ஒன்று வந்து ஒட்டிக் கொண்டது. அவனுக்கு தான் சளைத்தவள் இல்லை என்பதைப் போல,

“உங்களுக்கு யார் கேள்வி கேட்டா பிடிக்கும்..?” என வள்ளி அவன் கேள்வியை அவனுக்கே திருப்பிப் போட்டாள்.

வண்டியை ஓரமாய் நிறுத்திவிட்டு, அவளை ஆழ்ந்துப் பார்த்த வில்லன், “உண்மையை சொல்லட்டுமா..? இல்ல பொய் சொல்லட்டுமா..?” எனக் கேட்க, வள்ளிக்கு சூழலின் வெப்பம் தாறு மாறாய் ஏறுவதைப் போல தோன்றியது.



DO NOT COPY

“உண்மை..!” அவள் ஒரே வார்த்தையில் விடையளிக்க, அவளை நெருங்கி அமர்ந்தவன், அவள் கைகளை தன் கைகளுக்குள் எடுத்துக் கொண்டு,

“எனக்கு இப்ப என் பொண்டாட்டி தான் வந்து என்னை கேள்வி கேக்கணும். விக்யா நான் ரொம்ப மதிக்கிற பர்சன். அவங்க கூட பேசுற அளவுக்கு என் மூளை இப்ப வேலை செய்யலை. அதோட காலைல இருந்து விக்யாகுள்ள இருக்குற என்னோட பொண்டாட்டிய திருட்டுத் தனமா சைட் அடிச்சிட்டு இருக்கேன். சோ எனக்கு என் பொண்டாட்டி வந்து கேள்வி கேட்டா ஐ பீல் பெட்டர்..”

வில்லன் அப்படி சொன்னதும், சற்று நேரம் அவன் பதிலில் தாக்குண்டவள் போல அமைதியாய் இருந்தவள், பிறகு, “உங்களுக்கு எப்படி இப்படி ஒரு தாட் வந்துச்சி.... ? இப்படி ஒரு அமைப்பை ஆரம்பிச்சி... ஒரு கிராமத்தையே மாத்திக் காட்ற எண்ணம் எப்படி வந்துச்சி...?”

அவள் அப்படிக் கேட்டதும் அவள் வசம் இருந்த கரங்களை வேகமாய் பிரித்துக் கொண்டவன், தன்னுடைய ஓட்டுனர் இருக்கையை நோக்கி நகர்ந்து அமர்ந்தான். முகம் நொடியில் இறுகிப் போய்விட,

“சாரி வள்ளி இந்தக் கேள்விக்கு என்னால இப்ப பதில் சொல்ல முடியாது. பட் கண்டிப்பா ஒரு நாள் சொல்றேன். இது மட்டும் தான் உன் கேள்வினா நாம கிளம்பலாம்.” சொல்லியவன், வண்டியை இயக்க முற்பட வள்ளி அவன் கரம் பற்றி அவன் செய்கையை தடுத்தாள்.

“இன்னும் ஒரு கேள்வி இருக்கு. நீங்க என்ன லவ் பண்றீங்களா..? பண்றீங்கன்னா... ஏன் பண்றீங்க..? உங்க அம்மா அப்பா பாத்து வச்ச பொண்ணுங்கிற ஒரே காரணத்துக்காக வா..?”



DO NOT COPY

அவள் அப்படிக் கேட்டதும், அவள் கண்களை ஆழ்ந்து பார்த்தவன், “எஸ் ஐயம் இன் லவ் வித் யூ. தெரியல. எப்ப இருந்து உன்ன லவ் பண்றேன் எனக்கே தெரியல. ஆனா எனக்கு அந்த குட்டிப் பொண்ணை... கண்ல பயத்தோட என்ன பஸ்ட் டைம் நிமிந்து பாத்த பொண்ணை ரொம்ப பிடிச்சது.

உள் மனசுல ஒரு குரல். அடே மடையா அவ குழந்தைடா இனி நீ தான் அவளை பாத்துக்கணும் அப்படின்னு. அந்தக் குரலை எனக்கு பிடிச்சது. ஆனா ஒரே நாள்ல எல்லாம் மாறிடுச்சி.

நான் யாரை குட்டிப் பொண்ணுன்னு நினச்சிட்டு இருந்தேனோ... அவ பெரிய சமூக போராளியா மாறிட்டா. அவ பத்திரமா இருக்காளான்னு தெரிஞ்சிக்க அப்பவும் ஒரு வருஷம் நான் அவ பின்னாடி அவளுக்கே தெரியாம சுத்தினேன்.

அப்பவும் அவளை லவ் பண்ணேனா தெரியலை. ஆனா ஒரு வருஷம் கழிச்சி எங்க வீட்ல வேற கல்யாணத்துக்கு பேசினப்ப... இனி அவளை அவ பாத்துப்பா நம்ம வாழ்கையை நாம பாத்துப்போம் அப்படின்னு வேற கல்யாணத்துக்கும் ஓகே சொல்லிட்டேன்.

நானும் சாதாரண மனுஷன் தானே. ஆனா நானே எதிர் பார்க்காத ரெண்டாவது அடி என் மேல ரொம்ப... ரொம்ப பலமா, அழுத்தமா விழுந்தது.

உண்மையா சொல்லப் போனா எனக்குள்ள சமுதாய மாற்றம் வேணும் அப்படிங்கிற விதை விழுந்ததே அப்போ தான். அதுக்கு அப்புறம் நான் முழுசா வேற ஒரு ஆளா மாறிட்டேன்.

ஒரு ரெண்டு வருசத்துக்கு முந்தி மறுபடி அதே சின்னப் பொண்ணு என் கண்ணுல விழுந்தா பத்திரிக்கை மூலமா. என்னவோ அவளைப் பாக்கும் போது மட்டும் தான்.... மனசுக்குள்ள ஒரு ரயில் விடாம ஓடுது. காதலும் வாழ்கையில வேணும்னு தோணிகிட்டே இருக்கு.

ஆனா எப்போ எப்படி காதலிச்சேன். எனக்கு தெரியல. நீ என்னை முழுசா ஒதுக்கிட்டு போயிட்டா என் வாழ்கையில இன்னொரு பொண்ணு வரவே மாட்டான்னு எல்லாம் சொல்ல மாட்டேன். ஆனா ஏதோ ஒரு வெற்றிடம் இருக்கும். அது காதல்னா... கண்டிப்பா நான் உன்னை காதலிக்கிறேன் வள்ளி.."

வில்லன் பேசி முடித்ததும் வள்ளி சற்று நேரம் எதுவுமே பேசவில்லை. அவன் கைகளை மட்டும் இறுக்கிப் பிடித்தபடி அவன் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வில்லன் ஒரு பெருமூச்சை வெளியேற்றிவிட்டு, "போலாமா..?" என மீண்டும் வாகனத்தை கிளப்ப முயல, எதிர்பார்ப்புடன் அவன் முகத்தைப் பார்த்தவள்,

"இன்னும் கொஞ்ச நேரம் எங்கையாவது டைம் ஸ்பென்ட் பண்ணிட்டு போலாமா..? எனக்கு என்னவோ இன்னைக்கு சீக்கிரம் தூக்கம் வரும்னு தோணலை. ஐயம் சோ மச் எச்சைடட்....!"

வள்ளி அப்படி சொன்னதும், பெரிதாய் புன்னகைத்தவன், தன் கைக் கடிகாரத்தை நோக்கி விட்டு, " இந்த ஊர்ல இருந்து ஒரு இருபது கிலோ மீட்டர் தள்ளி எனக்கு ரொம்ப பிடிச்ச இடம் ஒன்னு இருக்கு. எப்படியும் நாம வீட்டுக்கு போக மிட் நைட் ஆயிடும். உனக்கு ஓகேன்னா போலாம்."


DO NOT COPY

வில்லனுக்கு பதிலாய் வள்ளி முகம் முழுக்க புன்னகையோடு கட்டை விரலை உயர்த்திக் காண்பிக்க, வில்லன் ஸ்கார்பியோவை மணிக்கு 120 கிலோ மீட்டர்கள் வேகத்தில் பறக்கவிட்டான்.

சரியாய் பதினெட்டே நிமிடங்களில் வில்லன், பெரிய இரும்புக் கதவுகளின் முன் வாகனத்தை நிறுத்த, செயற்கை விளக்குகளின் ஒளியில் வள்ளி தாங்கள் வந்திருக்கும் இடத்தை ஆராய முயன்றாள்.

இருப்புக் கதவின் மேல், 'ஜுகுனு மீன் பண்ணை' என்று பெரிதாய் தமிழில் எழுதப்பட்ட பதாகை ஒன்று கம்பீரமாய் வீற்றிருந்தது.

வில்லன் இரு முறை வண்டியின் ஹாரனை அலற விட, தலை நரைத்த முதியவர் ஒருவர், கையில் தடியுடன், அந்த இரும்புக் கதவுகளை திறந்துக் கொண்டு வெளியே வந்தார்.

வந்தவர் வில்லனைக் கண்டதும், "தம்பி.... என்னய்யா இந்த நேரத்துல..?" என கேட்டுக் கொண்டே, கதவுகளை விரியத் திறக்க, அவர்கள் வாகனம் உள்ளே நுழைந்தது.

வெளியே இருந்து பார்ப்பதற்கு, சற்றே சாதராணம் போல தோன்றினாலும், உள்ளே பரந்து விரிந்த பரப்பில், பண்ணை மிகப் பெரியதென்று வள்ளி கண்டுக் கொண்டாள்.

வாகனத்தை ஒரு ஓரத்தில் நிறுத்திய வில்லன், தான் இறங்க, வள்ளியும் தன் பக்கக் கதவுகளை திறந்துக் கொண்டு இறங்கினாள்.

இரும்புக் கதவுகளை பூட்டிவிட்டு அந்த முதியவர் உள்ளே வர, "தூக்கத்தை கெடுத்துப்புட்டேனோ..?" என வில்லன் அக்கறையாய் வினவினான்.

"அதெல்லாம் ஒன்னும் இல்ல தம்பி. ஆயி யாரு..?" என மறுபக்கத்தில் நின்றுக் கொண்டிருந்த வள்ளியை காட்டி வினவும்,

"நீ தான் சொல்லிகிட்டே இருப்பியே வரதா.... சீக்கிரம் உன் பொஞ்சாதியை கண்ல காட்டு... கண்ல காட்டுன்னு.... ஆயி தான் என் பொண்டாட்டி..... பேரு வள்ளி...!" வில்லன் பேசிக் கொண்டே, வள்ளியின் தோளில் கைபோட்டு அறிமுகப்படுத்த, வரதனின் முகம் மகிழ்ச்சியில் விரிந்தது.

"அப்படியா தம்பி ரொம்ப சந்தோசம். ஆயி அம்மன் கோவில் செப்பு சிலை கணக்கா தங்கமா இருக்காக... அப்படியே சரோசா தேவியை நேர்ல பாக்குற மாத்ரி இருக்கு. தம்பி உன்ன ஏதாச்சும் நொரநாட்டியம் பேசினா எங்கிட்ட சொல்லு...தாயி... தொளிய உரிச்சிபுடுதேன்..." என நரைத்த மீசையை நீவ, வள்ளி பெரிதாய் சிரித்தாள்.

"யோவ் கிழவா... மீசை நரைச்சாலும் உனக்கு ஆசை நரைக்க மாட்டுதுயா...இன்னும் சரோஜா தேவி நினைப்புலையே தான் இருக்க போல.. யாரைப் பாத்தாலும் சரோஜாதேவி கண்ணு முன்னாடி வந்து நிக்குறாங்க போல. இரு இரு கிழவிகிட்ட வத்தி வைக்குறேன்.... அப்ப தான் உப்பு இல்லமா கஞ்சி கொடுத்துவிடும்.." என வில்லனும் தன் பங்குக்கு மிரட்ட,

அதையெல்லாம் கண்டுக் கொள்ளும் நிலையில் அவர் இல்லை. மேல் துண்டில் முடிந்து வைத்திருந்த, கசங்கிப் போன, பத்து ரூபாய் தாளை, துண்டைப் பிரித்து, கையில் எடுத்தவர்,

வள்ளியை நெருங்கி அதை அவள் கைகளில் கொடுத்துவிட்டு, அவள் தலைகளில் தன் கரம் பதித்து ஆசிர்வதித்தார்.

“மடி நிரஞ்ச பிள்ளைக் கொண்டு, மனசு நிறைவா வாழுவத்தா..!” அவர் அப்படி ஆசிர்வதிக்க, வள்ளிக்குள் எதுவோ இடம்மாறி அவள் அகம் நிறைத்தது.

அவள் முகத்தில் வெளிப்பட்ட பாவங்களை வில்லன் ஒரு புன்னகையோடு ரசித்துக் கொண்டிருந்தான்.

வில்லனை நோக்கி திரும்பிய வரதன், “சரி தம்பி நான் காவல் குடில்ல கிடக்கேன். எதுனா வேனுமின்னாவ்று சத்தம் கொடுங்க. இன்னைக்கு ராப் பொழுது இங்கன தங்கப் போறீகளா..? இல்ல வெளி புறப்படா..?”

வரதனின் கேள்விக்கு வில்லன், “இல்ல வரதா வெளிப் புறப்பாடு தான். நீ போய் படுத்துக்க. நாங்க கிளம்ப எப்படியும் இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்.” என்று சொல்ல,

“சரிதேன்..” என்று பதிலுரைத்த வரதன், தன் இருப்பிடம் நோக்கி நடந்துவிட, வில்லன் வள்ளியை அழைத்துக் கொண்டு, மீன் பண்ணைக்குள் நடந்தான்.

தோள் உரசும் நெருக்கத்தில் இருவரும் நடத்துக் கொண்டிருக்க, வில்லன் அவர்கள் மீன் பண்ணையில் வளர்க்கப்படும் மீன்களைப் பற்றியெல்லாம் அவளிடம் விளக்கியபடி வந்துக் கொண்டிருந்தான்.

வள்ளி அதையெல்லாம் காதில் வாங்கும் மனநிலையில் இல்லை. ஏதோ ஒரு வித மோன நிலையில் இருந்தாள்.


DO NOT COPY

திடுமென நினைவு வந்தவளாக, "ஆமாம் நீங்க என்ன அந்த தாத்தாகிட்ட அப்படி பேசுறீங்க..?" என முகத்தை சுருக்கி வினவ, சற்றே வெடித்து சிரித்த வில்லன்,

"ஹேய்... நான் சும்மா... அந்த மனுசனை கிண்டல் பண்ண அப்படி சொன்னேன்..?" என சொல்ல, உதட்டை சுளித்து அவனுக்கு எதிர்ப்பு தெரிவித்தாள்.

வில்லன் சற்று நேரம் சுளித்த அவள் உதடுகளையே ரசித்துப் பார்த்தவன், "இப்படியெல்லாம் உதட்டை சுளிக்காத வள்ளி ப்ளீஸ்.." என அவனுக்கே கேட்காத இறங்கிய குரலில் சொல்லிவிட்டு, மேலும் உள்ளே நடக்க வள்ளி அவனைத் தொடர்ந்தாள்.

அடுத்து வில்லன் வள்ளியை அவர்கள் வண்ண வளர்ப்பு மீன் பிரிவிற்கு அழைத்து செல்ல, பெரிய பெரிய கண்ணாடி தொட்டிகளில் வித விதமாய் நீந்திய வண்ண மீன்களை வள்ளி ஆசை தீர ரசித்தாள்.

தொட்டிகளில் முகம் பதித்து, மீன்களின் ஒவ்வொரு அசைவையும் ஊன்றிக் கவனித்தாள்.

வில்லன் அவள் கரம் பற்றி, தொட்டியில் மேலும் கீழும் அசைக்க, அவள் கை அசையும் திசையில் மீன்கள் நீந்த வள்ளிக்கு ஒரே உற்சாகம்.

பெரிய புன்னகையோடு அவன் புறம் திரும்பியவள், "ஏன் எல்லாம் என் கையை பாத்து நீந்துது..?" எனக் கேட்க,

வில்லன், “நாங்க டெய்லி தீனி போடுற பழக்கம். அதனால கையைப் பாத்ததும் தீனி கிடைக்கும்னு அந்தப் பக்கமே நீந்துது..” என வில்லன் சொல்ல,

வள்ளி, முகத்தை சுருக்கி, “அச்சோ பாவம் இல்ல… எல்லாம் ஏமாந்து போய் இருக்கும்… கொஞ்சம் தீனி தான் போட்டுவிடுங்களேன்…!” என அவனிடம் கெஞ்ச துவங்க,

“அதெல்லாம் கண்ட நேரத்துல தீனி போடக் கூடாது வள்ளி. தண்ணி சீக்கிரம் அழுக்கேறிப் போயிடும். அப்புறம் மீனுக்கும் வியாதி வரும்..” என்று எச்சரிக்க,

மீண்டும் ஒரு முறை உதட்டை சுளித்தவள், அவனைப் பார்த்து முறைத்துவிட்டு, ‘நீ என்ன சொல்வது….? நான் என்ன கேட்டபது…?’ என்ற பாவனையில், தொட்டியின் ஓரத்தில் இருந்த மீன் உணவினை எடுத்து கொஞ்சமாய் தூவிவிட்டு, மீன்கள் கூட்டமாய் இறையேடுக்கும் அழகை மீண்டும், ரசிக்க துவங்கினாள்.

மீன்களில் பார்வையை பதித்திருந்தவள், ரசனை மிகுந்த குரலில், “ரொம்ப அழகா இருக்கு இல்ல..?” என வினவ, வில்லனிடம் பதில் இல்லாது போக வள்ளி அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் பார்வை மீன்களில் இல்லை. மாறாக அவள் விழிகளில் இருந்தது. அவள் தன் புறம் திரும்பியதை கண்டதும், அவளை நெருங்கியவன், அவளைப் பின்னிருந்து மென்மையாய் அணைத்து, அவள் வலது புஜத்தில் தன் தாடையை பதித்துக் கொண்டான்.


DO NOT COPY

“உன் கண்ணுக்குள்ள நீந்துற மீனுங்க ரொம்ப அழகா இருக்கு வள்ளி...!”

அவன் கிசு கிசுப்பான குரலோ, அல்லது, தோள்களில் படிந்த அவன் வெம்மையின் மூச்சுக் காற்றோ, அல்லது யாருமற்ற ஏகாந்த சூழலோ, அல்லது இளமையின் தீக்கு நெய் வார்த்த இயக்கு நீரோ (ஹார்மோன்கள்) எது அவளை அவ்வாறு தூண்டியது என வள்ளியே அறியாள்.

தன் கைகளை பின்புறமாய் வளைத்து, அவன் கழுத்தில் மாலையாய் கோர்த்தவள், சற்றே எம்பி அவன் இதழ்களில் மென்மையாய் தன் இதழ் பதித்தாள்.

தொடங்கி வைத்தவள் என்னவோ அவள் தான்.... ஆனால், அந்த செயலை முற்றிலும் தன் வசமாக்கிக் கொண்டான் வில்லன்.

அந்த முத்தம் அவனை பித்தனாக்க, வள்ளியுடன் முழுதாய் சங்கமிக்கத் துடிக்கும் வேட்கை நொடிக்கு நொடி அவன் உதிரத்தில் காட்டுத் தீயென பற்றி எரிந்தது.

வள்ளியின் இணகலும், அவன் இச்சைக்கு உரமிட,

ஆசைக்கு உயிர் கொடுத்து..

ஆடைக்கு விடை கொடுத்து...

அச்சத்தை புறம் தள்ளி...

மோகத்தை அகம் அள்ளி...

மச்சம் கூட சிவந்து போகும்

உச்சம் வந்து உலுக்கிப் போக..

மிச்சம் மீதி தீர்ந்து போக...

இச்சை மட்டும் தீர்வதில்லை...

ஒரு மணி நேரம் கடந்த நிலையில், வள்ளியின் கூந்தல் மட்டுமே இருவருக்கும் ஆடையாய் மாறியிருக்க, இருவரின் உடலும் ஒட்டு மொத்தமாய் வியர்வையில் குளித்திருந்தது.

மௌனம். அந்த ஏகாந்த சூழலை இருவருமே கலைக்க விரும்பவில்லை. வில்லனின் கரங்கள் மட்டும் வள்ளியின் கூந்தலில் நுழைந்து அவள் தலையை வருடியபடியிருந்தது.

ஒரு பெருமூச்சை வெளியிட்டு தன்னை நிலைபடுத்திக் கொண்டவன், “கிளம்பலாம் வள்ளி... நேரமாச்சு..” என மென்மையாய் அறிவிக்க,

“நான் எங்கயும் வரல....” என்றவள் அவன் தோள்களில் தலை வைத்து வசதியாய் படுத்துக்கொள்ள, அவளைத் தன்னோடு பிணைத்துக் கொண்டவன், “நீ இங்கயே இருந்தா.... நான் சும்மா இருக்க மாட்டேன் வள்ளி..” முதுகில் கோலம் வரைய,

கூச்சத்தால் அவன் கைகளைத் தடுத்தவள், அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து,



DO NOT COPY

“உங்களை யாரு சும்மா இருக்க சொன்னா..?” எனக் குறும்பாய் வினவ, அவள் மூக்கோடு மூக்கை வைத்து கொஞ்சியவன், “உன்ன...!” என்று மீண்டும் அவளில் தொலைய தொடங்கினான்.

பாவம் வில்லன் அப்போது அறியவில்லை... இந்த ஒரு நாள் இரவே அவனை முழுக்க முழுக்க மீண்டும் அவனிடமிருந்து பிரித்து வைக்கப் போகிறதென்று.

இரவின் இருள் போக்க

நிலா தேடி சென்றேன் நான்..

நான் நிலவோடு வந்த நேரம்..

என் வானமே தொலைந்திடுமோ..?

வில் - 15

சாதிகள் இரண்டொழிய வேறில்லை...

சமத்துவம் பேண வேறு நீதியில்லை.

திறந்திருந்த சாளரத்தின் வழியே சூரிய ஒளி வந்து ‘சுள்’ என்று முகத்தை தாக்கத் தொடங்கிய பின்பு தான் வில்லன் கண் விழித்தான்.

பொழுது நன்றாக புலர்ந்துவிட்டதை வெளிச்சத்தின் மூலம் அறிந்துக் கொண்டவன், வேகமாய் எழுந்து அமர்ந்தான்.



DO NOT COPY

அதுவரை அவன் தோள்களில் உறங்கிக் கொண்டிருந்த வள்ளி, சற்றே உருண்டு, மீண்டும் தன் துயிலை தொடர்ந்துக் கொண்டிருக்க, தன் கைக் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்த வில்லன்,

"வள்ளி... டைம் மார்னிங் செவன் ஆச்சுமா..?" என சொல்ல, ஆழந்த உறக்கத்தின் பிடியில் இருந்தவள், "ம்.." என்று மட்டும் முனக, இவளை பேசி எழுப்புவது கடினம் என்று உணர்ந்த வில்லன், வள்ளியின் தோள்களைப் பிடித்து பலமாய் உலுக்கத் தொடங்கினான்.

இரண்டு மூன்று உலுக்கல்களில், கண் விழித்த வள்ளி ஜன்னலில் தெரிந்த வெளிச்சத்தைக் கண்டதும், வேகமாய் எழுந்து அமர்ந்தாள்.

"ஓ மை காட்... டைம் என்ன ஆச்சு..? கொஞ்சம் முன்னாடியே எழுப்பி இருக்கலாம் இல்ல..?" அவனிடம் கேள்விக் கணைகளை தொடுத்துக் கொண்டே எழுந்தவள், வேக வேகமாய் தன் உடைகளை அணியத் துவங்க, வில்லனும் தன் உடைகளை எடுத்து அணிந்துக் கொண்டே, "நானே இப்போ தான் எழுந்தேன் வள்ளி..மணி ஏழு ஆச்சு.." என அவளுக்கு பதில் சொன்னான்.

வள்ளி உடை அணிந்து முடிந்ததும், தன் கூந்தலை அவசரமாய் ஒரு நூதன கொண்டை ஆக்கினாள்.

அங்கு ஓரமாய் இருந்த கைகழுவும் சிங்கில் சென்று முகம் கழுவி வந்தவள், வில்லனைப் பார்த்து, "போலாமா..?" என வினவ, வில்லன், சரி என்பதாய் தலை அசைத்தான்.



DO NOT COPY

வெளியே நடந்துக் கொண்டே, "நான் வேற வெளிய தங்கப் போறதைப்பத்தி தனம் அம்மாவுக்கு சொல்லவே இல்ல... ஜேம்ஸ் இந்நேரம் எத்தனை பேருக்கு என்னைக் காணோம்னு விளம்பரம் பண்ணிட்டு இருப்பாரோ தெரியல....? நேத்து எழுத வேண்டிய ஸ்போர்ட்ஸ் செக்சன் வேற அப்படியே பெண்டிங்ல இருக்கு...."

வள்ளி புலம்பிக் கொண்டே, முன்னால் நடக்க, வில்லன் அவளைத் தொடர்ந்துக் கொண்டிருந்தான்.

"நீ என்கூட வந்ததும் பெரியம்மா, பெரியப்பாவுக்கு தெரியும். சோ யாரும் உன்னை தேட மாட்டாங்க. என்னோட போன் வேற நேத்து நைட் சார்ஜ் இல்லாம ஸ்விட்ச் ஆப் ஆயிடுச்சி. இல்லனா நான் நேத்தே கால் பண்ணி சொல்லி இருப்பேன். நீ அதை நினச்சி எல்லாம் வொரி பண்ணிக்காத.."

இருவரும் பேசிக் கொண்டே ஸ்கார்பியோவை நெருங்கி விட, வள்ளி வேகமாய் தன் பக்கக் கதவுகளை திறந்து, உள் அமர்ந்தாள்.

வெளிச்சத்தில் பண்ணையின் விஸ்தாரம் கண்ணில் பதிந்தாலும் அதையெல்லாம் ரசிக்கும் மனநிலையில் வள்ளி இல்லை.

ஓட்டுனர் இருக்கையில் ஏறி அமர்ந்த வில்லன், வண்டியை இயக்கி, அதன் ஹாரனை அலறவிட, வரதன் தன் குடிலில் இருந்து வெளியே வந்தார்.

அவர் அருகில் வரவும், "வரதா.... நான் பண்ணைக்கு வர லேட் ஆகும், தினேஷ் வந்ததும் எனக்கு போன் பண்ண சொல்லு..." என சொல்ல,



DO NOT COPY

வரதன், “ஆகட்டும் தம்பி..!” என பவ்யமாய் விடை அளித்துவிட்டு, வெளிக்கதவுகளை விரியத் திறக்க, அவர்களின் பயணம் தொடங்கியது.

வில்லனுக்கு வள்ளியின் நடவடிகைக்கைகள் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது. மற்றப் பெண்களைப் போல, காலை தன் முகம் கண்டதும், வள்ளி வெட்கத்தில் சிவக்க வேண்டும் என்று எண்ணவில்லை.

ஆனாலும், ‘நேற்று நமக்குள் நடத்த பரிமாற்றத்தில் நான் எந்த விதத்திலும் உன்னிடம் நெருங்கவில்லை..’ என்பதை வள்ளி தன் ஒவ்வொரு செய்கையின் மூலமும் நிரூபித்துக் கொண்டிருந்தாள்.

கேள்விகள் கூட அவன் முகத்தைப் பார்த்து கேட்கவில்லை. வில்லன் மனநிலை இவ்வாறு இருக்க, வள்ளியோ, மிகப் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தாள்.

‘நேற்று நடந்து சரி தவறு எல்லாம் தாண்டி... அவளுக்கு மிக மிக விருப்பமான மனம் ஒன்றிய செயலாய் முடிந்திருந்தது. தானும் மற்ற சராசரிப் பெண்களைப் போல, கணவன், குடும்பம், குழந்தை என்று அவன் அடிபற்றி வாழ நேர்ந்திடுமோ..? என்ற ஒற்றைக் கேள்வியே அவளின் சுயம் மீட்டு இருந்தது.

வில்லன் எழுப்பிய மறு நொடி, சூரிய ஒளியின் வெம்மை முகத்தில் அறைந்ததும், நேற்றைய இரவின் மயக்கங்கள் முற்றிலும் கரைந்து, நிதர்சனத்தின் வெம்மை அவள் முகத்தில் அறைந்தார் போல இருந்தது.



DO NOT COPY

ஏதோ ஒரு பயம் உள்ளிருந்து அவளை உலுக்கிக் கொண்டிருந்தது. வள்ளி தன் சிந்தனையில் வர, வள்ளியின் இறுக்கத்தின் காரணம் புரியாத வில்லன் குழப்பத்தின் பிடியில் பயணிக்க, இருவரும் சிந்தனை வெவ்வேறு திசையில் இருந்தாலும், அவர்கள் வந்து சேர வேண்டிய இடம் வந்தேவிட்டது.

ஆனி ஐயாவின் வீட்டின் முன் வில்லன் வாகனத்தை நிறுத்த, வள்ளி வேகமாய் தன் பக்கக் கதவுகளை திறந்துக் கொண்டு இறங்கினாள்.

வில்லன் தன்னை தொடர்ந்து இறங்குவதை உணர்ந்தும் பிடிவாதமாய், அவனைக் கண்டுக்கொள்ளாமல், வீட்டை நோக்கி நடந்தவள், வீட்டின் முற்றத்தில் கண்ட காட்சியில், மின்சாரம் தாக்கியவளைப் போல அதிர்ந்து நின்றாள்.

வள்ளியின் தொடர் புறக்கணிப்பில் கோபம் கொண்ட வில்லன், அவளை கேள்வி கேட்டே தீருவது என்ற முடிவோடு, அவளை தானும் வேகமாய் தொடர, வாயிலில் கண்ட காட்சியில் வில்லனும், "இவர் இங்க எப்படி வந்தார்..?" என்ற குழப்பத்தில் அப்படியே சமைந்து நின்றான்.

ஆனி ஐயா வீட்டின் முற்றத்தில் இருந்த சாய்வு நாற்காலியில் மகாலிங்கம் அமர்ந்திருக்க, அவரின் பின்னணியில் எப்போதும் அவருக்கு தூபம் போட்டு திரியும் அவரின் கட்சி அடி பொடிகள் இருவர் பவ்யமாய் நின்றுக் கொண்டிருந்தனர்.

"வள்ளிமா வந்தாச்சு...!" வெளி முற்றத்தில் இருந்த பணியாளர் யாரோ ஒருவர் உள் கூடம் நோக்கி குரல் கொடுக்க, நொடியில் வீட்டு வாசலில், தனம் அம்மா, ஆனிமுத்து ஐயா, ஜேம்ஸ், அவர்களோடு இன்னும் சிலரும் வெளி வாயிலுக்கு வந்தனர்.

தன் மகள் வரவை உணர்ந்ததும் மகாலிங்கம் அமர்ந்திருந்த இருக்கையில் இருந்து எழுந்து நின்றார். அவர் பார்வை மகளை அலட்சியப்படுத்திவிட்டு, அவளுக்கு பின்னால் நின்றுக் கொண்டிருந்த மருமகனின் மீது சந்தோசமாய் படிந்தது.

வள்ளியும் ஆரம்பக் கட்ட அதிர்ச்சிகள் நீங்க, அவரை இளக்காரமாய் பார்த்தாள். மகாலிங்கம் அவளை ஒரு மனுசியாய் மதித்து பேசக் கூட விரும்பாமல், வில்லனை நெருங்கியவர், அவன் கைகளைப்பற்றிக் கொண்டு, அவனிடம் பேச தொடங்கினார்.

“உங்களை இப்படி பாக்குறதுல ரொம்ப சந்தோசம் மாப்பிள்ளை... நீங்க கொடுத்த வாக்கை காப்பாத்தீட்டீங்க. இனி என் மக உங்க பொறுப்பு. இப்போ தான் மனசுக்கு நிம்மதியா இருக்கு. நான் ஊருக்கு கிளம்புறேன். நீங்க வள்ளியை கூட்டிட்டு திருச்சிக்கு சீக்கிரம் வாங்க. உங்க அத்தை அங்க தனியா இருப்பா நான் கிளம்புறேன். உங்களை ஜோடியா பாத்தா அவளும் ரொம்ப சந்தோசப்படுவா..” என்றவர்,

வில்லன் மறுமொழி பேசும் முன், அங்கிருந்த பெரியவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு தன் சகாக்களுடன், தன் வாகனத்தில் ஏறி கிளம்பி சென்றுவிட்டார்.

மகாலிங்க பேச தொடங்கிய நிமிடத்தில் இருந்து வள்ளியின் பார்வை கொஞ்சம் கொஞ்சமாய் சிவக்கத் தொடங்கியது.

அதுவும் பெற்ற தந்தை தன்னை அத்தனை உதாசீனம் செய்தது அவளுள் பெரும் கோபத்தை கிளப்பி இருந்தது. அவர் முகம் கண்ட மறுநொடி, தீயில் தீய்ந்துப் போன தமக்கையின் கோர முகம் கண் முன் வந்து போனது.



DO NOT COPY

அவர் அந்தப் பக்கம் கிளம்பியதும், வள்ளியின் இறுகிய உடல் மொழியில், அவள் மனதினைப் படித்த வில்லன் மெதுவாய் நெருங்கி அவள் தோள் தொட்டு, “தில்லு...!” என அழைக்க,

சூரியனில் இருந்து பிரிந்து வந்த நெருப்பு பந்தாய் வள்ளி அதீத வெப்பத்துடன் அவனை நோக்கி திரும்பினாள்.

தன் தோளின் மேல் இருந்த அவன் கரத்தை அசூசையாய் பார்த்தவள், அவனை அருவருப்பாய் பார்க்க, அந்தப் பார்வையின் கனம் தாங்காது வில்லன், அவள் மீதிருந்த கரத்தை விலக்கிக் கொண்டான்.

வள்ளி கத்தவில்லை... கதறவில்லை... ஆனால் வார்த்தைகள் ஒவ்வொன்றும் கொல்லன் காய்ச்சிய இருப்புக் கம்பி போல தெறிக்கும் அனலுடன் வெளிவந்தது.

அவனை அழுத்தமாய் பார்த்தவள், “சோ எல்லாமே திட்டம் போட்டு நடந்த ட்ராமா. அப்படி தானே. இந்த கிராமமாச்சும் உண்மையா இல்ல....இதுவும் ஏதாவது பிரம்மாண்ட செட்டா.

என்ன நினச்சா எனக்கே ரொம்ப கேவலாமா இருக்கு வில்லன். நம்ம ஊர்ல புருஷன் பொண்டாட்டிய வசியம் பண்ண மல்லிப்பூ.. அல்வா வாங்கிட்டு போவாங்கன்னு பிரண்ட்ஸ் பேசிக்கும் போது எல்லாம் மனசுக்குள்ள கேவலமா சிரிப்பேன். அது எப்படி ஒரு பொண்ணு அந்த மாதிரி அல்பத்தனமான விஷயத்துக்கு எல்லாம் மயங்குவான்னு.

DO NOT COPY

ஆனா உன்கிட்ட நான் ரொம்ப ரொம்ப கேவலமா மயங்கிட்டேன் வில்லன். எனக்கு மல்லிப்பூ அல்வாவுக்கு பதில்..... என்னோட பிரண்ட்சை காட்டி என் மூளையை மழுங்கடிச்சி.... ரொம்ப கேவலமா என்ன வசியப்படுத்தி இருக்க.

ஆனா நீ ஒன்ன மறந்துட்ட வில்லன். நான் வெறும் வள்ளி இல்ல. கனல் விக்யா. நேத்து நடந்த ஒரு சாதாரண விசயத்தை எல்லாம் ரொம்ப மதிச்சி கல்லானாலும் கணவன்னு உன் பின்னாடி வருவேன்னு கனவு காணாத.

ஆனா எதுலையோ பெருசா தோத்துட்ட மாதிரி ரொம்ப வலிக்குது வில்லன். அக்காவை இழந்து.... சொகுசான வாழ்கையை இழந்து... கனவான படிப்பை இழந்து.. இப்படி எதை எதையோ இழந்தப்ப இல்லாத வலி... நீ எனக்கு நம்பிக்கை துரோகம் செஞ்சிட்டன்னு தெரிஞ்ச நிமிஷத்துல இருந்து வலிக்குது.

எங்க அப்பா பேச்சைக் கேட்டுட்டு உங்க வீட்டுக்கு என்னை கூட்டிட்டு போகணும்கிற ஒரே மோடிவ் ஓட தான் நேத்து நீ என்கிட்டே அப்படி நடந்துகிட்டியா..?"

வள்ளி எவ்வளவோ கட்டுப்படுத்த முயன்றும் அவள் விழிகளில் நீர் திரண்டு இருந்தது. அவளின் அடுக்கடுக்கன குற்றச்சாட்டுகளில் வில்லன் திகைத்துப் போய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் கண்களில் துளிர்த்திருந்த கண்ணீர் துளி அவனை நடப்பிற்கு மீட்டது. "தில்லு.... அப்படியெல்லாம் இல்லமா....." வில்லன் வள்ளியை தொட வர,



DO NOT COPY

“சீ.... என்ன தொடதா நீ... என்ன தொடக் கூடாது நீ....!” வள்ளி அடிவயிற்றில் இருந்து அலறியதில், தனம் அம்மா அவளைத் தாங்க வந்தார்.

வள்ளி அவரிடமிருந்தும் துள்ளி விலகினாள். அழுந்த கண்களைத் துடைத்துக் கொண்டவள்,

“எனக்கு இங்க எல்லாமே பொழியா தெரியுது. நடிப்பா தெரியுது... ப்ளீஸ் யாருமே என்கிட்ட வராதீங்க....!” என்றவள், நடக்கின்ற சம்பவங்களை அதிர்ந்துப் போய் பார்த்துக் கொண்டிருந்த, ஜேம்சை நோக்கி சென்றவள்,

“எனக்கு உடனே சென்னை போகணும் ப்ளீஸ் என்னை கூட்டிட்டுப் போறீங்களா..?”

எப்பொழுதும் நிமிர்வும், திமிருமாய் இருக்கும் பெண், திருவிழாவில் தொலைந்த குழந்தையைப் போல, அவன் முன் நின்றது ஜேம்சிற்கு பெரும் வேதனையாய் இருந்தது.

“உடனே நாம போலாம் மேம்.... நான் போய் திங்க்ஸ் எல்லாம் பேக் பண்றேன். நீங்க கொஞ்ச நேரம் ரிலாக்ஸா இருங்க..” சொன்ன ஜேம்ஸ் வீட்டிற்குள் நுழைய முற்பட,

‘சிலீர்’ என்ற கண்ணாடி உடையும் சத்தத்தைக் கேட்டு, அவன் கவனம் வாயிலை நோக்கி திரும்பியது.

வள்ளியுமே அந்த சத்தத்தில் திகைத்துப் போய், சத்தம் வந்த திசையை நோக்கினாள்.

அங்கே வில்லன் காரின் முன்பக்க கண்ணாடியை தன் வெற்றுக் கைகளால் உடைத்திருந்தான். கை எல்லாம் ரத்தம் வழிய, அவன் முகமோ இதுவரை அவள் கண்டறியா கோபத்தின் உச்சத்தில் இருந்தது.

தனம் பதறிக் கொண்டு அவன் முன் வந்து நிற்க, வேண்டாம் என்பதைப் போல அவரைப் பார்வையை தடுத்து நிறுத்தியவன், தன்னை அதிர்ச்சியுடன் நோக்கிக் கொண்டிருந்த வள்ளியை நோக்கி நடந்தான்.

அவளை நேர்ப் பார்வைப் பார்த்தவன், "உன்ன மாதிரி ஒரு கோழையை நான் பாத்ததே இல்ல.... உன்னப் போய் பெரிய தியாகின்னு நினச்சேன் பாரு என்ன சொல்லணும்..

நீ சரியான சுயநலம் பிடிச்சவ... ஐஞ்சி வருசத்துக்கு முன்னாடி என் கூட நடந்த கல்யாணம் உனக்கு பிடிக்கல.... நீ நினச்சி இருந்தா உங்க வீட்ல இருந்தே போராடி இருக்க முடியும்.

ஆனா கோழைத் தனமா எங்க என் கூட உன்ன சேத்து வச்சிடுவாங்களோன்னு பயந்து ஓடிப் போன. அந்த வயசுல அந்த ஓட்டம் சரிதான்.

ஆனா இப்பவும் நீ அதே பழைய கோழையா தான் இருக்க. என்ன விட்டு ஓடி ஒளிஞ்சிக்க பாக்குற. எடுத்த வேலையை பாதியில விட்டுட்டு புறமுதுகு காட்டி ஓடப் பாக்குற.

இனிமே நீயே என்னைத் தேடி வந்தாலும் நீ எனக்கு வேண்டாம். ஒரு கோழைய நான் ஏத்துப்பேன். ஆனா வீரம் இருக்குற மாதிரி நடிக்கிற கோழையை என்னால சகிசிக்கவே முடியாது.

யார் வந்தாலும் எது வந்தாலும் என்ன என்ன பண்ணிட முடியும்னு தில்லா நேர்ப் பார்வையோட நிக்குற விக்யாவை பாத்து நான் நிறைய நாள் ஆச்சர்யப்பட்டு இருக்கேன். அந்த பொண்ணு நீ இல்ல.

உன் மனசை தொட்டு சொல்லுடி.... இந்த கிராமம் உனக்கு பெரிய பிரமாண்ட செட்டா தெரியுதா..? ரத்தமும் சதையுமா பழகின மனுசங்க உனக்கு வேசக்காரங்களா தெரியுறாங்களா..?

இதெல்லாம் நீ நான் ஒதுங்கிப் போகணும்னு தான பேசுற. நான் ஒதுங்கிப் போறேன். ஆனா ஒன்னு காதல் மயக்கம்.... வசியம்... அதெல்லாம் கிடையாது. அதையும் தாண்டி சரணாகதி. உனக்கு எல்லாம் அது புரியவே புரியாது. புரியவும் வேண்டாம்."

விரக்தியோடு பேசிக் கொண்டிருந்தவன், திடுமென கைகளைக் கூப்பி, "நம்ம சொந்தப் பிரச்சனையில கிராமத்தை இழுக்க வேண்டாம்.

நான் இனி உன் கண்லையே படமாட்டேன். நீங்க நிம்மதியா எழுத வந்ததை எல்லாம் எழுதி முடிச்சிட்டு ஊருக்கு கிளம்புங்க. உங்களோட கட்டுரை வந்ததுக்கு அப்புறம்...கிராமத்தை நோக்கி உதவும் கரங்கள் இன்னும் அதிகமாயிருக்கு.



DO NOT COPY

அதோட இன்னும் நிறைய கிராமங்களுக்கு நாங்க முன் உதாரணமா மாறிட்டு இருக்கோம். இதுக்கு மேலையும்... போய் தான் தீரனும்னா... அதுக்கு அப்புறம்.."

வேதனையோடு விழிகளை மூடியவன், கடினப்பட்டு வார்த்தைகளை கோர்த்து, "உங்க இஷ்டம்.." என முடித்துவிட்டு... தன்னுடைய காரை நோக்கி நடந்துவிட,

வள்ளி செல்லும் அவனையே இமைக்காது பார்த்திருந்தாள்.

காதல் வீரமாகும்...

காதல் கோழையாகும்...

காதல் நீயுமாகும்..

காதல் நானுமாகும்.... ஒரு நாள்

காதல் நாமுமாகும்.

வில் - 16

உலகம் உள்ளளவு - ஜாதிகள் இருக்கும்.

மனிதம் உள்ளளவு - ஜாதி ஒழிப்புகள் நடக்கும்.

"இதென்ன ஜேம்ஸ் உன் தோசை மட்டும் வட்டமும் இல்லமா சதுரமும் இல்லாம, ஏதோ ஒரு வித்தியாசமான வடிவத்துல இருக்கு.



DO NOT COPY

டைனோசர் படத்துல சொல்ற மாதிரி.... அந்த ஆபத்து நம்மளை நோக்கி வருது... ஓடுங்கன்னு... உங்க தோசையைப் பாத்து நாங்க தலை தெறிக்க ஓடனும் போலையே.."

வள்ளி தொடர்ந்து ஜேம்சை கலாய்த்துக் கொண்டிருக்க, அவனோ, "மேம்... நான் எல்லாம் இப்பத் தான் சமயல் ஸ்கூல்ல கிண்டர்கார்டன் கிட். நான் இந்த அளவுக்கு அழகா தோசை ஊத்துறதுக்கே நீங்க எனக்கு அவார்ட் தரணும். அதைவிட்டுட்டு கிண்டல் பண்ணிட்டு இருந்தீங்க.... டெய்லி தோசை ஊத்திக் கொடுத்துடுவேன்.." என போலியாய் மிரட்ட,

'வேண்டாம் சாமி' என்பதைப் போல, வள்ளி இரு கரங்களையும் தலைக்கு மேலே தூக்கி அவனைக் கும்பிட, ஜேம்ஸ், 'அது' என கெத்துக் காட்ட, இருவரும் சற்று நேரம் கலகலத்து சிரித்துக் கொண்டிருந்தனர்.

இவர்களின் சிரிப்பொலி, கொல்லையில் வெண்டை செடிகளில் இருந்த களைகளை நீக்கிக் கொண்டிருந்த தனத்தின் காதுகளில் விழுந்ததும் அவர் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

ஆம் தனத்தின் கொள்கை முரண்பாட்டை உடைக்கவே வள்ளி ஜேம்சை சமையல் பழக சொன்னது. தனம் ஆரம்பத்தில் கலங்கிய முகத்தோடு மறுக்க முயல,

அவரை அணைத்துக் கொண்ட வள்ளி, "தனம்மா... உங்களுக்கு ஒரு கணக்கீட்டோட மதிப்பு தெரியுமா...? உலகத்துலையே சிறப்பா சமைக்க தெரிஞ்சவங்க ஆண்கள் தானாம்.

ஏன் நம்ம உள்ளூர் ஹோட்டல்ல இருந்து வெளியூர் ஸ்டார் ஹோட்டல் வரை எல்லா ஸ்பெஷல் அயிட்டத்துக்கும், மாஸ்டரையோ, செப்பையோ தான நம்பிட்டு இருக்கோம்.

நான் வேணா உங்களுக்கு ஒரு உறுதி தரேன். ஜேம்ஸ் கல்யாணத்துக்கு அப்புறம் அவர் மனைவியோட உங்க வீட்டுக்கு தேனிலவு கொண்டாட வர சொல்லிடுறேன். பொண்ணு கர்ப்பம் ஆனதுக்கு அப்புறம் தான் அவங்களை வெளியவே விடுறோம்... எப்படி....!" வள்ளி கண் அடித்து வினவ, தனம் அம்மாவின் முகத்தில் வெட்கத்தோடு கூடிய சிரிப்பு முகாமிட்டது.

அன்றிலிருந்து வீட்டில் இருக்கும் மூவரும் சமையல் பழகுகிறேன் என்று பொழுது போகாத போதெல்லாம் சமயல் அறையில் கொட்டம் அடித்துக் கொண்டிருப்பர். ஆனி ஐயா காபி போடும் அளவிற்கு சமயலில் தேர்ந்து இருந்தார்.

ஜேம்ஸ் தட்டில் தான் சுட்ட மூன்றாவது தோசையை கொண்டுவந்து போட்டதும், வள்ளி போதும் என்பதாய் சைகை காட்ட, அடுப்பை அணைத்துவிட்டு அவள் அருகில் காலியாய் இருந்த மற்றொரு நாற்காலியில் அமர்ந்துக் கொண்டவன்,

"சீக்கிரம் நீங்க சாப்பிட்டு... எனக்கு தோசை ஊத்திக் கொடுங்க மேடம். நான் சுட்ட தோசையாச்சும் ஏதோ ஒரு வடிவத்துல வந்துச்சி. உங்க கைவரிசை எப்படி இருக்குன்னு பாப்போம்." ஜேம்ஸ் அப்படி சொன்னதும், வள்ளி தட்டில் இருந்த தோசைகளை சுவாகா செய்த படியே,



DO NOT COPY

“நாங்க எல்லாம் தோசை ஊத்த ஆரம்பிச்சா.... வானத்துல இருக்க நிலா... வட்டில்ல வந்து உக்காந்துக்கும் ஜேம்ஸ். யாரைப் பாத்து என்ன கேள்வி கேட்டீங்க.... இப்போ காட்றேன் பாருங்க என் திறமையை...” பேசிக் கொண்டே உண்டு முடித்தவள்,

கூட்டத்தில் இருந்த சிங்கில் கை அலம்பிவிட்டு, தன் வெண்ணிற காட்டன் சட்டையின் கைப்பகுதியை மடித்து விட்டுக் கொண்டு ஏதோ, போருக்கு போகும் வீராங்கனைப் போல வீரா வேசமாய் சமைலறைக்குள் நுழைந்தாள்.

ஆனால் அந்தோபரிதாபம், ஜேம்ஸ் சுட்ட தோசை ஏதோ ஒரு வடிவிலாவது தோசைக் கல்லை விட்டு இறங்கி வந்தது.

வள்ளி சுட்ட தோசைகள், தோசைக்கல்லோடு ஐக்கியம் ஆகிவிட, வள்ளி அதை போராடி பிரித்ததில், பாதி பாதியாய் பிய்ந்து போன தோசைகளே ஜேம்சின் தட்டை அடைந்தது.

தோசையைக் கண்டதும் ஜேம்ஸ் வள்ளியை முறைக்க, வள்ளியோ, “ஜேம்ஸ் உங்க தட்டுல ரெண்டு நிலா.... பட் ரெண்டுமே தேய்பிறை நிலா.... கொஞ்சம் பொறுங்க அடுத்து பௌர்ணமி தோசை தான்...”

வள்ளி அவனுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க, அங்கே வந்த தனம் அம்மா, “நீ அடுப்புல தோசையை ஊத்திட்டு இங்க நின்னு வாய் பேசிட்டு இருந்தேனா அடுத்த தோசை அம்மாவாசையா தீஞ்சே போயிரும்தா... நகரு... தம்பிக்கு தான் தோசை ஊத்திதாரேன்... நீ போய் உன் எழுத்து வேலை ஏதாச்சும் இருந்தா பாரு...போ” என்று அவளை சமயலறையில் இருந்து பத்திவிட, ஜேம்ஸின் முகம் நிம்மதியில் மலர்ந்தது.

அதை ஓரக் கண்ணில் கவனித்த வள்ளி, “ஹும்... என்ன விட்டா எங்க சமயல்ல பெரிய ஆளா வந்துடுவேனோன்னு உங்களுக்கு எல்லாம் பயம். இப்போ போறேன். நைட் டின்னர் சப்பாத்தி பன்னீர் குருமா நான் தான் பண்ணப் போறேன்.” என்று சொன்னவள், ஜேம்சின் முகத்தில் மரண பீதியைக் கண்ட பிறகே அங்கிருந்து நகர்ந்தாள்.

ஜேம்ஸ் முகம் வெளிப்படுத்திய பாவத்தில், உதடுகளில் விரிந்த புன்னகையோடு வள்ளி தன் அறையை அடைந்தாள். தன்னுடைய மடிக் கணினியை எடுத்துக் கொண்டு அமர்ந்தவள், கட்டுரையின் இறுதி பகுதியை வார்த்தைகளில் வார்க்கத் தொடங்கினாள்.

என்னவோ அன்று வார்த்தைகள் அவளுக்கு வாய்தா காட்ட, சற்று நேரம் முட்டிப் பார்த்தவள், அது தந்த அலுப்பில், இதுவரை எழுதி இருந்த கட்டுரையை முதலில் இருந்து வாசிக்கத் தொடங்கினாள்.

அவள் எழுத்துக்கள் விவரித்த பயணத்தில், மனம் அமைதியுற, முகத்தில் தெளிவு பிறக்க, தன் எழுத்தில் தானே மூழ்கிப் போனவளாய் அமர்ந்திருந்தாள் வள்ளி.

கட்டுரையை முழுதாய் வாசித்து முடிந்ததும், ஒரு அரை மணி நேரத்தில் கட்டுரைக்கான இறுதிப் பகுதியை மட மடவென எழுதி முடித்தவள், வழக்கம் போல தங்களின் பொறுப்பாசிரியருக்கும், வில்லனுக்கும் அனுப்பி வைத்தவள், மடிக்கணியை மூடிவிட்டு, திறந்திருந்த ஜன்னலின் அருகே வந்து நின்றாள்.

கண்ணனுக்கு எட்டிய வரை பசுமை பார்வையை நிறைக்க, அதைத்தாண்டி ஊர்ந்துக் கொண்டிருந்த மேகத் திரளில் அவளின் பார்வை நிலைத்தது. மன திரையில் கடந்த கால நியாபகங்கள்.



DO NOT COPY

அன்று கைகளில் ரத்தம் சொட்ட, சொட்ட பிரிந்து போனவன் தான் வில்லன். அதன் பிறகு அவன் சொன்னதைப் போல வள்ளியின் விழிகளில் அவன் விழவே இல்லை.

சுற்றி இருந்தவர்கள் அவளுக்கு வேண்டிய தனிமைக் கொடுத்து விலகிப் போக, வள்ளி வேண்டுமட்டும் அழுது தீர்த்தாள்.

அடுத்த நாள் சோகப் பதுமையாய் யாரிடமும் பேசாமல் நடமாடினாள். மூன்றாம் நாள்… "இன்னைக்கு மருத்துவ வசதிகள் பத்தி உங்களுக்கு விளக்க எனக்கு உத்தரவு நண்பர்.." என மதி வந்து முன்னால் நிற்க, தன் சோகங்களை மூட்டைக் கட்டி வைத்தவள், மதியோடு அடுத்த ஆச்சர்ய பயணத்துக்கு தயாரானாள்.

ஆம் அந்தப் பயணமும் அவள் எதிர்பார்த்தபடியே அவளை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

கிராமத்தில் இருந்த சுகாதார நிலையத்தில், உயிர்காக்க அவசர சிகிச்சைக்கு தேவைப்படும் அத்தனை மருந்துகளையும், உபகரணங்களையும் தயார் நிலையில் வைத்து இருந்தனர்.

ஆங்கில மருத்துவத்தோடு, சித்த மருத்துவமும் இணைந்து மக்களின் பிணி போக்கிக் கொண்டிருந்தது. அதோடு உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு, அந்த மருத்துவம் குறிந்த விளக்கம் மற்றும் சிகிச்சை கிடைக்கும் இடத்தின் முகவரி போன்றவற்றை விளக்க ஒரு தன் ஆர்வலர் மையம் ஒன்று செயல்பட்டுக் கொண்டிருந்தது.



DO NOT COPY

அன்றைக்கு மதியோடு கழித்துவிட்டு வந்த நேரம், வள்ளியை பெரிதும் மீட்டிருந்தது. வழக்கம் போல கட்டுரையை எழுதி முடித்தவள், அதை அன்றே பத்திரிக்கை பொறுப்பாசிரியருக்கும், வில்லனுக்கு அனுப்பி வைத்தாள்.

ஏனோ மனம் லேசாக, வில்லனிடம் சிறுபிள்ளை போல நடந்துக் கொண்ட விதத்தை எண்ணி அந்த நொடி சிரிக்கக் கூட தோன்றியது.

மற்ற மனிதர்களைப் போல, முள்ளை காலில் ஏற்றிக் கொண்டு, முள் என்னைக் குத்திவிட்டது என்று புகார் சொல்லும் மன நிலையில் தானும் இருந்ததை எண்ணி அவளுக்கே அருவருப்பாய் இருந்தது.

அன்று அவர்களுக்குள் நடந்த சங்கமம், சாதாரண மனித தேவையின் சாராம்சம். அதில் ஏதோ தான் பெரிதாய் ஏமாற்றப்பட்டதைப் போல ஏன் பரிதவித்தாள் என்று இன்று வரை வள்ளிக்கே விளங்கவில்லை.

வில்லன் சொன்னதைப் போல, அவள் விருப்பத்திற்கு மாறாய் அவளை யாரும் எச்செயலையும் செய்ய வைத்து விட முடியாது.

அன்று தந்தையைக் கண்டதும், தமக்கையின் வாழ்க்கை கண் முன் விரிய, அத்தோடு, தனக்குப் பிடித்தவன், எப்படி அவருடன் உறவாடலாம் என்ற வஞ்சமும் சேர்ந்துக் கொள்ள, வள்ளி முற்றிலும் தன்னிலை பிறழ்ந்து, சிந்தை இழந்து வார்த்தைகளை சிதறடித்து இருந்தாள்.

நேரம் அவளை அமைதி கொள்ள வைத்தது. நேரம் அவளை சிந்திக்க வைத்தது. மீண்டும் மதியோடு மேற்கொண்ட பயணம் அவளை விக்யாவாய் மாற்றியது.


DO NOT COPY

கண்டு வந்த வளர்ச்சியை கட்டுரையாய் வடிக்கும் போது, 'இதையெல்லாம் பாத்து தான் நீ செட்டான்னு கேட்ட வள்ளி' என்று மனசாட்சி இடித்துரைக்கும் போது குற்ற உணர்ச்சியில் குறுகிப் போகும் தருணமும் வாய்த்தது.

எல்லாவற்றிற்கும் மேலாய், போலியான அன்பு என்று புறம் தள்ளிய தனம் அம்மா, அவளுக்கு தேவையான இடைவெளிக் கொடுத்துவிட்டு, மீண்டும் அதே தெளிந்த அன்போடு பழக முற்பட்ட போது, அந்த குற்ற உணர்ச்சி பெருமடங்காய் பல்கி வளர்ந்தது.

தன்னுடைய நடத்தைக்கு, ஆனி ஐயாவிடம், தனம் அம்மாவிடமும் மனமார மன்னிப்பை வேண்டியவள், அடுத்த நாள் முதல் கல கல விக்யாவாய் மாறிவிட்டாள். அவளோடு அந்த இல்லமும் கலகலப்பாய் மாறிப் போனதில் வியப்பென்ன இருக்க முடியும்.

வள்ளியின் மனதின் ஏதோ ஒரு மூலை, வில்லனிடம் மன்னிப்பை வேண்டு என்று சதா அவளை நச்சரித்துக் கொண்டே இருக்கும். வள்ளியும் ஒவ்வொரு முறை கட்டுரைப் பகுதியை அனுப்பி வைக்கும் போதும்,

"ஐயம் சோ சாரி..." என்ற வார்த்தைகளை எழுதிவிட்டு பின்பு அதை அழித்துவிடுவாள். ஏனோ நடந்தது நடந்தபடியே கடந்து போகட்டும் என்ற மனதின் மற்றொரு குரலுக்கு செவி சாய்ப்பதால் அந்த மன்னிப்பு வில்லனை சென்று அடையவேயில்லை.

இந்த நொடி அவன் கண் முன் வந்து நின்றால், அனைத்தையும் புறம் தள்ளிவிட்டு, ஒரு சாதாரண நண்பனாய் அவனிடம் உரையாட முடியும் என்ற நம்பிக்கை வள்ளிக்கு இருந்தது.



DO NOT COPY

நாளை மறுநாள் அரசனூரை விட்டுக் கிளம்ப வேண்டும். ஏதோ பிறந்து வளர்ந்த மண்ணை விட்டுப் பிரிவதைப் போல ஒரு பிரிவாற்றாமையை இந்த கிராமம் அவளுள் தோற்றுவித்து இருந்தது.

அரசனூர் கிராமத்தைப்பற்றி முழுக் கட்டுரையையும் எழுதி முடித்தாயிற்று. ஆனாலும் என்னவோ தன் எழுத்தில் குறைவதைப் போல அவளுள் ஒரு எண்ணம் ஓடிக் கொண்டே இருந்தது.

அரசனூரின் முன்னேற்றம் பற்றி மட்டும் வள்ளி தன் எழுத்துக்களில் வார்க்கவில்லை. ஆங்காங்கே இருந்த குறைகளையும் சுட்டிக் காட்ட அவள் தவறவில்லை.

சமத்துவ தர்மத்தை நோக்கி அவர்கள் செயல்பட்டாலும், அவர்கள் கிராமத்தில் ஜாதி வேறுபாடுகள் முற்றிலும் கலையைப்படவில்லை என்பதை வள்ளி அங்கு வசிக்க நேர்ந்த மூன்றாம் நாளே கண்டுக் கொண்டாள்.

ஜாதி, மத பெருமை பேசி வீண் சச்சரவுகளில் அவர்கள் ஈடுபடுவதில்லையே தவிர, திருமணத்திற்கு வரன் தேடுகையில் தங்கள் இனத்தில் பிறந்த மணமக்களையே தேடினர்.

அதோடு அவரவர் ஜாதிக்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த குல தெய்வ கோவில்களில் பிற இனத்தவரை அனுமதிக்க மறுத்தனர்.

சிலமுறை, ஜேம்ஸின் பெயர் கேட்டு, அவன் கிருத்துவன் என அறிந்ததும், அவனுடன் சற்று எட்டி நின்று பழகினார் போல கூட வள்ளிக்கு தோன்றியது.

DO NOT COPY

தன்னுடைய இந்த ஆதங்கத்தை எல்லாம் வள்ளி, ஆனி ஐயாவிடம் பகிர்ந்துக் கொண்ட போது, அவளைப் பார்த்து நம்பிக்கையாய் முறுவலித்தவர்,

“வள்ளிமா.... இங்க பிறந்த நிமிஷம் மொதோ குழந்தைக்கு தாய்ப் பால் கொடுத்து வளக்குற மாதிரி... நீ இந்த இனம், இந்த மதம், இந்த ஜாதி... அப்படிங்கிற அடையாளத்தை திணிச்சே குழந்தைகளை வளக்குறாங்க.

அப்படி ஆதியில இருந்து ரத்தத்துல ஊறின ஒரு விசயத்தை உடனே எல்லாம் மாத முடியாது. கொஞ்சம் கொஞ்சமா தான் அவங்களை நம்ம பக்கம் திருப்ப முடியும்.

பத்து வருசத்துக்கு முன்னாடி ஜாதிப் பேரை சொல்லிக்கிட்டு இங்க தினம் ரெண்டு பேர் வெட்டிக்கிட்டு செத்துப் போவான். நம்ப முடியுமா உன்னால..?

தன் குழந்தைங்க படிப்பு நல்லா இருக்கணும், நல்ல மருத்துவவசதி வேணும், விவசாயம் பாக்க தண்ணி வேணும், மின்சாரம் தடை இல்லாம கிடைக்கணும்.. இப்படி பல வேணும் வேணும்கிற அடிப்படை வசதிக்கான போராட்டம் தான் எங்க மக்களை ஜாதி, மத பேதம் இல்லாம பொது வெளியில செயல்பட வைக்குது.

அவங்க வீட்டுக்குள்ளையும் இந்த பொது புத்தி சீக்கிரம் வரும்னு நான் நம்புறேன். அஞ்சி வருசத்துக்கு முந்தி வரைக்கும் பிள்ளைங்க ஜாதி விட்டு ஜாதி காதலிச்சா ஆணவக் கொலை தான் நடக்கும்.

DO NOT COPY

இப்போ ஊர் பொது பஞ்சாயத்தை கூட்டி.... பெத்தவங்ககிட்ட இருந்து விடுதலைப் பத்திரம் வாங்கிக் கொடுத்துட்டு... அதுக்கு அப்புறம் அவங்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்குறோம்.

பெத்தவங்க சொத்து சுகம் வேணாம்னு திடமா நிக்குற சில பிள்ளைங்களால அப்படி சில கல்யாணமும் நம்ம ஊர்ல நடந்துட்டு இருக்கு.

ஏதோ எங்களால முடிஞ்ச அளவு உயிரிழப்பு இல்லமா பாத்துகிறோம். ஆனா மனசு காயப்படுறதை தடுக்க முடியுதா என்ன..?

பெத்தவங்களே பிள்ளைகளுக்கு மண்ணை வாரி இறைச்சி சாபம் கொடுக்குறதைப் பாக்கும் போது...என்னத்த சொல்லப் போமா...இன்னும் கொஞ்ச காலத்துல... இந்த நிலைமை மாறினா சந்தோசம் தான்."

ஆதீத வருத்தத்தோடு அவர் தன் மனதை வெளியிட்ட பிறகு, அப்படி ஒரு மாற்றம் சீக்கிரம் நிகழ்ந்தால் நல்லது என்ற எண்ணம் வள்ளியின் நெஞ்சத்தில் வலுப் பெற்றது.

"மேம்...." தன் அறை வாயிலில் கேட்ட குரலில், வள்ளி பழைய நினைவுகளில் இருந்து மீண்டவலாய் வாயிலைப் பார்த்தாள்.

அங்கு ஜேம்ஸ் நின்றுக் கொண்டிருந்தான். கைகளில் அவன் இங்கு வரும் போது கொண்டு வந்த பெரிய பெரிய பயணப் பொதிகள்.

“மேம்… இன்னும் டூ டேஸ்ல நாம ஊருக்கு கிளம்பனும் இல்ல. என் திங்க்ஸ் எல்லாம் பேக் பண்ண ஆரம்பிச்சிட்டேன். என்னோட கேமரா ஆங்கிள் டூல்ஸ் எல்லாம் உங்க ரூம்ல இருக்கு. எடுத்துக்கவா..?”

ஜேம்ஸ் பணிவாய் அனுமதி வேண்டி நிற்க, வள்ளியோ இயந்திரமாய் தலை அசைத்து அவனை உள்ளே அனுமதித்தாள்.

நாளை மறுநாள் இங்கிருந்து கிளம்ப வேண்டும். ஏனோ அந்த எண்ணம் அதனை உவப்பானதாய் இல்லை.

தன் பாட்டில் நீண்டிருந்த கம்பிகளை குறுக்கி தன் பயணப் பையில் அடைத்தபடி ஜேம்ஸ், வள்ளியின் மனநிலைப் புரியாமல்,

“மேம்… இந்த கிராமத்தை ரொம்ப மிஸ் பண்ணப் போறேன் மேம். முக்கியமா தனம் அம்மா சமையலை. நீங்க வந்தாலும் வாராட்டியும் இயர்லி ஒன்ஸ் நான் இங்க ஒரு விசிட் போடலாம்னு இருக்கேன் மேம்.

இந்த நிமிஷம் இந்த கிராமத்துல மாற்றத்தை ஏற்படுத்தி நாம இங்க வந்து தங்க காரணமா இருந்த வில்லன் சாருக்கு ஒரு ராயல் சல்யூட் கொடுத்தே ஆகணும்.”

ஜேம்ஸின் கடைசி வார்த்தைகள் வள்ளியின் முகத்தில் குளுமையான பனி நீரை வாரி இறைத்ததைப் போல, சட்டென அவள் மனதில் ஒரு மின்னலை தோற்றுவித்தது.

ஜேம்ஸ் தன் போக்கில் எதையோ பேசிக் கொண்டிருக்க, "ஜேம்ஸ் எனக்கு அவசரமா ஒரு வேலை இருக்கு. நான் வெளிய கிளம்புறேன்." என்றவள் அவன் பதிலும் காத்திருக்காமல், கையில் அகப்பட்ட தன் பர்சை எடுத்துக் கொண்டு வெளியே ஓடினாள்.

ஆனி ஐயாவின் எதிரே சென்று நின்றவள், "ஐயா இப்ப வில்லன் எங்க இருப்பார்..?" என பதட்டமாய் வினவ, அவரோ என்னவோ ஏதோ என பயந்து,

"இந்நேரம் தம்பி மீன் பண்ணையில தான்மா இருக்கும்...ஏன்மா..?" அவர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாது...

"எனக்கு உடனே அங்கப் போகணும். எனக்கு ஏதாச்சும் வண்டி ஏற்பாடு பண்ணிக் கொடுக்க முடியுமா..?"

வள்ளி ஆனி ஐயாவிடம் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, வள்ளி எங்கே அத்துணை அவசரமாய் கிளம்புகிறாள் என்று காண அவள் பின்னோடே வந்திருந்தான் ஜேம்ஸ்.

அவனைக் கண்டதும், சற்றே முறுவலித்த ஆனி ஐயா, "நம்ம காரு இருக்கு தாயி... நீயே ஓட்டிட்டு போனாலும் சரி... இல்ல ஜேம்ஸ் தம்பிய கூட கூட்டிட்டு போனாலும் சரிதேன். வழி நீங்களா விசாரிச்சி போயிடுவீகளா..? இல்ல வழி காட்ட ஆள் அனுப்பவா..?"

அவர் அப்படிக் கேட்டதும், "இல்லைங்க ஐயா.... எனக்கு வழி இன்னும் நியாபகம் இருக்கு. நீங்க வண்டிக் கொடுத்தா போதும். நான் ஜேம்ஸ் கூட போய்ட்டு வந்திடுறேன்.."



DO NOT COPY

அவளின் பதிலில் திருப்தியுற்றவர், “சரி தாயி உள் அறையில சாவி இருக்கும் போய் எடுத்துக்க... பாத்து பத்திரமா போயிட்டு வாங்க..” என்றவர் மீண்டும் தான் பார்த்துக் கொண்டிருந்த கணக்கு புத்தகத்தில் மூழ்க, ஜேம்ஸ் உள்ளே சென்று சாவியைக் கொணர்ந்தான்.

அவர்களின் பயணம் வேடன் புதூரில் அமைந்திருந்த ஜிகுனு மீன் பண்ணையை நோக்கித் தொடங்க, வள்ளியின் சிந்தைக்குள் ஆயிரம் கேள்விகள்.

அதில் ஒற்றைக் கேள்விகேனும் செவ்வாய் திறப்பானோ வில்லன்..?

தீயினால் சுட்டப் புண்

உள்ளாறும் - ஆருமோ

அவள் நாவினால்

சுட்ட வடு.

வில் - 17

ஆணவக் கொலைகள் செய்யும்

ஆசையும் இருக்கிறது - ஜாதியை.

வள்ளியும், ஜேம்சும் வில்லனின் மீன் பண்ணையில் அமர்ந்திருந்தனர். அவனுக்கென்று தனியாய் அமைந்திருந்த அலுவலக வரவேற்பறையில் இருவரும் காத்துக் கொண்டிருந்தனர்.



DO NOT COPY

அன்று வள்ளியின் கண்ணிலும், கருத்திலும் படாத பண்ணையின் பிரம்மாண்டம் இன்று வள்ளியை விழி திருப்ப அனுமதிக்காமல், தன்னுள் அவளை ஈர்த்துக் கொண்டிருந்தது.

இவர்கள் வரவை அறிந்ததும் வில்லன், தன் உதவியாளனிடம், ஒரு துண்டு சீட்டில், "பத்திரிக்கையாளர் விக்யாவை மட்டுமே சந்திக்க விருப்பம்.." என்று எழுதிக் கொடுத்துவிட்டான்.

அந்த செய்தியை வாசித்தவள், இதழ்களில் விரிந்த புன்னகையோடு, "விக்யாவாய் மட்டுமே உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்." என பதில் எழுதிக் கொடுத்தாள்.

உள்ளே சென்று திரும்பி வந்த உதவியாளர், "மேம் ஒரு ஹாபன் ஹவர் வெயிட் பண்ணுங்க. சார் உங்களை பாக்குறதா சொல்லி இருக்கார்.." என சொல்லிவிட்டு சென்றுவிட, இருவரும் டீபாயின் மீதிருந்த செய்தி தாள்களை புரட்டிக் கொண்டிருந்தனர்.

சரியாய் அரைமணி நேரத்தில் இருவரும் உள்ளே அழைக்கப்பட்டனர். வில்லனின் அலுவல் அறை, மிக நூதனமான முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

கண்ணாடி தடுப்புகளுக்கு அப்பால் யாரிடமோ அலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த வில்லன், இவர்களைக் கண்டதும், உள்ளே வருமாறு தலையை அசைத்துவிட்டு, அலைபேசியில் தன் உரையாடலை தொடர்ந்துக் கொண்டிருந்தான்.



DO NOT COPY

இருவரும் அறைக்குள் நுழைந்து இருக்கையில் அமர, அலைபேசியை துண்டித்தபடி நிமிர்ந்தவன், முற்றிலும் வேறொரு வில்லனாய் இருந்தான்.

உடலை இறுக்கிப் பிடித்த வெண்ணிற காட்டன் சட்டையும், அடர் ஊதா நிற டெனிம் ஜீன்சும் அணிந்திருந்தவன், ரோபன் குளிர் கண்ணாடியை சட்டையின் விளிம்பில் தொங்கவிட்டிருந்தான்.

முறுக்கு மீசை, சற்றே முனை மழுங்கி, சாந்த வடிவிற்கு மாறியிருந்தது. இருவரையும் நோக்கி மையமாய் புன்னகைத்தவன்,

“வாங்க வாங்க…உங்களை இங்க சந்திக்கிறதுல ரொம்ப சந்தோசம். அப்புறம் என்ன சாப்பிடுறீங்க..? ஹாட் ஆர் கோல்ட்..?”

வரவேற்ப்பும், உபசரிப்பும் இருவருக்கும் பொதுவாய் இருந்தாலும், அவன் பார்வையை ஜேம்சிடம் மட்டுமே நிலைத்திருந்தது.

அதுவரை கனல் விக்யாவாய் மட்டுமே அவனை சந்தித்து விடை பெற எண்ணி இருந்த வள்ளியின் நெஞ்சத்தில் அவனின் உதாசீனம் சற்றே புகைச்சலைக் கிளப்பியது.

“நாங்க இப்போ தான் மார்னிங் ப்ரேக் பாஸ்ட் சாப்பிட்டோம் சார். சோ… அதனால இப்ப எதுவும் எங்களுக்கு வேண்டாம்..” வள்ளி அழுத்தமாய் தன் மறுப்பை தெரிவிக்க, வில்லன் தன் ஓரப் பார்வையால் அவளை அளந்தான்.

வில்லனின் அலட்சியப் பார்வை வள்ளியின் புகைச்சலை கங்காக்கிக் கொண்டிருந்தது.



DO NOT COPY

இலகுவாய் தோள்களை குலுக்கியவன், “உங்க விருப்பம்.” என்று உரைத்து விட்டு,

“கட்டுரை நான் எதிர்பார்த்ததை விட ரொம்ப அதிக ரீச் கொடுத்து இருக்கு..... இந்தனை நான் தமிழ்நாட்டுல ஏதோ ஒரு மூலையில இருந்த கிராமத்தை நீங்க உங்க கட்டுரை மூலம் ஒட்டு மொத்த தமிழ்நாட்டுக்கும் வெளிச்சம் போட்டு காட்டிட்டீங்க... ரொம்ப நன்றி விக்யா...

விக்யாவோட எழுத்துகளை அப்படியே அப்பட்டமா பிரதிபளிக்குற மாதிரி அழகா போட்டோஸ் கொடுத்து, கட்டுரைக்கு தத்ரூபம் கொடுத்த உங்களுக்கும் ரொம்ப ரொம்ப தாங்க்ஸ் ஜேம்ஸ்.

இன்னும் ஒரு நாள்ல நீங்க சென்னை கிளம்பப் போறதா மதி சொல்லிட்டு இருந்தான். நீங்க எப்ப மதுரைப் பக்கம் வந்தாலும் கண்டிப்பா எங்க அரசனூருக்கு வரணும். இன்னும் இன்னும் உங்க துறையில சாதிக்க என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்...” என்றபடி எழுந்து நின்றவன்,

“செல்வம்...” என குரல் கொடுக்க, அவனினின் உதவியாளர் இரு பரிசுப் பொருளோடு உள்ளே வந்தார்.

அவர் கைகளில் இருத்த பரிசுப் பொருளை வாங்கியவன், இருவரிடமும் ஆளுக்கு ஒன்றைக் கொடுத்துவிட்டு,

“எங்க அமைப்பின் சார்பா சின்ன காம்ப்ளிமெண்ட்..... எங்க கிராமத்தை எப்பவும் மறக்க மாட்டீங்கன்னு நினைக்கிறேன்... இருந்தாலும் ஒரு சின்ன நினைவுப் பரிசு..” என்று உரைக்க, ஜேம்ஸ், புன்னகை முகமாய் நன்றி தெரிவித்தான்.

வள்ளியோ கையில் இருந்த பரிசுப் பொருளை, 'நினைவுப் பரிசு' என்று அவன் குறிப்பிட்ட தொனியில் வருத்ததுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வில்லன் வள்ளியை கொஞ்சமும் கண்டுக்கொள்ளாமல், "தென் எனக்கு வெளிய கொஞ்சமும் இம்பார்டன்ட் வொர்க் இருக்கு. ஐ ஹாவ் டூ லீவ் நவ். மறுபடியும் சந்திப்போம்." என ஜேம்சிடம் கைகுலுக்கி விடை பெற முயல, அவனின் அந்த செயல் வள்ளியின் கோபத்தை அதிகப்படுத்தியது.

நிதானமாய் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "மிஸ்டர் வில்லன் கட்டுரையோட கடைசிப்பகுதி இன்னும் முழுமை அடையாத ஒரு உணர்வையே எனக்கு கொடுத்துட்டு இருக்கு.

பிகாஸ் உங்க ஒருத்தரோட முதல் முயற்சி... ஒரு கிராமத்தையே உதாரண கிராமமா மாத்தி இருக்கு. இப்படி ஒரு அமைப்பை, இப்படி ஒரு செயலை ஆரம்பிக்க ஒரு விஷயம் காரணமா... தூண்டுதலா... இருந்து இருக்கும் இல்லையா..?

ஒரு சின்ன தீப்பொறி.... பெரிய ஜூவாலை ஆகுற மாதிரி, உங்களுக்கு கிராமத்துல இந்த மாதிரி மாற்றங்களை நாம கொண்டு வரணும்னு எப்ப தோணுச்சி....? ஏன் தோணுச்சி..?

அந்த நிகழ்வை கொஞ்சம் எங்களோட பகிர்ந்துகிட்டீங்கன்னா கட்டுரையின் நிறைவுப் பகுதியோட நான் அந்த விசயங்களையும் சேர்த்து கட்டுரையை முழுமையா நிறைவு செய்ய எனக்கு வசதியா இருக்கும்."

வள்ளி அவனின் கண்களைப் பார்த்து கனல் விக்யாவாய் கேள்விகள் கேட்க, அவளை ஊன்றிப் பார்த்தவன், பின்பு வாய்விட்டு மலர்ந்து சிரித்தான்.

வள்ளியோடு, ஜேம்சும் அவனை கேள்வியாய் பார்க்க,

"நான் எல்லாம் நீங்க நினைக்கிற அளவுக்கு பெரிய ஆள் கிடையாது மேடம். தென் அமெரிக்கா போகும் போது காந்தியை ரயில்ல இருந்து இறக்கிவிட்ட காரணத்தினால தான் சாதி, மதம், நிற பேதம் இல்லாத சமத்துவம் வேணும் அப்படிங்கிற எண்ணம் காந்திக்கு வந்தது.

பள்ளியில படிக்கும் போது மற்ற மாணவர்களோடு உக்கார வைக்காமல், தனியா சாக்குப் பையில் உக்கார வைத்த செயல் தான், அம்பேத்காரை தீண்டாமையை ஒழிக்க தூண்டியது.

காசியில் சன்யாசியாய் சுற்றும் போது.... மடங்கள் அந்தணர்களுக்கு மட்டும் உணவளிக்க, அதுவரை நண்பர்களாய் சுற்றி திரிந்த அந்தணர்கள் பிரித்து சென்ற சூழலில், பசித்த வயிறு தான் பெரியாருக்கு சாதி மத பேதமைக்கும், மூடப் பழக்க வழக்கங்களுக்கும் எதிராக போராட சொல்லி தூண்டியது.

இப்படி ஏதாச்சும் ஒரு இன்ட்ரஸ்டிங் ஸ்டோரிய என்கிட்டே எதிர்பாத்தீங்கன்னா கண்டிப்பா ஏமாந்து தான் போவீங்க விக்யா.

ஆனாலும் என்னோட இந்த செயலுக்கு பின்னாடி கொஞ்சம் சுயநலமான காரணம் இருக்கு.

ஒரு அஞ்சி வருசத்துக்கு முன்னாடி எனக்கு ஒரு பொண்ணைப் பாத்து வீட்ல கல்யாணம் பண்ணி வச்சாங்க. அந்தப் பொண்ணு அவங்க வீட்ல நடந்த பிரச்சனையில...கல்யாணம் நடந்த அன்னைக்கே என்னையும் சேத்து தலை முழுகிட்டு போயிட்டா..

அப்போ கொஞ்ச நாள் சொந்த பந்தம் பேசின பேச்சுல பயங்கர மன அழுத்தத்துல இருந்தேன். அரசனூர் எங்க பெரியப்பாவோட ஊர். கொஞ்ச நாள் அங்க போய் தங்கிட்டு வருவோம்னு வந்தேன்.

எங்க பெரியப்பா அதாவது உங்க ஆனி ஐயா, எப்பவும் கிராமத்துல இருக்க ஏதாவது ஒரு பிரச்சனைக்கு மனு எழுதி தினம், தினம் மதுரை கலெக்டர் ஆபிசுக்கும், உள்ளூர் பஞ்சாயத்துக்கும் அலைஞ்சபடியே இருப்பார்.

சும்மா இருக்குறது ரொம்ப கஷ்டமா இருந்தது. அதனால அவர் எழுதுற மனுவை எல்லாம் ஒரு நாள் உக்காந்து படிக்க ஆரம்பிச்சேன்.

அந்த மனுவுல சின்ன விசயம்னு எனக்கு தோணின மனுவை எல்லாம் ஒரு ஓரமா எடுத்துவச்சேன். அதைப் பத்தி பெரியப்பாகிட்ட பேசிட்டு அவர் பண்ணையில இருந்த ஆட்கள் மூலமா....உடஞ்சிப்போன குடிநீர்க் குழாய் இணைப்பை நாங்களே சரி செய்தோம்.

இப்படி சின்ன சின்னதா நாங்க ஆரம்பிக்க அந்த ஊர்ல இருந்த சில இளைஞர்கள் தாங்களா முன் வந்து எங்களோட கைகோர்த்துக்கிட்டாங்க.



DO NOT COPY

அப்புறம் பெரியப்பாவோட வழிகாட்டுதல் மூலமா, எங்க அமைப்புக்குன்னு ஒரு பெயரை வச்சோம். பதிவு செஞ்சோம். நாங்களா எங்க எங்க பிரச்சனை இருக்குன்னு தேடி தேடி சரி பண்ணோம்.

பிரச்சனைகளை சரி பண்றதை விட அது உருவாகாம இருக்கவும், கிராமம் வளர்ச்சி அடையவும்,கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் இந்த விசயத்துல எல்லாம் நாங்களே முன் வந்து மாற்றத்தைக் கொண்டு வந்தோம்.

இது தான் எங்க 'இணைந்த கரங்கள்' உருவான வரலாறு விக்யா மேடம். இப்போ நான் கிளம்பலாமா...? எங்க ஒட்டு மொத்தக் குடும்பமும் எனக்காக காத்துட்டு இருக்காங்க. எந்த விஷயத்துக்கு வேணா லேட்டா போகலாம். பொண்ணு பாக்குற விஷயத்துக்கு லேட்டா போகக் கூடாது இல்லையா..?" என்றவன், ஏதோ பெரிய நகைசுவையை சொன்ன தினுசில் மலர்ந்து சிரிக்க, ஜேம்ஸ் அவனை அதிர்ச்சியாய் பார்த்தான்.

வள்ளிக்கு எந்த அதிர்ச்சியும் இல்லை. மாறாக அவனைக் கூர்மையாய் பார்த்தாள்.

வள்ளியின் பார்வையை சந்திக்க முடியாத வில்லன், "ஓகே நான் கிளம்புறேன். மறுபடி சந்திப்போம்.." என்றுவிட்டு அங்கிருந்து நழுவ முயல,

நீட்டிய அவன் கரங்களை பற்றிய வள்ளி, "வித் ப்ளசர் சார்.." என்றால் கண்களில் ஒரு அதீத பளபளப்போடு.



DO NOT COPY

அவள் மென்கரத்தின் அழுத்தம் வில்லனை திகைப்பில் ஆழ்த்த, அவளை நிமிர்ந்து பார்த்தவன், அவன் கண்கள் பேசிய மொழியில் முற்றிலும் தொலைந்து தான் போனான்.

விலகி போனால் குளிரும்..

நெருங்கி வந்தால் காயும்..

தீயும் நீயும் ஒன்றா பெண்ணே...

தொலைந்தே போவேன்

பதில் சொல்வாய்க் கண்ணே...

வில் - 18

'ஜாதிகள்' என்ற வழக்கொழித்து

'சமத்துவம்' என்ற நீதி படைப்போம்.

வில்லன் தன்னை விட்டால் போதுமென அங்கிருந்து ஓடிவிட, வள்ளி மீன் பண்ணையில் இருந்து கிளம்ப அத்தனை அவசரம் காட்டவில்லை.

ஜேம்ஸ் "போலாமா... மேடம்.." என இரண்டு மூன்று முறை அவளிடம் கேட்டும், வள்ளி அவனுக்கு பதில் சொல்லாமல், பண்ணைக்குள் நடந்த படி யாரையோ கண்களால் தேடிக் கொண்டிருந்தாள்.

ஜேம்சுக்கு அவள் யாரை தேடுகிறாள் எனப் புரியாவிட்டாலும், தானும் அவள் பின்னோடு அலைந்துக் கொண்டிருந்தான்.



DO NOT COPY

நீண்ட சிமென்ட் தொட்டியை குனிந்து கழுவிக் கொண்டிருந்த வரதனைக் கண்டதும், வள்ளியின் விழிகள் பளிச்சிட அவரை நோக்கி நடந்தாள். ஜேம்சுக்கு வள்ளியின் நோக்கம் புரியாவிட்டாலும் தானும் அவளை தொடர்ந்து சென்றுக் கொண்டிருந்தான்.

வரதனை நெருங்கிய வள்ளி, "தாத்தா… எப்படி இருக்கீங்க..?" என உற்சாகமாய் நலம் விசாரிக்க, நிமிர்ந்து பார்த்த வரதன் தாத்தா, கண்களில் ஆச்சர்யம் மின்ன,

"ஆயி… நீங்க எப்ப வந்தீக. வில்லன் தம்பி வெளிய கிளம்பி இருக்குமே இந்நேரம். இன்னைக்கு அவுக தம்பிக்கு பொண்ணு பாத்து உறுதி செய்ய தேனீ வரை போகணும்னு சொல்லிக்கிட்டு கிடந்துச்சே தம்பி…நீங்க வாரதைப் பத்தி தம்பிக்கு தகவல் சொன்னீங்களா இல்லையா..?"

அவர் தொடர்ந்து கேள்விக் கேட்டுக் கொண்டே இருக்க, "தாத்தா… அதெல்லாம் உங்க தொம்பியை பாத்துட்டு தான் வறேன். அப்படியே உங்களை பாத்துட்டு போலாம்னு வந்தேன்." என்றவள் எதிரே இருந்த திட்டில் அமர்ந்தாள்.

அருகில் இருந்த தொட்டி நீரில் கைகளை கழுவிக் கொண்டவர், "தாயி சாப்டீங்களா..? இந்த தம்பி யாரு..?" என வினவ, தனக்கு பின்னால் நின்றுக் கொண்டிருந்த ஜேம்சை திரும்பிப் பார்த்து புன்னகைத்தவள், "என் கூட வேலை செய்யிறவர். பேரு ஜேம்ஸ்." என ஜேம்சை அவருக்கு அறிமுகப்படுத்தி வைக்க,



DO NOT COPY

“ரொம்ப சந்தோசம் தாயி... நம்ம தென்னை மரம் காச்சி இருக்கு... ரெண்டு இளநி சீவியாறேன்..கொஞ்சம் பொறுங்க” என்றவர், “அடேய் பழனி.....!” என்று யாருக்கோ குரல் கொடுத்தபடி அங்கிருந்து விலகி சென்றார்.

ஜேம்ஸ் தனக்கு அருகில் காலியாய் இருந்த திட்டில் அமர்ந்த படி, “இந்த தாத்தா யாரு மேடம்.... உங்களுக்கு தெரிஞ்சவரா..?” என வினவ, அவனை திரும்பி பார்த்தவள்,

“எஸ் ஜேம்ஸ்... வில்லன் கூட பர்ஸ்ட் டைம் பண்ணைக்கு வரும் போது.... அவர் அறிமுகப்படுத்தி வச்சாரு.... ரொம்ப நல்ல மனுசன்... அவரை பாத்து ஊருக்குப் போறதை சொல்லிட்டு போகணும்னு தோணுச்சி... அதான் தேடி வந்தேன்.” என பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, வரதன் தாத்தா... இரண்டு பெரிய இளநீரை சுமந்தபடி, அவர்களை நோக்கி வந்திருந்தார்.

தேன் போல் இனித்த இளநீரை இருவரும் சுவைத்து முடித்ததும், எழுந்து நின்றவள், தன் கைப்பையை திறந்து, சிறிய ஐபாட் ஒன்றை எடுத்தாள்.

அதை வரதன் தாத்தாவின் கைகளில் கொடுத்தவள், “தாத்தா... இந்த குட்டி ரேடியோல உங்க சரோஜா தேவி.. எம்.ஜி.ஆர்.. ரெண்டு பேரும் ஜோடியா நடிச்ச எல்லா படத்தோட பாட்டும் இருக்கு. ஓய்வா இருக்குற நேரத்துல போட்டு கேளுங்க. உங்களுக்கு கொடுக்குறதுக்காக ரொம்ப முன்னாடி வாங்கி வச்சேன். இப்ப தான் கொடுக்க டைம் கிடைச்சது..” என்றவள், அதை எப்படி இயக்குவது என அவருக்கு சொல்லிக் கொடுக்க, அதை கற்றுக் கொண்டவரின் விழிகளில் நீர் திரள்.

“அச்சோ என்ன ஐயா இது...” வள்ளி பதறிப் போய் வினவ, தன் தோளில் இருந்த துண்டால் முகத்தை துடைத்துக் கொண்டவர்,



DO NOT COPY

“எனக்கும் எம் பொஞ்சாதிக்கும் ஆறு பசங்க சாமி. பேரப் பிள்ளைங்க மட்டும் எட்டு பேர் இருக்காக. எல்லாரும் வசதியா டவுன்ல இருக்காக. யாரும் வந்து இந்த கிழவன் கிழவியை எட்டிப் பாக்குறது கூட இல்ல சாமி. மொதோ முறை... என் அம்மாவுக்கும், கிழவிக்கும் அப்புறம் எனக்குன்னு ஒரு பொருள் வாங்கி கொடுத்த மகராசி நீ தான் சாமி. ரொம்ப சந்தோசம் தாயி..” அவர் நெகிழ்ந்து போய் பேசியதில் வள்ளியின் விழிகளிலும் நீர் திரண்டு விட்டது.

‘இந்த உலகம் மொத்தமும் எதிர்பார்ப்பது, பகிர்தலும், பகிர்வித்தலுமாய் துளி அன்பை தான் போல’ என மனதிற்குள் எண்ணிக் கொண்டவள் தன்னை முயன்று சமன்படுத்திக் கொண்டு,

“அதெப்படி தாத்தா... நானும் வில்லனும் இருக்கும் போது நீங்க எப்படி இப்படி சொல்லலாம். அடுத்தவாட்டி உங்களை பாக்க வரும் போது... நான் உங்களுக்கு சரோஜாதேவி சோப்புடப்பா வாங்கிட்டு வறேன் சரியா..!” வள்ளி கண்சிமிட்டி சொல்ல, கண்களில் துளிர்த்த நீரோடு, வரதன் தாத்தா... வெட்கப் புன்னகைப் பூத்தார்.

அந்த காட்சி காண்பதற்கு பேரழகாய் இருந்தது. “போ தாயி....என்ன வச்சி பகடி பேசிக்கிட்டு..” என்று அவர் மீண்டும் வெட்கப்பட, வள்ளி பொங்கி சிரித்தாள். அதுவரை வெறும் பார்வையாளனாய் இருந்த ஜேம்ஸ் கூட சற்றே முறுவலிக்க அந்த சூழலே வெகு ரசனையாய் இருந்தது.

“சரி தாத்தா... நான் ஊருக்கு கிளம்புறேன். நேரம் கிடைக்கும் போது கண்டிப்பா உங்களை பாக்க வருவேன்.” என்றுவிட்டு அவரோடு சில சுயமி புகைப்படங்களை எடுத்து முடித்தவள், ஜேம்சோடு மீண்டும் தன் பயணத்தை துவக்கினாள்.



DO NOT COPY

ஏனோ முதியவரின் கண்களில் இருந்த, பிள்ளைப் பாசம் அவளின் அடி நெஞ்சம் வரை தாக்கியிருந்தது.

"அவங்களுக்கு என்ன...?" என இதுவரை கல்லாய் இருந்த மனது, முதியவரின் கண்ணீரில், "தன் தாயும் தனக்காய் இப்படித் தான் ஏங்கிக் கொண்டு இருப்பாளோ..?" என்ற ஒற்றை எண்ணத்தில் கற்பூரமாய் கரையத் தொடங்கி இருந்தது.

ஏதேதோ எண்ணியபடியே பயணித்துக் கொண்டு வந்தவள், திடுமென ஜேம்சை நோக்கி,

"ஜேம்ஸ் மதுரையில இருந்து திருச்சி எத்தனை கிலோ மீட்டர். ஈசி ரீச் பஸ்ஸா... இல்ல ட்ரைன்னா..?"

வள்ளி அப்படிக் கேட்டதும், திடீரென திருச்சியைப் பற்றி ஏன் கேட்கிறாள் என விளங்காவிட்டாலும்,

"நேசனல் ஹைவேஸ்ல போனா வெறும் 132 கிலோ மீட்டர்ஸ் தான் மேடம். கார் எடுத்துட்டு போனா ஒன்றரை மணி நேரத்துக்குள்ள போயிடலாம்." ஜேம்ஸ் அப்படி சொன்னதும்,

"ஓ... அப்ப ஓகே. அடுத்து வர பெட்ரோல் பங்க்ல கார் டேங்க் பில் பண்ணிக்கோங்க. எனக்கு உடனே திருச்சி போகணும். நான் ஆனி ஐயாவுக்கு போன் போட்டு சொல்லிடுறேன்." என வள்ளி பதில் கொடுக்க,



DO NOT COPY

“என்ன மேடம் திடீர்னு திருச்சிக்கு டூர்.... அங்க ஆத்துல மண்ணு அள்றதுக்கு எதிரா மக்கள் போராடிட்டு இருக்காங்களாமே... அதை எதுவும் ஸ்பெஷல் கவரேஜ் எடுக்கப் போறோமா..? ஏன்னா... நீங்க காரணம் காரியம் இல்லாம எங்கயும் நகர மாட்டீங்களே..!” ஜேம்ஸின் விடை அறிந்து கொள்ளும் ஆவல் வள்ளியின் உதடுகளில் இள முறுவலை மலர செய்தது.

“இது அபிசியல் விசிட் இல்ல ஜேம்ஸ். பர்சனல் விசிட். திருச்சி நான் பிறந்து வளர்ந்த ஊர். என்னவோ ரொம்ப நாளைக்கு அப்புறம் அம்மாவை பாக்கணும்னு தோணுச்சு. அதான் உடனே கிளம்பிட்டேன். ”

அவள் அப்படி சொன்னதும் ஜேம்ஸ் வண்டியை உடனடியாய் நிறுத்த, அந்த அதிர்வு ஏற்படுத்திய குலுங்கலில், இருவருமே முன்னால் சாய்ந்து மீண்டும் இருக்கையில் நிலை கொண்டனர்.

வள்ளி ஜேம்சை கேள்வியாய் பார்க்க, ஜேம்ஸோ அதிர்ந்து போய் அவளைப் பார்த்தவன், “மேம்... அப்போ சென்னையில... ஒரு கண்ணு தெரியாத அம்மா உங்க கூட இருக்காங்கலே... அவங்க...?”

அவன் அதிர்ச்சி ஏனோ வள்ளிக்கு சிரிப்பையே தோற்றுவித்தது. “ஜேம்ஸ் வண்டியை எடுங்க. திருச்சி போக இன்னும் ரெண்டு மணி நேரம் இருக்கு. இதுவரைக்கும் நான் யாரு..? நான் யாருன்னு..? இல்லாத மூளையை கசக்கி விடை கண்டுபிடிக்க முயற்சி செஞ்சிட்டு இருப்பீங்க இல்ல.

இன்னைக்கு நானே என்னோட கதையை ஆதியோட அந்தமா உங்களுக்கு புட்டு புட்டு வைக்குறேன். ட்ரைவ் பண்ற உங்களுக்கும் போர் அடிக்காது. ட்ராவல் பண்ற எனக்கும் போர் அடிக்காது. எப்படி என்னோட ஐடியா..?”

வள்ளி இலகுவாய் வினவ, ஜேம்ஸ் தலை அசைத்து அவளின் ஆலோசனையை வரவேற்றான்.

அதற்குள் ஒரு எரிபொருள் நிறுவனம் குறுக்கிட, வண்டியில் எரிபொருளை நிரப்பி முடித்ததும் அவர்கள் பயணம் தொடங்கியது.

சாளரத்தின் வழியே நுழைந்து உறவாடும் தென்றல் ரசித்தபடி, வெளி உலகில் பார்வையை பதித்து இருந்த வள்ளி, மென் குரலில் தன் கடந்த கால கதையை ஜேம்சிடம் பகிர தொடங்கினாள்.

திருச்சி மலைக்கோட்டை பார்வைக்கு தென்படும் போது வள்ளியின் கதை நிறைவுற, ஜேம்சிடம் எந்த பதிலும் இல்லை எனவும், அவனை திரும்பி பார்த்தவள், அவன் முகம் கலங்கி இருப்பதைக் கண்டு, லேசாய் முறுவலித்து அவனை நம்பிக்கையாய் பார்த்தாள்.

"என் கதை எப்படி இருந்துச்சி ஜேம்ஸ்... நிறைய ட்விஸ்ட் அண்ட் டர்ன்ஸ்சோட சூப்பரா இருந்துச்சா..?"

வள்ளியின் கேள்விக்கு ஜேம்சால் உடனே பதில்சொல்ல முடியவில்லை. கரகரத்த தொண்டையை சற்றே சரிபடுத்திக் கொண்டவன்,

"உங்க லைப்ல இவ்ளோ நடந்து இருக்கு. நீங்க எப்படி மேடம் சாதரணமா சிரிச்சிட்டு இருக்கீங்க. நீங்க உண்மையிலேயே ரொம்ப கிரேட் மேடம். நான் வேற உங்க நிலமை புரியாம உங்க பின்னாடி சுத்தி உங்களுக்கு தொல்லைக் கொடுத்திட்டேன். ரொம்ப சாரி மேடம்."


DO NOT COPY

அவன் தன்மையாய் மன்னிப்பை வேண்ட, "நீங்க என்ன தப்பு செஞ்சீங்க ஜேம்ஸ். சொல்லப் போனா எல்லாரும் ஒதுங்கிப் போன என் பின்னாடி... எனக்கு தெரிஞ்சி தைரியமா சுத்தின ஒரே மனுஷன் நீங்க தான்.

ஏன்னா ஆம்பளைங்க என்ன தான் பொது வெளியில பெண் சுதந்திரம்... சமஉரிமைன்னு கருத்து பேசினாலும்... அவங்களுக்கு எல்லாம் குடும்பம் நடந்த ஒரு குடும்ப குத்து விளக்கு தானே தேவைப்படுது.

போராட்ட குணம் உள்ள பொண்ணுங்களுக்கு பேஸ் புக்ல வேணா ஆயிரம் லைக்ஸ் கமண்ட்ஸ் கிடைக்கலாம். ஆனா மேட்ரி மோனியல்ல ஒரு லைக் என்ன.... வியூ கூட கிடைக்காது. நம்ம சமூகத்தோட நிலைமை அது தான்.

நான் ஒரு அதிரடி ஆளுன்னு தெரிஞ்சும் சும்மா என் பின்னாடி சுத்திட்டு இருப்பீங்க இல்ல... உங்களோட அந்த தைரியம் உண்மையா எனக்கு ரொம்ப பிடிச்சது.

ரொம்ப ஓபனா ஒரு உண்மையை சொல்லவா..? உங்க மேல லவ் வரல... ஆனா ஒரு பிடித்தம் இருந்துச்சி. வில்லன் மறுபடி என் லைப்ல வராம இருந்து இருந்தா... உங்களை கல்யாணம் பண்ணி இருப்பேனா தெரியல... ஏன்னா எனக்கு பெருசா கல்யாணம் மேல எல்லாம் நம்பிக்கை இல்ல. லிவிங் டுகதர் மாதிரி என் லைப்பை என்னோட பீலிங்சை உங்களோட ஷேர் பண்ணிட்டு இருந்து இருப்பேன்." அவள் அப்படி சொல்லவும்,

"இப்படி தைரியமா பேச கூட உங்களால தான் மேடம் முடியும். நானும் ரொம்ப ஓபனா ஒரு உண்மையை சொல்லவா..?



DO NOT COPY

நான் என்ன தான் உங்க பின்னாடி சுத்திட்டு இருந்தாலும் மனசுக்குள்ள ஒரு பயம் ஓடிட்டே இருக்கும். இந்த பொண்ணு செம பயர். நீ ஒரு வாழை மட்டை. உனக்கெல்லாம் செட் ஆகாதுடான்னு.

என்னதான் புரட்சி பேசுற உங்க பின்னாடி சுத்தி வந்தாலும் நான் ரொம்ப சாதாரண மனுஷன் தான் மேம். நாம பேசி பழகினதுக்கு அப்புறம் நீங்க கல்யாணத்துக்கு மறுப்பு சொல்லி இருந்தா கண்டிப்பா நம்ம ரிலேசன்ஷிப் ப்ரேக் அப் ஆகி இருக்கும்.

இப்ப கூட உங்களை யாராச்சும் சைட் அடிச்சா... லைட்டா ஸ்டமக் பர்ன் ஆகத் தான் செய்யுது. அப்படி பர்ன் ஆகும் போது எல்லாம் அடிக்கடி ஐஸ்கிரீம் சாப்பிட்ட சரியாயிடும்னு நினைக்கிறேன் அதுவும் உங்க செலவுல... நீங்க என்ன சொல்றீங்க..?" என அவளிடமே கருத்துக் கேட்க,

இத்தனை நாளாய் ஜேம்சிற்கு நம்பிக்கை கொடுத்துவிட்டு, ஏமாற்றி விட்டோமோ என்ற உணர்வில் இருந்தவள் மனம் விட்டு சிரித்தாள்.

"ஓசி ஐஸ்கிரீமுக்கு அடி போடுறதைப் பாரு.... நீங்க சரியான ஸ்நாக்ஸ் டப்பா ஜேம்ஸ்.." என சொல்லிவிட்டு, மீண்டும் சிரிக்க,

"மேம் எது நடந்தாலும் நமக்கு சோறு முக்கியம்... அதோ அங்க பாருங்க பெரிய ஐஸ்கிரீம் லேண்ட் இருக்கு. எனக்கு வண்டி ஓட்டி செம டயர்டா இருக்கு. சோ... நாம ஐஸ்கிரீம் சாப்பிட்டுட்டு அப்புறம் நீங்க போக வேண்டிய இடத்துக்கு போகலாம்.." என சொல்ல வள்ளியும்,

“வேண்டாம்னு சொன்னா என்ன இங்கயே இறக்கிவிட்டு போனாலும் போயிடுவீங்க. வாங்க போகலாம்..” என மலர்வுடனே சொல்ல, இருவரும் அந்த பனிக்கூழ் உலகில் சிறிது நேர்த்தை கழித்துவிட்டு மீண்டும் தங்கள் பயணத்தை துவக்கினர்.

வள்ளி சில ஆண்டுகளில் மாற்றம் பெற்றுவிட்ட, வீதிகளை விழி விரிய பார்த்துக் கொண்டே, தன் வீட்டிற்கு செல்லும் வழிதனை ஜேம்சிற்கு விளம்பிய படி பயணித்துக் கொண்டிருந்தாள்.

வீட்டின் முன்னால், தலை முழுக்க ஆரஞ்சு நிற பூக்களை கொத்து கொத்தாய் தாங்கி நின்ற கொன்றை மரத்தைக் கண்டதும், நெஞ்சு கூட்டிற்குள் ஏதோ ஒரு வித உணர்வு வந்து அடைத்தது.

“இதோ இந்த பச்சைக் கலர் கேட் வீடு தான். இங்கயே முன்னாடி நிறுத்துங்க.” என உரைக்க, ஜேம்ஸ் வண்டியை ஓரமாய் நிறுத்தினான்.

பள்ளி விட்டு வீடு திரும்பிய சிறுமியாய் குதூகலத்துடன், பச்சை நிற இரும்புக் கதவுகளை திறந்ததும், அவள் எட்டாம் வகுப்பு படிக்கும் பொழுது, பிறந்த நாள் பரிசாய், தந்தை அவளுக்கு அளித்த, டாபர்மேன் வகை டாமி முதல் ஆளாய் ஓடி வந்து உற்சாகத்தில் அவளை கீழே தள்ளி அவள் முகம் முழுக்க நக்கி விளையாட தொடங்கியது.

“ஏய் டாமி.... கீப் கொய்ட்....” அவள் டாமியை அடக்க முயல, அது தன் இதனை ஆண்டுகளுக்கான அன்பின் ஏக்கத்தை அவளிடம் காட்டிக் கொண்டிருந்தது.


DO NOT COPY

எல்லாம் ஜேம்ஸ் கதவை திறந்துக் கொண்டு உள்ளே வரும் வரை மட்டுமே. ஜேம்ஸ் வாசல் படியில் கால் வைத்ததும், மோப்ப சக்தியால் அன்னியர் வருவதை உணர்ந்துக் கொண்ட டாமி, வள்ளியை விட்டுவிட்டு, ஜேம்சை பார்த்து முறைத்துக் கொண்டு குரைக்க தொடங்கியது.

நாயின் உயரத்தைக் கண்டு பீதிக்கு உள்ளான ஜேம்ஸ், வெளி சுவற்றோடு பல்லி போல ஒட்டி நிற்க, எழுந்து நின்றவள், டாமியின் கழுத்தில் இருந்த பட்டையை கையில் பிடித்து இழுத்து,

“டாமி.... டோன்ட் சவுட்.... என்னோட பிரண்ட் அவரு....” என டாமியை அதட்ட, அடுத்த நொடி அது அமைதியின் சிகரமாய், மீண்டும் வள்ளியிடம் விளையாட தொடங்கிவிட்டது.

ஆனால் நாய் குரைத்த ஒலியில் வீட்டின் உரிமையாளர் வாசலுக்கு வந்திருந்தார்.

வாயிலில் தந்தையை கண்டதும் வள்ளியின் முகம் நொடியில் உணர்வுகளை தொலைத்து நிர்மலமாகியது.

வள்ளி அவரை யாரோ போல பார்க்க, அவரோ வள்ளிக்கு பின்னால் நின்றுக் கொண்டிருந்த ஜேம்சை, எடை போடும் பார்வை பார்த்து வைத்தார்.

ஜேம்ஸோ வழிதவறிய ஆட்டுக் குட்டியாய் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

DO NOT COPY

உன் அணுவின் அணுவாய் இருந்தாலும்..

உன் விதையின் விருட்சமாய் இருந்தாலும்

உன் உயிரின் நகலாய் பிறந்தாலும்...

உணர்வால் எதிர் துருவம் நாமே.

வில் - 19

ஜாதிகள் இரண்டொழிய வேறில்லை...

ஜாதிகள் தவிர இங்கு வேறில்லை.

மகாலிங்கம் ஜேம்சை பார்வையால் அளப்பதை கண்டு எரிச்சல் அடைந்தவள், “நான் ஒன்னும் நிரந்தரமா இங்க தங்க வரல. அம்மாவை பாக்கணும்னு தோணுச்சி. அதான் வந்தேன். பாத்ததும் போயிடுவேன்.”

அவளின் கேள்விக்கு பதில் சொல்லாமல், அவர் அமைதியாய் நின்றிருக்க, “ஏங்க யார் வந்து இருக்கா...?” என்ற அம்மாவின் குரல் உள் அறையில் இருந்து ஒலித்தது.

எப்பொழுதும் யார் வீட்டிற்கு வந்தாலும், முதல் ஆளாய் வந்து எட்டிப் பார்க்கும் அம்மா, வீட்டிற்குள் இருந்து கொண்டு குரல் கொடுப்பது வள்ளிக்கு வித்யாசமாய் இருந்தது.



DO NOT COPY

அதோடு அவளை ஆச்சர்யப்பட வைத்த இன்னொரு விஷயம், தந்தை டாமியின் குரல் கேட்டு வாயிலுக்கு வந்தது. பொதுவாய் அவள் தந்தை, வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தாலே வாயிலுக்கு வந்து வரவேற்க மாட்டார்.

அவளின் அன்னை சென்று வந்திருப்பது இன்னார் என்று அறிவித்தால் மட்டும், சம்பரதாய நல விசாரிப்பிற்கு தன் அலுவல் அறையில் இருந்து வெளியே தலை காட்டுவார்.

யோசனையோடு  அவர் முகத்தைப் பார்த்தவள், 'அம்மாக்கு என்ன ஆச்சு. உடம்பு சரியில்லையா..?'' அவளின் கேள்விக்கும், அவர் பதில் சொல்லாமல் மௌனியாய் இருக்க, அதற்கு மேல் பொறுத்திருக்க முடியாமல் வள்ளி வீட்டிற்குள் ஓடினாள்.

அம்மாவின் குரல் வந்த அறைக்கு ஓடியவள், அங்கே கட்டிலில் படுத்திருந்த உருவத்தைக் கண்டு, முழுதாய் திகைத்தே போனாள்.

தலையில் முடிகலற்று, என்புதோல் போர்த்திய வெற்று கூடாய்... படுந்திருந்தவரைக் கண்டு அவள் திகைத்து நிற்க, மகளைக் கண்டதும், கண்கள் பிரகாசிக்க எழுத்து அமர்ந்தவர், உயிரை குரலில் தேக்கி,

"வந்துட்டியா வள்ளி...?'' என கசிந்துருகி கேட்க, வள்ளியின் கண்களில் கண்ணீர் உடைப்பெடுத்தது.

"மா..'' என்ற ஒற்றை சொல்லை தவிர வேறு சொல்லை உதிர்க்க முடியாதவள், ஓடிச் சென்று அவர் அருகில் அமர்ந்து அவர் கரங்களை பற்றிக் கொள்ள, தாயும் மகளை வாஞ்சையாய் அணைத்துக் கொண்டார்.



DO NOT COPY

சற்று நேரம் அவர் எத்தனை ஆறுதல் வார்த்தைகளை உதிர்த்தாலும், ஏற்றுக் கொள்ள முடியாமல், அழுகையில் கரைந்தவள்,

“என்ன ஆச்சு மா… என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லனும்னு உங்களுக்கு தோணவே இல்லைல….” என வருத்ததோடு கேட்க,

“எப்படி சொல்லுவேன் வள்ளிமா. உங்க அக்கா போய் சேந்த துக்கத்தை நான் கண்ணீரா ஆத்தி முடிக்கும் முன்ன… நீ வீட்டை விட்டு வெளியேறிட்ட… உங்க அப்பாவையும் போலிஸ் பிடிச்சிட்டு போயிட்டாங்க.

ஒத்த பொம்பளையா இந்த வீட்ல வாழ்றதுக்கு செத்து போகலாம்னு சில சமயம் தோணும். ஆரம்பத்துல எனக்கு உதவியா இருந்த என் தம்பி குடும்பமும்… வாரிசு இல்லாத சொத்து தானே… எங்களுக்கு கொடுத்தா என்னனு அடிக்கடி என்கிட்ட பணம் கேட்க ஆரம்பிச்சாங்க.

நம்ம கடை வரவு செலவு ஒன்னும் புரியல. ஒரு கட்டத்துக்கு மேல, அவங்க தொல்லை தாங்காம… இனிமே பணம் தர முடியாதுன்னு சொன்னதுக்கு…. ஒத்தையில நிக்கும் போதே உனக்கு இவ்ளோ திமிரானு என்னை கேவலமா திட்டிட்டு எல்லாரும் என்னை விட்டு விலகிப் போயிட்டாங்க.

உங்க அப்பாவை வெளிய எடுக்க ஒரு பக்கம் போராடிட்டு இருந்தேன். உன்ன வீட்டுக்கு கூப்பிட ஒரு பக்கம் போராடிட்டு இருந்தேன். ரெண்டு போராட்டமும் ஒன்னு போல தோத்துப் போச்சு.

அந்த சமயத்துல இடது மார்புல ஊசி குத்துறாப்போல அடிக்கடி வலிக்க ஆரம்பிச்சது. ஆரம்பத்துல எனக்கு இருந்த பிரச்சனையில அந்த வலியை நான் கண்டுக்கவே இல்ல.

இவ்வளோ பெரிய வீட்ல நானும் டாமியும் மட்டும் தான் இருப்போம். தனியா இருக்குறதுனா எவ்ளோ பெரிய கொடுமைன்னு நான் உணர ஆரம்பிச்ச நேரம் அது.

அந்த நேரத்துல மாப்பிள்ளை தம்பி தான் வந்து என்னை அடிக்கடி பாத்துட்டுப் போவார். ஒருநாள் நான் வலியில துடிக்கிறதைப் பாத்துட்டு... அவர் தான் என்னை ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டுப் போனார்.

அங்க போனதும் ஏதேதோ டெஸ்ட் எடுத்துப் பார்த்துட்டு எனக்கு என்னோட இடது மார்ல கேன்சர் கட்டி இருக்குன்னும்... உடனே ஆப்ரேசன் பண்ணனும்னு சொல்லிட்டாங்க.

கேன்சர்ங்கிற வார்த்தையை கேட்டதும், எனக்கு ரொம்ப பயம் வந்துருச்சி. நாம சாகப் போற நாள் நமக்கு தெரிஞ்சா வருமே ஒரு பயம் அப்படி ஒரு பயம்.

அந்த நேரம் உங்க அப்பாவோட கையை இறுகிப் பிடிச்சகனும் போல ஒரு பேராசை வந்துச்சி. ஒண்ணுக்கு ரெண்டா பிள்ளைங்களை பெத்தும், ஒரு பொண்ணு துணை கூட இல்லாம ஆப்ரேசன் பண்ணிக்கிட்டு, பெட்ல படுத்து இருந்த நாள் எல்லாம்.... கடவுளே என் துரோகிக்கும் வரக் கூடாதுன்னு இப்போ கூட தினம் கடவுள்கிட்ட வேண்டிக்கிறேன்.

வில்லன் தம்பி வீட்டு ஆளுக தான் அப்போ கூட இருந்தாங்க. கேன்சர் பரவாம இருக்க கரண்ட் வச்சாங்க.... ஏதேதோ ஊசி எல்லாம் போட்டாங்க. அதை எல்லாம் செய்ய செய்ய.... உடம்புல இருந்த முடி எல்லாம் கொட்ட ஆரம்பிச்சது.

வீட்டோட என்னைப் பாத்துக்க வில்லன் தம்பி ஒரு நர்சை வேலைக்கு ஏற்பாடுப் பண்ணிக் கொடுத்தார். அதோட நம்ம கடையோட போக்கு வரத்து எல்லாத்தையும் வாரம் ஒரு முறை மேனேஜரை கணக்கு காட்ட சொல்லி அவர் தான் மேற்பார்வை பாத்துட்டு இருந்தார்.

ஒரு வழியா கொஞ்சம் மீண்டப்ப, மறுபடி இன்னொரு கட்டி ... இடது மாருக்கு கீழ இருந்த எலும்புல புதுசா வந்துடுச்சி.

இந்த முறை நான் உடைஞ்சே போயிட்டேன். இனி நாம பிழைக்க மாட்டோம்னு உறுதியா மனுசுல தோண ஆரம்பிச்சது. மனுசுல வலு இல்லை. உடம்போட வலுவும் போக படுத்த படுக்கையாய் ஆயிட்டேன்.

மகன் மாதிரி என் கூட இருந்த வில்லன் தம்பி கையை பிடிச்சிட்டு, "நான் சவக்குழிக்குள்ள போறதுக்குள்ள... எம் புருசனையும்... என் பொண்ணையும்.. என் கண்ணுல காட்டிடுங்க சாமின்னு.." கதறி அழுதுட்டேன்.

அதுக்கு அப்புறம் தான் வில்லன் தம்பி புது வக்கீலை எல்லாம் ஏற்பாடு பண்ணி, உங்க அப்பா கேசை மேல்முறையீடுக்கு கொண்டு போனார்.

DO NOT COPY

அப்போ தான் எங்களுக்கே ஒரு உண்மை தெரியவந்தது. உங்க அக்காவை ஆயிரம் தான் வெட்டுவேன் குத்துவேன்னு உங்க அப்பா ஆவேசமா கத்திட்டு இருந்தாலும்... அவர் எந்த ஏற்பாட்டையும் பண்ணல.

கட்சியில அவருக்கு கீழ இருந்த மாடசாமின்ற ஒரு ஆள்... உங்க அக்கா குடும்பத்துக்கு ஏதாவது நடந்தா பழி உங்க அப்பா பேர்ல தான் வரும்னு தெரிஞ்சிக்கிட்டு... வேணும்னே... உங்க மாமாவை கொன்னு இருக்கான்.

தனியார்ல துப்பறியும் நிறுவனத்துல இருந்த ஆளுங்களை வச்சி தான் வில்லன் தம்பி இந்த விசயத்தையே கண்டுபிடிச்சார். உன் கல்யாணம் முடிஞ்சதுல இருந்த அவர்கிட்டயே பேசாம இருந்தவர், நான் அழுத அன்னைக்கு தான் அவரைப் போய் பார்த்து பேசி இருக்கார்.

அப்போ தான் உங்க அப்பா.... தான் விக்ரமை கொல்ல எந்த ஏற்பாடும் பண்ணலைனும்... ஜாதி சங்க ஆளுங்க... அவர் கமிசனர் ஆபிஸ்ல அவமானப்பட்டத்துக்கு பழி வாங்க... அவரை அவங்களா முடிவு பண்ணி கொன்னுட்டதா சொல்லி இருக்கார்.

ஐஞ்சி வருஷ ஜெயில் வாழ்கை அவருக்கு நிறைய புத்தியை கொடுத்து இருக்கும்னு நினைக்கிறேன். கல்லா உள்ள போன மனுஷன்... கனியா மாறிப் போய் இருந்தார்.

வித்யாவாவை நினச்சி வில்லன் தம்பி முன்னாடியே அழுது இருக்கார். உன்ன பத்தி கூட விசாரிச்சி இருக்கார். எனக்கு இப்படி இருக்குன்னு சொன்னதும், தலை தலையா அடிச்சிகிட்டு, நான் செஞ்ச பாவம் தான் என் குடும்பத்தையே விடாம சுத்துதுன்னு ரொம்ப அழுதாராம்.



DO NOT COPY

இதெயெல்லாம் வில்லன் தம்பி என்கிட்ட சொன்னப்ப என்னால நம்பவே முடியல. ஆனா ஆறுமாசத்துக்கு முந்தி ஜெயில்ல இருந்து விடுதலையாகி வந்ததும்,

என்கையை பிடிச்சிட்டு அழுதாரு பாரு... உங்க அப்பா அவங்க அப்பா, அம்மா சாவுக்கே கலங்காம கல்லு மாதிரி இருந்த மனுஷன். கம்பீரமா எப்பவும் நாலு பேர் பின்னாடி நடந்து வர அவர் இருந்த இருப்புக்கும், உடஞ்சி போயி திரும்பி வந்த அவரைப் பாத்ததும்... என்னால தாங்கவே முடியல வள்ளி.

எந்த மனுஷன் உணர்ச்சியை வெளிய காட்டினா நல்லா இருக்கும்னு நினைச்சேனோ, அந்த மனுஷன் உடஞ்சி அழுத்தப்ப, என்னால அதை தாங்கவே முடியல.

இந்தமுறை நான் ஆபரேசன் பண்ணிக்கும் போது என் கையை பிடிச்சிக்கிட்டு உங்க அப்பா என்கூடவே இருந்தார். சொன்ன நம்ப மாட்ட.. உங்க ரெண்டு பேத்தையும் பெத்து எடுக்கும் போது கூட அவர் என் பக்கத்துல இல்ல. அடுத்த நாள் தான் வந்து பாத்தார்.

இந்த முறை கரண்ட் வைத்தியம், மாத்திரை மருந்து எதையும் தாங்குற வலு உடம்புலயும் இல்ல. மனசுலயும் இல்ல. இப்ப உங்க அப்பா தான் என்னை முழுக்க முழுக்க பாத்துகிறார்.

எனக்கு கேன்சர் கட்டி இருக்குன்னு தெரிஞ்ச அடுத்த நிமிசமே, "உங்க பொண்ணுக்கு சொல்லிடலாம் அத்தைனு வில்லன் தம்பி என்கிட்ட கேட்டுகிட்டே தான் இருந்துச்சி.



DO NOT COPY

நான் தான்.... என்னை தனியா விட்டுட்டுப் போனவ அவ தானே... அவளுக்கா எப்போ என்னை பாக்கணும்னு தோணுதோ அப்பா பக்க வரட்டும்னு சொல்லிட்டேன்.

ரெண்டாவது தடவை கட்டி வந்து இருக்குன்னு தெரிஞ்சி வில்லன் தம்பி கையைப் பிடிச்சிட்டு அழுத்தப்ப... அவரு தான்... உங்க மகளை நான் மறுபடி உங்ககிட்ட கொண்டு வந்து சேக்குறேன் அத்தை. நீங்க அவளை நினச்சி வருத்தப்பட்டு உடம்பை கெடுத்துக்காதீங்கன்னு ஆறுதல் சொன்னார்.

அவர் சொன்ன மாதிரி உன்னை என் கண்ணுல காட்டிட்டார். வில்லன் தம்பி உன் கூட வந்து இருக்கா..? தம்பி வந்து இருந்தா மொதோ வேலையா என்ன இல்ல பாக்க வந்து இருக்கும்." வள்ளியின் தாய் இப்படிக் கேட்டதும்,

அவரை ஆதரவாய் அணைத்துக் கொண்டவள், "ரியலி சாரி மா... எல்லாத்துக்கும்.." என்றவள் விடாமல் தேம்ப தொடங்கினாள்.

ஒரு அரைமணி நேரம் கழித்தே, வள்ளிக்கு தான் ஜேம்சை வாயிலிலேயே விட்டு விட்டு வந்தது, நினைவிற்கு வந்தது.

"மா.. ஒரு நிமிஷம்... இதோ வந்துடுறேன்.." என்றவள், அறையை விட்டு வெளியேற, வரவேற்ப்பரையில் இருந்த சோபாவில் அமர்ந்தபடி, ஜேம்ஸ் அவள் தந்தையோடு பேசிக் கொண்டிருந்தான்.

டீபாயில் இருந்த காலி கண்ணாடி டம்பளர்கள், அவர் ஜேம்சை உபசரித்து இருக்கிறார் என்பது புரிய,

அழுது சிவந்த விழிகளோடு அவனை எறிட்டவள், "சாரி ஜேம்ஸ்.." என அவனிடம் மன்னிப்பை வேண்ட, இத்தனை நேரம் மகாலிங்கம் வள்ளியின் தாய் பற்றி உரைத்துக் கொண்டிருந்ததை கேட்டுக் கொண்டிருந்தவன், ஆகையால் வேகமாய் அவளை நெருங்கியவன், ஆறுதலாய் அவன் கரம் பற்றிக் கொண்டு,

"எல்லாம் சரியாயிடும் மேம்.." என உரைக்க வள்ளி அவன் கரத்தில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பி அழுதாள்.

"நான் ரொம்ப கேவலமான பிறவி ஜேம்ஸ். பெத்த அம்மாவை இங்க தனியா நோயோட தவிக்க விட்டுட்டு... சமூகத்தை நேராக்குறேன்னு... எல்லாரையும் குறை சொல்லிட்டு சுத்திட்டு இருந்து இருக்கேன். எனக்கு மன்னிப்பே கிடையாது ஜேம்ஸ். எனக்கு மன்னிப்பே கிடையாது.." அவள் தொடர்ந்து அழ,அவளின் கண்ணீரை நிறுத்துவதற்குள் அவன் பாடு பெரும்பாடு ஆகிப் போனது.

அவளை கொஞ்சம் தேற்றிவிட்டு, வள்ளியின் தாயையும் பார்த்து தேறுதல் சொல்லிவிட்டு, அவன் கிளம்ப முற்படுகையில், நேரம் இரவை நெருங்கி இருந்தது.

அதற்குள் மகாலிங்கம் ஜேம்சிற்கு தோசை வார்த்து, சட்னியோடு இரவு உணவை தயார் செய்து இருந்தார். வீட்டின் சமயலறை எந்த மூலையில் இருக்கும் என்று கூட அறியாத தந்ததை இன்று உணவையே சமைப்பது கண்டு வள்ளியின் விழிகள் ஆச்சர்யத்தில் விரிந்தது.

இது தான் கால மாற்றம் போலும். உணவை அருந்திவிட்டு, ஜேம்ஸ் புறப்படுகையில், வள்ளி தலையை தாழ்த்திக் கொண்டு,



DO NOT COPY

“என்னோட ரெசிக்னேசன் லெட்டரை நான் எடிட்டர் சாருக்கு மெயில் பண்ணிடுறேன் ஜேம்ஸ். எல்லாருக்கும் ‘பாய்’ சொன்னேன்னு அரசனூர்லையும் நம்ம ஆபீஸ்லயும் சொல்லிடுங்க.

சென்னை போனதும்... கொஞ்சம் எங்க காலனிக்கு போய் அம்மாகிட்ட நான் வர கொஞ்ச நாள் ஆகும்னு சொல்லுங்க. அவங்க போன்ல என்ன பிரச்சனைன்னு தெரியல. மூணு நாளா ஸ்விட்ச் ஆப்னே வருது.”

வள்ளி தலை நிமிராமல் பேசிக் கொண்டிருக்க, “மேம்... நீங்க ரிசைன் பண்ணப் போறேன்னு சொல்றது வெறும் ஜாப் இல்ல.. உங்க ஐடென்டிடி.... உங்க அடையாளம்.... நல்லா யோசிச்சி தான் பேசுறீங்களா..?”

ஜேம்ஸ் அப்படிக் கேட்டதும், நீரில் பளபளத்த கண்களோடு அவனை நிமிர்ந்து பார்த்தவள், “என்னோட அடையாளத்தை விட எங்க அம்மாவோட சந்தோசமும்.. நிம்மதியும் இப்ப எனக்கு ரொம்ப முக்கியம் ஜேம்ஸ்.” என்றவள் அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் விருட்டென வீட்டிற்குள் சென்று மறைய, ஜேம்ஸ் பதில் சொல்ல முடியாதவனாய் காரை நோக்கி நடந்தான்.

வீட்டின் உள்ளே, வெளியே வந்து அமர மறுத்த தாயை, கட்டாயப்படுத்தி உணவு மேஜைக்கு அழைத்து வந்து அமர வைத்தவள்,

“அம்மா.. உங்க புருஷனை முறுவலா நெய் தோசை சுட சொல்லுங்க. அதனான் உங்க மகளுக்கு பிடிக்கும்.” என மறைமுகமாய், தந்தையை ஏவ, நெடு நாட்களுக்குப் பின் வள்ளியின் தாய் மலர்ந்து சிரித்தார்.


DO NOT COPY

“கழுத உனக்கு வேணும்னா நீ போய் சுட்டு தின்னுடி... என் புருஷனை ஏண்டி வேலை வாங்குற..?” என அவரும் பேச்சில் இறங்க, நெடு நாட்களுக்ப் பின் அந்த வீட்டை சிரிப்பொலி நிறைத்தது.

தாயிற்கு தந்தை சுட சுட சுட்டுக் கொண்டு வந்துக் கொடுத்த தோசையை தன் கையால் ஊட்டிவிட்டவள், அவர் இரவு உடைக்கு மாற உதவி செய்துவிட்டு, அவர் எடுத்துக் கொள்ள வேண்டிய மாத்திரைகளை விழுங்க வைத்துவிட்டு... அதன் பிறகும் அவர் உறங்கும் வரை, அவர் கரங்களை பற்றிய படி, பழைய கதைகளைப் பேசிக் கொண்டிருந்தாள்.

அவர் உறங்கியதும், இதுவரை அவருக்கு அளிக்கப்பட்டிருந்த சிகிச்சைக் கோப்புகளை எடுத்துப் படித்துப் பார்த்தவள், ஒன்றை மட்டும் தெளிவாய் புரிந்துக் கொண்டாள்.

அது தன் தாய் தன் வாழ்நாளை எண்ணிக் கொண்டு இருக்கிறார் என்பதை தான். தன் தாய் சொல்லித் தான் வில்லன் தன்னை தேடி வந்து இருக்கிறான் என்ற செய்தி இதயத்தின் ஒரு மூலைக்கு வலியைக் கொடுத்த போதும், தன் தாயிற்காய் அவன் செய்த செயல்கள் அவள் நெஞ்சில் நெகிழ்வை ஏற்படுத்தி இருந்தன.

இறப்பின் வாயிலில் இருக்கும் தன் தாய் மகிழ, அவளால் கொடுக்க முடிந்த பரிசு ஒன்றே ஒன்று தான்.

அந்த எண்ணம் அவளுள் தோன்றி வலுப்பட, நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தாலும் சற்றும் யோசிக்காமல், வில்லனுக்கு அழைத்ததும்,



DO NOT COPY

அவன் தூக்கக் கலக்கத்தோடு, “ஹெலோ..” என்றதும், என்ன பேசுகிறோம் என்பதையே உணராமல்,

“வில்லன்.... எனக்கு உடனே குழந்தை வேணும். எங்க அம்மாவோட கடைசி காலத்துல அவங்க முகத்துல சந்தோசத்தைப் பாக்க... என்னை மாதிரியோ.. இல்ல எங்க அக்கா மாதிரியோ... எனக்கு ஒரு குழந்தை வேணும் வில்லன்..”

அவள் குரல் கரகரத்த குரலில் இருந்தே, அவள் அழுகையை அடக்கிக் கொண்டு பேசுகிறாள் என்பதை உணர்ந்தவன், சுறு சுறுவென்று ஏறிய கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு,

“நாளைக்கு நேர்ல வறேன் பேசலாம்.” என்ற ஒற்றை வார்த்தையோடு அழைப்பை துண்டித்துவிட்டான்.

ஆனால் அடுத்த நாள் கலை வள்ளியை சந்தித்த வில்லன் அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்து தன் கோபத்தை வெளிப்படுத்துவான் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

வில் - 20

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

ஜாதிகள் பார்ப்பின் - மனிதமே இல்லை.

தாய் பதம் சொல்ல சொல்ல அடுப்பில் கேரட் அல்வாவை கிண்டிக் கொண்டிருந்தாள் வள்ளி. அது வள்ளியின் தாயிற்கு மிக பிடித்த இனிப்பு.



DO NOT COPY

மலர் சமையலறை வாயிலில்... சாய்ந்து கொள்ளும் வசதி கொண்ட இருக்கை ஒன்றில் அமர்ந்தபடி, மகளுக்கு செய்முறையை விளக்கி கொண்டிருந்தார்.

வள்ளி மாற்றுடை எதுவும் கொண்டுவராததால், அவளுடைய அறையில் அடுக்கு கூட கலையாமல் அப்படியே இருந்த அவள் பழைய மிடி வகை உடை ஒன்றை எடுத்து அணிந்திருந்தாள்.

முடி மொத்தமும், நூதன கொண்டையாய் முடங்கி இருக்க, முன் உச்சியில் விடுபட்ட நீண்ட கற்றை ஒன்று நெற்றி சுட்டியாய் பிறை நெற்றியை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

“கேரட் வெந்த வாசம் வந்துடுச்சி.. இப்ப ஏலக்காய் விதையோட சக்கரை மிக்சியில போட்டு பவுடர் பண்ண இல்ல... அந்த பவுடரை கொஞ்ச கொஞ்சமா சேத்து கிளறு..”

தாய் சொல்லியபடி, மிக்சியின் சிறிய ஜாரை வள்ளி கையில் எடுக்கும் பொழுது, “எப்படி இருக்கீங்க அத்தை...?” என்ற வில்லனின் அழுத்தமான குரல் வள்ளியின் செவிகளை தீண்டியது.

உடல் எங்கும் ஏதோ ஒரு வகை மின்னல் பாய, சடாரென உடலில் தோன்றும் நடுக்கத்தை சமாளிக்க, கையில் இருந்த ஜாரின் கைப்பிடியில் அழுத்தத்தை அதிகப்படுத்தினாள் வள்ளி.

மறந்தும் வில்லனின் புறம் திரும்பவில்லை. நேற்று இரவு அவனிடம் பேசிய வார்த்தைகளின் தாக்கம் அவளை அசையாது கட்டி வைத்திருந்தது.


DO NOT COPY

“வாங்க மாப்பிள்ளை... வாங்க...” என மலர் அவனை வரவேற்ப்பதும், “ஐயோ அத்தை மொதோ நீங்க உக்காருங்க. என்னைப் பாத்ததும் எழுந்து நிக்கனுமா...?” என வில்லன் கடிந்து கொள்வதும், வள்ளிக்கு துல்லியமாய் கேட்க, வள்ளி அதிகரித்த இதய துடிப்போடு அமைதியாய் நின்றுக் கொண்டிருந்தாள்.

வள்ளியை நோக்கி திரும்பிய மலர், “வள்ளி... மாப்பிள்ளைக்கு தண்ணிக் கொண்டு வாம்மா..” என்றவர், வில்லனைப் பார்த்து,

“வெளியே ஹால்ல உக்காருங்க மாப்பிள்ளை...!” என உபசரிக்க, வரவேற்ப்பறையில் இருந்த இருக்கை ஒன்றை சமையலறை வாசல் வரை இழுத்து வந்தவன்,

“இங்க உக்காரலாம் இல்லையா அத்தை..?” எனக் கேட்க, மலரோ பதறிப் போய், “என்ன மாப்பிள்ளை... இப்படி கேட்டுட்டீங்க...? இது உங்க வீடு நீங்க எங்க வேணா உக்காருங்க...” என பதில் கொடுத்தார்.

எரிந்துக் கொண்டிருந்த அடுப்பின் வேகத்தைக் குறைத்தவள், குனிந்த தலை நிமிராமல், பெரிய சொம்பில் நீரைக் கொண்டு வந்து வில்லனுக்கு கொடுத்தாள்.

அவளை நிமிர்ந்தும் பாராது சொம்பை கைநீட்டிப் பெற்றுக் கொண்டவன், மலரிடம் தொடர்ந்து அவர் உடல் நலம் பற்றி விசாரிக்கத் தொடங்கி விட, அதுவரை உள்ளுக்குள் காற்றுக் குமிழியாய் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்த ஏதோ ஒன்று ‘பட்’ என உடைந்து சிதறியதைப் போல மனதை ஏமாற்றம் ஆக்கிரமித்தது.



DO NOT COPY

மீண்டும் சமயலறையில் தன் கிளறல் பணியை அவள் தொடங்கிவிட, மலரிடம் பேசிக் கொண்டிருந்தவன் மறந்தும் அவள் புறம் பார்வையை திருப்பவில்லை.

வில்லன் தன்னை பார்க்கிறானா என அறிய வள்ளி தான் அவனை நொடிக்கு ஒரு முறை ஓர விழிப் பார்வையால் அளந்துக் கொண்டிருந்தாள்.

பத்து நிமிடத்தில் ஏமாற்றம், கோபமாய் உருமாற, 'போடா' என மனதிற்குள் முணகிக் கொண்டவள், அதன் பிறகு தன் கவனத்தை முழுமையாய் சமையலில் திருப்பினாள்.

உருக்கிய நெய்யில் முந்திரி பாதாம் துருவலை வதக்கி, கேரட் அல்வா கலவையில் ஊற்றி, பாதார்த்ததை நிறைவு செய்ததும், வள்ளி சமையலறை வாயிலைப் பார்க்க, அங்கே அவள் தாய் மட்டும், புத்தகம் ஒன்றை படித்தபடி அமர்ந்திருந்தார்.

வள்ளி, "மா.." என அழைக்க, புத்தகத்திலிருந்து பார்வையை திருப்பியவர், அவளைப் பார்த்து முறுவலித்து விட்டு, "கேரட் அல்வா அல்வாவா இருக்கா இல்ல கேரட் பாயாசமா இருக்கா..?" என வினவ,

"மா.." என காலை உதைத்து சிணுங்கியவள், "சூடு ஆறட்டும்... நீங்க சாப்பிட்டு பாத்து சொல்லுங்க.." என சொல்ல,

நெடு நாட்களுக்குப் பிறகு சிறுபிள்ளையாய் சிணுங்கும் மகளைக் கண்டவரின் நெஞ்சம் பூரிப்பில் நெகிழ்ந்தாலும், வெளியே மேலும் கிண்டலாய் சிரித்துவிட்டு,

“ பாயாசமா இருந்தாக் கூட பரவாயில்ல வள்ளி.. பசையா இல்லமா இருந்தா சரி.. எதுக்கும் உங்க அப்பாவை முதல்ல சாப்பிட சொல்லிட்டு... அப்புறம் தான் நான் சாப்பிடனும்...” என விளையாட்டாய் சொல்ல வள்ளியின் முகம் நொடியில் சுருங்கிவிட்டது.

“அம்மா நான் உங்களுக்கு மட்டும் தான் செஞ்சேன். உங்க வீட்டுக்காரருக்கு எல்லாம் இல்ல. உங்களுக்கு சாப்பிட பிடிக்காட்டி... விட்ருங்க. நான் அதை ஏதாச்சும் பண்ணிக்கிறேன்.”

வள்ளியின் குரலில் வெளிப்பட்ட பிடிவாதத்தில், கோபத்தில் மலரின் முகம் கவலைக்கு மாறியது.

தாயிடம் அப்படியே ஒட்டிக் கொள்ள முடிந்த வள்ளியால் தந்தையிடம் முகம் கொடுத்துக் கூட பேச முடிவதில்லை. ஏனோ அவளுக்கு அவர் முகத்தைக் காணும் போது எல்லாம் இறந்து போன தன் அக்காளின் முகம் கண் முன் தோன்றுவதைப் தவிர்க்க முடிவதில்லை.

ஆகையால் வள்ளி நேரடியாய் அவள் தந்தையிடம் பேசுவதே இல்லை. அவர் மேல் இருந்த கோபம் வடியும் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இல்லை.

உடனுக்குடன் அனைத்தும் நேராகாது என்றுணர்ந்த மலர், “சரி... சரி மூஞ்சை தூக்கி வச்சிக்காதே... பாக்க சகிக்கல... நானே நீ செஞ்ச பசையை முழுசா சாப்பிடுறேன்... சரியா. உனக்கு கூட மிச்சம் வைக்க மாட்டேன்..” என சொல்ல வள்ளியின் முகத்தில் கீற்றாய் புன்னகை மலர்ந்தது.

DO NOT COPY

“ஹூம்.. இப்போ தான் நீங்க குட் கேர்ள்..” என அவள் தன் அன்னையின் கன்னம் கொஞ்சி விளையாட,

“கழுத வலிக்குது. சரி சரி... வில்லன் தம்பி மாடித் தோட்டத்தை பாத்துட்டு வரேன்னு மொட்டை மாடிக்குப் போனார். இன்னும் காணல. தம்பிக்கு கொஞ்சம் மோர் எடுத்துட்டுப் போய்க் கொடு வள்ளி.

அப்படியே தம்பிக் கூட கொஞ்ச நேரம் பேசிட்டு வா. உங்க அப்பாகிட்ட மூஞ்சை தூக்கிட்டு அலையிற மாதிரி அவர்கிட்ட எதுவும் செஞ்சிடாத. தம்பி மாதிரி ஒருத்தர் நம்ம குடும்பத்துக்கு மருமகனா வர நாம கொடுத்து வச்சி இருக்கணும் வள்ளி.”

மலரின் குரலில் இருந்த நெகிழ்ச்சியில் இருந்தே தாய் அவனை எத்துனை தூரம் மதிக்கிறார் என்பதை உணர்ந்துக் கொண்டவள், வெடித்துக் கிளம்ப முயன்ற உணர்வுகளை முயன்று அடக்கிக் கொண்டு,“ம்..” என்ற ஒற்றை வார்த்தையை விடையாய் கொடுத்தாள்.

குளிர்சாதனப் பெட்டியில் இருந்த மோரை ஒரு கண்ணாடி டம்ளரில் எடுத்துக் கொண்டவள், நகர மறுத்த கால்களை, சிரமப்பட்டு மொட்டை மாடியை நோக்கி நகர்த்தினாள்.

எத்துனை மெதுவாய் நடந்தும் இறுதியில், மூன்றாம் மாடி வந்தே விட, வில்லனின் முதுகுப்புறம் வள்ளியின் கண்களில் தென்பட்டது.


DO NOT COPY

அவனை நெருங்கி நின்றதும், "மோர்.." என டம்ளரை முகத்திற்கு நேராய் தூக்கிப் பிடிக்க, தொட்டி செடிகளுக்கு உரமிட்டுக் கொண்டிருந்தவன், நிமிர்ந்து அவளை ஆழ்ந்துப் பார்த்தான்.

அந்தப் பார்வையின் அழுத்தத்தில், வள்ளிக்கு மீண்டும் நடுக்கம் வரும் போல இருக்க, இம்முறை கைகளில் இருந்த டம்ளரை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

நேராய் நிமிர்ந்து நின்றவன், "இன்னும் கொஞ்சம் அழுத்திப் பிடிச்சா... கிளாஸ் உன் கைலையே உடைஞ்சிரும் வள்ளி... அதை முதல்ல திட்டுல வை.." என உத்தரவிட,

ஆசிரியருக்குப் பணியும் மழலையாய் வள்ளி, அவன் சொன்னதைப் போல டம்ளரை திட்டி வைத்துவிட்டு வந்து நின்றாள்.

அவன் பார்வையை சந்திக்காமல் அவள் தலைக் குனிந்து நிற்க, "வள்ளி... நிமிந்து என்னைப் பாரு.." அவனின் கடினமான குரலில் வள்ளி அவனை வேகமாய் நிமிர்ந்து பார்த்தாள்.

உணர்வுகள் தொலைத்த முகத்தோடு, "நேத்து நைட்... போன்ல என்கிட்ட கேட்ட விஷயம் இன்னும் அப்படியே தான் இருக்கா..? எந்த மாற்றமும் இல்லையே..?" எனக் கூர்மையாய் கேட்க,

வெளிப்படையான பேச்சில் சற்றே அவள் முகம் சிவந்த போதும், அவனை உறுதியாய் பார்த்தவள், எந்த மாற்றமும் இல்லை என்பதைப் போல தலை அசைக்க,

“அப்போ சரி..” என்றவன் அவன் சட்டைப் பையில் இருந்து, ஒரு சிறிய நகைப் பெட்டியை வெளியே எடுத்து அருகில் இருந்த திட்டில் வைத்தான்.

வள்ளி அது என்னவோ என்பதைப் போல பார்க்க, அவள் கண்களுக்குள் ஆழ்ந்துப் பார்த்தவன்,

“நீ கழட்டிக் கொடுத்துட்டுப் போன தாலி தான் அதுல இருக்கு. நீ ஆசைப்பட்ட மாதிரி உனக்கு குழந்தை வேணும்னா... அதை எடுத்து உன் கழுத்துல போட்டுக்கோ.” என்றவன் அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதை அறிய, கைகளைக் கட்டியபடி அவளை கூர்மையாய் பார்த்தபடி நின்றான்.

வள்ளி சற்று நேரம் தயங்கி நின்றாலும், ஒரு முடிவிற்கு வந்தவளாய், அந்த சிறிய நகைப் பெட்டியை எடுக்க கைகளை நீட்டி இருந்தாள்.

அடுத்த நொடி என்ன நடந்தது என்றே தெளிவாய் அவளுக்கு புரியவில்லை. காதில் ‘நொய்’ என்ற சத்தத்தோடு, உலகமே வேகமாய் சுழலுவதைப் போன்ற உணர்வைத் தர, எரிந்த இடது கன்னத்தை உள்ளங் கைகளில் தாங்கியவள், நடந்த நிகழ்வை ஏற்க முடியாமல், வில்லனை திகைப்பாய் பார்த்தாள்.

ரௌதிர்மாய் அவள் முன் நின்றுக் கொண்டிருந்தவன், “அப்போ உங்க அம்மா நம்புற மாதிரியே, நீயும் நம்புற அவங்க செத்துடுவாங்கன்னு. அவங்களை சந்தோசமா அனுப்பி வைக்க குழந்தை வேற கேக்குற.

உன்னை எல்லாம் ரொம்ப பெரிய போராளின்னு நினைச்சிட்டு இருந்தேன் வள்ளி. உனக்கு கூட தோணலை இல்ல அவங்களுக்கு வந்து இருக்க வியாதியை எதிர்த்து நின்னு போராடி ஜெயிக்கணும்னு.

நீ கூட உணர்வுக்கு அடிமையாகி... உன்னோட சுயத்தை இழப்பேன்னு கொஞ்சம் கூட நினைக்கல. அப்போ நீயும் எல்லாரையும் மாதிரி தானா... யார் எப்படி போன எனக்கு என்ன என் வீடு நல்லா இருக்கணும்... அப்படி தானே...!

உங்க அம்மாவை பாத்தியா. எப்படி உருக்குலஞ்சி போய் இருக்காங்கன்னு. அதுக்கு காரணம் வெறும் வியாதின்னு மட்டும் நினைக்குரியா...? கண்டிப்பா இல்ல.

அந்த வியாதி மேல அவங்களுக்கு இருக்க பயம். உங்க அம்மா கோவில், பண்டிகைன்னு வெளிய போய் வந்து எத்தனை வருஷம் ஆகுது தெரியுமா..?

உங்க வீடு.. வீட்டை விட்டா ஹாஸ்பிடல். இந்த ரெண்டு இடத்தையும் தாண்டி அவங்க வேற எங்கயும் போறது இல்ல. ஏன் தெரியுமா..?

அவங்களுக்கு நடந்த ஆப்ரேசன்ல ஒருபக்க மார்பை எடுத்து இருக்காங்க. உங்க அம்மா தன்னோட பெண்மையின் அடையாளமா அந்த மார்பை தான் மதிக்கிறாங்க.

அந்த அடையாளம் இல்லாம அவங்களுக்கு தன்னை வெளிய காட்டிக்க பிரியம் இல்லை. இதெல்லாம் எனக்கு எப்படி தெரியும்னு நினைக்காதே.

உங்க அம்மா ஆபரேசனுக்கு மொதோ நாள்ல இருந்து எங்க அம்மா தான் அவங்க கூட துணைக்கு இருந்தாங்க.

ஆபரேசனுக்கு மொதோ நாள்... உங்க அம்மா தன்னோட இடது மார்பை கைல பிடிச்சிட்டு... ரொம்ப நேரம் அழுதுட்டு இருந்தாங்களாம்.



DO NOT COPY

‘பொண்ணா பொறந்துட்டு... இழக்கக் கூடாததை எல்லாம்... இழக்கப் போறேனே அண்ணி... நடக்கப் போற ஆப்ரேசன்ல நான் செத்துப் போயிட்டா கூட நல்லா இருக்குமே. இனி இந்த உடம்போட நான் எப்படி வெளிய நடமாடப் போறேன்.’ அப்படின்னு புலம்பிட்டே இருந்தாங்களாம்.

ஆபரேசனுக்கு அப்புறம் அவங்க சொன்ன மாதிரியே... வெளிப் போக்கு வரத்தை முழுசா நிறுத்திட்டாங்க.

ஆறு மாசத்துக்கு முன்னாடி.. உங்க அப்பா ஜெயில்ல இருந்து வெளிய வரும்போது கூட.... அவங்களை சந்திக்க ரொம்ப கூச்சப்பட்டாங்க.

அன்னைக்கு உங்க அப்பா.. உங்க அம்மா கையைப் பிடிச்சிட்டு அழுததை நீ பாத்து இருக்கணும் வள்ளி.... உங்க அம்மா கொஞ்ச நாளா புது மனுசங்க யாரையும் சந்திக்கிறதே இல்ல. ஏன் அவங்க அறையை விட்டுக் கூட வெளிய வரதே இல்ல.

ட்ரீட்மென்ட்க்கு கூட ஒழுங்கா ஒத்துழைக்கிறது இல்ல. அவங்க இழந்தது அவங்க உடம்புல ஒரு உறுப்பை. ஆனா என்னவோ தான் ஒரு பெண் அப்படிங்கிறத்துக்கான அடையாளத்தை தான் இழந்துட்டதா... எப்பவும் மறுகிகிட்டே இருக்காங்க.

‘கனல்’ விக்யா இந்நேரம் இங்க இருந்து இருந்தா.... இதெல்லாம் அவங்களுக்கு புரிய வச்சி இருப்பா. வெளி உலகத்தை அவங்க அம்மாவுக்கு காட்டி இருப்பா. மோசமான விளிம்பு நிலை மனிதர்கள் கூட உயிர் வாழ எப்படி போராடிட்டு இருக்காங்கன்னு அவங்க அம்மாவுக்கு உணர்த்தி இருப்பா.

'கேன்சர்' அப்படிங்கிறதும் சாதாரண வியாதி தான்னு சொல்லி அதை எதிர்த்து நின்னு போராட அவங்க அம்மாவோட ஆன்ம பலத்தை அதிகப்படுத்தி இருப்பா. பெண்ணோட அடையாளம் அவளோட 'பால்' உறுப்புகள் இல்லை... அவளோட 'தாய்மை' உணர்வுன்னு புரியவச்சி இருப்பா.

பெரியாரோட கொள்கைகள் மேல உனக்கு பிடிப்பு அதிகம்னு எனக்கு தெரியும் வள்ளி. 'தாலியை' நீ ஒரு அடிமை சின்னமா தான் நினைப்பேன்னு உன்னோட எழுத்துகள் எனக்கு சொல்லி இருக்கு.

வாழ்க்கையோட எந்த நிலையிலையும் கொள்கைப் பிடிப்பு முக்கியம். இன்னைக்கு உங்க அம்மாவை சந்தோசப்படுத்த தாலியை கையில எடுக்குற.... உன் கொள்கைக்கு விரோதமா.

நாளைக்கே இந்த வாழ்க்கை இன்னும் மோசமான நிலமையில உன்ன கொண்டு வந்து நிறுத்தலாம். அப்போ இன்னும் எந்த கொள்கையை எல்லாம் மாத்திக்குவ..?

இப்படி வாழ்க்கையோட ஒவ்வொரு சூழ்நிலையிலையும் மாறிட்டே இருந்தேன்னா உனக்கான அடையாளம் காணமா கரைஞ்சி போயிரும்.

'விக்யா' வெறும் பேர் இல்ல. உன்னோட அடையாளம். தொலைக்கிறது சுலபம். தேடுறது கஷ்டம். தொலைக்கமாட்டேன்னு நம்புறேன். இப்ப கூட உன்ன அடிச்சது என்னோட ஆம்பளைத் திமிரை காட்ட இல்ல.

என்னோட 'விக்யாவை' முழுசா அழிக்க துடிக்குற வள்ளி மேல இருந்த கோபத்தை கட்டுப்படுத்த வழி தெரியாம உன்கிட்ட காட்டிட்டேன்.



DO NOT COPY

எப்போ விக்யாவா உன்னால தெளிவா சிந்திக்க முடியுதோ... அப்போ நான் கொடுத்த அறையை எனக்கே திருப்பிக் கொடுத்துடு." என்றவன் அங்கிருந்து விறுவிறுவென வெளியேற, வள்ளி விலகி செல்லும் அவனையே பார்த்தபடி நின்றிருந்தாள்.

கார் மேகம் சூழ

காரிருளில் கிடந்ததென் பூமி.

காற்றாய் நீயும் - மூட

கார்மேகம் விளக்க,

வெளியில் வருமோ..

வெளிச்சமும் தருமோ - என்

வானின் பகுத்தறிவு சூரியன்.

வில் - 21

சாதிகள் சாக, சமத்துவம் பிறக்கும்.

சமத்துவம் மலர, மனிதமும் தழைக்கும்.

வள்ளியும், மலரும் மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோவிலுக்கு வந்திருந்தனர். வள்ளிக்கு கோவிலுக்கு செல்ல விருப்பம் இருப்பதில்லை.

ஆனாலும் அவள் அன்னையின் விருப்பம் பொருட்டு உடன் வந்தவள், வெளியே நின்று மலையின் கீழ் தெரியும் ஊரின் அழகை ரசித்துக் கொண்டிருந்தாள்.



DO NOT COPY

வள்ளி வீட்டிற்கு திரும்பிய இந்த ஒரு மாதத்தில், மலரின் உடலிலும் உள்ளத்திலும் எண்ணற்ற மாறுதல்கள்.

ஆரம்ப நாட்களில், வள்ளிக்கு தாயை வீட்டை விட்டு வெளியே வரவழைப்பதே பெரும் போராட்டமாய் இருந்தது. எத்தனை வற்புறுத்தியும், “என்ன எல்லார் முன்னாடியும் அசிங்கப்படுத்தி பாக்கணுமா உனக்கு..?” என்ற தாயின் அழுகுரல் கேள்வி..... அவளை மேலும் வாதம் செய்ய விடாமல் தடுத்துவிடும்.

அந்த நேரத்தில் தான் வள்ளி மெலனி கெய்ட்ஸ் என்ற பெண்ணைப் பற்றி செய்தியை சமூக உடகங்களில் வாசிக்க நேர்ந்தது.

உடனே அந்த செய்தியை தாயிடம் காட்டியவள், “பாரும்மா.. இந்தப் பொண்ணைப் பாரு.... இவளுக்கு நகம்,பல்,சின்ன எலும்பு இதையெல்லாம் தாக்குற அபூர்வ வகை வியாதி இருக்கு.

ஐயோ நான் பாக்கவே அசிங்கமா இருக்கேன்னு அவ முக்காடு போட்டுட்டு வீட்ல உக்காராம... நான் இப்படிதான்னு உலகத்தோட முன்னாடி நின்னு சாதிச்சிட்டு இருக்கா.

அவளோட நம்பிக்கை இருக்கு பாரு அது தான் பேரழகு. வட்டமுகமும், கூர் மூக்கும், நீளக் கண்ணும், வெள்ளை நிறமும் தான் அழகுன்னு நாமளா அழகுக்கு ஒரு வரையறை கொடுத்துட்டு வாழ்ந்துட்டு இருக்கோம்.



DO NOT COPY

உண்மையில அழகு அது இல்ல. வெள்ளை மனசும்.. சூது இல்லாத பிள்ளைக் குணமும், அடுத்தவங்களை நோக செய்யாத பேச்சும், எல்லா மனுஷனையும் சமமா மதிக்கிற குணமும் தான் உண்மையான பேரழகு.

நீங்க இருக்குறதா சொல்ற கடவுள் உங்களுக்கு ஒரு வாய்ப்பை கொடுத்து இருக்கார்னு நினைச்சிக்கோங்க. உங்க கூட பழகுற மனுஷங்களோட உண்மை நிலையை நீங்க இப்ப தான் கண்டுபிடிக்க முடியும்.

உங்க மனசை மதிக்கிற மனுசங்க… உங்க உருவத்தைப் பத்தி கவலைப்படமாட்டாங்க அம்மா. அவங்க உதட்ல எப்பவும் உங்களுக்கான சிரிப்பு அப்படியே தான் இருக்கும்.

அப்படிப்பட்ட மனுசங்களை நீங்க இத்தனை வருஷம் வாழ்ந்த வாழ்கையில சேத்து இருக்கீங்களா இல்லையான்னு தெரிஞ்சிக்கணும்னா கண்டிப்பா நீங்க வெளிய வந்து தான்மா தீரனும்." நீளமாய் பேசி முடித்தவள்,

அந்த அலைபேசியை அங்கேயே வைத்து விட்டு சென்றுவிட, அன்று முழுக்க மலர் பற்களற்ற மெலனின் இதயப் பூர்வ புன்னகையை மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருந்தார்.

அடுத்த நாள் காலை விடியலில், வள்ளியின் துணையோடு தங்கள் வீட்டின் அருகில் இருக்கும் மாரியம்மன் கோவிலுக்கும் கிளம்பிவிட்டார்.

வள்ளிக்கு தாய் வீட்டை விட்டு கிளம்பியதே பெரும் மகிழ்ச்சியாய் இருந்தது. கோவில் வாயிலிலேயே, பூ விற்கும் சாந்தா,

“அடடே... மலரம்மா... உங்களைப் பாத்து எவ்ளோ நாள் ஆச்சு. கூட நிக்குறது நம்ம வள்ளிப் பாப்பா தானே. உங்களுக்கு உடம்பு சரியில்லாததால வெளிய வர்றது இல்லைன்னு ஜானகி அக்கா சொன்னங்க... ரொம்ப இளைச்சி போயிடீங்க மலரம்மா. வள்ளிக் கண்ணு தினமும் அம்மாவுக்கு உளுந்தங்களியும், எள்ளு உருண்டையும் வாங்கிக் கொடு. உடம்பு தேறிடும்.” என்று நம்பிக்கையாய் புன்னகைக்க,

அதுவரை தன் நலிந்த தோற்றம் அவரிடம் எப்படி பிரதிபலிக்குமோ என்று பயந்தபடி நின்றுக் கொண்டிருந்த மலரின் இதழ்களிலும் அந்த புன்னகை எதிரொலித்தது.

சாந்தாவை அன்புடன் பார்த்தவர், “உன் பையன் எப்படி இருக்கான். இப்ப என்ன படிக்கிறான்.” என வினவ,

“அவன் இப்ப பன்னண்டாவது படிக்கிறான் அம்மா... அவனாச்சும் கஷ்டம் புரிஞ்சி படிச்சி..... நல்லபடியா முன்னேரிட்டானா அதுவே எனக்கு போதும்மா. ஹும்... நம்ம கையில என்ன இருக்கு... எல்லாம் மகமாயி கையில இல்ல இருக்கு. நல்லது நடந்தா சரி.” என்றவர் பேசிக் கொண்டே மலர் வழமையாய் வாங்கிச் செல்லும் கதம்ப பூக்களை சிறு பந்தாய் சுற்றி மலரிடம் கொடுத்தார்.

அதை கைகளில் வாங்கிக் கொண்டவர், “நீ எதைப் பதியும் கவலைப்படாதே சாந்தா.....! பையன் பிளஸ் டூ ரிசல்ட் வந்ததும் என்னை வீட்ல வந்து பாரு. ஐயாகிட்ட சொல்லி மேல் படிப்புக்கு ஏற்பாடு பண்ணிக்கலாம் சரியா...?” என்று சொல்ல, அந்த ஏழைத் தாயின் முகத்தில் புன்னகை பெரும் கீற்றாய் மலர்ந்தது.



DO NOT COPY

“ரொம்ப சந்தோசம் மலரம்மா. உங்க வார்த்தையே யானை பலம் கொடுக்குது.” என அவர் கரம் கூப்ப, கூப்பிய அவர் கரங்களை தன் கரம் கொண்டு தாழ்த்தியவர், புன்னகை முகமாகவே கோவிலுக்குள் நுழைந்தார்.

கோவிலுக்குள் செல்ல பிரியமற்ற வள்ளி அங்கேயே நின்றபடி, சாந்தாவிடம் பேச்சுக் கொடுக்கத் துவங்கி இருந்தாள்.

நீண்ட நாட்கள் கழித்து கோவிலுக்கு வந்த மலரை, அங்கிருந்த அர்ச்சகரும், வரவேற்று நலம் விசாரிக்க, அவருள் முடங்கி இருந்த தன்னம்பிக்கை சிறகுகள் மெல்ல மெல்ல விரிய தொடங்கின.

அன்று முதல் மலர் தன் உருவத்தை யார் பொருட்டும் மறைக்க விரும்பவில்லை. நான் இப்படித்தான் என் நிமிர்ந்த நடையோடு உலா வரத் துவங்கினார்.

சிலர் வெளிப்படையாய் அவர் உருவம் கண்டு முகம் சுளித்த போதும், அதிர்ச்சி அடைந்த போதும், அவரால் அவர்களை ஒரு நேர் கொண்ட புன்னகை முகத்தோடு கடக்க முடிந்தது.

நடுவில் சென்னையில் இருந்த சசி, அறிமுகங்கள் நடித்த திரைப்படம் ஒன்றில் பாடிய கானா பாடல் ஒன்று பட்டி தொட்டி எல்லாம் பட்டையை கிளப்ப, வள்ளி சென்னை வரை சென்று சசியுடன் இரண்டு நாட்கள் தங்கி, அவரின் செயலாளர் போல செயல்பட ஒரு இளைனனை வேலைக்கு நியமித்து விட்டே மீண்டும் திருச்சி திரும்பி இருந்தாள்.

தன் தாயின் நிலையை அவள் சசியிடம் உரைக்க, அவருக்கோ கண்களில் நீர். ஆதாரமாய் வள்ளியின் கைகளைப் பற்றிக் கொண்டவர்,

“முதல்ல அம்மாவை பாரு வள்ளி. என்னைப் பத்தி கவலைப்படாதே. எனக்கு நேரம் ரக்கை கட்டிகிட்டுப் போகுது. இப்பலாம் தினம் ஒரு டிவி, ரேடியோல இருந்து என்னை பேட்டி எடுக்க வந்துகிட்டே இருக்காங்க. நீ பக்கத்துல இல்லைங்கிறது மட்டும் தான் கண்ணு குறை. நீ என்னைப் பத்தி நினச்சி கவலைப்படாம அம்மாவைக் கவனி. நான் தினம் போன் போடுறேன் சரியா..?”

அவர் அப்படி சொன்னதும் வள்ளி அவரைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தாள். சசியோ, “என் பொண்ணு வள்ளி எப்பவும் எந்த கஷ்டத்துலையும் அழமாட்டாளே...? நீ என் பொண்ணு தான கண்ணு..?” என கேள்வியாய் நிறுத்த, அதன் பிறகு வள்ளியின் கண்ணீர் மந்திரத்திற்கு கட்டுப்பட்டார் போல அப்படியே நின்றது.

“வள்ளி போலாமா..?” தனக்குப் பின்னால் கேட்ட தாயின் குரலில் வள்ளி தன் நினைவுலகில் இருந்து மீண்டாள்.

“போலாம்மா..” என்று பதில் சொல்லியவள், படிகளில் இறங்க துவங்க, அவள் எண்ணம் முழுக்க தற்சமயம் அவள் எழுதிக் கொண்டிருந்த கட்டுரையில் மூழ்க தொடங்கி இருந்தது.

ஆம் வள்ளி விக்யாவாய், திருச்சியில் காலம் காலமாய் தொடர்ந்து கொண்டிருக்கும் மணல் கொள்ளையைப்பற்றி, அதன் நதி மூலம் ரிஷி மூலம் வரை கண்டறிந்து ஒரு கட்டுரையை எழுதிக் கொண்டிருந்தாள்.



DO NOT COPY

அந்த கட்டுரையை தொடங்கிய நாளில் இருந்தே ஏகப்பட்ட எதிர்ப்புகள், கொலை மிரட்டல்கள்... வள்ளி எதையும் கண்டுக் கொள்ளாமல் தன் பாணியில் வழமையாய் இயங்கினாள்.

மாகலிங்கம் மகளிடம் அதிகம் பேச முயல்வதில்லை. தானுண்டு தன் ஜவுளிக்கடை உண்டு என்று பெரும்பான்மையான நேரம் கடையிலே தன் பொழுதை போக்கிவிட்டு, உறங்க மட்டுமே வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தார்.

இம்முறை மலர் வலி மிகுந்த கீமோ, ரேடியோ சிகிச்சை முறைகளை ஆன்ம பலத்துடனும், நம்பிக்கையுடனும் எதிர்க் கொண்டார்.

காலநதி யாருக்கும் காத்திருக்காமல் ஓடிக் கொண்டே இருந்தது. கிட்டதட்ட ஆறு மாத போராட்டத்திற்குப் பின் மலர் புற்று வியாதியின் தாக்கத்தில் இருந்து முழுமையான குணம் பெற்றார் என மருத்துவர்கள் அறிவிக்க, வள்ளி அந்த நாளை பெரிய விழா போல கொண்டாடி மகிழ்ந்தாள்.

மகாலிங்கம் கூட அமைதியாய் ஆவலுடன் இணைந்து கொண்டார். ஆனால் அடுத்த நாளே வள்ளி, மலரின் முன் சென்று நின்று,

“மா... எனக்கு சென்னைப் போகணும்..” என நிற்க, மலரின் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை.

அவள் தலையை பாசத்துடன் வருடிவிட்டவர், “தாராளமா போ வள்ளி.... ரெண்டு பேரும் எனக்கு பெண் குழந்தைகளா பிறந்த நாள்ல இருந்து....



DO NOT COPY

நீங்க ஒரு வயசுக்கு அப்புறம் உங்க பிறந்த வீட்டுக்கு போயிடுவீங்கன்னு மனசை தயார்படுத்தி தான் வச்சி இருந்தேன்.

ஆனா உன்னை....இப்ப உன்னோட வேலைக்காக பிரிஞ்சி இருக்கப் போறேன் அவ்ளோ தானே. இனிமே வாராவாரம் லீவுக்கு ஒழுங்கா வீட்டுக்கு வந்துடனும். அம்மா உனக்கு பிடிச்சதை எல்லாம் சமச்சி வச்சிட்டு காத்துட்டு இருப்பேன் சரியா.."

அவர் குரல் தழுதழுத்த போதும், வள்ளிக்கு அவர் தைரியமாய் விடை கொடுத்து அனுப்ப, அவர் கழுதை கட்டிக் கொண்டாள். வில்லனுடனான அவள் வாழ்வு பற்றி கேட்க, அவன் நாக்கின் நுனி வரை வார்த்தை துடித்தாலும், வில்லன் அவரிடம் தனிமையில், அவளிடம் தன்னைப்பற்றி ஒருபோதும் இனி பேசக் கூடாது என்று எச்சரித்து சென்ற விதம் அவர் வார்த்தைகளுக்கு சிறையிட்டு இருந்தது. அடுத்த நாள் பெட்டியோடு வீட்டை விட்டுக் கிளப்பும் போது மகாலிங்கம் அவள் முன் வந்து நின்றார்.

அவள் கண்களை நேருக்கு நேர் பார்க்காமல் எதிரில் இருந்த சுவற்றைப் பார்த்தவர், "இதனை வருஷம் ***** ஜாதிக் கட்சி மாவட்ட தலைவரா இருந்து என்ன சாதிச்சேன்னு தெரியல. ஆனா.... இதுவரைக்கும் எந்த கட்சியாலையும் ஆட்சியாலையும் தடுக்க முடியாத மணல் கொள்ளையை... உன் எழுத்து... உன்னோட பேனா தடுத்து இருக்குன்னு நினைக்கும் போது ரொம்ப பெருமையா இருக்கு.

இப்ப கூட நீ வேற ஜாதி ஆளை கல்யாணம் பண்ணிகிட்டா உன்னை மறுபடி வீட்டுக்குள்ள அனுமதிக்கிற அளவுக்கு எனக்கு பக்குவம் இல்லை.

வேற ஜாதியில பிறந்த மனுசனை அக்கம் பக்கத்து ஆளா... நட்பா பாக்க முடியிற என்னால கண்டிப்பா என்னோட குடும்ப உறவா ஏத்துக்க முடியாது வள்ளி.

நான் இப்படித்தான். இனி என்னால மாற முடியாது. ஆனா இந்த ஊர்ல பிறந்து வளந்த மனுசனா.... உன்ன நினச்சி ரொம்ப பெருமையா இருக்கு வள்ளி. ரொம்ப பெருமையா இருக்கு.." என்றவர் அதற்கு மேல் குரல் கமற ஆரம்பிக்க அங்கிருந்து விலகி சென்றார்.

வள்ளி சில நொடிகள் அப்படியே உறைந்து போய் நின்றாள். வீட்டின் வாயிலில் கேட்ட மகிழுந்தின் சத்தம், அவளை கலைக்க வள்ளி வாயிலில் நின்றுக் கொண்டிருந்த மலரிடம் பிரியா விடை பெற்றுக் கொண்டவள், மீண்டும் சென்னை நோக்கிய தன் பயணத்தை துவங்கினாள்.

சென்னையில் அவள் குடியிருக்கும் காலனிப் பகுதியில் அவள் நுழைத்ததும், அந்த பகுதி மக்கள் முழுவதும் அவளை ஆரவாரமாய் வரவேற்றனர்.

ஹவுசிங் போர்டின் பல சுவர்களில் பாடும் பாவத்தில் சசியின் புகைப்படங்கள் சுவரை நிறைத்திருந்தன. அதை மகிழ்வுடன் கண்டுகளித்தபடியே தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

"அம்மா.... நான் வந்துட்டேன்..." மகிழ்ச்சி ஆரவாரத்துடன் தன்னை நோக்கி ஓடி வந்த, வள்ளியை, சசி தானும் கட்டிக் கொண்டார். தாயும் மகளும் தங்களுக்கான நேச உலகில் மூழ்கிப் போயினர்.

ஆறு மாதங்களுக்குப் பின் :



DO NOT COPY

கோட்டையில் குடியரசு தினநாள் கோலாகலமாய் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது. ஆளுநர் கொடியேற்ற, முதலமைச்சர் முன்னிலை வகிக்க, பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களை கௌரவிக்க அங்கே விருதுகள் காத்துக் கொண்டிருந்தன.

விருதுகள் பெறுவோர் அமர்ந்திருந்த வரிசையில், வள்ளி வழக்கமான தன் வழக்கமான உடையுடன் கம்பீரமாய் அமர்ந்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு எதிர் வரிசையில், மகாலிங்கம், மலர், சசி, ஜேம்ஸ், மற்றும் அவளின் சக பணியாளர்கள் அனைவரும் அமர்ந்திருந்தனர்.

அவளின் தோழிகள்... அடிக்கடி வாட்ஸ் அப்பில் அவளை நேரலையில் கவனித்துக் கொண்டிருப்பதாக நொடிக்கு ஒரு முறை செய்திகளை பறக்க விட்டுக் கொண்டிருந்தனர்.

கொடியேற்றம் முடிந்ததும், விருது வழங்கும் நிகழ்வு தொடங்க,

'சிறந்த இளம் பத்திரிக்கையாளர் விருதை பெறுபவர்... கனல் விக்யா....' என்று ஒலிப்பெருக்கி அலற, வள்ளி மிடுக்காய் நடந்து சென்று அந்த விருதைப் பெற்றாள்.

ஆளுநரின் கைகளில் விருதைப் பெற்ற மறுநொடி, அவள் விழிகள் கூட்டத்தில், வில்லனை தேடி அலைந்தது.

அவள் உள்ளுணர்வு அவளுக்கு சொல்லிக் கொண்டே இருந்தது. கட்டாயம் அவன் இங்கே எங்கோ தான் இருக்கிறான் என.



DO NOT COPY

அவள் மேடையேறும் வரை, அவள் விழிகளில் படாமல் ஒதுங்கி நின்றுக் கொண்டிருந்தவன், அவள் மேடையேறவும், ஆர்வக்கோளாறில் முன்னால் வந்து இருந்தான்.

அவன் விழி விரிய அவள் வெற்றியை ரசித்த படி, கைகள் நோகும் வரை உற்சாகமாய் கைகளைத் தட்டிக் கொண்டிருக்க, வள்ளி வில்லனைக் கண்டிருந்தாள்.

அவள் தனக்கு வழங்கப்பட்ட விருதை சற்றே உயர்த்திக் காண்பிக்க, அவன் தலை அசைத்து, அவளின் வெற்றியை வரவேற்க, அடுத்த நொடி வள்ளி தன் இருப்பிடம் நோக்கி நடக்க தொடங்கி இருந்தாள்.

விழா முடிந்ததும், அனைவரும் சென்னை கடற்கரை நகரை ஒரு உலா வந்துவிட்டு, இரவு உணவை முடிக்க, வள்ளியின் பெற்றோர் அன்றே ஊருக்கு கிளம்பிவிட்டனர்.

சசியை ஜேம்சுடன் அனுப்பி வைத்தவள், வெகு நாட்களாய் தினம் தொடு திரையில் எடுப்பதும், கடப்பதுமாய் இருந்த வில்லனின் அலைபேசி எண்ணுக்கு அழைத்தாள்.

அவள் அழைப்பாள் என்று காத்திருந்தவன் போல வில்லன் முதல் அழைப்பிலேயே, அவள் அழைப்பை ஏற்று இருந்தான்.

“ஹெலோ.” அவனின் கம்பீர குரல் ஒரு நொடி அவளை உறைய வைத்த போதும், தன்னை மீட்டுக் கொண்டவள்,

“எனக்கு உங்களைப் பார்க்கணும்..” என சொல்ல, “நீ இருக்க அதே பீச்ல தான் நானும் இருக்கேன்… ஐஞ்சி நிமிஷம் இதோ வறேன்…” என்றவன், அவள் அலைபேசியை துண்டித்துவிட்டு திரும்பும் போது சரியாய் அவள் முன் வந்து நின்றான். நேரம் இரவு பத்தை கடந்து இருக்க, சென்னை கடற்கரை ஆளரவமின்றி வெறுமையாய் இருந்தது.

இத்தனை நேரம் தன்னைத் தான் கவனித்துக் கொண்டு அமர்ந்திருக்கிறான் என்று எண்ணிக் கொண்டவள், அவன் முகத்தில் எவ்வித உணர்வுகளும் பிரதிபலிக்காமல் நிர்மலாய் இருப்பதையும் மனதில் குறித்துக் கொண்டாள்.

வில்லன் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவனை நெருங்கிய வள்ளி, அவன் என்னவென்று உணரும் முன்னே, அவன் இடதுக் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

அவன் அதிர்ச்சியோடு அவளைப் பார்க்கும் போதே, “விக்யாவா பாக்கும் போது திருப்பி வாங்கிக்கிறேன் சொல்லி இருந்தீங்க இல்ல..” என வள்ளி இதழ்களில் மலர துடித்த புன்னகையை அடக்கியபடி அவனை வினவ, வில்லன் அவளை முறைத்த படி நின்றுக் கொண்டிருந்தான்.

வில் - 22

காதலை கொண்டாடியே..

ஜாதியை திண்டாட செய்வோம்.

DO NOT COPY

முழுதாய் ஐந்து நிமிடங்கள் கடந்தும், வில்லன் தொடர்ந்து வள்ளியை முறைத்துக் கொண்டிருக்க, வள்ளியின் இதழ்களில் மலர இருந்த புன்னகை அப்படியே உறைந்தது.

'வில்லனின் கோபத்தை தூண்டிவிட்டோமோ..?' வள்ளி இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே, வில்லன் கடினப்பட்ட குரலில்,

"அப்போ நான் எதைக் கொடுத்தாலும்.... கொஞ்சம் கூட கூடாம குறையாம அப்படியே திருப்பி கொடுப்ப அப்படித் தானே..?" வில்லன் அப்படிக் கேட்டதும், வள்ளியின் அனுமதியின்றி அவள் தலை தானாய் மேலும் கீழும் அசைந்து தன் சம்மதத்தை தெரிவித்தது.

வள்ளி தலையை அசைத்த அடுத்த நொடி, வில்லன் வள்ளியை மிக நெருங்கி நின்றான். வள்ளி அவனை கேள்வியாய் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, சுற்றுப்புறத்தை ஒரு முறை விழிகளால் அளந்தவன், அடுத்த நொடி அவள் முகத்தை தன் இரு உள்ளங்கைகளால் அசையவிடாது அழுத்தப்பற்றியவன், அவள் இதழ்களை தன் இதழ்களால் மிக வன்மையாய் சிறை செய்தான்.

வள்ளியின் விழிகள் வில்லனின் அதிரடி செயலில், முழுதாய் விரிய, அந்த பெரிய விழிகளில் வில்லன் மொத்தமாய் தொலைந்தான்.

தூரத்தில் ஒலித்த விசில் சத்தம், வில்லனை மீட்க, வள்ளியை விட்டு அவசரமாய் விலகியவன்,

“போலிஸ் ரவுண்ட்ஸ் வராங்க போல வள்ளி. வா கிளம்பலாம்.” என அவள் கைப்பற்றி அழைத்து செல்ல, ஏதோ மந்திரத்திற்கு கட்டுப்பட்டவள் போல, வள்ளி அவனை தொடர்ந்தாள்.

வில்லன் கடற்கரை சாலையின் ஆரம்பத்தில் நிறுத்தியிருந்த தன் காரை நெருங்கியதும், ஓட்டுனர் இருக்கையில் அவன் அமர, அவனுக்கு பக்கத்து இருக்கையின் கதவை திறந்து வள்ளி அமர்ந்தாள்.

வில்லன் கொடுத்த முத்த அதிர்ச்சியில் இருந்து வெளியேறியிருந்த வள்ளி, இருபக்க காரின் கதவுகளையும் வேகமாய் ஏற்றிவிட, வில்லன் உதட்டில் மலர்ந்த குறும்புப் புன்னகையோடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்ன பண்ணப் போற..” வில்லனின் குரல் சீண்டலாய் ஒலிக்க, காரின் ஜன்னல் கதவுகளை மூடி இருந்தவள், அவன் புறம் வாகாய் திரும்பி அமர்ந்து,

“நீங்க கொடுத்ததை உங்களுக்கே திருப்பிக் கொடுக்கப் போறேன்.” என்றவள், வில்லனைப் போல அவசரப்படாமல், மிக மெதுவாய் அவனை நெருங்கி, அவன் இதழோடு தன் இதழ் பதித்தாள்.

முத்தம்.... சில நேரம் காமத்தில் யுத்தமாகும். சில நேரம் காதலில் வித்தையாகும். தினம் தினம் கற்கத் தூண்டும் புதுவித பாடமாகும்.

வில்லன் கொடுத்த அவசர முத்தத்தை விட வள்ளி கொடுத்துக் கொண்டிருந்த மென் சாரல் முத்தம்.... அவன் இதுவரை அனுபவித்தறியாத உணர்வுகளின் குவியல் நோக்கி அவனை தள்ளிக் கொண்டிருந்தது.


DO NOT COPY

சில நிமிடங்களுக்குப் பின் வள்ளி நிமிர்ந்து அமர, தன் வாயை புறங்கையால் துடைத்துக் கொண்ட வில்லன்,

“இது நான் கொடுத்ததை திருப்பிக் கொடுத்த மாதிரி இல்லையே. நீ ஏதோ புதுசா கொடுக்குற மாதிரி இருக்கு. பட் நான் கொடுத்ததை விட செமையா இருக்கு.” என்று கண் அடித்து சிலாகித்து சொல்ல,

“உங்களை..” என்று அவன் மார்பில் மெதுவாய் குத்தியவள், “சரி… சரி…. வண்டியை எடுங்க…இன்னும் கொஞ்சம் லேட் ஆனாலும் சசிமா பயப்பட ஆரம்பிச்சிடுவாங்க.” என்றவள் சாய்ந்து அமர்ந்து கொள்ள வில்லன் வண்டியை கிளப்பினான்.

வழி நெடுகிலும் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. வள்ளி வில்லனின் தோள்களில் முழுதாய் சாய்ந்தபடி பயணித்துக் கொண்டிருந்தாள்.

வள்ளியின் வீடிருக்கும் காலனி வரவும், தன் பக்க காரின் கதவுகளை திறந்து இறங்கியவள், முன் பக்கம் சுற்றி வந்து, வில்லனின் முகம் நோக்கி குனிந்தாள்.

அவன் கண்களில் ஆழமாய் பார்த்தவள், “ஐ லவ் யூ வில்லன். ஐ லவ் யூ. உங்களைத் தவிர வேற யாரையும் என்னால காதலிக்கவே முடியாதுன்னு எனக்கு தெளிவா புரிஞ்சிடுச்சி.”

DO NOT COPY

வள்ளியின் உதடுகள் அல்லாது, இதயத்தில் இருந்து உணர்வுப்பூர்வமாய் வெளிப்பட்ட வார்த்தைகளை செவிமடுத்தவன், தன் காதலை முழுமையாய் கண்களில் பிரதிபலித்தான்.

சற்று நேரம் இருவரும் ஒருவரை ஒரவர் பார்வையில் தழுவியபடி அப்படியே லயித்திருந்தனர்.

“மேம் சாப்..” அவர்கள் பகுதியில் இரவு காவல் பணி புரியும் ஜிந்தரின் குரலில் இருவரும் கலைந்தனர்.

அந்த அன்பான நேபாளியைக் கண்டு ஆதுரமாய் புன்னகைத்தவள், “ஹெலோ ஜிந்தர்.... இன்னைக்கு வீட்டுக்கு வர லேட் ஆயிடுச்சி.” என்றபடி, தன் கைப்பையை திறந்து அவருக்கு ஒரு ஐம்பது ரூபாய் தாளை எடுத்துக் கொடுத்தாள்.

ஜிந்தர் முகம் முழுக்க புன்னகையோடு, அந்த ரூபாயை பெற்றுக் கொண்டவர், விரைப்பான ஒரு சல்யூட்டை பரிசளித்துவிட்டு, கழுத்தில் தொங்கிய விசிலை ஊதியபடியே அங்கிருந்து விலகி செல்ல, வள்ளியும் வில்லனை நோக்கி விடை பெறுதலாய் தலை அசைத்துவிட்டு தன் வீட்டை நோக்கி நடக்க துவங்கினாள்.

அவள் விலகி செல்ல துவங்கியதும், தன் காரில் இருந்து கீழே இறங்கிய வில்லன், வேகமாய் அவள் வழியை மறைத்தபடி அவள் முன் சென்று நின்றான்.

DO NOT COPY

“இந்த உலகத்துல நான் எல்லாரையும் என் இதயம் வரைக்கும் தான் நேசிச்சி இருக்கேன். என் அப்பா, அம்மா, அக்கா, என் பிரண்ட்ஸ்... ஏன் உன்னை கூட அந்த அளவுக்கு தான் நேசிக்கிறேன்.

என் தலைக்கு மேல என் மூளையை தாண்டி நான் ஒருத்தியை காதலிக்கணும். அவ நடந்து பழக என் சுட்டு விரல் கொடுக்கணும். எழுதிப் பழக என் கட்டை விரல் உதவனும்.

என் கண்ல வழிகாட்டி... அவ கண்ல நான் உலகத்தை பாக்கணும். என்னோட காதலை உனக்குள்ள தேக்கி....உன்னையே நகல் எடுத்த மாதிரி அவ எனக்கு வேணும்.

ஒரு பொண்ணுக்கு அப்பனா ஆகறதை விட பெரிய சந்தோசம் இந்த உலகத்துல வேற இல்லைன்னு தான் நினைக்குறேன். அப்படி ஒரு சந்தோசத்தை எனக்கு கொடுப்பியா வள்ளி...? அவளை உன்ன மாதிரி வளக்கணும்.”

வில்லன் கண்களில் கனவு மின்ன கேட்க, வள்ளி அவனை கட்டி அணைத்துக் கொண்டாள். வாழ்நாள் முழுவதற்குமான அன்பின் நெருக்கமும், நேசத்தின் கதகதப்பையும் அந்த அணைப்பு இருவருக்கும் உணர்த்தியது.

அன்றைக்கு வில்லன் வள்ளியோடு அவர்கள் வீட்டில் தங்க, சசியம்மா, “மாப்பிள்ளை... மாப்பிள்ளை...” என்று வில்லனை கொண்டாடித் தள்ளிவிட்டார்.

இருவருக்கும் கிடைத்த தனிமையில், வள்ளி வில்லனை ஆழமாய் பார்த்தபடி,

“உங்களுக்கு கிராமத்துல மாற்றத்தை ஏற்படுத்தணும்னு என் தோணுச்சி வில்லன்..? முதல் முறை உங்ககிட்ட அதைப்பத்தி கேட்டப்ப... வாழ்கையில விழுந்த ரெண்டாவது அடின்னு ஏதோ சொல்லவந்து பாதியில நிறுத்திட்டீங்க.”

அவள் அப்படிக் கேட்டதும், அவள் மடியில் தலைசாய்த்துப் படுத்துக் கொண்டவன்,

“உங்க அக்காவோட மரணம் உன்னை விக்யாவா மாத்தின மாதிரி... என் வாசுவோட மரணம் என்னை சமூக மாற்றத்தை விரும்புற மனுசனா மாத்துச்சி தில்லு.

எனக்கு ஒரு பிரண்ட் இருந்தான் தில்லு. ரெண்டு பெரும் அஞ்சி வயசுல இருந்து பிரண்ட்ஸ். அவன் பேர் வாசு. ரொம்ப ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவன்.

படிப்பு முடிஞ்சும் கூட ரெண்டு பெரும் ஒண்ணா தான் இருந்தோம். அவன் நம்ம பண்ணையில தான் மேனேஜர் வேலை பாத்துட்டு இருந்தான். அவன் ரம்யான்னு ஒரு பொண்ணை ரொம்ப சின்சியரா லவ் பண்ணிட்டு இருந்தான்.

இவங்க லவ் மேட்டர் அவங்க வீட்டுக்கு தெரிஞ்சி... ரம்யாவுக்கு அவங்க சொந்த அப்பா, அம்மாவே விஷம் வச்சி கொன்னுட்டு, பொண்ணு வயித்து வலியில, தற்கொலைப் பண்ணிகிட்டானு வெளிய சொல்லிட்டாங்க.

வாசுவுக்கும் எனக்கும் மட்டும் தான் உண்மை தெரியும். அன்னைக்கு நைட் அவன் ரொம்ப ரொம்ப அழுதான்.

நானும் அவனை எப்படி எப்படியோ சமாதனப்படுத்திட்டு இருந்தேன். ரெண்டு பெரும் எங்க ஆபிஸ் ரூம்ல தான் இருந்தோம்.

நைட் ஒரு மணிக்கு மேல தான் அசந்து தூங்கி இருந்தேன். ஒரு மூணு மணி வாக்குல தண்ணி தாகத்துல நான் எழும்பி உக்காரும் போது... என் தலைக்கு மேல வாசு தூக்குல தொங்கிட்டு இருந்தான்.

நமக்கு ப்ரியமானவங்களை உயிரோட பலி கொடுக்குற வலி எப்படி இருக்கும்னு அப்போ தான் உணர்ந்தேன். ரொம்ப உடஞ்சிப் போயிட்டேன்.

என்னவோ அந்த நேரம் வாசுவை தற்கொலைக்கு தூண்டினவங்களை தண்டிக்கணும்ங்கிற கோபத்தை விட, இந்த சமூகத்தை நேராக்கணும் அப்படிங்கிற உணர்வு எனக்குள்ள வளர ஆரம்பிச்சது.

ஏற்கனவே நீ பிரிஞ்சி போனப்ப நான் அதிக நாள் அரசனூர்ல தான் இருந்தேன். ஏன்னா அது எங்க பெரியப்பா ஊர் மட்டும் இல்ல... என் பிரண்ட் வாசுவோட ஊரும் அது தான்.

எந்த மண்ணுல... ஜாதி பேர் சொல்லி மனுசங்களை பிரிச்சி வச்சி இருந்தாங்களோ அந்த ஊரை... அந்த மக்களை...சமத்துவ நோக்கோட, சமூக நீதியோட ஒரே நேர்கோட்ல சிந்திக்க வைக்கணும்னு நினைச்சேன். முழுசா ஜாதி வெறியை ஒழிக்க முடியாட்டியும்.. ஏதோ என்னால முடிஞ்ச மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கேன்னு தான் நம்புறேன்."

வில்லன் சொல்லி முடித்ததும், வள்ளி அவனை இடையோடு அணைத்துக் கொண்டாள். இனி என்றென்றும் உன்னைத் தாங்க நான் இருப்பேன் என.

அடுத்தநாள் வில்லன் ஊருக்கு கிளம்ப, இருவரும் அலைபேசிகளில் உரையாடி தங்கள் இல்வாழ்க்கையை பற்றி ஒரு முடிவிற்கு வந்தனர்.

அதன் படி சிந்தனையாளர்கள் சூழ் அரங்கில், சுற்றமும், நட்பும் சூழ வள்ளி வில்லனை மீண்டும் ஒரு முறை ஊர் அறிய சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டாள்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பில்லாத முக, அக மலர்ச்சியோடு திருமணம் செய்துக் கொண்ட இளையவர்களை கண்ட பெற்றோரின் நெஞ்சம் பூரிப்பில் நிறைந்து போனது.

சுயமரியாதை திருமணம் என்பதை இணையேற்பு விழா என்றும் சொல்லலாம். இந்த திருமணத்தில் ஆண் பெண் இருவரும்... சுக துக்கத்தில் உடன் வருவதாய் பெரியோர் முன்னிலையில் உறுதி எடுத்து மணவாழ்வில் இணைவர். மற்ற சாஸ்திர சம்பர்தாயங்கள் எதுவும் இருக்காது.

வள்ளியின் திருமணத்தில் கலந்துக் கொள்ள வந்திருந்த, ஆனி ஐயா, மணமக்களை வாழ்த்திவிட்டு,

"திருமணமான ஆண் தன் உடலில் எவ்வித அடையாளங்களையும் சுமக்காத போது, பெண்ணிற்கு மட்டும் மெட்டி, தாலி போன்ற அடையாளங்களை கொடுத்து, அதை சுமக்க சொல்லும் இந்த சமூகத்தின்... உளவியல் கூறுகளை... முரண்பாடுகளை கண்டறிந்து.. களைய இளைய சமூகம் முன்வர வேண்டும்.

இன்று நமது நாடு இருக்கும் நிலையில்... ஜாதி, மதம், பேதம் ஒழிய... வேற்றுமை கலைந்து மனிதம் வாழ, காதலுடன் இணைந்த சுயமரியாதை திருமணங்கள் அவசியமாகிறது.

அந்த வகையில்... ஜாதி, மத, மொழி, இன அடையாளம் கடந்த... சடங்கு சம்பர்தாயங்களற்ற... சுயமரியாதை திருமணத்தை... பின்பற்றி வாழ்வை தொடங்கி இருக்கும் வள்ளி மற்றும் வில்லனுக்கு வாழ்த்துக்கள் பல." என வாழ்த்திவிட்டு மேடையை விட்டு இறங்க, அவர் பேச்சை கேட்டுக் கொண்டிருந்த கூட்டம் கை தட்டி ஆரவாரம் செய்தது.

சற்று நேரம் சிந்தனை வாள் வீச்சின் சொற்பொழிவு அரங்கமாய் இருந்த மேடை, வள்ளியின் தோழிகள் மேடையேறியதும், அப்படியே தலை கீழாய் மாறியது.

'சாரட்டு வண்டியில சீரட் ஒலியில ஓரம் தெரிஞ்சதும் உம் முகம்..' என்று பாடல் ஒலிக்க, மூவரும் மேடையை ஆட்டுவித்து விட்டே கீழே இறங்கினர்.

'இணைந்த கரம்' அமைப்பினர் அங்கு வந்தும் திருமண தாம்பூலப் பரிசாய் மரக்கன்றுகளோடு, விதைப் பந்துகளையும் விநியோகித்துக் கொண்டிருந்தனர்.

இறுதியாய் மேடையேறிய ஜேம்ஸ், தன் திருமணப்பரிசாய் மணமக்களுக்கு கவிதை ஒன்றை வாசித்தான்.

சுயமரியாதைத் திருமணம்.

சூரியனுக்கும் சூரியனுக்கும் திருமணம் – ஆம் இது
சுயமரியாதைத் திருமணம்.

இந்த வரிகளை வாசித்து முடித்தவன் மணமக்களை திரும்பிப் பார்த்து... “பொதுவா ஆணை சூரியன்னும் பெண்ணை நிலான்னும் சொல்லுவாங்க.

ஆனா என்னைப் பொறுத்தவரை இந்த ரெண்டு பெரும் தன்னொளி கொண்ட, சூரியன்கள் தான்.” என்றவன் தொடர்ந்து அடுத்த வரிகளை கையில் இருந்த அலைபேசியைப் பார்த்தபடி வாசிக்க ஆரம்பித்தான்.

நல்ல நேரம் பார்க்கவில்லை...
நாதஸ்வர மேளம் இல்லை...
நெய்த பட்டு உடுத்தவில்லை..
நகையும் நட்டும் மின்னவில்லை...

சாதி, மத பேதமில்லை..
சாஸ்திரங்கள் தேவையில்லை...
ஜாதி என்றே ஏதுமில்லை..
ஆணும் பெண்ணும் வேறு இல்லை..

தாலி கட்டும் வேலை இல்லை..
தலைகுனிவு ஏதும் இல்லை...
மெட்டி போட நேரவில்லை..
முட்டிப் போட விருப்பமில்லை....

அம்மி மிதிக்க ஆசையில்லை...
அருந்ததிகள் பார்த்ததில்லை..
பூமாலை எதுவும் மாற்றவில்லை..
பூமனதை மாற்ற மறக்கவில்லை.

செம்புலம் சேர்ந்த நீரைப் போல
அன்புடை நெஞ்சம் கலந்துவிட்டோம்.
சீரிய வாழ்வில் சிறுமை களைந்தே
செல்வம் என்று அன்பை சேர்ப்போம்.

வாழ்வோம்! வாழ்வோம்! மனிதராய் வாழ்வோம்..!
காப்போம்..! காப்போம் ! மனிதம் காப்போம்..!

ஜேம்ஸ் கவிதையை வாசித்து முடிக்க, "இது நீயா..?" என்பதைப் போல வள்ளி அவனைப் பார்த்தாள். கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்ய, ஜேம்ஸ் வள்ளியை நோக்கி கட்டை விரலை உயர்த்திக் காண்பித்து, 'நானே தான்' என சைகையில் பதில் சொல்லிப் போனான்.

வில்லனின் குடும்பத்தினரோடு வள்ளி அன்போடு பழக, அவர்களும் அவளை, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த கசப்புகளை மறந்து தம் உறவாய் வரித்துக் கொண்டனர்.

சசி தன் வீட்டு திருமணம் என்ற உரிமையுடன் திருமணத்திற்கு வந்திருந்தவர்களை விழுந்து விழுந்து உபசரித்துக் கொண்டிருந்தார்.

திருமணம் முடிந்து தம்பதிகள் வில்லனின் வீட்டிற்கு செல்ல, அன்றைய சோபன இரவில், வள்ளி அறைக்குள் நுழையும் போது வில்லன் அவளுக்கு முதுகு காட்டி படுத்திருக்க, அவனுக்கு உடம்பு சரியில்லையோ என பதறிய வள்ளி,



DO NOT COPY

“என்னாச்சு வில்லன்..” என பதட்டத்துடன் அவன் தோள் தொட,

போலியாய் முகத்தை சுளித்துக் கொண்ட வில்லன்,

“எனக்கு எதுக்குமா வம்பு.... நைட் முழுக்க கொஞ்சி கொஞ்சி பேசிட்டு விடிஞ்சதும்..... நீ என்ன ரொம்ப மோசமா மயக்கிட்ட வில்லன்.... யூ ஆர் ஸெட்யூசிங் மீன்னு.... ஒப்பாரி வைப்ப... தேவையா எனக்கு.

இன்னைக்கும் உன் பிரண்ட்ஸ் எல்லாம் வந்து உன் கூட டான்ஸ் பண்ணாங்க. உனக்கு பிடிச்ச மாதிரி வேற நாம சுயமரியாதை கல்யாணம் பண்ணிக்கிட்டு இருக்கோம்.

எதுக்கும் ஒரு மாசம் போகட்டும் தாயே. இதெல்லாம் நான் உன்ன மயக்க பண்ணலைன்னு நீ முடிவு பண்ணதும் நாம செகன்ட் நைட் கொண்டாடுவோம். அதுவரைக்கும்.... நாம பிரண்ட்ஸா இருப்போம்.”

வில்லன் பேச பேச...அவனை எதைக் கொண்டு மொத்தலாம் என பொருளை தேடிய வள்ளி, அவன் முகத்தில் இருந்த கேலியைக் கண்டதும், கைகளைக் கட்டிக் கொண்டவள்,

“ஓ... அப்போ நீங்க சும்மா இருக்கப் போறீங்க அப்படித்தானே. பட் நான் சும்மா இருக்க மாட்டேன் வில்லன் சார். ஹவ் டு ரேப் மேல்னு சமீபமா ஒரு புக் படிச்சேன். இன்னைக்கு அதை ட்ரைப் பண்ணி பாத்துட வேண்டியது தான்.

நீங்க வேண்டாம்னு சொன்னதும்... 'அப்படியே ஆகட்டும் பிராணநாதான்னு' ஒதுங்கிப் போக நான் என்ன ஹீரோவோட காதலியா... பாஸ் நான் வில்லனின் காதலி... இப்போ பாருங்க...என்னோட ஆக்சனை... உங்களை.."

வள்ளி கடைசி இருவரிகளை கிசுகிசுப்பான குரலில் சொல்ல, அவள் வார்த்தைகளே அவனை போதைக் கொள்ள செய்தது.

வள்ளி சொல்லியதை செயலாற்ற அவன் மேல் விழுந்து உருண்டு புரள, சற்று நேரம், "தில்லு உன் வேகத்தை என் பூ உடம்பு தாங்காதும்மா....தாங்காது" என்று மேலும் அவளை வெறுப்பேற்றியவன், சில நிமிடங்களில் அவளிடம் பலவீனமாய் தோற்று அவளுள் உயிர் மெய்யாய் இரண்டறக் கலந்தான்.

வில்லனின் மனைவியாய் அவன் வாழ்வில் நுழைந்தவள்.... இறுதியில் 'வில்லனின் காதலியாய்...' அவன் இதயத்தில் அன்பால் நிறைந்தாள்.

வில் இலக்கை அடைந்தது.

DO NOT COPY


வில்லனின்
காதலி
மேக்னா சுரேஷ்
சிறகுகள்
பதிப்பகம்